சரசுவதி மகால் வெளியீடு எண். 61

# சரபேந்திர வைத்திய முறைகள்

## (ஜ்வர ரோக சிகிச்சை)

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

1991 விலை ரூ. 50-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் 61.

# சரபேந்திர வைத்திய முறைகள்

## (ஜ்வர ரோக சிகிச்சை)

*

பதிப்பாசிரியர்:

Dr. S. வெங்கட்டராஜன், L.I M. (Regd.)

முன்னாள் ஆயுர்வேத பண்டிதர்,

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

*

இயக்குநர்:

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல்நிலையம்**

தஞ்சாவூர்.

1991] [விலை: ரூ. 50-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு.


நூற்பெயர் : சரபேந்திர வைத்திய முறைகள் (ஜ்வரரோக சிகிச்சை)

பதிப்பாசிரியர் : Dr S. வெங்கட்டராஜன்

வெளியிடுபவர் : பேராசிரியர் மு. சதாசிவம்
இயக்குநர், சரசுவதி மகால்.

வெளியீட்டு எண் : 61

மொழி : தமிழ்

பதிப்பு : மூன்றாம் பதிப்பு

வெளியீட்டு நாள் : 1991, ஜூன்

தாள் : 14.2 கி. கி. சேசாயி

நூல் அளவு : 21 × 14 செ. மீ.

எழுத்து : 10 புள்ளி

படிகள் : 1200

பக்கங்கள் : 394

விலை : ரூ. 50-00

அச்சிட்டோர் : ஸ்ரீ சரவணா அச்சகம், சீர்காழி.

பொருள் : சித்த மருத்துவம்.

# மூன்றாம் பதிப்பின் முன்னுரை

'சரபேந்திரர் வைத்திய முறைகள் - ஜ்வரரோக சிகிச்சை' என்னும் பெயரிலான இந்நூல், மாமன்னர் சரபோஜி அவர்களால் நம்நாட்டு மருத்துவர்களைக் கொண்டும் மேனாட்டு மருத்துவர் களைக் கொண்டும் நிகழ்த்தப்பெற்ற மருத்துவ ஆராய்ச்சியின் விளைவாகப் பெற்ற மருத்துவ முறைகளில் பலவித ஜ்வரங்களுக் கான மருத்துவ முறைகளைக் கொண்டுள்ளது.

மருத்துவர் எஸ். வெங்கட்டராஜன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்ற இந்நூல் இப்போது மூன்றாம் அச்சாக வெளிவருகின்றது.

இம்மூன்றாம் பதிப்பு வெளிவரப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும் மாநில அரசுக்கும் எமது நன்றி.

இந்நூலைச் சீர்காழி ஸ்ரீ சரவணா அச்சகத்தார் நன் முறையில் அச்சிட்டுத் தந்துள்ளனர். அவர்களுக்கு என் பாராட்டுகள்.

தமிழ்கூறு நல்லுலகிற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையை, பயன்படவேண்டும் என்ற விழைவை வெளிப் படுத்தி மகிழ்கின்றேன்.

மு. சதாசிவம்,
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
21—6—91.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

'நோய்க்கு இடங்கொடேல்' என்பது ஔவை வாக்கு. பெறுதற்கரிய உடம்பினைப் பேணிக்காத்தல் முறைமையாகும். அதற்காகவே, நமது மாமன்னர் சரபோஜி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. 'தன்வந்தரி மகால்' என்ற மருத்துவத்துறையினை ஏற்படுத்தி, அதன் மூலம் பல மருத்துவர்களைக் கொண்டு, மக்கள் வாழ வழி வகுத்து, அனுபவத்தால் கண்ட மருத்துவ முறைகளைக் கொண்ட நூல்களில் இச் 'சுர ரோக சிகிச்சை'யும் ஒன்றாகும்.

சாதாரணமாக எல்லோரையும் பற்றக்கூடியது சுரம் ஆகும். அதனை விரைவில் போக்கும் வழிகளைக் கூறும் இந்நூல், இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. எமது மருத்துவ நூல்களை வாங்கிப் பயனடைந்த வைத்தியர்களும், பிறரும், அற்புதமாகக் குணமளிக்கின்றன' என்று கடிதமெழுதியுள்ளனர். இந்நூலிலுள்ள வைத்திய முறைகள் எளிதில் குணமளிக்கவல்லன. இவ்விரண்டாம் பதிப்பும் பல்லாயிரக் கணக்கான மக்களைக் காப்பாற்றும் என்பதில் ஐயமில்லை.

இவ்விரண்டாம் பதிப்பு வெளிவர உதவிசெய்த மத்திய அரசுக்கு எமது நன்றி இது செவ்வனே வெளி வர உதவியாயிருந்த எமது மகால் நூலகத்தாருக்கும், அச்சேற்றித் தந்த எமது நூலக அச்சகத்தாருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதனைப் பெற்றுப் பயனடைவோர், தங்கள் கருத்துகளையும் தெரிவிப்பார்களாயின் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இங்ஙனம்,

துரை. சுந்தரேசன் I.A.S.

தஞ்சாவூர்,
23—10—80

மாவட்ட ஆட்சியர் & நிருவாகக்குழுத் தலைவர்
சரசுவதி மகால் நூலகம்.

# PREFACE

This publication entitled 'Sarabendra Vaidya Muraigal Jwararoga Chikitsai' is the ninth in the series of publications containing the tested recipes of Raja Serfoji II (1798 1832), the scholar prince of Tanjore. These recipes have been selected by Serfoji as a result of the most satisfactory test that recipes can be put to, namely, actual administration to patients in a Hospital specially started for the purpose in which Indian and English doctors were employed to work in harmony. The number of recipes thus selected total some five thousand. They have been reduced to Tamil verse by the Tamil pandits in his court and preserved in eighteen volumes of palm leaf Manuscripts, classified according to diseases. These eighteen books were chosen as the first in our programme of publications, and the seven books that have already been published have amply justified the preference shown to them. We have received numerous letters from doctors and laymen who have purchased these volumes. testifying to the 'wonderful' efficacy of the prescriptions contained in them. Extracts from these letters are given at the end of this book. The publications that have already appeared deal with (1) Gastric complaints (2) Children and women's diseases, (3) Eye diseases. (4) Anaemia and jaundice, (5) Cough and Asthma, (6) E. N. and T. and (7) Diabetes. Two more that are about to be issued in addition to the present publication, deal with (1) Skin

diseases, Boils, Abscess, Eczema, Cancer etc., and (2) Rheumatism, Lumbago etc. The other eight dealing with (1) Delirium, (2) Piles, (3) Purgatives, (4) Treatment of diarrhoea, (5) Treatment for poisons (6) T. B. and allied diseases, (7) Diseases consequent on fever, and (8) Leprosy, will soon be taken up for publication.

In the present publication, 282 prescriptions for several kinds of fever have been included. Prose version of each prescription follows the original verses in each case. It will be noted that the drugs and herbs occurring in the recipes can be easily had in the market and especially professional herbalists.

Dr. S. VENKATARAJAN has edited this work with great care and has contributed a valuable introduction in which he has described in detail the causes and symptoms of different kinds of fever according to Sanskrit and Tamil treatises on the subject. Our thanks are due to him for his valuable services

We are grateful to the Government of Madras for their timely grants that have enabled us to publish this and other valuable manuscripts of this Library.

Sarasvati Mahal Library,
Thanjavur,
January, 1953.

S. GOPALAN,
Hony. Secretary.

# முகவுரை

'சரபேந்திரர் வைத்திய முறைகள் — ஜ்வரரோக சிகிச்சை' என்ற இவ்வெளியீட்டில் சரபோஜி மஹாராஜாவால் நம் நாட்டு வைத்தியர்களைக் கொண்டும், மேல் நாட்டு வைத்தியர்களைக் கொண்டும் நடத்தப்பட்ட மருத்துவ ஆராய்ச்சியின் பயனாகக் கைகண்டதெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைத்திய முறைகளுள் பலவித ஜ்வரங்களுக்கான முறைகள் அடங்கியிருக்கின்றன.

கலைவிஞ்ஞானங்களிலேயே தன் வாணாளையும் பொருளையும் அர்ப்பணம் செய்த சரபோஜி மன்னர் மக்களுக்கு மிகவும் அவசியமான மருத்துவக் கலையில் அதிகமாக ஈடுபட்டு ஆழ்ந்த ஆராய்ச்சி செய்து அதன் பயனையும் நமக்கு அளித்திருக்கிறார். நம் நாட்டு வைத்திய முறையையும் மேல்நாட்டு வைத்திய முறையையும் செவ்வனே பயின்று ஓர் ஆஸ்பத்திரியை ஏற்படுத்திச் செலவைப் பொருட்படுத்தாமல் இருவகை முறைகளிலும் வல்லவர்களான வைத்தியர்களை நியமித்து நம் நாட்டில் எளிதில் கிடைக்கக்கூடிய மருந்துச் சரக்குகள், மூலிகைகள் சேர்ந்த மருந்து முறைகள் அனைத்தையும் நோயாளிகளுக்குப் பிரயோகம் செய்து, பரீக்ஷித்து நிச்சயம் பலன் அளிக்கக்கூடியதென சுமார் 4000 முறைகளை மன்னர் தெரிந்தெடுத்தார். அம்முறைகளைத் தனது ஆஸ்தானத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு செய்யுள்களாக இயற்றுவித்து வியாதிகளுக்கேற்ப அவைகளைப் பதினெட்டுப் புத்தகங்களாகத் தொகுத்துச் சுவடிகளில் காப்பாற்றி வைத்திருக்கிறார்.

இப்பதினெட்டுத் தொகுதிகளில் இதுவரையில் 8 தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவைகளில் (1) குன்மரோகம், (2) கர்ப்பிணி பாலரோகம், (3) கண்ணைப்

பற்றிய வியாதிகள், (4) பாண்டு காமாலை, (5) ச்வாஸ காசம், (6) சிரோரோகம், (7) நீரிழிவு (8) விரணரோக சிகிச்சை இவைகளைப்பற்றிய சிகிச்சை முறைகள் அடங்கி யிருக்கின்றன. இவ்வெளியீடுகளை வாங்கி அவற்றை உபயோகித்த வைத்தியர்கள் பலரிடமிருந்து அவைகள் 'அற்புதமாக குணமளிக்கின்றன' என்று கடிதங்கள் கிடைத்திருக்கின்றன. இவ்வெளியீட்டிலுள்ள முறைகளும் அவ்விதமே குணமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை

இந்நூலில் பதிப்பாசிரியர் டாக்டர் எஸ். வெங்கட்டராஜன் செய்யுள்களுக்கு உரைநடையும் முகவுரையில் இதிலுள்ள முறைகளில் கண்ட பலவித ஜ்வரங்களின் குறி குணங்களையும் எழுதியிருக்கிறார். அவரது அரிய சேவைக்கு எமது நன்றி உரித்தாகும்.

இந்நூலையும், இதுபோன்ற இம்மஹாலிலுள்ள மற்ற அரிய நூல்களையும் வெளியிடுவதற்குத் தக்க சமயத்தில் பொருளுதவி செய்துவரும் சென்னை அரசாங்கத்தாருக்கும் நாங்கள் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளோம்.

சரஸ்வதி மகால்,
தஞ்சை

**எஸ். கோபாலன்,**
கௌரவக் காரியதரிசி.

# பொருளடக்கம்


1 முகவுரை — 1 to 42

2 மருந்து வகைகளின் அட்டவணை — i to xiv

1 ஜ்வரரோகத்தின் நிதான பூர்வ ரூபங்கள் — — ... 1 to 6

2 ஸந்நிபாத ஜ்வரத்தின் வகைகள் — 6

3 ஆகந்துக ஜ்வர வகைகள் — ... 8

4 விஷம ஜ்வரம் — — — 13

ஷெி ஜ்வர வகைகள் — — 14

5 தாதுகத ஜ்வரங்களின் லக்ஷணங்கள் 16

6 "யூகிமுனி வைத்ய சிந்தாமணி" என்ற புஸ்தகத்திலிருந்து எடுத்தெழுதப் பட்ட ஜ்வரரோக லக்ஷணங்களும் வகைகளும் ... — — 17

7 ஜ்வர கணிதம் ... — — 28

8 ஜ்வர கண்டிகை ... ... — 31

3 சரபேந்திர வைத்ய முறைகள் .... .... 1 to 308

4 மருந்துகளின் அகராதி .... .. . .... 309 to 320

# எமது மருத்துவ வெளியீடுகள்

| | வைத்திய நூல்கள் | | பதிப்பாசிரியர் | ரூ. | பை |
|---|---|---|---|---|---|
| 1 | அகத்தியர் 110 | — | ச அரங்கராசன் | 16 | 00 |
| 2 | பாண்டுகாமாலை சிகிட்சை | — | எஸ். வெங்கட்டராஜன் | 17 | 00 |
| 3 | 4448 வியாதிகள் ஒரு விளக்கம் | — | ச. அரங்கராசன் | 20 | 00 |
| 4 | விரணரோக சிகிட்சை | — | எஸ். வெங்கட்டராஜன் | 65 | 00 |
| 5 | கர்ப்பிணி பாலரோக சிகிட்சை | — | ,, | 45 | 00 |
| 6 | மச்சமுனி 800 | — | எம். எஸ். ராஜன் | 12 | 50 |
| 7 | விஷரோக சிகிட்சை | — | எஸ். வெங்கட்டராஜன் | 40 | 00 |
| 8 | கொங்கணர் சரக்குவைப்பு | — | ,, | 10 | 00 |
| 9 | நயனரோக சிகிட்சை | — | எஸ். அமிர்தலிங்கம்பிள்ளை | 40 | 00 |
| 10 | எண்ணெய் வாகடம் | — | ச. அரங்கராசன் | 30 | 00 |
| 11 | ஆனந்த கந்தம் | — | எஸ் வி. ராதாகிருஷ்ணசாஸ்திரி | 45 | 00 |
| 12 | சிரரோக சிகிட்சை | — | எஸ். வெங்கட்டராஜன் | 40 | 00 |
| 13 | வாதரோக சிகிட்சை | — | ,, | 29 | 00 |
| 14 | சித்தவைத்திய முறைகள் | — | டாக்டர் நந்தகுமார் | 20 | 00 |
| 15 | அகத்தியர் 2000 பாகம் I, II | — | எஸ். வெங்கட்டராஜன் | 50 | 00 |
| 16 | போஜன குதூகலம் | — | ராகவன் | 36 | 00 |
| 17 | அக்காலத்துச் சித்த வைத்திய அனுபவ முறைகள் | — | எஸ் நந்தகுமார் | 20 | 00 |
| 18. | அகத்தியர் அட்டவணை வாடகம் | — | ச. அரங்கராசன் | 52 | 00 |

# முகவுரை

பொதுவாகயாவருக்கும் அடிக்கடி உண்டாகும் ரோகம் ஜ்வரம், மேலும் அது சரீர அவயவாதிகள், மனது முதலானவைகளைத் தாபமடையச் செய்வதாலும், உயிர் பிரியுங் காலத்திலும் உற்பவ காலத்திலும் ஜ்வரம் ஸம்பவிப்பதாலும், பிராணிகள், மரம், செடி கொடிகளையும் இது பீடிப்பதாலும் ஜ்வரநோய்க்கு "ரோகபதி" (வியாதிகளுக்கரசன்) என்ற பெயர் வழங்குகிறது. எனவே "ஜ்வர ரோகம் ஸம்பவிக்காத ஜந்துகள் ஒன்றுமே இவ்வுலகில் கிடையாது" என்று சரகஸம்ஹிதை 3-வது அத்தியாயத்தில் காணப்படுகிறது. பால காப்பியம் முதலான கிரந்தங்களில் ஸ்தாவர ஜங்கம ஜீவராசிகளுக்கு உண்டாகும் ஜ்வரங்களின் பெயர்கள் அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கின்றன:

| | | |
|---|---|---|
| யானைகளுக்கு ஏற்படும் ஜ்வரத்திற்கு | | — பாகலம் |
| குதிரைகளுக்கு | ,, | — அபிதாபம் |
| மாடுகளுக்கு | ,, | — ஈச்வரஸம்ஞ்ஞா |
| ஆடுகளின் ஜ்வரம் | | — ப்ரலாபம் |
| கழுதைகளின் ஜ்வரம் | | — சாலஸம் |
| எருமைகளின் | ,, | — ஹாரித்ரம் |
| மான்களின் | ,, | — ம்ருகரோகம் |
| பக்ஷிகளின் | ,, | — அபிகாதம் |
| மீன்களின் | ,, | — இந்திரமதம் |
| பாம்புகளின் | ,, | — அக்ஷிகம் |
| ஜலத்திற்கு ஏற்படும் ஜ்வரத்திற்கு | | — நீலிகா |
| பூமிக்கு உண்டாகும் ஜ்வரம் | | — ஊஷரம் |
| மரங்களுக்கு உண்டாகும் ஜ்வரம் | | — கோடரம் |

## ஜ்வர உற்பத்தி

தக்ஷனால் அவமானம் செய்யப்பட்ட பரமசிவனுடைய கோபத்தினாலேற்பட்ட ஹூம் காரத்திலிருந்து உண்டானதாகும்.

## ஜ்வர தேவதையின் ரூபம்

ஹரிவம்சம் முதலான கிரந்தங்களில் ஜ்வரத்தின் அதிஷ்டான தேவதையின் ரூபம்.

"3 பாதங்கள், 3 தலைகள், 6 கைகள், 9 கண்கள் இவைகளுடன் கூடியதாகவும், உலகம் அழியும்போது உண்டாகும் யமனுடைய கோரக்காட்சியைப் போலவும் இருக்கும்" என்று காணப்படுகின்றது.

## ஜ்வரத்தின் வகைகள்

ஜ்வரம் உண்டாகும் காரணத்தைக்கொண்டு அதை அடியிற் கண்ட 8 வகையாகப் பிரித்திருக்கின்றனர்:—

| | | | |
|---|---|---|---|
| 1 | வாத ஜ்வரம் | 5 | வாதகப ஜ்வரம் |
| 2 | பித்த ஜ்வரம் | 6 | பித்த கப ஜ்வரம் |
| 3 | கப ஜ்வரம் | 7 | ஸந்நிபாத ஜ்வரம் |
| 4 | வாத பித்த ஜ்வரம் | 8 | ஆகந்துக ஜ்வரம் |

மேலும் சரீரத்தில் ஆரம்பிக்கும் ஜ்வரம், மனதில் ஆரம்பிக்கும் ஜ்வரம் என்ற இருவகைகளும்: ஸௌம்யம் (அதிக குளிர்ச்சியால் ஏற்படுவது), ஆக்நேயம் (அதிக உஷ்ணத்தால் ஏற்படுவது) என்ற இருவகைகளும் அந்தர் வேகம் (உள்ளுக்குள்ளேயே உஷ்ணம் இருப்பது), பகிர் வேகம் (உஷ்ணம் விசிறியடிப்பது) என இருவகைகளும்; ப்ராக்ருதம் (இயற்கையாக ஏற்பட்டது) வைக்ருதம் (இயற்கைக்கு மாறாக ஏற்பட்டது) என்ற இருவகைகளும்; சாத்தியம், அசாத்தியம் என்ற இருவகைகளும்; காலப்பலத்தைப் பொருத்து, 'ஸந்ததம்', ,ஸததம்', 'அந்யேத்யு', 'த்ருதீயகம்' 'சதுர்த்தகம்' என்ற 5 வகைகளும், ஜ்வரம் தங்கியிருக்கும் தாதுக்களை பொருத்து 7 வகைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

## ஜ்வரத்தின் ஸம்ப்ராப்தி

தவறுதலான உணவு, நடைமுறைகளினாலும் வாதம் முதலிய தோஷங்கள் ஆமாசயத்தையடைந்து அங்குள்ள

ரஸதாதுவுடன் கலந்து, கோஷ்டத்திலுள்ள (குடலிலுள்ள) அக்னி பலத்தைக்குறைத்து (உஷ்ணத்தை) வெளிக் கொணர்ந்து ஜ்வரத்தை உண்டாக்குகிறது. மேலும், விகாரத்தையடைந்த ரஸதாது வியர்வை செல்லும் குழாய் களையும், ரஸவஹஸ்ரோதஸ்களையும் அடைத்து விடுவதால் ஜ்வரம் வ்யக்தமாகிறது.

## ஜ்வரத்தின் லக்ஷணங்கள்

(1) வியர்வையின்மை (2) மனஸ், தேகம், இந்திரியங் கள் முதலானவைகள் தாபமடைதல் (3) உடல் முழுமையும் வலி முதலானவைகள் சேர்ந்தாற்போல் ஏற்படும்.

## ஜ்வரத்தின் பூர்வரூபம்

களைப்பு, சோம்பல், உடம்பில் நிறவேற்றுமை, அரோ சகம், கண்ணீர் ததும்புதல், குளிர், காற்று, வெயில் முத லானவைகளில் சிற்சிலசமயம் விருப்பம் சிற்சில சமயங்களில் வெறுப்பு, அடிக்கடி கொட்டாவி, உடம்புவலி, உடம்பு பாரம், மயிர்சிலிர்த்தல், முதலானவைகள் ஜ்வரம் வருவ தற்கு அறிகுறிகளாகும்.

## விசேஷ பூர்வரூபம்

வாத ஜ்வரத்தில் அதிக கொட்டாவியும், பித்த ஜ்வரத் தில் கண்ணெரிச்சலும், கப ஜ்வரத்தில் ஆஹாரத்தில் ருசி யின்மையும் உண்டாகும்.

## வாதஜ்வர லக்ஷணங்கள்

உடம்பு நடுக்கம், ஜ்வர வேகம் மாறி மாறி அதிக மாகவோ அல்லது குறைவாகவோ இருத்தல், கழுத்து, உதடுமுதலான இடங்களில் வறட்சி, நித்திரையின்மை, தும்மல்இல்லாமை, அவயவங்களில் நைப்பின்மை, தலை, ஹ்ருதயம் முதலான இடங்களில் வலி, அரோசகம், மலச் சிக்கல், வயிற்றுவலி, அடிக்கடி கொட்டாவி முதலான குறி கள் ஏற்படும்.

## பித்த ஜ்வரத்தின் குறிகள்

உடம்பு முழுவதிலும் ஒரே சமயத்தில் எரிச்சல், பிதற்றல் வாயில் உறைப்புச்சுவை, மூக்கு, வாய் முதலான இடங்களில் வேக்காளம், குளிர்ச்சியில் விருப்பம், மயக்கம், மூர்ச்சை, திமிர்ப்பு, சோம்பல், பேதி, பித்தநீராக வாந்தியெடுத்தல், வாந்தியுடன் இரத்தமும் வெளியாதல், சிவப்பு நிறமான தடிப்புகளுண்டாதல், தோல், முதலானவைகளில் மஞ்சள் அல்லது பசுமை நிறம், வியர்வை, மேல்மூச்சு விடுகையில் துர்நாற்றம், தாங்கமுடியாத தாகம் முதலான குறிகள் உண்டாகும்.

## கபஜ்வர லக்ஷணங்கள்

அரோசகம், உடம்பு திமிர்த்தல், ஸ்ரோதஸ்கள் அடைபடுதல், வாயில் உமிழ்நீர் சுரத்தல், வாயில் இனிப்புச்சுவை, மார்பில் சளிகட்டுதல், மேல்மூச்சு வாங்கல், மூக்கிலிருந்து நீரொழுகுதல், இருதயப் படபடப்பு, வாந்தி, இருமல், தோல் முதலான இடங்களில் குளிர்ச்சி, வீக்கம், சோம்பல், முதலானவைகளேற்படும் உடம்புபாரம், கண்கள் முதலான இடங்களில் வெளுப்பு, மயிர் சிலிர்த்தல் முதலான குறிகளும் உண்டாகும்.

## பித்தவாத ஜ்வர லக்ஷணங்கள்

தலைவலி, மயக்கம். வாந்தி, தாகம், கழுத்து, வாய் முதலான இடங்களில் வறட்சி, சோம்பல், மூட்டுக்களில்வலி நித்திரை பங்கம், நாவறட்சி, மயிர்க்கூச்சல், கொட்டாவி, வெகுவேகமான பேச்சு முதலான குறிகளுண்டாகும்.

## வாத கப ஜ்வர லக்ஷணங்கள்

சரீரத்தில் உஷ்ணம் குறைதல், அரோசகம், மூட்டுகளிலும், தலையிலும் வலி, மூக்கொழுகுதல், பெருமூச்சு, இருமல், மலபந்தம், திமிர்த்தல், பார்வைக்குறைவு, மயக்கம், சோம்பல் முதலான குறிகளேற்படும். இதையன்றி அதிகமான வீக்கம், கழுத்துப்பிடிப்பு, வியர்வைக்குறைவு முதலான குறிகளும் காணும்.

## பித்த கப ஜ்வர லக்ஷணம்

உடம்பு திமிர்த்துப்போதல், வியர்வைக்குறைவு அழற்சி, நாவறட்சி, இருமல், கபம் வெளியாதல், மயக்கம் சோம்பல், வாயில் கோழை நிறைந்தும் கசப்புச்சுவையுடனு மிருத்தல் முதலான குறிகுணங்கள் உண்டாகும்.

## ஸந்நிபாத ஜ்வர லக்ஷணங்கள். (Typhoid)

தனித்தனியான ஜ்வரங்களின் லக்ஷணங்கள் அனைத்தும் ஒருங்கே இதில் காணும். அடிக்கடி நாவறட்சி, தேகத்தில் சிற்சில சமயங்களில் உஷ்ணமின்மை, பகல் நேரங்களில் தூக்கம், இரவில் கண்விழித்தல் அல்லது எப்பொழுதுமே தூக்கம் இல்லாவிட்டால் தூக்கமின்மை முதலான குறிகள் உண்டாகும். வியர்வையும் சிற்சில சமயங்களில் காணும். காரணமின்றிப் பாட்டு, சிரிப்பு, எழுந்திருந்து ஓடல் முதலான சேஷ்டைகளையும் செய்வான் கண்களில் கலக்கமும், கண்ணீரும் உண்டாகும். இரெப்பைகளையடிக்கடி சிமிட்டுவான்.

ஆடுதசை, விலாப்பக்கங்கள், தலை, மூட்டுகள், எலும்பு முதலான இடங்களில் தாங்கமுடியாத வலி, மயக்கம், காதுகளில் இரைச்சலுடன் வலி, கழுத்தினுட்புறத்தில் சிறுசிறு முட்கள் போன்ற சதையெழு[illegible]ள், நாக்கில் முறமுறப்பு, வேக்காளம் முதலான குறி[illegible] காணும். நாக்கையும் அசைக்கமுடியாமை, மூட்டுகள் [illegible]ட்டுப்போனது போன்ற உணர்ச்சி, ரத்தம், பி[illegible]ம் [illegible]காமை முத[illegible]னவை[illegible]கள் அதிகமாக வீழ்தல், த[illegible] வலி முதலான குறி[illegible]ளும் உண்டாகும். உடம்பில் கறுப்பும், சிவப்புங் கலந்த தடிப்புகளும் ஏற்படும். இருதய வலி, வயிற்றுப்போக்கு, அல்லது மலபந்தம், அல்லது குறைந்த அளவில் மலம் போதல் முதலான குறிகளுடன் வாயில் கொழகொழப்பு பலஹீனம் குரல் கம்மல், பிதற்றல், கழுத்தில் "க்ரீச்" என்ற சப்தம், முதலான குறிகளும் தோன்றும். இதையே "அபின்யாஸ ஸந்நிபாதம்" என்றும் "ஹதௌஜஸ்" என்றும் சிலர் கூறுவார்கள்.

## ஸந்நிபாதத்தில் ஸாத்தியாஸாத்யம்

மேலும் ஸந்நிபாத ஜ்வரத்தில் வாதகபங்களுடன் பித்தம் தனியாக நின்று குடல்களிலோ அல்லது சருமத்திலோ எரிச்சலைக் கொடுக்கிறது. இந்த அழற்சி ஜ்வரத்திற்கு முன்போ அல்லது பின்போ ஏற்படும். வாதகபங்கள் மாத்திரம் மேலிட்டு நிற்கும். ஸந்நிபாதத்தில் குடல்கள், சருமம் முதலான இடங்களில் குளிர்ச்சி அதிகமாகும். இவ்விருவித ஸந்நிபாதங்களுள் எரிச்சலைக்கொடுக்கும் ஸந்நிபாதம் மிகச் சிரமப்பட்டுச் சிகிச்சை செய்யக்கூடியது.

— ............

# ஸந்நிபாத ஜ்வரத்தின் வகைகள்

## 1 விது சந்நிபாதம்

உடலில் வெப்பம், உடல்வலி, நாவறட்சி, சோம்பல் வயிறு உப்பிசம், சுவாஸகாஸம், தலைச்சுற்றல், சிரமம் முதலான குறிகளேற்படும்.

## 2 பல்கு ஸந்நிபாதம்

சோம்பல், வலதுபுறத்தில் வலி, மார்பு, கழுத்து, சிரஸ் முதலான இடங்களில் பிடிப்பு, அடிக்கடி கபம், பித்தம் முதலியவைகளைத் துப்புதல், தொண்டை வலி, கழிச்சல், நாவறட்சி, விக்கல், அதிகமான தூக்கம் முதலான குறிகள் காணும்.

## 3 மகரீ ஸந்நிபாதம்

குளிர் ஜ்வரம், அதிநித்திரை, பசி நாவறட்சி விலாபக்க வலி, தலைபாரம், சோம்பல், கழுத்தில் சுளுக்கு, வயிற்றுவலி நீர்ப்பையில் வலி முதலானவைகள் ஏற்படும்.

## 4 விஸ்புரக ஸந்நிபாதம்

நாவறட்சி, அதிக ஜ்வரம், சிரமம், பக்கவலி, பார்வைக் குறைவு, ஆடுதசைகளில் இசிவு, எரிச்சல், துடையில் மாம்ஸ

வளர்ச்சி குறைந்து வருதல், தேக பலக்குறைவு, மல மூத்தி ரத்துடன் இரத்தம் கசிதல், வயிற்றுவலி, தூக்கமின்மை ஆஸனத்தில் வலி, மூத்திராசயத்தில் வலி உடம்பில் வேதனை, விக்கல், மூர்ச்சை, கூச்சலிடுதல் முதலானவைகள் உண்டாகும்.

## 5 சீக்ரகாரி ஸந்நிபாதம்

கடுமையான ஜ்வரம், சைத்யோபசாரத்தினால் கபம் விருத்தியாதல், விக்கல், மேல்மூச்சு, நித்திரை வயிற்றுளைவு, மூட்டுகளில் வலி, உடம்புபாரம், தேகத்தில் வியர்வை உண்டாகி வயிற்றிலும் பக்கங்களிலும் வலி ஏற்படுதல், ஸ்ரோதஸ்களிலிருந்து இரத்தம் வீழல், நாவறட்சி, அழற்சி முதலான குறிகள் உண்டாகும். இது அஸாத்யரோகமாகும்.

## 6 கப்பண ஸந்நிபாதம்

குளிர் ஜ்வரம், மிதமில்லாத நித்திரை, சோம்பல், வாந்தி, மூர்ச்சை, தாபம், வயிற்றில் பார உணர்ச்சி, அரோசகம், ஹ்ருதயப் பிடிப்பு, வாயில் இனிப்புடன் கபம் வெளியாதல், இந்திரியங்கள் பலஹீனமடைதல் முதலான குறிகள் ஏற்படும். இதற்கும் சிகித்சை செய்வது சிரமமானது. 3 நாட்களுள் நோயாளியைக் கொன்றுவிடும்.

## ஸந்நிபாத ஜ்வரத்தின் அஸாத்ய நிலைமை

மலபந்தம் ஏற்பட்டு, ஜாடராக்னியும் அவிந்து, ஸந்நிபாத ஜ்வரங்களுக்குக் கூறப்படும் லக்ஷணங்கள் அனைத்தும் ஒருங்கே சேர்ந்திருந்தாலும் அது அஸாத்யமானது.

## ஸந்நிபாத ஜ்வரம் குறைவதற்கான நாட்கள்

வாதம் மேலிட்ட ஸந்நிபாத ஜ்வரம் 14 நாட்களிலும், பித்தம் அதிகமான ஸந்நிபாத ஜ்வரமெனில் 18 நாட்களிலும், கபம் பிரதானமான ஸந்நிபாதம் 22 நாட்களிலும் இறங்க ஆரம்பிக்கும். அப்படிக்கு இறங்கவில்லையானால் மரணமும் சம்பவிக்கலாம்.

### ஸந்நிபாத ஜ்வரத்தின் உபத்ரவம்

ஜ்வரம் விடுவதற்குச் சிலதினங்களுக்குமுன் காதுகளின் கீழே மிகப்பெரிய வீக்கம் ஸம்பவிக்கும். அது ஏற்பட்டால் நோயாளி பிழைக்கமாட்டான்.

### அபின்யாஸ ஸந்நிபாத ஜ்வரம் (Pneumonia)

தோஷாதிகள் பிரகோபமடைந்து, மார்பிலுள்ள ஸ்ரோதஸ்ஸுகளை அடைந்து அங்கு ஆமதோஷத்தை விருத்திசெய்து, தோஷங்கள் கெட்டியாகின்றன. மேலும் இவ்வாமதோஷம் புத்திஸ்தானத்திலும், இதர, இந்திரிய மார்க்கங்களிலும் பிரவேசித்து ஜ்வரத்தை உண்டாக்கும். இது காது, கண் முதலான உறுப்புகளைப் பாதிக்கின்றன. நோயாளிக்கு எந்த வேலைகளைச் செய்வதிலும் பிரியம் இருக்காது. ஸ்பர்ச உணர்ச்சி, வாசனைகளையறியும் சக்தி முதலானவைகள் மந்தப்பட்டுவிடும். தலையை இங்குமங்கும் புரட்டுவான். சாப்பாட்டில் விருப்பமிராது. கூச்சலிடுவான். படுக்கையிலும் நிலைகொள்ளமுடியாது தவிப்பான். வார்த்தைகளும் ஹீனமாகும். இது அஸாத்யமாகும்.

---

## ஆகந்துக ஜ்வர வகைகள்

### 1 அபிகாத ஜ்வரம்

இது கத்தி முதலான ஆயுதங்களினுலும், நெருப்பு முதலானவைகள் சுட்ட புண்களினுலும், கீழே விழுந்ததனுல் ஏற்பட்ட அடிகளினுலும், பிரகோபமடைந்த வாயு இரத்தத்தைக் கெடுத்து உடம்புவலி, வீக்கம், வர்ண வேறுபாடு முதலியவைகளுடன் கூடிய ஜ்வரத்தை உண்டாக்குகிறது.

### 2 அபிஷங்க ஜ்வரம்

இது துர்தேவதைகளின் சேஷ்டைகளினுலும், ஓஷதிகளை முகர்வதனுலும், விஷ ஸம்பந்தத்தினுலும், பயம், கோபம் வருத்தம், காமம் முதலானவைகளாலும் உண்டாகிறது.

### (a) தேவதைகளின் சேஷ்டையாகில்

காரணமின்றிச் சிரிப்பும், அழுகையும், நடுக்கலும் ஏற்படும். மூன்று தோஷங்களும் பிரகோபித்து ஜ்வரத்தை ஏற்படுத்துகிறது.

### (b) ஔஷதிகளை முகர்வதால்

மூர்ச்சை, தலைவலி, நடுக்கம், தும்மல், வாந்தி முதலான குறிகள் காணும். இதுவும் ஸந்நிபாதத்தினால் ஏற்படக் கூடியது.

### (c) விஷ சம்பந்தத்தாலுண்டான ஜ்வரத்தில்

மயக்கம், வயிற்றுளைவு, வாய் கறுத்தல், எரிச்சல் மாரடைப்பு, நாவரட்சி, அன்னத்வேஷம் முதலான லக்ஷணங் கள் காணும். மூன்று தோஷங்களும் இதில் கோபிக் கின்றன.

### (d) கோபத்தினால்

நடுக்கம், தலைவலி முதலான குறிகளேற்படும் இது பித்தப்ரகோபத்தாலுண்டாகும்.

### (e) பயம், வருத்தம்

முதலானவைகளினால் ஏற்படும் ஜ்வரத்தில் உடல் நடுக்கமும், பிதற்றலும் அதிகமாகத் தோன்றும். இது வாதப்பிர கோபத்தினால் ஏற்படக்கூடியது.

### (f) காம ஜ்வர லக்ஷணங்கள்

மயக்கம், ருசியின்மை, எரிச்சல், வெட்கமின்மை, நித்திரையில்லாமை, அறிவு மயக்கம், தைர்யக்குறைவு, சோம்பல், ஆகாரத்தில் விருப்பமின்மை முதலியவைகளாம், இதற்கும் வாதப்ரகோபமே காரணமாகும்.

## 3 அபிசார ஜ்வரம்

இது அதர்வ வேதப்ரயோகங்களினால் வைக்கப்படும் ஏவல் முறையாகும். நோயாளிக்கு முதலில் சித்தப்பிரமை

ஏற்பட்டுப் பின்பு தேக உபாதைகள் காணும். உடம்பில் தடிப்புகள், தாகம், மயக்கம், உடம்பெரிச்சல் முதலியவை களுடன் கொஞ்சங் கொஞ்சமாக ஜ்வரம் அதிகரிக்கும்.

## 4 அபிசாப ஜ்வரம்

பெரியோர்கள், பண்டிதர்கள் முதலியவர்கள் இடும் சாபத்தினாலேற்படும் ஜ்வரமாகும். அபிசார ஜ்வரத்தில் ஏற்படும் குறிகளையே இங்கு எடுத்துக்கொள்ளவும். மேலும் இவ்விருவகை ஜ்வரங்களும் ஸந்நிபாத ப்ரகோபத் தாலேற்படுபவை. ஆகவே இது அஸாத்யமாகும்.

நிற்க ஜ்வரங்களின் வகைகளை,

| | | |
|---|---|---|
| 1 | சரீர ஜ்வரம் | மானஸ ஜ்வரம் |
| 2 | ஸௌம்ய ஜ்வரம் | தீக்ஷ்ண ஜ்வரம் |
| 3 | அந்தர்கத ஜ்வரம் | பஹிர் ஜ்வரம் |
| 4 | ப்ராக்ருத ஜ்வரம் | வைக்ருத ஜ்வரம் |
| 5 | ஸாத்ய ஜ்வரம் | அஸாத்ய ஜ்வரம் |
| 6 | ஸாம ஜ்வரம் | நிராம ஜ்வரம் |

என்று முன்னமேயே கூறப்பட்டிருக்கின்றன. அவை களின் குறிகள் கீழ்வருமாறு:

### சாரீர ஜ்வரத்தில்

முதலில் தேகத்தில் சூடு அதிகரிக்கும். பின்பு மனதைப் பாதிக்கும்.

### மானஸ ஜ்வரத்திலோ

முதலில் மனஸ் சம்பந்தப்படும். பின்புதான் சரீர உபாதிகளேற்படும்.

### ஸௌம்ய ஜ்வரம்

வாதமும் கபமும் பிரகோபமடைந்து உண்டாகும் ஜ்வரம் 'ஸௌம்ய ஜ்வரமாகும்'

வாதமும் பித்தமும் பிரகோபமடைந்து உண்டாவது 'தீக்ஷ்ண ஜ்வர'' மெனப்படும். தேகத்தில் தாங்கமுடியாத எரிச்சலும் உண்டாகும்.

### அந்தர்கத ஜ்வரத்தில்

ஜ்வரத்தின் வேகம் அதிகமாக இருப்பதுடன், மலச் சிக்கல், நீர் எரிச்சல் முதலானவைகளும் இருக்கும்.

### பஹிர் ஜ்வரத்திலோ

உடம்பின்மேல் உஷ்ணம் அதிகமாக இருக்குமேயன்றித் தேகத்தினுள் அதிகமிராது. மேலும் பகிர் ஜ்வரம் சிகிச்சைக்கு சாத்யமானது.

### ப்ராக்ருத ஜ்வரம்

வர்ஷா காலத்தில் (ஆவணி, புரட்டாசியில்) உண்டாகும் வாத ஜ்வரமும், சரத் காலத்தில் (ஐப்பசி, கார்த்திகை மாதங்களில்) ஏற்படும் பித்த ஜ்வரமும், வஸந்தருதுவில் (சித்திரை, வைகாசி) காணும் கப ஜ்வரங்களும் "ப்ராக்ருத" ஜ்வரங்களாகும். இதையன்றி மற்ற காலங்களில் ஏற்படும் ஜ்வரங்கள் அனைத்தும் வைக்ருத ஜ்வரங்களாகும்.

மழை காலத்தில் உண்டாகும் வாதம் வரத்தில் பித்த கபங்களும் முக்கிய பங்கெடுத்துக்கொள்ளும். சரத் காலத்திலேற்படும் பித்த ஜ்வரத்தில், கபமும் சேர்ந்தே காணப்படும். அவ்விரு தோஷங்களின் ஸ்வபாவங்களினாலும், விஸர்க்க காலத்தினாலும் (தக்ஷிணாயனம் சீதகாலம்) இவ்வகை ஜ்வரம் வரும்போது உணவு உண்ணாமலிருப்பதனால் கெடுதி உண்டாகாது. வசந்த காலத்தில் ஏற்படும் கபப் பிரதானமான ஜ்வரத்துடன் மற்ற இரு தோஷங்களான வாதமும் பித்தமும் சேர்ந்தே உண்டாகும்.

### ஸாத்ய ஜ்வர லக்ஷணங்கள்

பலமுள்ளவர்களுக்கு (பால்ய வயது) ஏற்படுவதும், காஸம் முதலான உபத்ரவங்கள் இல்லாமலும், தோஷப்ர

கோபம் அதிகம் இல்லாமலும் இருக்கும் ஜ்வரம் "ஸாத்ய ஜ்வர" மாகும், இதை எளிதில் நிவர்த்திக்கலாம்.

## அசாத்ய ஜ்வர லக்ஷணங்கள்

அநேக பலமுள்ள காரணங்களினால் ஏற்படும் ஜ்வரம் ஜ்வரங்களுக்குள்ள எல்லாக் குறிகளுடன் கூடியதும், ப்ராணா வஸ்தையையுண்டு பண்ணுவதுமானதும், தேகம் இளைத்த வனுக்கும் வீங்கியவனுக்கும் ஏற்படும் ஜ்வரங்களும், நீண்ட காலமாய்த் தொடர்ந்து அடிக்கும் ஜ்வரமும், வெகுகடுமை யான ஜ்வரமும், தலையிலுள்ள மயிரை உதிர்ந்து போகுமாறு செய்யும் ஜ்வரமும் அசாத்யமாகும். அந்தர்கதமான ஜ்வரம் நாவரட்சி, மலபந்தம், கடுமையான இருமல் முதலான குறி களோடு ஏற்படும் ஜ்வரங்களும் எளிதில் குணமாவதில்லை. ஜ்வரத்தின் வேகம் பற்பல விதமாக மாறிக் கொண்டிருந்தா லும் அது அசாத்யமாகும்.

ஞாபக சக்தியைப் போக்கிப் படுத்த படுக்கையாக இருக்கும் நோயாளியும் மரணமடைவான். அதிகமான மயிர்க்கூச்சலுடன், கண்கள் சிவந்து. மார்பில் வலியுடன் கூடி வாயினால் மூச்சுவிடும் நோயாளியும் பிழைக்கமாட்டான். பின்னும் விக்கல், பெருமூச்சு, அதிக தாகம், மிரண்ட பார்வை, மேல்மூச்சு அதிக இளைப்பு இவைகளோடு கூடி யிருக்கும் பிணியாளிக்கும் சிகிச்சை செய்யாமலிருப்பது நலம். தேககாந்தி குறைவடைதல் இந்திரியங்கள் பஞ்ச டைதல், ஆகாரம் செல்லாமை, தீக்ஷ்ணம், உஷ்ணம் இவை களின் வேகத்தால் பாதிக்கப்படுதல் முதலான குறிகளும் நோயாளியின் பிராணனைப் போக்கக் கூடியவைகளாகும்.

## ஆம ஜ்வர லட்சணங்கள்

பிதற்றல், மயக்கம் முதலியவைகள் அதிகமாக இருத்தல் களைப்பு, அதிகமான சிறுநீர்ப் பெருக்கு, மலபந்தம் பசி யின்மை சாப்பிட்ட உணவு சீரணமாகாமை, முதலான குறிகளுண்டாகும்

உமிழ்நீர்ச் சுரப்பும், இருதயப் படபடப்பும், பார உணர்ச்சியும் ஏற்பட்டாலும், ருசியின்மையும், சோம்பலும் அதிகமாக இருந்தாலும் அது ஆம ஜ்வரத்தின் லக்ஷணங் களாகும்.

## தோஷாதிகள் பக்குவ நிலைமைக்கு வரும் லட்சணங்கள்

ஜ்வர வேகம் அதிகமாதல், தாகம் பிதற்றல், பெரு மூச்சு விடுதல், தலைச்சுற்றல், ஒரு தடவையோ அல்லது 2 தடவையோ மலப்ரவ்ருத்தி ஏற்படுதல், வாந்தி செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி முதலானவைகளுண்டாகும்.

## நிராம ஜ்வரம்

எட்டாவது நாள் வந்ததும், பசியெடுத்தல், தேகம் இலகுவாதல் ஜ்வரம் சமனமடைதல், தோஷங்கள் தானாகவே பக்குவமடைந்து அதனதன் ஸ்தானத்திற்கு வந்துவிடுதல் முதலான குறிகள் ஆம தோஷம் நீங்கிய ஜ்வரத்தின் இலக்ஷணங்களாகும்.

# விஷம ஜ்வரம்
## (MALARIA)

வாதாதி தோஷங்கள் காலை, மாலை முதலிய காலங் களின் பலத்தை அநுசரித்து இவ்வித ஜ்வரத்தை உண்டாக்கு கின்றன. சரீரத்தில் தோஷாதிகள் சொல்பமாக இருந்து பின்பு ஹிதமல்லாத ஆஹார விஹாராதிகளை உபயோகப் படுத்துவதனால் மறுமுறை விருத்தியடைந்து விடாத ஜ்வரத்தை உண்டாக்கும். ஜ்வரம் நின்றபின் அதிவிரைவில் அபத்யங்களைச் செய்வதனாலும் மறுபடியும் ஜ்வரம் உண்டாகித் தாதுக்களைப்பற்றி விஷமம் வரத்திற்குத் காரணமாகும்.

நிலையில்லாமல் காலந்தவறி வருவதுடன், குளிர், தாபம் இவ்விரண்டும் மாறி மாறி உண்டாகி, ஜ்வரத்தின் வேகமும்

அடிக்கடி வித்தியாசமாகிக்கொண்டும் வரும். இவ்வகைக் காய்ச்சலுக்கு "விஷம ஜ்வரம்" எனப்பெயர். இதுவே முறை ஜ்வரமாகும்.

## விஷம ஜ்வரத்தின் வகைகள்

### 1 சந்தத ஜ்வரம்

தோஷங்கள் ரஸத்தைப் பற்றினால் இவ்வகை ஜ்வரம் உண்டாகும். இது முறையே 7 நாட்களாவது, 10 நாட்களாவது அல்லது 12 நாட்களாவது விடாமல் தொடர்ந்து அடிக்கும். இந்தவித ஜ்வரத்தை விஷம ஜ்வர வகுப்பில் சேர்த்திருப்பதற்குக் காரணம் ஏனெனில் இது 10, 7, 12 நாட்களாகி இறங்கிய பின்னும் எளிதில் மறுமுறையும் விருத்தியாகும் இயல்புடையது என்றதால்தான்.

### 2 சதத ஜ்வரம்

இரத்த தாதுவைத் தோஷாதிகள் ஆச்ரயித்தால் இவ்வகை ஜ்வரம் ஏற்படும். இது ஒரு நாளில் இரு தடவை விருத்தியாகித் தணிந்துவிடும். அதாவது பகல் வேளையில் ஒரு தடவை ஜ்வரம் வந்து இறங்கிவிடும். அதேபோல் இரவிலும் ஒருதடவை ஜ்வரம் அடித்து நிற்கும்.

### 3 அன்யேத்யுஷ்க ஜ்வரம்

தோஷங்கள் மாம்ஸ தாதுவைப் பற்றினால் ஜ்வரம் காலையில் ஆரம்பித்து சாயங்காலத்திலேயே இறங்கிவிடும். ஆகவே தினந்தோறும் ஜ்வரம் ஒருதடவை ஏறி இறங்கும். மறுதினம் ஜ்வரம் அடிக்கும். ஆனால் இரவு நேரங்களில் ஜ்வரம் இருக்காது.

### 4 த்ருதீயக ஜ்வரம்

மேதோ தாதுவை ஆச்ரயித்தால் ஒருநாள் விட்டு மறுநாள் வரும் முறை ஜ்வரத்தை உண்டாக்கும். அதாவது 3 நாட்களுக்கொருமுறை காய்ச்சல் உண்டாகும்.

## 5 சதுர்த்தக ஜ்வரம்

தோஷங்கள் அஸ்தியையும், மஜ்ஜையையும் பற்றியிருந்தால் 2 நாட்களுக்கொருமுறை உண்டாகும் ஜ்வரத்தை உண்டுபண்ணும். இன்றைக்கு ஜ்வரம் ஏற்பட்டு இறங்கி விட்டால் மறுபடியும் நான்காம் தினத்தன்று தான் ஜ்வரம் வரும்.

## விஷம ஜ்வரத்திற்கு வேறொரு காரணம்

இவ்வகை ஜ்வரம் பூதங்கள் சரீரத்தைச் தாக்குவதனால் ஏற்படுகிறது என்று சிலர் கூறுகிறார்கள். தற்காலத்தில் 'மலேரியா' ஜ்வரத்திற்குக் காரணமான மலேரியல் பராஸைட்'. (Malarial Parasite) என்ற வகைக் கிருமிகளையும் இவை குறிக்கலாம் என்று தோன்றுகிறது.

## வாத பலாஸக ஜ்வரம் (அஸ்தி காங்கை)

எப்பொழுதுமே ஜ்வரம் உள்ளூர அடித்துக்கொண்டு இருக்கும். உடம்பில் வறட்சியேற்படும். வீக்கமும் அதிகரிக்கும். உடம்பு இளைக்கும். அவயவங்களை அசைக்க முடியாதபடி பலஹீனம் உண்டாகும். இது கபதோஷம் அதிகரித்ததால் ஏற்படும் ஜ்வரமாகும்.

## தாஹசீதாதி ஜ்வரங்கள்

1. இவ்வகையும் விஷம ஜ்வரத்தைச் சேர்ந்தவையே தேகத்தில் ரஸதாது குன்றிப்போய் கபமும் பித்தமும் விகாரமடைந்தால் சரீரத்தில் ஒருபாதி உஷ்ணமாகவும், மற்ற பகுதி சீதளமாகவும் ஆகும்.

2. பித்தம் சரீரத்தின் மத்யபாகத்திலும், கபதோஷம் கை, கால்களிலும் வியாபித்து நின்றால் அப்போது உடலில் உஷ்ணமும் கைகால்களில் குளிர்ச்சியும் உண்டாகும்.

3. சரீரத்தில் கபம் முக்யமாகவிருந்து, பித்தம் கை, கால்களில் வ்யாபித்தால் உடம்பில் குளிர்ச்சியும் கை, கால்களில் உஷ்ணமும் இருக்கும்

4. கபமும், வாயுவும் சர்மத்தை ஆச்ரயித்தால் அவ் விரு தோஷங்களும் சைத்யத்தைக் கிளப்பிவிட்டுக் குறைந்த வுடன், பித்தம் அதிகரித்து சூட்டைக் கிளப்பும்.

5. பித்தம் தோஷம் தோலையடைந்தால் முதலில் தேகத்தில் உஷ்ணம் ஏற்பட்டும் பின்பு தானாகவே குறைந்து மற்ற தோஷாதிகளின் பிரகோபத்தால் சீதளம் அதிகம் ஆகும்.

மேற்கூறிய வகைகள் ஸம்ஸர்க்க தோஷத்தினாலேற் படுவதனால் அவைகளுக்குச் செய்வது சிரமமாகும்.

# தாதுகத ஜ்வரங்களின் லக்ஷணங்கள்

## இரச தாதுவைப்பற்றினால்

சரீர பாரம், குமட்டல், உடல் இளைப்பு, வாந்தி, அரோசகம், மனச்சோர்வு முதலிய குறிகளுண்டாகும்.

## ரத்தத்தை ஆச்ரயித்தால்

இரத்தம் வாந்தியாதல், அழற்சி, மயக்கம், தலைச்சுற்றல் பிதற்றல், இரத்தக் கட்டிகள், நாவறட்சி முதலிய குறிகள் ஏற்படும்.

## மாம்ஸ தாதுவில் கலந்தால்

காலிலுள்ள ஆடுதசையில் இசிவுடன் வலி, நாவறட்சி, மலஜலப்போக்கு அதிகரித்தல், தேகத்தில் எரிச்சல், கை கால்களில் வலிப்பு, சிரமம் முதலான லக்ஷணங்கள் உண்டா கும்.

## மேதோ தாதுவைப்பற்றினால்

மிதமிஞ்சிய வியர்வை, நாவறட்சி, மூர்ச்சை, உளரல், வாந்தி, துர்நாற்றம், அரோசிகம், உடல் தளர்ச்சி, அதிக மான ஜ்வரம் முதலியவைகள் ஏற்படும்.

### அஸ்தியைப் பற்றியதில்

எலும்பினுள் வேதனை, கூக்குரலிடுதல், பெருமூச்சு, பேதி, வாந்தி, அவயவாதிகளில் வலிப்பு முதலியவைகள் உண்டாகும்.

### மஜ்ஜாகதமான ஜ்வரத்தில்

கண்கள் இருண்டு வருதல், விக்கல், இருமல், உஷ்ண மின்மை, வாந்தி, தேகத்தினுட்புறத்தில் அழற்சி, பெரு மூச்சு, மர்மாதிகளில் குத்துவலி, முதலான குறிகள் காணும்.

### சுக்ரதாதுவை ஆச்ரயித்தால்

ஆண்குறி மேலெழுந்து, சுக்ரம். வெளியாகும். மரணமும் ஏற்படும்.

### ஜ்வரம் விட்டதின் குறிகள்

வியர்வை தாராளமாக உண்டாகும். தேகம் இலேசாகும். தலையில் அரிப்பு, வாயில் லேசான வேக்காளம், தும்மல் முதலானவைகளும் ஏற்படும். உணவில் விருப்பம் உண்டாகும்,

## தமிழ் முறைப்படி ஜ்வரரோக லக்ஷணங்கள் பின்வருமாறு :-

# இவை "யூகிமுனி வைத்ய சிந்தாமணி" என்ற புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை

### ஜ்வர வரலாறு

சொல்லவே சுரத்தினுட திறமைகேளாய்
சடத்திலுள்ள பிணிக்கெல்லா மிராசாவாகும்
எல்லவெ நமனுக்கு மொக்கு மொக்கு
மெழிலோடு பிரலாப கோபமாகும்
தள்ளவே தக்கனிட வேள்வியைத்தான்
சாம்பசிவன் கோபத்தா லழித்தபோது

நெல்லவே நெற்றிக்கண் சுவாலைதன்னில்
நேராகப் புறப்பட்டு நேர்ந்ததாமே.

இதன் பொருள் : இது உலகத்திலுள்ள நோய்கள் எல்லாவற்றிற்கும் அரசரைப்போன்றது. இது எமனுக்கு நிகரானது. இது சிவனுடைய கோபத்திற்குச் சமானமானது. தக்ஷனுடைய யாகத்தை அழித்தபோது பரமசிவனின் மூன்றும் கண்களிலிருந்து உண்டான ஜ்வாலையிலிருந்து ஏற்பட்டது.

## ஜ்வரங்களின் வகைகள்

நேர்ந்ததோர் சுரமேழு விதமாகும்
நிலையான நாமத்தி னேர்மைகேளாய்
வார்ந்ததோர் வாதசுரம் பித்தசுரஞ் சிலேத்ம
வாகான பூதசுரமசீர்ண சுரமாகும்
ஆர்ந்தவபி காதசுரந் தொந்தசுரத்தோடு
ஆர்க்கமா மேழுவித மறிந்துகொள்ளு
தீர்ந்ததோர் சுரபேத வண்மையெல்லாம்
செயலறிந்து குணத்தோடு செப்புறேனே. 2

(இ-ள்)
1. வாத ஜ்வரம்
2. பித்த ஜ்வரம்
3. கப ஜ்வரம்
4. பூத ஜ்வரம்
5. அஜீரண ஜ்வரம்
6. அபிகாத ஜ்வரம்
7. தொந்த ஜ்வரம்

என்று ஏழு வகைப்படினும், இன்னும் பற்பல வகைகளும் உண்டு. அவை பின்னர் கூறப்படுகின்றன.

## வாத ஜ்வரத்தின் குறிகள்

செப்புகிறேன் வாதசுரத் தின்குணத்தைத்
திருமுகமு முதடுமே கறுத்துக்காணல்
தப்புகிறே னுடம்புதிமி ரெடுக்க லுஷ்ணம்
தேகம்பா ரித்திருக்கன் மலபேதத்தால்

தப்புகிறேன் சரீரமெல்லாந் தடித்துநோதல்
தாகந்தான் மிகக்காணல் மெய்நடுக்கல்
குப்புகிறேன் குளிர்ந்து மயிர்க் குச்செறிதலிந்தக்
குணமெல்லாம் வாதசுரக் கூறுமாமே. 3

(இ-ள்.) முகம், உதடு முதலான இடங்கள் கருமை நிறத்தை அடையும். உடம்பு திமிர்க்கும். தேகத்தில் காங்கை அதிகரிக்கும். சரீரத்தில் தடிப்புகளுண்டாகி வலி அதிகரிக்கும். தாகம் அதிகமாயிருக்கும். உடம்பில் நடுக்கம் அதிகமாகும். குளிரும் இருக்கும். மயிர்க் கூச்சலும் உண்டாகும்.

## பித்த ஜ்வரம்

கூறான பித்தசுரத் தின்குணத்தைக்
கூறிடவே நித்திரைதான் மெத்தக்காணல்
தேறான மலமூத்திரஞ் சிவந்திருத்தல்
சிதறியே வயறுகழிந் திடுதல்சத்தி
வாறான வாய்ப் பிதற்றல் வாய்தான்கைத்தல்
மகத்தான மூர்ச்சையொடு தாகங்காணல்
தாறான வெழுந்திருந்து மோடல் விக்கல்
தவித்திடுதல் சந்தாபப் படுதல்காணே. 4

(இ-ள்) அதிகமான தூக்கம் ஏற்படும். மலமும், மூத்திரமும் சிவந்து காணும். வயிற்றுக்கழிச்சல், வாந்தி, உளரல், வாயில் கசப்புச்சுவை, மூர்ச்சை, தாகம் உண்டாதல், நிலையில்லாமல் எழுந்து ஓடுதல், விக்கல், உடம்பு எரிச்சல் முதலானவைகளுண்டாகும்.

## சிலேத்தும ஜ்வரம்

சந்தாப மானசிலேத் துமச்சுரத்தைச்
சாற்றிடவே நாக்கு முகம் வெளுத்துக்காணல்
மந்தாப மார்நோத லிருமலிளைப்பு
வருதுதல்வாய் துவர்த்துமே யுருசியில்லை
முந்தாப மூர்சுவிடப் போகாமற்றான்
முயங்கியே விக்கலோடு தாகங்காணல்

சிந்தாப மிடறுநொந்து மேன்மூச்சாதல்
திணவெடுத்தல் தயங்கிடுதல் சிலேத்துமமாமே. 5

(இ-ள்.) நாக்கு, முகம் முதலிய உறுப்புக்கள் வெளுத்து விடுதல், மார்பில் வலியுண்டாகும். இருமல் இளைப்பு, வாயில் துவர்ப்புச் சுவை முதலானவைகளேற்படும். மயக்கம் மூச்சுத்திணறலுண்டாகும். வாயில் ருசியும் இருக்காது. விக்கல், தாகம், மேல்மூச்சு, அரிப்பு முதலானவை ஏற்படும்.

## வாத பித்த ஜ்வரம்

ஆகுமே வாதபித்த சுரத்தின் செய்தி
யறிந்திடவே யங்கமெலா மசைதனோதல்
நாகுமே நாக்குத்தான் கறுத்துக்காணல்
நயந்துபிர லாபித்த னித்திரையாதல்
வாகுமே மலபேத மாயிருத்தல்
மலம்வெளுத்தல் வாய்கைத்தல் வடிவங்குன்றல்
தேகுமே யறிவோடு தினவுமாதல்
தியங்கிடுதன் மயங்கிடுதல் சிலேத்மமாமே. 6

(இ-ள்.) உடம்பில் அசைக்கமுடியாதவலி, நாக்கில் கறுநிறமுண்டாதல், அடிக்கடி வாய்பிதற்றல், தூக்கம் உண்டாதல், மலத்தில் நிறவேற்றுமை, வாயில் கைப்புச் சுவை, உடல்க்ஷீணித்தல், உடம்பில் அரிப்பு, மயக்கம் முதலான குறிகளுண்டாகும்,

## வாத சிலேத்தும ஜ்வரம்

திண்ணமாம் வாதசிலேத் துமச்சுரந்தான்
சடமெல்லாம் நொந்திடுதல் சுவாசங்காணல்
எண்ணமா மிருமலுநா வெழுத்திருத்தல்
இசைந்துமயிர்க் குச்செறிதல் மிடறுநோதல்
கண்ணமாந் தாபமே மிகவுண்டாதல்
தியங்கியே சஞ்சலித்தல் வாய்பிதற்றல்
விண்ணமா மிரளலொடு வியர்வைகாணில்
மிக்கவழுத் திடவிதன்றன் விவரமாமே.

(இ-ள்.) உடம்பு முழுவதிலும் குத்துவலியுண்டாகும். மேல்மூச்சு உண்டாகும். இருமல், நாக்கில் வெளுப்பு நிறம், மயிர்க்கூச்சல், உடம்பில் எரிச்சல் முதலான குறிகளும் காணும். மனச்சஞ்சலம், வாய்பிதற்றல் முதலியவைகளும் அதிகமாயிருக்கும். மிரள மிரள விழிப்பான். வியர்வையும் காணும்.

## பித்த சிலேத்தும ஜ்வரம்

விவரவமாம் பித்தசிலேத் துமச்சுரந்தான்
வியர்வையே மிகவருதல் வாய்பினத்தல்
நிவாமாய் நித்திரையு மிகவேமிஞ்சல்
நெடித்து மயிர்க்குச் செறித விருமலாதல்
தவரமா மார்நோதல் தாபங்காணல்
தலைவலியும் பிடரிவலிதசைந்து காணல்
நவாமா நாக்கதுவும் வழவழத்தல்
நாக்கோடு மூக்குநல மழிதல் காணே. 8

(இ-ள்.) அதிகமான வியர்வை, வாய்பிதற்றல், அதிகத் தூக்கம், மயிர்க்கூச்சல், இருமல், முதலான வாதைகளுண் டாகும். மார்புவலி, உடம்பில் எரிச்சல், தலைவலி, பிடரிவலி, முதலியவைகளுடன் நோயாளியின் நாக்கும் வழுவழுப்பா யிருக்கும். வாய்,மூக்கு முதலான அங்கங்களில் வேக்காள மும் உண்டாகும்.

## பூத ஜ்வரம்

அழிதலாம் பூதசுரத் தாண்மை கேளீர்
ஆதியந்த குமரகண்டம் போல்வலிக்கும்
கழிதலாங் கண்ணுருட்டி யேவிழிக்கும்
கறுத்தலுடன் கருதியே பிரலாபிக்கும்
விழிதலாம் போசனங்கண் மிகவிரும்பும்
வேண்டினதெல் லாமிகவு மாசையாக்கும்
பழிதலாம் பாடலோ டாடலாதல்
பாரமயிர்க் குச்செறிதல் நித்திரையுமாமே. 9

(இ-ள்.) குமரகண்ட வலிப்பில் உண்டாவது போன்ற இசிவு ஏற்படும். அப்போது மலம் வெளியாகிக் கண்களை உருட்டி விழிப்பான். உடலில் கறுப்பு நிறமுண்டாகிப் பிதற்றுவான். ஆகாரத்தில் அதிகப்ரீதி உண்டாகும். அவன் பார்வைக்குள்ளகப்பட்ட வஸ்துக்கள் எல்லாவற்றையும் விரும்புவான். ஆடல், பாடல், மயிர்க்கூச்செறிதல், நன்றாகத் தூக்கம் முதலியவைகளும் அதிகமாயிருக்கும்.

## அஜீர்ண ஜ்வரம்

நித்திரையா மசீர்ணசுர நேர்மை கேளீர்
நேர்மையாய்ச் சுரமோட யிளைப்புக்காணல்
மத்திரையாய் விக்கலொடு வயிறுமந்த
மாயிருத்தன் மார்புதொடை குரங்குநோதல்
பித்திரையாய்ப் புளித்தேப்ப மிடுதல்வாந்தி
பேர் பெரிய தாகமொடு மூச்சுக்காணல்
சித்திரையாய் வயிறுநொந்து பொருமிக்கொள்ளல்
சீதளமா யுடம்பெங்குந் திமிருமாமே,

(இ-ள்.) நன்றாகத் தூக்கம் உண்டாகும். தேகம் இளைத்துச் சிற்சில சமயங்களில் ஜ்வரம் அடிக்கும். விக்கல், வயிற்றில் பசியின்மை, மார்பு, தொடை, ஆடுதசை முதலிய இடங்களில் வலி, புளித்தேப்பம், வாந்தி, தாகம், மேல்மூச்சு வயிற்றுவலி, வாயுவுப்பொருமல், உடம்பில் குளிர்ச்சி உண்டாதல், ஒருவித மதமதப்பு முதலான பற்பல குறிகளும் ஏற்படும்.

## அபிகாத ஜ்வரம்

திமிரான வதிகநடை குதிரையானை
சுமையெடுத்த லதிசமாய் வேலைசெய்தல்
தமிரான தாகமோ டிளைப்பு கைகால்
தளர்ந்திட்டுப் பனிதனிலே சஞ்சரித்தல்
அபிரான வபிகாத சுரந்தானுண்டாகு
மதன்குணங்க டாகமுட னுடப்பெல்லா னோகும்

வெமிரான வியர்வையோ டாலோபம் பிரமை
மிகக்குளிர்ந்த போசனத்தி லாசையாமே. 11

(இ-ள்.) அதிகமான நடை, குதிரை, யானை இவைகளில் சவாரி செய்தல், சுமையை அதிகமாகத் தூக்குதல், தாகம், தேக இளைப்பு, கைகால் தளர்ச்சி முதலானவை இருக்கும்போது பனியில் சஞ்சரித்தல் முதலானவைகளினால் உடம்பில் ஜ்வரமுண்டாகும். இது அபிகாத ஜ்வரம் என்று வழங்கும்.

## குறிகுணங்கள்

தாகம், உடம்பு வலி, அதிகமான வியர்வை, மயக்கம், நன்றாக ஆறிய (குளிர்ச்சியான) ஆகாரத்தில் பிரியம் முதலியவைகளுண்டாகும்.

## ஆகந்த ஜ்வரம்

ஆசையா மாகிகத்தின் ஜ்வரத்தைக் கேளீர்
அதிகுளி ருண்டதால் தேகம்வாடல்
தேசையாய்த் தேகம்புள கித்திருத்தல்
சிறியே யிருமலுடம் பெரிவுகாணல்
தசையாய்ச் சந்தாபந் தலைகண்ணோவு
தருவிலா வுடம்பெல்லா முதுகுநோவு
ஆசையாய்ப் பத்தியத்தின் மனதுண்டாதல்
அதிகநித் திரை வருதன் மயக்கந்தானாமே. 12

மயக்கமாய் மார்புமுக மெல்லாம்வாடி
வடிவுவெளுத் திடுதல் கண்தான் பசுமையாதல்
தியக்கமாய்க் கண்ணுகிரில் இரத்தமில்லையாதல்
சிதறியே வயிறுகழிந் திடுதல்சத்தி
கயக்கமா யுள்ளங்கா லுள்ளங்கையும்
கண்ணியே யெரிந்திடுதற் றாகங்காணல்
இயக்கமாய்த் தேகமெங்கு மழற்றல் காணல்
இசைந்தபடி பேசலெண்ணம் வேறுமாமே. 13

(இ-ள்) அதிகக்குளிர், தேகவாட்டம், மயிர்க்கூச்சல், விடாத இருமல், உடம்பில் எரிச்சல், கண்களில் எரிச்சல், தலைவலி, கண்வலி, உடம்பு, முதுகு முதலான இடங்களில் தாங்கமுடியாத வலி, அதிக தூக்கம், மயக்கம் முதலான வைகளேற்படும்.

மார்பு, முகம் முதலான உறுப்புகள் வாடும், தேகம் வெளுக்கும். கண்களில் பசுமை நிறம், உடம்பில் இரத்தக் குறைவு, வயிறு கழிதல், வாந்தி, உள்ளங்கால், உள்ளங்கை எரிச்சல், தீராத தாகம் உடலில் அழற்சி, நினைத்தபடி பிதற்றல் முதலான குறிகுணங்களும் ஏற்படும்.

## ஆகீக மாறல் ஜ்வரம்

வேறாகியொரு நாடான் மாறிக்காணல்
விளங்கிரண்டு நாள் மாறிச் சுரமுண்டாதல்
நாறாகி மூன்றுநா டானமாறல்
நலத்தவைந்து நாண்மாற லர்த்தராத்திரி
பாறாகி வருதல்பதி னைந்துநாண் மாறல்
பகர் பந்த வொருமாதந்தான் மாறிக்காணல்
வாறாகி வாதபித்தச் சிலேட்டுமங்கூடி
மருவிநின்ற சுரந்தனு மாகீகப்பாமே. 14

(இ-ள்) ஒரு நாள் விட்டொரு நாள் மாறி மாறி ஜ்வரம் உண்டாகும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும் ஜ்வரம் உண்டாகலாம். மூன்று நாளுக்கொருமுறை ஜ்வரம் ஏற் படும் 5 நாட்களுக்கொரு தடவையும் சிற்சில சமயங்களில் ஜ்வரம் உண்டாகும். அர்த்த ராத்திரி சமயங்களிலும் இது ஏற்படும். 15 நாட்கொரு தடவையேற்படும் ஜ்வரமும் உண்டு. மாதமொரு முறை ஏற்படும் வகையான ஜ்வரமும் இருக்கிறது.

## ஆகீக சீத ஜ்வரம்

ஆகீகத்திற் சீதசுரத் தாண்மை கேளீர்
தேகமெல்லா மிகக்கடுப்புற் றனல்போலாகித்
தேகத்திற் சிரமிடதுகண்களோடு புருவஞ்
சிறுவலியாய் வலித்துமத பேதமாகி
நாகிகத்தில் நாக்குதடு வழவழத்து
நல்லநித் திரையில்லா துடல்திமிர்ந்து
மேகிகத்திற் சுரங்குளிருந் தாகமூர்ச்சை
மிகத்தாப மயக்கமொடு தியக்கமாமே. 15

(இ-ள்.) தேகத்தில் மிக்கக்கடுப்பு வலியுடன் எரிச்சல் மிகுந்திருக்கும். தலை, இடதுகண், புருவம் முதலான இடங்களிலும் வலியுண்டாகும். நாக்கு, உதடு முதலான இடங்களில் வழவழப்பு, உடலில் மதமதப்பு முதலானவைகள் உண்டாகும் நல்லதூக்கம் இராது. குளிருடன் ஜ்வரம் அடிக்கும். தாகம், மூர்ச்சை, எரிச்சல் முதலியவைகளும் ஏற்படும்

## ஆம ஜ்வரம்

தியக்கமா மாமஜ்வரத் தாண்மைகேளீர்
சிறுவலியாய் வலித்துமா சனங்கடுத்து
மயக்கமா மிரத்தமொடு சீதப்பேதி
மருவுதண்ணீர்தாகஞ் சுரமுமுண்டாம்
கயக்கமா யுடம்பூதி வெளிறிக்காணுங்
கால்கையு மயர்ந்திருக்குங் கைக்கும்வாய்தான்
தயக்கமாய்க் கால்கையுஞ் சைத்யமாகுஞ்
சளியோடு யிருமலுமாய்த் தவிக்குந்தானே. 16

(இ-ள்.) தேகத்தில் லேசானவலி உண்டாகும். ஆசனக் கடுப்பு ஏற்படும். மயக்கத்துடன் இரத்தம், சீதம் இவைகளுடன் மலம் வெளியாகும். தண்ணீர்த் தாகமுண்டாகும். ஜ்வரமடிக்கும், உடம்பு வீங்கி வெளுப்பு நிறமடையும். கை கால்களில் எரிச்சல் அதிகமாகும். வாயில் கைப்புச்சுவை

மேலிட்டு நிற்கும். கைகால்கள் குளிர்ந்திருக்கும். சளியுடன் இருமலும் காணும். இவை 'ஆமஜ்வர' லக்ஷணங்களாம்

## சர்மதாதுகத ஜ்வரம் (தோலைப்பற்றிய ஜ்வரம்)

தவித்திடாச் சுரநூலின் தன்மைதன்னைச்
　　சாற்றிடவே சடத்தினிற்குள் தோலைப்பற்றி
துவித்திட்டச் சுரமோடு எலும்பைப்பற்றிச்
　　சூட்சமாய்க் காய்ந்தசுர மாந்தந்தன்னை
மவித்திடா தெரித்தசுர மாங்கிசந்தன்னை
　　மருவிநின்ற சுரநூலின் வண்மைதன்னைக்
குவித்திடாக் குணமெல்லாங் குறித்துச்சொல்லக்
　　குறுந்தோலைப் பற்றியதோர் குணத்தைக்கேளே. 17

குணமாகச் சற்றுடலைக் காய்வதாகும்
　　குடிலமாம் நாடிமந்த மாயிருத்தல்
தணமாகச் சற்றேதான் றலையேநோதல்
　　தண்ணீர்தான் வேண்டியே தாகங்காணல்
பிணமாக வுடம்பெல்லாம் வெளுத்துக்காணல்
　　பிரமையாய் வாய்பேசல் வாய்நீரூறல்
நிணமாக வுடம்பெரிதல் மயக்கங்காணல்
　　நேர்தோலைப பற்றுசுர நேர்மையாமே, 18

(இ-ள்.) சரீரத்தில் சூடு அதிகரிக்கும். நாடி மந்தமாயிருத்தல், தலையில் வலி முதலான குறிகள் ஏற்படும். தண்ணீர் தாகம் உண்டாதல். உடம்பு முழுவதும் வெண்மை நிறம் இவைகளும் காணும். வாய்பிதற்றல், வாயில் நீர் ஊறுதல், உடம்பில் எரிச்சல், மயக்கம் முதலான குறிகளும் ஏற்படும்.

## அஸ்திதாதுகத ஜ்வரம் (எலும்பைப் பற்றிய ஜ்வரம்)

நேர்மையா யெலும்பைப்பற் றியசுரத்தின்
　　நிலவரங் கேளமிசுத்தா கந்தான்காணல்

மேர்மையாய் மேமெலல்லாங் குளிர்ச்சிகாணல்
மிகக்கபடச் சுரந்தானும் மேலிருத்தல்
தீர்மையாய்த் தேகம்வெளுத் திளைத்திருந்தால்
தேகமெல்லாம் பஞ்சுபோற் சீரணித்தால்
ஆர்மையா யடிவயிறு தனிலேநோதல்
அதிகதீ விரமான மலம்போக்காமே. 19

(இ-ள்.) அதிகமான தாகம், உடம்பு குளிர்ச்சி, ஜ்வரம் வெளியில் தெரியாதிருத்தல், தேகத்தில் வெளுப்பு நிறம், இளைப்பு முதலான குறிகள் காணும். தேகம் இலேசாக இருத்தல், அடிவயிற்றில் வலி, கழிச்சல் முதலானவைகளும் உண்டாகும்.

## இரத்ததாதுகத ஜ்வரம் (இரத்தத்தைப்பற்றி உண்டான ஜ்வரம்)

போக்கான ரத்ததாதுகதச் சுரகுணத்தைப்
புகன்றிடவே பிரமையாய்ச் சுரந்தான்காணல்
தாக்கான வியர்வையோடு தாகமுண்டாய்த்
தன்னுடம்பெல் லாம்நோதல் மூர்ச்சைகாணல்
வாக்கான வுடம்பதுவுங் கன்றலுண்டாய்
வழுவழுத்து நாக்கெல்லா மஞ்சள்போலாம்
நீக்கான நெஞ்சதனிற் கோழையுண்டாம்
நித்திரையாய் மலபந்த மாகுந்தானே. 20

(இ-ள்) மயக்கம், ஜ்வரம், வியர்வை, தாகம், உடம்பு வலி முதலியவைகளேற்படும். அடிக்கடி மயக்கம், உடம்பில் எரிச்சல், நாக்கில் வழுவழுப்பு முதலிய குறிகளுண்டாகும். தேகத்தில் மஞ்சள் நிறம், நெஞ்சில் கோழைக்கட்டு, மலச் சிக்கல் முதலியவைகளும் ஏற்படும். தூக்கம் அதிகரிக்கும்.

## மாம்ஸ தாதுகத ஜ்வரம் (தசையை ஆச்ரயித்த ஜ்வரம்)

மலபந்த மாம்ஸகத ஜ்வரகுணத்தை
வழுத்திடவே யதிகசுர மாகக்காணல்
சிலபந்த சுவாசமொடு வியர்வைதோன்றல்
சிக்கியே தேகமெலாம் நொந்துகாணல்

வலபந்த வுதடுலர்தல் பிரலாபித்த
  லுடம்புபுள கிதமாதன் மயிர்க்கூச்சாதல்
அலபந்த மனதுவியா கூலமாத
  லருவியெனக் கண்ணில்நீர் ததும்புந்தானே. 2

(இ-ள்.) மலச்சிக்கல், அதிகமான ஜ்வரம், மேல்மூச்சு வியர்வை ஒழுகுதல், தேகமெங்கும் வலி. உதடு உலர்ந்து விடுதல், வாய்க்கு வந்தபடி உளரல். மயிர்க்கூச்சம் அதிகமாகவுண்டாதல். மனச்சோர்வு முதலான குறிகளுண்டாகும்.

## சந்நிபாத ஜ்வரம்

ததும்புகின்ற சன்னிவா தச்சுரத்தின்
  தன்குணந்தான் கழுத்துநெற்றி மார்பயர்க்கும்
வெதும்பலொடு தந்திரமாஞ் சித்தப்பிரமை
  மிக்கான சரீரமெல்லா மெரிதனோதல்
அதும்பலொடு கண்சிவந்து பச்சைபாய்தல்
  அதிகமாய் வாய்பினத்தல் மூர்ச்சைகாணல்
வதும்பலொடு மார்வலித்தல் தியக்கமாதல்
  மயிர்செரித்த லிருமல்விக்கல் சுவாசந்தானே. 22

(இ-ள்) கழுத்து, நெற்றி, மார்பு முதலான இடங்கள் சோாவும், புத்தி தடுமாற்றம், உடம்பில் எரிச்சல், கண்கள் சிவப்பு நிறத்துடன் பசுமை நிறமடைதல் முதலான குறிகள் உண்டாகும். வாய் பிதற்றல் மூர்ச்சை அடைதல், மார்பு வலி, மயிர்க்கூச்சல், இருமல், விக்கல். மூச்சுத்திணறல் முதலான குறிகளும் ஏற்படும்.

---

# ஜ்வர கணிதம்

(109 நெ. சுவடியான "வைத்ய அட்டவணை" என்ற சுவடியிலிருந்து எடுத்து எழுதப்பட்டது)

அசுவதி நாளில் ஏற்பட்ட ஜ்வரம் எட்டாவது நாள் தீரும்.

பரணியில் உண்டான ஜ்வரம் எட்டாவது நாள் தீரும்.

கார்த்திகை நக்ஷத்திரத்திலேற்பட்ட ஜ்வரம் எட்டாவது நாள் தீரும். எட்டாவதுநாள் தீராவிட்டால் இருபதாவது நாளில் விடும்.

ரோகணி நாள் பிடித்த ஜ்வரம் பத்தாவது நாள் தீரும். பத்தாவது நாள் தீராவிட்டால் இருபதாவது நாள் தீரும்.

மிருகசீர்ஷத்தில் பிடித்த ஜ்வரம் பத்தாவது நாள் விடும்.

திருவாதிரையில் பிடித்த ஜ்வரம் ஐந்தாவது நாள் வேதனை செய்யும். இநபதாநாள் தீரும்.

புனர்பூசத்தில் ஏற்பட்ட ஜ்வரம் இரண்டாவது நாள் குணமாகும். இரண்டாவது நாளில் தீராவிட்டால் எட்டாம் நாள் தீரும்.

பூசநக்ஷத்திரத்தில் பிடித்த ஜ்வரம் ஏழாவது நாள் விடும்.

ஆயில்யநாள் உண்டான ஜ்வரம் ஏழாம் நாள் வேதனை செய்யும். இருபதாம் நாள் தீரும்.

மகநட்சத்திரத்தில் பிடித்க ஜ்வரம் பன்னிரண்டாம் நாள் தீரும். அப்படித் தீராவிட்டால் பதினைந்தாம் நாள் தீரும்.

பூரநாளிலேற்படும் ஜ்வரம் பதினைந்தாம் நாள் குணமாகும்.

உத்திர நக்ஷத்திரத்தில் உண்டாகும் ஜ்வரம் பதினேழா நாள் தீரும். பதினேழா நாள் குணமாகாவிட்டால் மூன்றாம் மாதந் தீரும்.

அத்தநாள் பிடித்த ஜ்வரம் எட்டாம் நாள் தீரும். எட்டாம் நாள் தீராவிட்டால் மூன்றாம் மாதந் தீரும்.

சித்திரை நாள் பிடித்த ஜ்வரம் எட்டாம்நாள் தீரும். இல்லாவிடில் மூன்று மாதத்தில் குணமாகும்.

சுவாதி நாளில் ஆரம்பமான ஜ்வரம் பதினேழாம் நாள் குணமாகும்.

விசாகநாள் பிடித்த ஜ்வரம் எட்டாம்நாள் கொல்லா விட்டால், ஒருமாதத்தில் தீரும்.

அனுஷநாள் உண்டான ஜ்வரம் பதினேழாம்நாள் தீரும்.

கேட்டை நக்ஷத்திரத்தில் ஆரம்பமான ஜ்வரம் ஐந்தாவது நாள் கொல்லாவிட்டால் ஐந்தாம் மாதம் தீரும்.

மூலநாள் பிடித்த ஜ்வரம் ஒன்பதாம் நாள் தீராவிட்டால் பதினோராம் நாள் குணமாகும்.

பூராடநாள் ஏற்பட்ட ஜ்வரம் ஒன்பதாம்நாள் தீராவிடில் பதினோறாம் நாள் தீரும்.

உத்திராடநாள் ஆரம்பமான காய்ச்சல் ஏழாவதுநாள் வேதனை செய்யும். பதினைந்தாம் நாள் தீரும்.

திருவோண நட்சத்திரத்தில் உண்டான ஜ்வரம் ஏழாம் நாள் கொல்லாவிட்டால் ஒரு மாதத்தில் தீரும்.

அவிட்டத்தில் பிடித்த ஜ்வரம் ஐந்தாம் நாள் கொல்லாவிட்டால் பத்தொன்பதாம்நாள் நிவர்த்தியாகும்.

சதையநாள் ஆரம்பமான ஜ்வரம் ஐந்தாம்நாள் வேதனை செய்யும். ஏழாவதுநாள் தீரும்.

பூரட்டாதி நாளில் ஏற்பட்ட ஜ்வரம் ஏழாவது நாள் வேதனை செய்யும். பதினைந்தாம் நாள் தீரும்.

உத்திரட்டாதிநாள் பிடித்த ஜ்வரம் ஏழாவது நாள் வேதனை செய்யும். இருபத்தைந்தாநாள் தீரும்.

ரேவதிநாள் ஆரம்பமான ஜ்வரம் எட்டாவது நாள் கொல்லாவிட்டால் பத்தாம்நாள் தீரும்.

ஜ்வர நூல் முற்றும்

# ஜ்வர கண்டிகை

## அகஸ்தியர் 2000 என்ற சுவடியிலிருந்து எடுக்கப்பட்டவை

குதிரைதன்னைச் சேர்முதற்கால்
குறித்த ஒன்பது நாட்செல்லும்
முதிரவிரண்டாங் பக்கத்தில்
முதவாய்ப் பத்தா னாளாகும்
பதிசேர் மூன்றாங் காலுக்கே
பகரும் பதினைந்தானாளே
நிதிசேர் நாலாங் காலுக்கு
நில்லாபதுயிரும் நில்லாதே. 1

சுரத்தார் பரணி நாளுக்குத்
தோன்றுங்காலே மூன்றானாள்
உரைத்த விரண்டாங் காலுக்கே
முளதேயேழா நாள்ச்சொல்லும்
நிரைத்த மூன்றாங் காலுக்கே
நேராய் பக்கம் பதினைந்தாம்
சுரத்தீர் நாலாங் காலமாதந்
தனினாளிரண்டுஞ் சுகமாமே. 2

கார்த்திகை முதற்கா லொன்பதுநாட்
காட்டுமீழக்கு மிரண்டாங்கால்
மாற்று மூன்றாங் கால்தானே
மருவு பதினைந் தாய்நலமே
பார்த்து நாலா வதுகாலே
பதித்ததிங்கள் பதினெட்டாம்
போற்று மிதுநற் குணமாகும்
பொருந்துமிதுவே பொருந்தீரே 3

ரோகிணி மரிக்கு முதற்காலே
தம்மிலிரண்டா வதுவென்னில்
ரோகம் பதினெட்டாம் சுகமே
லெகுவா மூன்று காலுக்கு

மாதமிருபது ரெண்டுகுண
    மாமே னாலாங் காலுக்கு
போக விரண்டு திங்களுநாள்
    பொருந்திருபத்தஞ் சாய்விடுமே 4

மிருகந்திரர் முதற் காலே
    விடுமோ திங்களொன் றானால்
மறுகு மிரண்டாங் காலாகில்
    மாறவெட்டு நாளாமே
குறுகு மூன்றாங் காலுக்கே
    குறித்து யிருபது மாகிவிடு
திறுகா நாலா வதுதானே
    தானேயிருபத் தஞ்சென்றே. 5

*புணரி பூச முதலதுவே
    பொருந்த சுரம்நாளேழாகும்
மரண ரெண்டாவது தனக்கு
    மாறல் பதினஞ் சாகுமெண
குணமிக் கதுமூன் றானதுவே
    குறித்த பத்து மொன்பதும்
துணவே கெடுத்த னாலங்கா
    லுளமே மரிக்குங் கண்டீரே. 6

பூசநாட்சுர மேழுநாட் முதற்
    பொருக்குமே யிருகாலினில்
நேசநாளிராறு காண்விடு
    நீதியாமிகல் மூன்றுமே
பாசமாய்விடும் பத்துமொன்பது
    பகர நாலுஞ் சொல்லுகவே
தோகைகேளி ருபத்தேழு
    சுத்தமாய் வருதேகமே. 7

---

*திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஏற்படும் ஜ்வரத்தின் கால அளவு காணப்படாமலிருப்பதைக் காண்க.

ஆயில்ய முதற்சுரமே யொன்பதானா
ளடுத்திரண்டு மிருபதுநா ளாகுமென்ப
மேகியமூன் றருபதுநாள் சுத்தமாகும்
மேவுகால் நாலுக்கு மெய்யே சொன்னோம்
தோகையே சொல் மாதமொன்று நாளுமாறு
சொல்லுநா ளிதுசுகமே சுத்தமென்க
ஆகமுடன் சொல்லியது சுரத்தின் மாலை
யடவிதனை யறிந்தறிந்து ஆய்ந்துகொள்ளே. 8

மகத்திடையீர் முதற்காலே மரிக்குமிரண்டா
வதுதானே யிருபதுநாள் மாறுமென்க
இகத்துடையீர் கால்மூன்றுக் கெண்பத்தஞ்சு
தினமானால் விடுக்கும் நாலுதானே
சுகத்துடனே அஞ்சானாள் சுத்தமாகும்
சொல்லுமென முந்நூலின் தொகுதிகாண்க
முகத்துடையீர் வதனமலர் மாதேகண்ட
முறையில்வரு மறையிலிது முயன்றநாளே. 9

பூரமதில் வெப்புதிக்கில் முத்தக்கால்சாவாம்
பொறுத்திரண்டு மிருபத்தஞ்சுநாளே செல்லுந்
திரமுள்ள மூன்றேகால் முப்பத்தாறு
தினமாகிவிடுமிதனைத் தேர்ந்துகொள்க
பாரமுட னாலாங்கா லெண்பத்தொன்று
பத்தியநோ யதுதீரும் படியேசொன்னோம்
நாரணியாள் கேட்டருள அரனேசொல்ல
நட்செத்தி ரமாலை நாடுங்காலே, 10

உத்திரநாள் முதற்பாதம் நாளெட்டாகும்
முடனிரண்டு இருபதுநாள் செல்லுமென்க
அத்திரமே மூன்றேகா லன்பதாகு
மதனோடு நாளிரண்டு மானதேகாண்
குத்திரமா நாலாங்கால் குணமேயில்லை
சொல்லுமிது சுரமீறில் கோதையேகே
ளத்தனுரை செய்திடவே உமையாள்கேட்ட
யாயுள்மறை யின்பயனை யறிவதாமே 11

அத்தத்தில்த் தோன்றுசுர முதற்காலெட்டு
　　மாசசெல்லு மிருபதாபஞ் சேனாளாகுஞ்
சுத்தமுள்ள மூன்றாங்கா லிருபத்தெட்டு
　　சொல்லுகுண மாமீது சுரமேநல்ல
நற்றமிழால் நாலாங்கா லன்பத்திரண்டு
　　நாட்சென்று விட்டுவிடும் நாரிகேளாய்
சித்தமுடனுரைத்த சுரநூல்மாலை
　　சொல்லியநாள் முறைமீறாத் தொகுதியாமே. 12

சுத்திரைசேர் பாதமுத லொன்பதேநாட்
　　சொல்லுமிரு காலுக்குப் பதினைந்தாகும்
புத்தியுடன் மூன்றேநாற் பத்திரண்டு
　　பண்புடனே சொல்லுநாள் பார்த்துச் சொல்லி
மெத்தநலம் நாலாங்கால் நாற்பத்தொன்
　　பதுமீ றாறுகுண முண்டாய்விடு
மெய்யானவெற் கணமாதே கேளாயென்று
　　விமலருரை சுரநூலின் வேதமாமே. 13

சோதிநாட் முதற்பாதம் பனிரண்டே
　　நாட்சொல்லு மிருகால்ம ரிக்குமென்க
மேதினியில் முப்பதாம் பதினெட்டே நாள்
　　விடுசுரமே தப்பாது விளம்பினோம்காண்
ஆதியே நாலாங்கால் பனிரெண்டேநா
　　ளாறிவிடு வெப்பகலு மாதலாய்நீ
நீதிசே ருமைதானே உரைத்தநாளே
　　நெறியுடனே சேர்த்தறிந்த நீதிதானே 14

அனுஷமுதற் கால்மரிக்கு மிரண்டிருமதாகு
　　மன்புடனே மூன்றுங்கால் தொண்ணூறாகு
மனுவுடையீர் சதுர்பாத மிருபத்திரண்டு
　　மறுமே சுரமதுவு மானேகேளாய்
தனுவான கேட்டைமு தற்கால்சாவாம்
　　தனித்திரண்டு மிருபதுநாட். சாந்தமாகும்
பனுவலாய மூன்றாங்கால் முப்பத்தொன்று
　　பார்நாலு காலெண்பத் திரண்டுமென்பதாமே. 15

மூலமுதற் கால்மரிக்கு மிரண்டாம்பாத
மூன்றுநா ளில்விடு மூன்றாங்காலே
ளானாட்பத் துசெல்லு நாலாம்பாதம்
சத்தகமா னாட்சென்று சாந்தமாகு
மால்விழியாயப் பூராடமாகியநாள்
முற்பக்கம் மொன்பதாகுங்
கால்மரிக்கு கொல்லிரண்டாம் மூன்று கூறியநாள்
பத்தில்விடும் நாலாங்கா லஞ்சுசென்றே. 16

உத்திராட முதற்கால்சத் தனாளா முதித்திரண்டு
மிருபதுநாள் மூன்றுமுப்பதே சொல்லும்
பத்தியிராய் நாலுக்கு நாற்பத்தி ரண்டுபாங்
காகுந்திரு வோணம்முதற் கால்பதி னோர்நாள்
சுத்தியிரா யிருகாலில் பத்தே செல்லும்
சொல்மூன்றுங் காலுக்கு எட்டேசொன்னோய்
மெத்திராய் நாலாங்கால் மரிப்பதாகும்
மெய்நூலின் படியிதனை விளம்புவோமே. 17

நிலமவிட்ட முதற்சுரநா ளொன்பதாகும்
நேரிருகால் பதினஞ்சு மூன்றாங்காலே
விதப்படியே மிருபதுவு மிரண்டுநாளே
மீறாதே நாலாங்கா லிருபத்தொன்பதேகேள்
பதத்துடைய சதையமுதற் பதினொன்றேசொல்
பலமிரண்டிற் பதினொன்றா நாளதாகும்
மிதப்படியே மூன்றுமூவே மெட்டேசெல்லு
மீறாது நாலுங்காலிருபத்து ரெண்டுமாமே. 18

பூரட்டா திமுதற்கால் மரிப்பதாகும்
பொருந்திருகால் பதினாறில் தீரும்
நேரிட்ட மூன்றுக்கெழு பத்தோர் நாளாகிற்
செயமே நாற்கால் நாற்பத்தொன் றேதிருஞ்
சிரிட்ட உத்திரட்டாதி முதற்காலேழில்
செல்லுமிரு கால்பதினெட் டில்த்தானாம்
சேரிட்ட திரிவிதக்கா லேழில்த் தீர்ந்து
செல்லும்நாற் கால்மரிப்ப தென்றுநூலே. 19

ரேவதியின் சுரமுதற்கால் மரிப்பதாகும்
மிரண்டாங்கால் பதினோரா நாளேதிரு
மாதியேமூன் றாங்கால்பதி னெட்டில்தாளும்
வருசுரம்நாற் காலதுவே இருபத்தாறில்
பூபதிசே ரனுகூல மடையுங்கண்டீர்
புகல்சுரநூல் கண்டிகை புகலக்கேள்மின்
தாபதிசே ருமைகேட்க வரனேசொன்ன
சாஸ்திரத்தை உரைப்பவர்கேள் தப்பாதென்றே. 20

(இ-ள்) *அச்வினி நக்ஷத்திரம் ஒன்றாம் பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால், ஒன்பது நாட்கள் கழித்தே குணம் ஆகும். இரண்டாம் பாதத்தில் ஆரம்பித்தால் பத்து நாட்களில் தீரும். மூன்றாம் பாதமாகில் பதினைந்து நாட்களில் சொஸ்தமாகும். நாலாம் பாதத்தில் ஜ்வரம் ஆரம்பித்தால் நோயாளி இறப்பான்.

பரணி நக்ஷத்திரத்தில் முதற் பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரம் மூன்றாம நாள் தீரும் இரண்டாம் பாதமாகில் ஏழாவது நாளில் தான் குணமாகும். மூன்றாம் பாதத்தில் உண்டான ஜ்வரம் 15 நாளில் விடும். நான்காம் பாதத்தில் ஏற்படில் 32 நாட்களில் குணமாகும்.

கார்த்திகை நக்ஷத்திரம் முதற் பாதத்தில் உண்டான ஜ்வரமாகில் 9 நாட்களில் தீரும். இரண்டாவது பாதத்திலும் அப்படியேதான். மூன்றாம் பாதத்தில் ஏற்படும் ஜ்வரம் 15 நாட்களில் விடும். நான்காம் பாதமாகில் 18 நாளில் குணமாகும்.

ரோகிணி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் ஆயுளைப் போக்கும். இரண்டாம் பாதத்தில் ஆரம்பமானால் 18 நாள் கழித்துத்தான் காய்ச்சல் விடும்.

---

*ஒரு நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகையை 4 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாதமாகக் கணக்கிடுகிறார்கள். நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகை 60 என்று வைத்துக் கொண்டால் ஒவ்வொரு பாதமும் 15 நாழிகை அதாவது 6 மணி நேரங்களாகும்.

மூன்றாம் பாதத்தில் ஜ்வரம்முண்டாகில் இருபத்திரண்டு நாட்கள் கழித்துத்தான் குணமாகும். நான்காம் பாதமாகில் 2 மாதத்தில் தீரும்.

மிருகசீர்ஷ நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால் ஒரு மாதத்தில் தீரும். இரண்டாம் பாதத்தில் உண்டான ஜ்வரம் எட்டு நாட்களில் குணமாகும். மூன்றாம் பாதத்தில் ஏற்பட்ட காய்ச்சல். இருபது நாட்களில் தீரும். நான்காம் பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் இருபத்து ஐந்தாம் நாள் தீரும்.

புனர்பூச நக்ஷத்திரம் ஒன்றாம் பாதத்தில் ஆரம்பமாகிய ஜ்வரம் 7வதுநாள் தீரும். இரண்டாம் பாதத்தில் ஜ்வரம் வந்தால் 15 நாட்களில் குணமாகும். மூன்றாம் பாதமாகில் 19 நாட்களில் தீரும். நாலாம் பாதமெனில் நோயாளி பிழைக்கமாட்டான்.

பூச நக்ஷத்திரம் முதல் பாதத்திலுண்டான காய்ச்சல் ஏழாவது நாள் தீரும். இரண்டாம் பாதத்தில் ஆரம்பம் ஆனால் 12 நாட்களில் குணமாகும். மூன்றாம் பாதத்தில் ஏற்படில் 19வது நாள் தீரும். நான்காம் பாதமெனில் 27வது நாளில்தான் ஜ்வரம் இறங்கும்.

ஆயில்ய நக்ஷத்திரம் முதல் பாதத்தில் உண்டான ஜ்வரம் ஒன்பதாவதுநாள் தீரும். இரண்டாவது பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரமெனில் இருபது நாட்கள் அடிக்கும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பமானால் இருபது நாட்கள் சென்றே குணமடையும். நாலாவது பாதமெனில் ஒரு மாதமும், 6 நாட்களும் சென்ற பின்பு தான் சொஸ்தமாகும்.

மக நக்ஷத்திரம் முதற் பாதத்திலுண்டானால் ஆயுளைப் போக்கும். இரண்டாம் பாதத்தில் ஏற்பட்ட காய்ச்சல் தணிய இருபது நாட்களாகும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பமானால் 85 தினம் சென்றபின் குணமாகும். 4வது பாதத்திலுண்டான ஜ்வரம் 5வது நாள் தீரும்.

பூச நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஆரம்பமான காய்ச்சல் நோயாளியைக் கொல்லும். இரண்டாவது பாதத்தில் ஏற்பட்டால் இருபத்தைந்தாம் நாள் தீரும். மூன்றாவது பாதமாகில் 36வது நாளில் குணமாகும். 4வது பாதத்தில் ஆரம்பமானால் 81 நாட்கள் சென்றுதான் குணமாகும்.

உத்திர நக்ஷத்திரம் முதற்பாதத்தில் பற்றிய ஜ்வரம் எட்டு நாட்களில் தீரும். இரண்டாவது பாதமெனில் இருபதாவது நாள் குணமாகும் மூன்றாவது பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரம் 52வதுநாள் தீரும். நாலாவது பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் நோயாளியைக் கொல்லும்.

ஹஸ்த நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரந் தீர எட்டு மாதங்களாகும். இரண்டாவது பாதமாகில் இருபத்தைந்தாம் நாள் தீரும். மூன்றாவது பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரம் இருபத்தெட்டு நாட்கள் சென்றபின் தான் தீரும். நான்காவது பாதத்தில் ஆரம்பித்த ஜ்வரம் தீருவதற்கு ஐம்பத்திரண்டு நாட்களாகும்

சித்திரை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் காய்ச்சல் உண்டானால் அது ஒன்பது நாட்களில் தீரும். இரண்டாம் பாதமானால் 15 நாட்கள் ஆகும். மூன்றாம் பாதத்தில் பிடித்த ஜ்வரம் 42வது நாள்தான் குணமாகும். நான்காம் பாதத்தில் ஏற்படில் 49வது நாள்தான் தீரும்.

சுவாதி நக்ஷத்திரத்தில் பிடித்த ஜ்வரம் 12வது நாள் தீரும். இரண்டாம் பாதமாகில் அது பிணியாளியைக் கொன்று விடும். மூன்றாம் பாதத்தில் ஏற்பட்ட காய்ச்சல் 48 நாட்கள் சென்று குணமாகும். நான்காம் பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் 12வது நாள் தீரும்

அநுஷ நக்ஷத்திரத்தில் முதல் பாதத்தில் ஜ்வரம் உண்டானால் நோயாளி இறப்பான். இரண்டாம் பாதத்தில் ஆரம்பமாகில் இரண்டாவது மாதம் தீரும். மூன்றாவது

பாதத்தில் உண்டான காய்ச்சல் 90 நாட்களில் குணமாகும். நான்காவது பாதத்தில் இருபத்திரண்டாவதுநாள் தீரும்.

கேட்டை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் காய்ச்சல் ஆரம்பமானால் ரோகி மரிப்பான். இரண்டாவது பாதம் ஆனால் காய்ச்சல் 20வதுநாள் தீரும். மூன்றாவது பாதத்தில் உண்டான ஜ்வரம் முப்பத்தொன்றாவது நாள் குணமாகும். நாலாவது பாதத்திலேற்பட்ட காய்ச்சல் எண்பத்திரண்டாவது நாள் தீரும்.

மூல நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரம் நோயாளியைக் கொல்லும். இரண்டாவது பாதத்தில் ஆரம்பமானால் மூன்று நாட்களில் குணமாகும். மூன்றாவது பாதத்தில் ஜ்வரம் தொடர்ந்தால் பத்தாவதுநாள் தீரும். நாலாவது பாதமானால் ஏழாவது நாள் குறையும்.

பூராட நக்ஷத்திரம் முதல் பாதத்தில் உண்டான ஜ்வரம் தீருவதற்கு ஒன்பது நாளாகும், இரண்டாவது பாதமானால் அது நோயாளியை மரிக்கச் செய்யும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பித்தால் பத்தாவது நாள் தீரும். நான்காவது பாத மாகில் ஐந்தாவது நாள் குணமாகும்.

உத்திராட நக்ஷத்திரம் முதற்பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் தீருவதற்கு ஏழு நாட்களாகும். இரண்டாவது பாதத் திலேற்படில் இருபதாவது நாள் தீரும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் முப்பதாம் நாள் அநுகூலமாகும். நான்காவது பாதத்தில் காய்ச்சல் உண்டானால் நாற்பத்தி இரண்டாவது நாள் தீரும்.

திருவோண நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால் பதினோராம் நாள் தீரும். இரண்டாம் பாதத் தில் ஆரம்பமான காய்ச்சல் பத்தாவது நாள் குணமாகும். மூன்றாம் பாதத்தில் தொடர்ந்த காய்ச்சல் அநுகூலமாகும். எட்டு நாட்கள் ஆகும். நான்காவது பாதமானால் ஆயுளைப் போக்கும்.

அவிட்ட நக்ஷத்திரத்தில் முதல் பாதத்தில் ஆரம்பமான ஜ்வரம் குணமாக ஒன்பது நாள் பிடிக்கும். இரண்டாம் பாதமானால் 15 நாளில் தீரும். மூன்றாம் பாதமாகில் 22வது நாள் குணமாகும். நான்காம் பாதத்தில் தொடர்ந்த காய்ச்சல் 29வது நாள் விட்டுவிடும்.

சதைய நக்ஷத்திரம் முதல் பாதத்தில் தொடர்ந்த ஜ்வரம் பதினொன்றாம் நாள் தீரும். இரண்டாம் பாதமானாலும் பதினொன்றாவது நாள்தான் குணமடையும். மூன்றாம் பாதத்திலேற்படில் 15 நாட்களிலும், நான்காம் பாதமாகில் 22 நாட்களிலும் குணமாகும்.

பூரட்டாதி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்த ஜ்வரம் நோயாளியைக் கொல்லும். இரண்டாவது பாதத்தில் ஆரம்பமானால் பதினாறு நாட்களில் தீரும். மூன்றாவது பாதத்தில் காய்ச்சல் வந்தால் எழுபத்தொன்றாவது நாள் குணமாகும். நான்காவது பாதமாகில் நாற்பத்தொன்றாம் நாள் விடும்.

உத்திரட்டாதி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜ்வரம் உண்டானால் ஏழு நாட்களில் தீரும். இரண்டாவது பாதமெனில் பதினெட்டாவது நாளன்றுதான் ஜ்வரம் விடும். மூன்றாவது பாதத்தில் ஆரம்பித்த ஜ்வரம் ஏழாவது நாளில் குணமடையும். நான்காவது பாதத்தில் ஜ்வரம் ஏற்பட்டால் நோயாளி பிழைக்கமாட்டானென்று அறியவும்.

ரேவதி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் பிடித்த ஜ்வரம் ரோகியைக் கொல்லும். இரண்டாம் பாதமாகில் பதினொன்றாம் நாளன்று குறைவடையும். மூன்றாவது பாதத்தில் ஏற்பட்ட ஜ்வரம் பதினெட்டாம் நாள்தான் சௌக்கியம் ஆகும். நான்காவது பாதத்தில் ஆரம்பமான காய்ச்சல் இருபத்தாறாவது நாள் குணமாகும் என்றும் தெரிந்து கொள்ளவும்.

## சரபேந்திர வைத்ய ஜ்வர சிகித்ஸை முறைகளில் காணப்படும் சிற்சில மருந்தின் பெயரை மற்ற கிரந்தங்களி லிருந்து சேகரித்து எழுதப்பட்ட அட்டவணை

| நெ. | பக்கம் | முறை நெ. | சரபேந்திர வைத்ய முறைப் பெயர் | இதர கிரதங்களி லிருந்து எடுக்கப்பட்ட பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 6 | 5 | பாழாண மாத்திரை | ஸர்வஜ்வரஹர மாத்திரை |
| 2 | 8 | 7 | இரஸாதி மாத்திரை | ஜ்வரவிரேசனி |
| 3 | 10 | 9 | வெள்ளைப் பாஷாண மாத்திரை | அர்த்த நாரீச்வரம் |
| 4 | 12 | 11 | கௌரீ பாஷாண குளிகை | ராமபாணம் |
| 5 | 18 | 16 | வெள்ளைப் பாஷாண மாத்திரை | சீதஜ்வர குடிகா |
| 6 | 24 | 22 | பாஷாணலிங்கமாத்திரை | ராமபாணம் |
| 7 | 25 | 23 | கெந்தகாதி மாத்திரை | ரஸாதிகுளிகை |
| 8 | 30 | 28 | துத்தாதி குளிகை | மேகநாதி ரஸம் |
| 9 | 39 | 36 | துத்தாதி மாத்திரை | சீத ஜ்வர குடிகா |
| 10 | 42 | 39 | கெந்தகாதி குளிகை | ஸந்நிபாத குலாந்தக ரஸம் |
| 11 | 45 | 42 | தாளகாதி பற்பம் | மருத்யுஞ்ஜயரஸங் |
| 12 | 48 | 44 | கெந்தகாதிமாத்திரை | தாருண கௌரீ ரஸம் |
| 13 | 51 | 46 | சாதிலிங்ககுளிகை | ஆனந்த பைரவ ரஸம் |
| 14 | 55 | 50 | சாதிலிங்க குளிகை | ஸித்தானந்த பைரவ ரஸம் |
| 15 | 56 | 51 | சந்தனாதி மாத்திரை | சீதபஞ்சன ரஸம் |
| 16 | 63 | 57 | கெந்தகாதி பற்ப மாத்திரை | ஜ்வராங்குச ரஸம் |
| 17 | 65 | 59 | சாதிலிங்காதிக் கலிக்கம் | ஆனந்த பைரவ ரஸம் |
| 18 | 66 | 60 | துத்தாதி குளிகை | ராமபாண ரஸம் |

| நெ | பக்கம் | முறை எண் நெ. | சரபேந்திர வைத்ய முறைப் பெயர் | இதர கிரந்தங்களி லிருந்து எடுக்கப்பட்ட பெயர் |
|---|---|---|---|---|
| 19 | 74 | 67 | அரிதாரக்குளிகை | காணிய்யன் குளிகை |
| 20 | 75 | 68 | மடல்துத்த பாஷாண மாத்திரை | சீதஜ்வர கஜஸிம்ம ரஸம் |
| 21 | 80 | 74 | எலிப்பாஷாண மாத்திரை | சீதஜ்வர குடிகா |
| 22 | 82 | 76 | கெந்தகாதி குளிகை | ரஸ குடிகா |
| 23 | 86 | 79 | துத்தாதி மாத்திரை | சங்காரபைரவன் குளிகை |
| 24 | 87 | 80 | கெந்தகத்திரி பாஷாணாதி மாத்திரை | இரத சூடா குளிகை |
| 25 | 88 | 81 | அரிதாரக் குளிகை | வெள்ளை வாகடக் குளிகை |
| 26 | 89 | 82 | துத்த அரிதார பற்பல மாத்திரை | ரஸ குளிகை |
| 27 | 90 | 83 | கெந்தகாதி மாத்திரை | மஹா ஜ்வராங்குச ரஸம் |
| 28 | 96 | 88 | சாதிலிங்க குளிகை | ஆனந்த பைரவ ரஸம் |
| 29 | 97 | 89 | சாதிலிங்க இஞ்சி குளிகை | வைரவன் குளிகை |
| 30 | 98 | 90 | சந்தனாதி உருண்டை | யவ க்ஷாராதி குடிகா |
| 31 | 99 | 91 | கெந்தக மடல் துத்த குளிகை | அம்ருத ஸஞ்சீவி மாத்திரை |
| 31 | 101 | 93 | சாதிலிங்க நாபி மாத்திரை | ஜ்வராங்குச ரஸம் |
| 33 | 103 | 95 | கௌரீ பாஷாணக் குளிகை | சித்தகிரி பாஷாணக் குளிகை |
| 34 | 105 | 97 | வெங்காரக் குளிகை | ஸித்தானந்த பைரவ ரஸம் |
| 35 | 106 | 98 | கெந்தகத் தாம்ராதி மாத்திரை | இராஜசண்டேச்வர ரஸம் |
| 36 | 111 | 102 | அதிவிடய மாத்திரை | அம்ருதா ஸஞ்சீவி மாத்திரை |
| 37 | 112 | 103 | கெந்தகாதி மாத்திரை | கோடாசூழி மாத்திரை |

# ஜ்வர ரோக சிகித்ஸையிலுள்ள மருந்து வகைகளின் அட்டவணை

## 1. கஷாயங்கள்


| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1 | அகத்திவேர்க் கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 145 |
| 2 | ஆடாதோடைக் கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 139 |
| 3 | ஆடுதீண்டாப்பாளைக்கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 277 |
| 4 | ஆமணக்கம் வேர்க்கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 146 |
| 5 | ஆலம்பழுப்புக் கஷாயம் (சீத ஜ்வரத்திற்கு) | 5 |
| 6 | இருவேலிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 149 |
| 7 | இலந்தைக் கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 227 |
| 8 | இலாமிச்சையடை கஷாயம் (ஜ்வரத்திற்கு) | 2 |
| 9 | இலாமிச்சைவேர் அடைகஷாயம் (குளிர் ஜ்வரத்திற்கு) | 116 |
| 10 | இலாமிச்சைவேர்க் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 146 |
| 11 | இலாமிச்சைவேர்க் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 148 |
| 12 | இலாமிச்சைக் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 158 |
| 13 | இலாமிச்சையாதி கஷாயம் (அஜீர்ண ஜ்வரங்களுக்கு) | 291 |
| 14 | இலுப்பைப்பூக் கஷாயம் (பித்த, வாத ஜ்வரங்களுக்கு) | 264 |
| 15 | உசீராதி கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 68 |
| 16 | உசீராதி கஷாயம் (தாப ஜ்வரங்களுக்கு) | 80 |
| 17 | உசீராதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 158 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 18 | உசீராதி கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 230 |
| 19 | கடுகரோகிணிக் கஷாயம் (பக்கசூலை முதலானவைகளுக்கு) | 7 |
| 20 | கடுகரோகிணிக் கஷாயம் (பித்த ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 137 |
| 21 | சுக்காதிக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 177 |
| 22 | கடுகரோகிணி சுக்குக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 191 |
| 23 | கடுகரோகிணியாதி கஷாயம் (பக்கநோய், வாத பித்த ஜ்வரங்களுக்கு) | 208 |
| 24 | கண்டகாரிக் கஷாயம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 219 |
| 25 | கஸ்தூரிமஞ்சள் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 161 |
| 26 | குண்டலாதிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 173 |
| 27 | குண்டலாதி வேர்க்கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 163 |
| 28 | குருவிச்சவேர்க் கஷாயம் (ஜ்வரத்திற்கு) | 59 |
| 29 | குருவிச்சவேர்க் கஷாயம் (சந்நிக்கு) | 204 |
| 30 | கொத்தமல்லிக் கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 73 |
| 31 | கொத்தமல்லிக் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 159 |
| 32 | கொத்தமல்லிக் கஷாயம் (சேத்தும ஜ்வரங்களுக்கு) | 186 |
| 33 | கொத்தமல்லிக் கஷாயம் (கபத்திற்கு) | 192 |
| 34 | கொத்தமல்லியாதிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 255 |
| 35 | கொத்தமல்லிக் கஷாயம் (மித்தகாசம், ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 252 |
| 36 | கொத்தமல்லிக் கஷாயம் (வரள் ஜ்வரத்திற்கு) | 300 |
| 37 | கொன்றைவேர்க் கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 33 |
| 38 | கோரைக்கிழங்குக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 143 |
| 39 | சந்தனாதி கஷாயம் (தொந்த ஜ்வரங்களுக்கு) | 76 |
| 40 | சந்தனாதி கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 131 |
| 41 | சந்தனாதி கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 140 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 42 | சந்தனாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 154 |
| 43 | சந்தனாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 185 |
| 44 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 256 |
| 45 | சந்தனாதி கஷாயம் (அதிசார ஜ்வரத்திற்கு) | 228 |
| 46 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 267 |
| 47 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 270 |
| 48 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 293 |
| 49 | சந்தன உசீராதி கஷாயம் (வாத ஜ்வரத்திள்கு) | 135 |
| 50 | சித்ர முலாதிக் கடாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 176 |
| 51 | சித்ரமூலாதிக் கடாயம் (விஷம ஜ்வரங்களுக்கு) | 304 |
| 52 | சிறுகாஞ்சோறிக் கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 78 |
| 53 | சிறுகாஞ்சோறிக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 162 |
| 54 | சிறுகாஞ்சோறி வேர்க்கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | |
| 55 | சீதேவிச் செங்கழுநீர்க் கஷாயம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 298 |
| 56 | சீந்தில் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 174 |
| 57 | சீந்தில்கொடிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 189 |
| 58 | சீரகாதி கஷாயம் (ஜ்வரங்கள் உழலை முதலியவைகளுக்கு) | 107 |
| 59 | சீரகாதி கஷாயம் (விஷம ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்கு) | 305 |
| 60 | சுக்காதிக் கஷாயம் (வாத ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 134 |
| 61 | சுக்காதிக் கஷாயம் (வாத, கப ஜ்வரங்களுக்கு) | 260 |
| 62 | சுண்ட்யாதி கஷாயம் (கப, காசம், ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 187 |
| 63 | செங்கழுநீர்க் கிழங்குக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 193 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 64 | செங்கழுநீர்க் கிழங்காதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 277 |
| 65 | தசமூலகடுத்ரயாதி கஷாயம் (சீதஜ்வரங்களுக்கு) | 37 |
| 66 | தாடிமாதி கஷாயம் (பேதியுடன் கூடிய ஜ்வரங்களுக்கு) | 231 |
| 67 | தான்றிக்காய் கடாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 149 |
| 68 | திப்பிலி உருண்டையும், கஷாயமும் (பழஞ் ஜ்வரங்களுக்கு | |
| 69 | திப்பிலி மூலாதிக் கடாயம் (பித்த, சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | |
| 70 | திராக்ஷாதிக் கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 81 |
| 71 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 142 |
| 72 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த காய்ச்சலுக்கு) | 144 |
| 73 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 157 |
| 74 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 160 |
| 75 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 165 |
| 76 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 170 |
| 77 | திராக்ஷாதிக் கஷாயம் (பித்த காய்ச்சலுக்கு) வேறு | 170 |
| 78 | திரிகடுகுக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 190 |
| 79 | தூதுவளைக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 164 |
| 80 | தூதுவளைக் கஷாயம் (முறைக் காய்ச்சலுக்கு) | 241 |
| 81 | தூதுவளையாதிக் கஷாயம் (கப ஜ்வரம், வெள்ளோக்காளம் முதலியவைகளுக்கு) | 182 |
| 82 | தூதுவளை வேராதிக் கஷாயம் (பற்பல ஜ்வரங்களுக்கு) | 247 |
| 83 | தூதுவளை வேர்க்கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 254 |
| 84 | தூதுவளை வேராதிக் கஷாயம் (கபஜ்வரத்திற்கு) | 195 |
| 85 | தேவதார்வதி கஷாயம் (கப ஜ்வரத்திர்கு) | 187 |
| 86 | சிறுகுமிழ் கஷாயமும், நாபிக்குளிகையும் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 196 |

| நெ | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 87 | நிர்குண்டிக் கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 132 |
| 88 | நிலவேம்புக் கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 21 |
| 89 | நிலவேம்புக் கஷாயம் (நாட்பட்ட ஜ்வரங்களுக்கு) | 120 |
| 90 | நிலவேம்புக் கஷாயம் (தலைபாரம், இடுப்புவலி வீக்கம், கபஜ்வரம் முதலியவைகளுக்கு) | 184 |
| 91 | நிலவேம்புக் கஷாயம் (விஷ ஜ்வரங்களுக்கு) | 233 |
| 92 | நிலவேம்புக் கஷாயம் (சாயங்கால வேளைகளில் வரும் ஜ்வரங்களுக்கு) | 240 |
| 93 | நெல்லிமுள்ளிக் கஷாயம் (அசீரணஜ்வரங்களுக்கு) | 287 |
| 94 | படோலாதிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 165 |
| 95 | படோலாதிக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 189 |
| 96 | படோலாதிக் கஷாயம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 218 |
| 97 | படோலாதிக் கஷாயம் (அந்தர்கத ஜ்வரங்களுக்கு) | 300 |
| 98 | பலா கஷாயம் (தோஷ ஜ்வரங்களுக்கு) | 219 |
| 99 | பலாகுடுச்யாதி கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 181 |
| 100 | பலாகுடூசீ கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 275 |
| 101 | பற்பாடகக் கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 223 |
| 102 | பற்பாடகாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 253 |
| 103 | பற்பாடகாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 3 |
| 104 | பார்ங்கியாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 168 |
| 105 | பிப்பல்யாதி கிருதமும், கஷாயமும் (விஷ ஜ்வரங்களுக்கு) | 235 |
| 106 | பிரமிக் கஷாயம் (அஜீரண ஜ்வரங்களுக்கு) | 295 |
| 107 | பூசினிக்கொடிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 153 |
| 108 | பெருந்துத்தி வேர்க்கஷாயம் (அதிசார ஜ்வரத்திற்கு) | 228 |
| 109 | பெருமரப் பட்டைக் கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 229 |
| 110 | பேய்க்கரும்புக் கொழுந்து கஷாயம் (ஜ்வர வீக்கங்களுக்கு) | 275 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 111 | பொன்முசுட்டைக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 194 |
| 112 | பொன்முசுட்டைக் கஷாயம் (விஷம, சீத ஜ்வரங்களுக்கு) | 303 |
| 113 | முன்னைக் கடாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 188 |
| 114 | முஸ்தாதிக் கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கு) | 85 |
| 115 | முஸ்தாதிக் கஷாயம் (தாப ஜ்வரங்களுக்கு) | 94 |
| 116 | முஸ்தாதிக் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 141 |
| 117 | முஸ்தாதிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 147 |
| 118 | முஸ்தாதிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 172 |
| 119 | முஸ்தாதிக் கஷாயம் (பித்தக்காய்ச்சலுக்கு) | 166 |
| 120 | முஸ்தாதிக் கஷாயம் (சேத்தும ஜ்வரங்களுக்கு) | 180 |
| 121 | முஸ்தாதிக் கஷாயம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 207 |
| 122 | முஸ்தாதிக் கஷாயம் (விஷ ஜ்வரங்களுக்கு) | 235 |
| 123 | முஸ்தாதிக் கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 266 |
| 124 | முஸ்தாதிக் கஷாயம் (தொந்த ஜ்வரங்களுக்கு) | 282 |
| 125 | வசாதி கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 175 |
| 126 | விடத்தகரையாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 249 |
| 127 | விளாமிச்சைக் கஷாயம் (தாப ஜ்வரங்களுக்கு) | 41 |
| 128 | விஷ்ணுக்ராந்திக் கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 141 |
| 129 | வெட்பாலையாதிக் கஷாயம் (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 69 |
| 130 | வெள்ளிலோத்திரக் கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 64 |
| 131 | வேப்பலகு கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 181 |
| 132 | ஸுரஸாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 19 |
| 133 | ஸுரஸாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 67 |
| 134 | ஹரித்ராதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 183 |
| 135 | ஹரீதக்யாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும் | 71 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
| --- | --- | --- |


## 2. மாத்திரைகளும் குளிகைகளும்


| | | |
| --- | --- | --- |
| 1 | அதிவிடைய மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 111 |
| 2 | அரிதாரக் குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 27 |
| 3 | அரிதாரக் குளிகை (சீத ஜ்வரம், விஷம ஜ்வரங்களுக்கு) | 74 |
| 4 | அரிதாரக்குளிகை (விடாத ஜ்வரங்களுக்கு) | 88 |
| 5 | அரிதாரக்குளிகை (சீத ஜ்வரங்களுக்கு) | 121 |
| 6 | அரிதாரக்குளிகை (விஷம ஜ்வரங்களுக்கு) | 238 |
| 7 | அரிதாரச் சுண்ணாம்புக்குளிகை (பலவித ஜ்வரங்களுக்கும்) | 100 |
| 8 | இரசாதிக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 8 |
| 9 | இரசாதிக் மாத்திரை (ஜ்வரத்திற்கு) | 9 |
| 10 | இரசாதிக் குளிகை (குளிர்ஜ்வரம், ஆமஜ்வரம் முதலானவைகளுக்கு) | 20 |
| 11 | இரசாதிக்குளிகை (ஜ்வரங்களுக்கு) | 72 |
| 12 | இரதாதிக்குளிகை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 198 |
| 13 | இலவங்காதி மாத்திரை (தாப ஜ்வரங்களுக்கு) | 95 |
| 14 | இலுப்பைப்பூ மாத்திரை (திரிதோஷ (ஜ்வரங்களுக்கு) | 52 |
| 15 | இலுப்பைப்பூ மாத்திரை (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 104 |
| 16 | எலிப்பாஷாண மாத்திரை (முறைக்காய்ச்சலுக்கு) | 244 |
| 17 | எலிப்பாஷாண மாத்திரை (சீத ஜ்வரங்களுக்கு) | 80 |
| 18 | ஏலாதிக்குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 28 |
| 19 | ஏலாதிக்குளிகை (பித்த, (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 151 |
| 20 | கடுகரோகிணி மாத்திரை (விடுபடாத ஜ்வரங்களுக்கு) | 22 |
| 21 | கடுகரோகிணி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கு) | 83 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 22 | கடுகரோகிணி மாத்திரை (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 91 |
| 23 | கடுகரோகிணி மாத்திரை (கப ஜ்வரங்களுக்கு) | 177 |
| 24 | கடுகரோகிணி மாத்திரை (ஆம ஜ்வரத்திற்கு) | 296 |
| 25 | கஸ்தூரியாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 13 |
| 26 | கெந்தகாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 25 |
| 27 | கெந்தகாதி குளிகை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 42 |
| 28 | கெந்தகாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 44 |
| 29 | கெந்தகாதி மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 48 |
| 30 | கெந்தகாதி பற்ப மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 63 |
| 31 | கெந்தகாதி குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 82 |
| 32 | கெந்தகாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 90 |
| 33 | கெந்தகாதி மாத்திரை (முறைக்காய்ச்சலுக்கு) | 92 |
| 34 | கெந்தகாதி மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 112 |
| 35 | கெந்தகாதி குளிகை (வாத ஜ்வரங்களுக்கு) | 133 |
| 36 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 212 |
| 37 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 220 |
| 38 | கெந்தகாதி குளிகை (விஷ ஜ்வரங்களுக்கு) | 225 |
| 39 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 231 |
| 40 | கெந்தகாதி மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 268 |
| 41 | கெந்தகாதி மாத்திரை (அஜீர்ண ஜ்வரங்களுக்கு) | 288 |
| 42 | கெந்தகதிரிப் பாஷாணக்குளிகை (சகல ஜ்வரங்களுக்கு) | 87 |
| 43 | கெந்தக தாம்ராதி மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 106 |
| 44 | கெந்தக மடல்துத்த குளிகை (ஜ்வரங்களுக்கு) | 99 |
| 45 | கெந்தக தாம்ராதி மாத்திரை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 200 |
| 46 | கொக்கிமெனச்ச குளிகை (அஜீர்ண ஜ்வரங்களுக்கு) | 284 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 47 | கோரோசனாதி மாத்திரை (பித்த ஜ்வரம் சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 203 |
| 48 | கோரோசனை குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 4 |
| 49 | கௌரீ பாஷாணக்குளிகை (சகல ஜ்வரங்களுக்கு) | 12 |
| 50 | கௌரீ பாஷாணக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 103 |
| 51 | கௌரீ பாஷாணப் பற்ப மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கு) | 15 |
| 52 | சந்தனாதி உருண்டை (சகல ஜ்வரங்களுக்கும்) | 98 |
| 53 | சந்தனாதி மாத்திரை (சீத ஜ்வரத்திற்கு) | 56 |
| 54 | சாதிலிங்கக் குளிகை (தாப, வாத, சீத ஜ்வரங்களுக்கு) | 40 |
| 55 | சாதிலிங்கக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 47 |
| 56 | சாதிலிங்கக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 51 |
| 57 | சாதிலிங்கக் குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 55 |
| 58 | சாதிலிங்கக் குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 96 |
| 59 | சாதிலிங்கக் குளிகை (தீராத ஜ்வரங்களுக்கு) | 60 |
| 60 | சாதிலிங்கக் குளிகை (வாத ஜ்வரங்களுக்கு) | 131 |
| 61 | சாதிலிங்கக் குளிகை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 205 |
| 62 | சாதிலிங்க இஞ்சிக் குளிகை (வாத, மாந்த ஜ்வரங்களுக்கு) | 97 |
| 63 | சாதிலிங்கக் கோரோசனைக் குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 115 |
| 64 | சாதிலிங்கப் பாஷாணக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 16 |
| 65 | சாதிலிங்கநாபி மாத்திரை (கொடூரமான ஜ்வரங்களுக்கு) | |
| 66 | சாதிலிங்க மாத்திரை (தாப, சீத ஜ்வரங்களுக்கு) | 31 |
| 67 | சாதிலிங்க மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 213 |
| 68 | சாதிலிங்க மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 245 |
| 69 | சாதிபலாதி மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 271 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 70 | சீரகாதி உருண்டை (பித்த சந்நிக்கு) | 209 |
| 71 | சீரகாதி உருண்டை (சந்நிபாத, விஷம ஜ்வரங்களுக்கு | 211 |
| 72 | சுக்கிரதாதிக் குளிகை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 279 |
| 73 | தாளகக் கோரோசனைக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 79 |
| 74 | தாளக மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 26 |
| 75 | திப்பிலி உருண்டையும், கஷாயமும் (பழஞ் ஜ்வரங்களுக்கு) | 129 |
| 76 | திராக்ஷாதி மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 102 |
| 77 | துத்தாதிக் குளிகை (தாப, சீத ஜ்வரத்திற்கு) | 30 |
| 78 | துத்தாதிக் குளிகை (பற்பலமுறை ஜ்வரங்களுக்கும்) | 61 |
| 79 | துத்தாதிக் குளிகை (குளிர் காய்ச்சலுக்கு) | 66 |
| 80 | துத்தாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 35 |
| 81 | துத்தாதி மாத்திரை (சகல சீத ஜ்வரங்களுக்கும்) | 39 |
| 82 | துத்தாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 86 |
| 83 | துத்தாதி மாத்திரை (மாறல் ஜ்வரங்களுக்கு) | 239 |
| 84 | துருசு அரிதாரக் குளிகை (கப ஜ்வரங்களுக்கு) | 77 |
| 85 | துத்த அரிதாரப் பற்ப மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 89 |
| 86 | துருசு மாத்திரை (குளிர் ஜ்வரம், வரள் ஜ்வரம் முதலியவைகளுக்கு) | 58 |
| 87 | நாபிக்குளிகை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 242 |
| 88 | நாபிக் குளிகையும் சிறகுமிழ் கஷாயமும் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 196 |
| 89 | நேர்வாளக் குளிகை (தோஷ ஜ்வரங்களுக்கு) | 278 |
| 90 | நேர்வாள மாத்திரை (சீத ஜ்வரங்களுக்கு பேதியாக) | 38 |
| 91 | நேர்வாள மாத்திரை (சகல சுரங்களுக்கும்) | 52 |
| 92 | நேர்வாள மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 221 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 93 | பாஷாண மாத்திரை (முறைக் காய்ச்சலுக்கு) | 6 |
| 94 | பாஷாணலிங்க மாத்திரை (குளிர் ஜ்வரங்களுக்கு) | 24 |
| 95 | பாஷாணாதிக் குளிகை (சீத ஜ்வரத்திற்கு) | 285 |
| 96 | பேதிக் குளிகை (ஜ்வரத்திற்கு) | 275 |
| 97 | மடல் துத்த குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 34 |
| 98 | மடல் துத்த பாஷாண மாத்திரை ஜ்வரத்திற்கு) | 75 |
| 99 | வாள மாத்திரை (பித்த (ஜ்வரங்களுக்கு) | 150 |
| 100 | வெங்கார மாத்திரை (வாத ஜ்வரத்திற்கு) | 128 |
| 101 | வெங்காரக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 105 |
| 102 | வெட்டிவேர் மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 29 |
| 103 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 10 |
| 104 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (குளிர் ஜ்வரத்திற்கு) | 18 |
| 105 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (குளிர் ஜ்வரங்களுக்கு) | 23 |
| 106 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (குளிர் ஜ்வரத்திற்கு) | 36 |
| 107 | வெள்ளைப் பாஷாண குளிகை (18வித ஜ்வரங்களுக்கும்) | 281 |


## 3. தைலயோகங்கள்


| | | |
|---|---|---|
| 1 | அரக்குச் சந்தனாதித் தைலம் (ஜ்வரங்களுக்கு) | 109 |
| 2 | எலுமிச்சம்பழ எண்ணெய் (பழஞ் ஜ்வரத்திற்கும் வீக்கத்திற்கும்) | 123 |
| 3 | (கடல்நுரைத்) தைலம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 49 |
| 4 | சவுட்டு மண்தைலம் (அஸ்தி ஜ்வரத்திற்கு) | 259 |
| 5 | சீதேவிச் செங்கழு நீரெண்ணெய் (நாட்பட்ட ஜ்வரங்களுக்கு) | 265 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 6 | சீதேவிச் செங்கழுநீரெண்ணெய் (வாதம், பித்தம் முதலான தோஷங்களினாலேற்படும் பல வியாதிகளுக்கும்) | 261 |
| 7 | திராயெண்ணெய் (பழஞ் ஜ்வரங்களுக்கு) | 127 |
| 8 | தேங்காய்ப் பாலெண்ணெய் (ஆம ஜ்வரங்களுக்கு) | 296 |
| 9 | பலாச்வகந்தாதி தைலம் (பழய ஜ்வரங்களுக்கு) | 124 |
| 10 | பலாலாக்ஷாதி தைலம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 301 |
| 11 | பேய்ப்பீர்க்கம் எண்ணெய் (ஜ்வரத்திற்கும், வீக்கத்திற்கும்) | 233 |
| 12 | முக்கூட்டெண்ணெய் (பழஞ் ஜ்வரத்திற்கு) | 127 |
| 13 | முலைப்பாலெண்ணெய் (விடாத ஜ்வரங்களுக்கு) | 283 |
| 14 | வெண்ணொச்சி யெண்ணெய் (பழஞ் ஜ்வரங்களுக்கு) | 118 |
| 15 | வெருகங்கிழங்கெண்ணெய் (குளிர் ஜ்வரத்திற்கு) | 122 |
| 16 | வெருகங்கிழங்கெண்ணெய் (விஷம ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்கு) | 258 |
| 17 | ஹரித்ராதித் தைலம் (ஜ்வரங்களுக்கு) | 11 |


## 4. நெய்வகைகள்


| | | |
|---|---|---|
| 1 | அதிவிடைய நெய் (பழங்காய்ச்சலுக்கு) | 119 |
| 2 | இலவங்காதி கிருதம் (ஜ்வரம். வெட்கைகளுக்கு) | 284 |
| 3 | உப்பிலி நெய் (ஆம ஜ்வரத்திற்கு) | 297 |
| 4 | சத்திச்சாரணை நெய் (பழய ஜ்வரங்களுக்கு) | 126 |
| 5 | பிப்பில்யாதி கிருதமும், கஷாயமும் (விஷ ஜ்வரங்களுக்கு) | 235 |
| 6 | வெள்ளிலோத்திர நெய் (சகல ஜ்வரங்களுக்கும்) | 43 |
| 7 | ஸஹதேவிநெய் (சகல ஜ்வரத்திற்கு) | 201 |
| 8 | ஸஹதேவி நெய் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 202 |

| எ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|

## 5. பற்ப வகைகள்

| | | |
|---|---|---|
| 1 | கெந்தகாதி பற்பம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 250 |
| 2 | தாளகாதி பற்பம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 45 |
| 3 | தாளக பற்பம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 17 |

## 6. லேகிய வகைகள்

| | | |
|---|---|---|
| 1 | கூஷ்மாண்ட கண்டம் (அஸ்தி ஜ்வரத்திற்கு) | 273 |
| 2 | முசுமுசுக்கை லேகியம் | 306 |

## 7. விழுது வகை

| | | |
|---|---|---|
| 1 | பற்பாடக விழுது (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 248 |

## 8. ஸத்வம்

| | | |
|---|---|---|
| 1 | அமுத சர்க்கரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 289 |

## 9. சூரண வகை

| | | |
|---|---|---|
| 1 | இரதாதிச் சூரணம் (நீடித்த ஜ்வரம், திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 57 |

## 10. கலிக்க வகை

| | | |
|---|---|---|
| 1 | சாதிலிங்காதிக் கலிக்கம் (ஜ்வரங்கள், சந்நிபாதத்திற்கு) | 65 |

| நெ. | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|

## 11. வேது வகை

| | | |
|---|---|---|
| 1 | வெண்ணொச்சிவேது (ஜ்வர வீக்கத்திற்கு) | 237 |

## 12. குளிச வகை

| | | |
|---|---|---|
| 1 | வேலிப்பருத்திக் குளிசம் (பலவகை ஜ்வரங்களுக்கும்) | 114 |

## 13. பால் வகை

| | | |
|---|---|---|
| 1 | சீரகாதிப்பால் (பித்த ஜ்வரங்களுக்கு) | 167 |

## 14. வடகவகை

| | | |
|---|---|---|
| 1 | முந்திரிகை வடகம் (பற்பல ஜ்வரங்களுக்கு) | 225 |

## 15. தின்பண்டம்

| | | |
|---|---|---|
| 1 | பஞ்சாமிர்தம் (உள்காய்ச்சலுக்கு) | 54 |

ஓம்

# சரபேந்திரர் வைத்திய முறைகள்

## (ஜ்வர ரோக சிகிச்சை)

### காப்பு

செந்தமிழின் முதலாய சகலகலை
நாயகனார் சிவனாரீன்ற
மைந்தர்கந்த ருக்குமுன்னோர் மேருதனிற்
பாரதத்தை மருப்பினாலே
அந்தமதா யெழுதுகையர் சுரநூலைச்
சொல்லுதற்கே யருள்செய் மூர்த்தி
கந்தமலர்ப் பொன்னிலங்குந் தஞ்சைவெள்ளைப்
பிள்ளையார் காப்புத்தானே. —க

சந்திரனொப் பாயிலங்குஞ் சண்முகனார் செந்தமிழ்செய்
சிந்தகத்தி யர்க்குகந்த சீர்முருகர்—சந்ததமுஞ்
சுந்தரஞ் சேரிந்த சுரநூலை செப்புதற்கே
கந்தரிரு தாளிணையே காப்பு. —உ

வெண்மணியா ரந்திகழ் மெய் வேதனிரு நாவினில் வாழ்
கண்மணியா முத்தமிழீ கற்றோர்பால்—உண்மணியார்
சொன்ன ளினமாகச் சுரநூலைச் செப்புதற்கு
நன்னளின நின்னளிக் கண் நல்கு. —ந

அகிலமதிற் றிருமருவுங் கோதண்ட
ரனுமதிக் குமனுமார் மூர்த்தி
பகலவன்பாற் கல்விகற்றோர் அஞ்சனையார்
மகிழ்ந்துபெற்றோர் பண்பாம் தொண்டர்க்

கிகலதுசெய் நோய்தீர்க்குஞ் சஞ்சீவியாஞ்
சுரநூலை யியல்பாய்ப் பாடச்
சகலபொரு ளுகன்றருள்செய் யனுமந்த
ராயரிரு சரணங் காப்பாம்.

## 1. 'சுரத்திற்கு இலாமிச்சையடை கஷாயம்'

சுந்தரமிகும்விலா மிச்சைவேர் வெட்டிவேர்
சுக்குபற் பாடகமலால்ச்
சுகந்தமுள சந்தனம்கோரைக்கி ழங்கினோடு
சொல்லுமிவ் வாறுவகையு
மந்தமுடனேபக்கு வங்கள் தப் பாமலே
யதையடைச் சாறாகவைத்
தப்பாமல் கொடுத்துவரில் வெப்பாயெழுந்திடு
மந்தபித்தச் சுரமெலாம்
மூந்தப்பரந்திடும் சிந்தனைகள் வாராது
முகவசீ கரமதாகும்
மூலமென்றோலமிடு யானையைக் கார்த்திடும்
முராரி மகிழுந் தங்கைபால்
சந்ததம் நிறைந்தபெரு விடையீசர்கிருபையால்
சற்புருட சிங்கமெனவும்
சகலதே சந்துதிசெய் சரபேந்திரபூபதி
சங்கநிதி சொன்னமுறையே. 1

(இதன் பொருள்)

| | |
|---|---|
| இலாமிச்சை வேர் | பற்பாடகம் |
| வெட்டிவேர் | சந்தனத்தூள் |
| சுக்கு | கோரைக்கிழங்கு |

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து, ஒரு புதுப்பாத்திரத்திலிட்டு, இதற்கு 6 மடங்கு சுத்த ஜலம் விட்டு ஒரு இரவு முழுதும் ஊற வைக்கவும். பின்பு இதில் $\frac{1}{4}$ சேர் அளவெடுத்துத் தினம் 2 அல்லது 3

வேளை உட்கொள்ளப் பித்த சுரங்கள் நீங்கி முக வசீகரம் உண்டாகும்.

குறிப்பு: இதற்கே ஹிமகஷாயம் அல்லது சீத கஷாயம் என்றும் கூறுவர் மேலும் இந்த மருந்து ஷடங்க கஷாயம் என்ற பெயரில் ஆயுர்வேத கிரந்தங்களில் காணப்படுகிறது. அஷ்டாங்க ஹ்ருதயம் சிகி. ஸ்தானம் 15-வது ச்லோகம்.

## 2. சகல ஜ்வரங்களுக்கும் 'பர்பாடகாதி கஷாயம்'

பொன்னணிப்பற் பாடகஞ்சுக்கு கைத்தபேய்ப்
புடல்சிறுகாஞ் சோறியின்வேர்ப்
புனிதமாம்வெட் பாலைப்பட்டை சீந்திற்கொடி
புகழ்நில வேம்புகோஷ்டம்
நன்னயமிகும்முத்தக் காசுமொவ் வோர்வகை
நயந்தரைப் பலஞ்சேர்த்துமேல்
நன்றாயிடித்தெடுத் துக்கொண்டு மேலதை
நாலும்பங் காய்ப்பிரித்து
சொன்னதொரு பங்கிட்டு நாழிநந்நீர்விட்டு
சுறுக்கிலதி லெட்டிலொன்றாய்
சூட்சமொடுகாய்ச்சிடு கஷாயத்தை யீந்திடில்
சுரமெல்லாம் விட்டோடுமே
பன்னிருகரத்தைப் பெற்றசிவ கிருபையால்
பலகோடி சங்கமகிழப்
பராசரர் கண்டுதுதி சரபேந்திர பூபதி
பாங்காயுரைத்த முறையே. 2

| | | |
|---|---|---|
| (இ-ள்) | பற்பாடகம் | பேய்ப்புடல் |
| | சுக்கு | சிறுகாஞ்சோறி வேர் |
| | வெட்பாலைப்பட்டை | சீந்தில்கொடி |
| | நிலவேம்பு | கோஷ்டம் |
| | கோரைக்கிழங்கு | |

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துக் கல்லுரலி விட்டு ஒன்றிரண்டாக இடித்து 4 பங்குகளாகப் பிரித்து

வைத்துக்கொள்ளவும். முதலில் ஒரு பங்கையெடுத்து 1 படி (பட்டணம் படி கால்) சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றக்காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடவும். இவ்வாறு தினம் 2 வேளை வீதம் இரு நாளைக்குச் சாப்பிடவும் பற்பல சுரங்களுந் தீரும்.

## 3. சகல ஜ்வரங்களுக்கும் 'கோரோசனை குளிகை'

திருவுந்த பொன்னி னரிதாரமேலஞ்
சகஸ்ரவேதி கோரோசனை
திறம்பெற்ற ருத்திராட்சங் கலங்கொம்பு
மேர்திகழ் செண்பகந்தரும்
பருவுற்றிலங்குதுல வங்கமிவ் வகையெலா
மறவாமணிஞ் சமதைசேர்
மங்கையர்முலைப்பாலி லங்கதை யரைத்தெடு
மாநயமுடன் குளிகைசெய்
தொருவுச்சிதக்குளிகை யச்சிண முலைப்பாலி
லுள்ளபடி யேகொடுத்தால்
உண்டானதாபச் சுரங்களும் நீங்குமே
லுளமகிழ்ந் தென்னாளுமே
தருவுற்ற கைய்யர்பெரு விடையீசர்பூசையால்
தந்தையினு மதிகீர்த்தி
தழைத்துநற் றஞ்சைவாழ் சரபேரந்திபூபதி
தானுகந் துரைசெய்முறையே. 3

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சுத்திசெய்த தாளகம் | கோரோசனை |
| | ஏலக்காய் | மான்கொம்பு |
| | சகஸ்ரவேதி | செண்பகப்பூ |
| | ருத்ராக்ஷம் | கிராம்பு |

இச்சரக்குகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு. கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு, ஒருநாள் முழுவதுமரைத்துப் (பயறளவுள்ள) மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தவும்.

வேண்டும்போது ஒரு குளிகையை முலைப்பாலிலிழைத்துக்கொடுக்கத் தாபச்சுரங்கள் தீரும்.

குறிப்பு: 1. தாளகத்தைச் சுண்ணாம்புத் தண்ணீருள்ளிட்டோலா யந்திரமாக 2 ஜாமம் எரிக்கவும்.

2. சகஸ்ர வேதிக்கு இவ்விடத்தில் கஸ்தூரியை எடுத்துக்கொள்ளலாம்.

---

## 4 சீதச்சுரத்திற்கு "ஆலம்பழுப்புக் கடாயம்"

ஆலம்பழுப்புமர மஞ்சள்பே ராமுட்டி
யாய்ந்தசீ ரகந்திப்பிலி
யலால்மூங்கிலிலைநொச்சி யிலைவிட்டுணு காந்திமே
லந்தமூக் கரட்டையின்வேர்
சீலவட்டத் திருப்பிபெரும் பட்டையிலை
சிறுதேக்கு மிளகுசுக்கு
செப்புமில வங்கப்பத்திரி யுனளியொட்டடை
சீர்கஞ்சாங் கோரைதுளசி
கோலநாரத்தையிலை பிஞ்சிந்த வகையினில்
குறுணிச லத்தைவிட்டுக்
கொண்டெரித்தேயுழக் காய்க்காய்ச்சி யேகொடு
கொடுஞ்சீதச் சுரந்தீருமே
வாலசுந்தரிநிமலி பெரியநாயகி கௌரி
பங்கர்பெரு விடையீசனார்
பதபூசைசெய்துவாழ் சரபேந்திர பூபதி
பாங்கா யுரைத்த முறையே. 4

| | | |
|---|---|---|
| (இ-ள்) | ஆலம்பழுப்பு | மரமஞ்சள் |
| | பேராமுட்டி | சீரகம் |
| | திப்பிலி | மூங்கிலிலை |
| | நொச்சியிலை | விஷ்ணுக்ராந்தி |
| | மூக்கரட்டைவேர் | வட்டத்திருப்பி வேர் |

பெருமருந்துப்பட்டை    பெருமருந்துயிலை
சிறுதேக்கு    மிளகு
சுக்கு    இலவங்கப்பத்திரி
ஓட்டடை    கஞ்சாங்கோரை
துளசி    நாரத்தையிலை
நாரத்தைப்பிஞ்சு

இவைகளை வகைக்கு (1 பலம்) வீதமெடுத்து. ஒரு பெரும் பானையிலிட்டு 1 மரக்கால் சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காகும்வரைச் சுண்டக் காய்ச்சவும். இதைச் சாப்பிட்டுவரச் சீத சுரங்கள் தீரும்.

---

## 5. முறைக்காய்ச்சலுக்குப் பாழாண மாத்திரை

வன்னமயி லின்மத்து காசிடையி லோர்பத்து
வல்லெலிப் பாழாணமும்
வைத்துமொருகாசெடை சுத்திசெய்துக் கொண்டு
வன்றூமத் தஞ்சாற்றினில்
இன்னவகை ரெண்டையும் மேனாலு சாமமே
யியல்புடனரைத் தொருபணத்
திடைமாத்தி ரைகள்செய்து நாலாமுறைக் காய்ச்சலுக்கு
கீந்திடில்சர்க் கரைதனில்
சொன்னபடி மற்றொரு சுரத்திற்கு மேகொடு
சுறுக்கில்முக் கால்பணவெடை
சொல்லாமலே காய்ச்ச லெல்லாம் பறந்திடும்
சூரியனைநேர் பனிகள்போல்
அன்னதியிலங்கு சடை சிவகிருபையால் தன்னை
அடுத்தோரை ரட்சித்திடு
மன்னதாதா தஞ்சைச் சரபேந்திர பூபதி
அமிர்தகுண னுரைசெய்முறையே. 5

(இ ள்) சுத்திசெய்த துருசு — 10 வராகனெடை
எலிப்பாஷாணம் — 1 ,,

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச் சாறுவிட்டு நன்ருக 4 ஜாமங்கள் அரைத்து (12 மணிநேரம்) 1 வராகனெடையுள்ள மாத்திரைகளாக உருட்டி நாலா முறைக் காய்ச்சலுக்குக் கொடுக்கவும். (Malaria) இதற ஜ்வரங்களானால் $\frac{3}{4}$ பணவெடை, நிறையுள்ள மாத்திரைகளாக உருட்டிச் சர்க்கரையுடன் உட்கொள்ளவும். அவை தீரும்.

---

## 6. பக்கசூலை முதலியவைகளுக்குக் கடுகுரோகிணி கஷாயம்

காரமுள கடுகரோ கணிசீந்தில் நிலவேம்பு
 கணத்தவெட் பாலையரிசி
கந்தமிக கோரைக் கிழங்குதா மரைவளையம்
 கதிர்பெருங் குமிழ்திரிபலை
சாரந்தருந் தேவ தாரமொடு சுக்குமே
 சரிவகைக் கிருகாசெடைச்
சரியா யிடித்ததி லிருபடி நவநீர்விட்
 டதனைவுழக் காய்க்காய்ச்சியே
சேரக் கொடுக்கமுன் வந்தபக் கச்சூலை
 சிரபாரம் வாய்ப்பேத்துதல்
சேர்பீனி சம்வயற் றுப்பொருவ லிதுவெலாம்
 சீக்கிரமதாய்த் தீருமே
வாரணமுகத்தரைப் பெற்ற சிவ கிருபையால்
 வளர்தஞ்சை நகரமதில்வாழ்
வசீகர சிகாமணி சரபேந்திர பூபதி
 வரிசையாய்ச் சொன்ன முறையே. 6

| | |
|---|---|
| (இ-ள்.) கடுகரோகிணி | சீந்தில்கொடி |
| நிலவேம்பு | வெட்பாலையரிசி |
| கோரைக்கிழங்கு | தாமரையிலையினுட் சுருள் |
| பெருங்குமிழ் | கடுக்காய்த்தோல் |

| | |
|---|---|
| தான்றிக்காய்த்தோல் | நெல்லிவற்றல் |
| தேவதாரு | சுக்கு |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, 8 மடங்கு (அதாவது $1\frac{1}{4}$ சேர்) சுத்தமான புதிய ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி, உழக்காகும் வரை வற்றக் காய்ச்சவும், இதைப் பருகிவரப்

| | |
|---|---|
| பக்கசூலை | தலைபாரம் |
| வாய்பேத்துதல் | பீனிஸம் |
| வயிற்றுப் பொருமல் | |

முதலான ரோகங்கள் தீரும்.

## 7. ஜ்வரங்களுக்கு 'இரஸாதி குளிகை'

சட்டமாய் கேளிரத மேயிரு வராகனெடை
சார்ந்தகூத் தங்குதம்பைச்
சாற்றினி லரைத்துமேற் சுத்திசெய் துகொண்டுச்
சரிநிறைகள் காரீயமும்
திட்டமாய்க் காய்ச்சிஉரு கிறபோது முந்தரசத்
தேவிட் டெடுத்தபிறகு
திடமான கெந்தகம் போடிரு வராகனெடை
திப்பிலிகி ராம்புசுக்கு
மட்டமாய் வகைக்கொரு வராகனெடை சேர்த்தேயாம்
மருவவெந் நீர்விட்டரை
மகிழ்பச்சைப் பயறளவு குளிகைசெய் தனுபான
மறவாமலே கொடுசுரம்
விட்டகலு முண்மையோ டுசிவகிருபை யாலென்றும்
வெற்றிநிறை தஞ்சைநகரில்
விஸ்தாரக் கீர்த்தி பெரு சரபேந்திர பூபதி
வீரப்பனுரைத்த முறையே. 7

(இ-ள்) பாதரசம் 2 வராகனெடை எடுத்துக் கல்வத்திவிட்டுக், கூத்தங்குதம்பைச் சாறுவிட்டு நன்றாக 4 மணி

நேரம் அரைக்கவும். பின்பு அதை அலம்பிக்கொள்ளவும். சுத்தமாகும். காரீயம் 2 வராகனெடை எடுத்து உருக்கி இலுப்பெண்ணெயில் விட்டுச் சுத்தி செய்துகொண்டு, காரீயத்தை ஒரு சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து அது உருகும் தருணத்தில் பாதரசத்தைக் கொடுத்துத் தொந்திக்கவும். பின்பு இக்கலவையைக் கல்வத்திலிட்டு,

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 2 | வராகனெடை |
| திப்பிலி | 1 | ,, |
| சுக்கு | | ,, |
| கிராம்பு | | ,, |

இவைகளையும் அதனுடன் சேர்த்து வெந்நீர் விட்டு நன்றாக அரைத்துப் பச்சைப்பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். தக்க அனுபானங்களில் கொடுக்கப் பலவித ஜ்வரங்கள் தீரும்.

## 8. ஜ்வரத்திற்கு 'இரஸாதி மாத்திரை'

சொல்லிரதம் நல்லதிப் பிலிகடுக ரோகணி
 சுக்குநேர் வாளமிளகு
சுகமான கெந்தகம் வெங்கார மிந்துப்பு
 சூழ்ந்ததான் றிக்காயலால்
நெல்லிமுளி யிந்தவகை சமதையாய்ச் சேர்த்துநல்
 நேர்த்தியெலு மிச்சம்பழ
நீர்வார்த் தரைத்துக் கொண்டு குன்றிமணி
 நிகராக மாத்திரைகள்செய்
நல்லிஞ்சிச் சாற்றினில் கொடுத்துவரச் சுரமெலாம்
 நடுங்கிப் பயந்தோடுமே
நாரணி பவானிபரி பூரணிகல்யாணி
 பலநாழி சிவகாமிவாம
வல்லிமகிழ் நேசர்பெரு விடையீசர் கிருபையால்
 வண்மைபெரு போசலகுலன்

வளர்தஞ்சை யதிபதி சரபேந்திர பூபதி
வண்மையாய்ச் சொன்னமுறையே. 8

(இ·ள்) சுத்திசெய்த பாதரசம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
,, நேர்வாளப்பருப்பு
திப்பிலி
கடுகரோகிணி
சுக்கு
மிளகு
பொரித்த வெங்காரம்
,, இந்துப்பு
தான்றிக்காய்த் தோல்
நெல்லி வற்றல்

இவைகளைத் தனித்தனியே 1 வராகனெடை யெடுத்து, முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டுக் கஜ்ஜலி செய்துகொண்டு, பின்பு சரக்குகளைச் சூரணித்துச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைக்கவும் இதைக் குன்றிமணி நிகரான மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இம்மாத்திரையை இஞ்சிச் சாற்றில் உட்கொள்ள எவ்விதமான ஜ்வரங்களும் அகலும்.

குறிப்பு:— அதிஸாரத்தோடு கூடிய ஜ்வரத்திற்கு இம் மாத்திரையைக் கொடுக்கக்கூடாது.

## 9. ஜ்வரங்களுக்கு 'வெள்ளைப் பாஷாண மாத்திரை'

சுத்தநீர் முற்றுடும் வெள்ளைப்பா ஷாணமது
சொல்லுநிரை யெட்டுப்பலம்
சுகமான துத்தமும் குறையாமல் நாலுபலம்
சூழ்பாக விலைச்சாறு விட்

டதனையு மெத்தவும் சட்டமா யெட்டுநா
    ளம்மிதனி லிட்டரைத்தே
யதைப்பயிறி னிகரதாய்க் குளிகைசெய் தேயடுத்
    தனுபான மோரிலீந்தால்
நித்தியமெழு காய்ச்சலுங் குளிர்விட் டோடுமே
    நிமலர்சங் கரமயேசர்
நீண்டபிறை வேணியார் தொண்டர்களு கந்தது
    நிறைந்திட மகிழ்ந்தருள்செயு
முத்தணி நிருத்தர்பெரு விடையீசர் கிருபையால்
    முழுதுநலத் தஞ்சை நகர்வாழ்
முத்தமிழ் நயத்தர்துதி சரபேந்திர பூபதி
    மோகனனு ரைத்தமுறையே. 9

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சுத்திசெய்த | வெள்ளைப்பாஷாணம் | 8 பலம் |
| | ,, | துத்தம் | 4 பலம் |

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுப் பாகலிலை (மிதி பாகல்) சாறுவிட்டு 8 நாட்கள் அரைத்துப், பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி, நிழலில் காயவைத்துக்கொள்ளவும். இம்மாத்திரையிலொன்றை எடுத்து மோருடன் தினம் 2 வேளை உட்கொள்ளவும், தினமும் ஏற்படும் காய்ச்சலும் குளிரும் நீங்கும்.

## 10. ஜ்வரங்களுக்கு "ஹரித்ராதி தைலம்"

மஞ்சள் நன் ஞரிகோஷ் டஞ்சந்த னமர
    மஞ்சள்பொன் மெழுகரத்தை
மன்னுசட் டிக்கிழங் கழுக்கிரா வேருமதி
    மதுரம் பெருங்குறும்பை
செஞ்சந்த னங்கள் நீர் வள்ளிக்கி ழங்கினொடு
    செப்புதிப் பிலிமூலமும்
சிறந்திடுமி லாமிச்ச வேர்தேவ தாரமுஞ்
    சேர்த்திடொன் றரைக்காசெடை

நெஞ்சுகந் தேயரைத் தொருநாழி யெண்ணெயில்
 நீருமொரு நாழிவிட்டு
நீகாய்ச்சே ரக்குடம் பில்பூச சுரமெல்லாம்
 நீங்குமுட லும்பெருக்குந்
தஞ்சைநகர் மேவுபெரு விடையீசர் கிருபையால்
 தயவுநிறை புருஷசிங்கம்
தருமநெறி தவறாத சரபேந்திர பூபதி
 தாதாவு ரைத்தமுறையே.

(இ-ள்) மஞ்சள் நன்னாரிவேர்
கோஷ்டம் சந்தனத்தூள்
மரமஞ்சள்த்தோல் பொன்மெழுகு
பேரரத்தை மஞ்சிஷ்டிக்கிழங்கு
அமுக்கிராக்கிழங்கு அதிமதுரம்
பெருங்குறும்பை செஞ்சந்தனத்தூள்
தண்ணீர்விட்டான் கிழங்கு கண்டத்திப்பிலி
இலாமிச்சம்வேர் தேவதாரம்

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை எடுத்துக் கல் உரலிவிட்டு நன்றாக இடித்துத், தண்ணீர் விட்டூறவைத்துக் கொள்ளவும். பின்பு அம்மியின்மேல் இதனைவைத்து நன்றாக அரைத்து நல்லெண்ணெய் 1 படி (5 சேர்) யில் குழப்பி அடுப்பின் மேலேற்றி, ஒரு படி சுத்தஜலம்விட்டு நன்றாக எரித்துப் பதத்திலிறக்கவும்.

பின்பு இதனை உடம்பில் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ் செய்யச் சுரங்களனைத்தும் தீரும். உடம்பும் பெருக்கும்.

## 11. சகல ஜ்வரத்திற்கும் கௌரீ பாஷாண குளிகை

அந்தமுள கௌரீபா ஷாணமடற் றுத்தமு
 மதுவகைக் கிருகழஞ்சு
அல்லாம லேயுலகி லுல்லாச மீறுநல்
 லரிதார மொருகழஞ்சு

யிந்தவகை மூன்றதையும் பேய்க்கருப் பஞ்சாற்றி
    லியல்புட னரைத்தெடுத்தே
யிங்கித மிகுங்குளிகை குன்றிமணி நிகரதாய்
    எல்லாமு லர்த்திநிழலில்
விந்தைசர்க் கரைவெல்லத் தினிலதையு ழக்கினிளம்
    வெந்நீரி லோர்குளிகையீ
வெஞ்சுரமெல் லாந்தீரும் கைப்புப் புளிப்புமேல்
    வேண்டாது நல்பத்தியம்
கொந்தலர்ப் பாதர்பெரு விடையீசர் கிருபையால்
    குபேரநிகர் புகழ்போசல
குலசேக ரன்தஞ்சை சரபேந்திர பூபதி
    குணசீலனுரை செய்முறையே. 11

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | கௌரீ பாஷாணம் | $2\frac{1}{2}$ | வாரகனெடை |
| ,, | மடல் துத்தம் | | ,, |
| ,, | தாளகம் | $1\frac{1}{4}$ | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடிசெய்து, பேய்க் கருப்பஞ்சாறுவிட்டு நன்றா (4 ஜாமங்கள்) அரைக்கவும். பின்பு இதனைக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

சுரரோகிகளுக்கு இதை வெல்லத்துடனோ, அல்லது சர்க்கரையுடனோ அல்லது இளஞ்சூடான வெந்நீரிலோ உட்கொள்ளக்கொடுக்கவும்.

## பத்தியம்: —

கைப்புப் பண்டங்களையும், புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும் நீக்கிவிடவும்.

## 12. சகல ஜ்வரங்களுக்கும் 'கஸ்தூரியாதி மத்திரை'

கெந்தக மனோசிலை நாபிவெங் காரமபின்
    கிராம்புகஸ் தூரிதுத்தம்

கேளிரதம் நல்ச்சாதி லிங்கமிவ் வகையெலாம்
    கிரமமுட னேசமதைசேர்த்
தந்தமிகு மூமத்தஞ் சாத்திலோர் நாள்கையாந்
    தகரைச்சாத் திலொருநாள்
அல்லா லெருக்கவேர் சாற்றிலொரு நாளதை
    அரைத்துவரக் குக்குநன்றாய்
இந்தநேர் குளிகைசெய் தேநிழ லுலர்த்திவைத்
    திடறானசுர வருமுன்னே
யேர்குளிகை யொன்றொன்று வெந்நீரில் மூன்றுநா
    ளீந்திடச் சுரந்தீருமே
சுந்தரர்க்காய் பரவை பால் சென்றுவரு
    சோமசுந்தரர் கிருபையால்
சுகம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
    சொல்லுமிது நல்ல முறையே. 12

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, மனோசிலை
,, நாபி
,, துத்தம்
பொரித்த வெங்காரம்
சுத்திசெய்த அபின்
,, பாதரசம்
,, லிங்கம்
கஸ்தூரி
கிராம்பு

இவைகளைச் சமனெடையெடுத்துக் (வகைக்கு ½ பலம்) கொள்ளவும். முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு கஸ்தூரியைத்தவிர மற்ற சரக்குகளை ஒவ்வொன்றாகப் போட்டு ஊமத்தையிலையின் சாறுவிட்டு ஒருநாள் முழுவதும் அரைக்கவும். கையாந்தகரைச் சாற்றில் ஒருநாளும் எருக்கம்வேர்ச் சாற்றிலொரு நாளும் நன்றாக அரைத்துக் கொண்டு, கலசியில் கஸ்தூரியைச் சேர்த்துக் குன்றிமணிப்

பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி, நிழலில் காய வைத்துக்கொள்ளவும்.

சுரம் வருமுன்னே, ஒவ்வோர் மாத்திரை வீதம் (தினம் 2 வேளை) வெந்நீருடன் கொடுக்கவும். 3 நாளைக்குள் ஜ்வரம் தீரும்.

---

## 13. சகல ஜ்வரங்களுக்கும் 'கௌரீ பாஷாண பற்ப' மாத்திரை.

சுந்தரக் கௌரிபா ஷாணங்க ழுஞ்சியில்
சொல்லுமெலி மிச்சம்பழச்
சுகந்தநற் சாற்றினில் புடமிட் டெடுத்தபின்
சொன்னசாற் றிலரைத்து
பந்தமொடு குளிகைசெய் தேநீழலு லர்த்தியே
பத்துமிள கின்பொடிதனில்
பண்பாயிரண்டுநா ளொவ்வொன்றை யீந்து மேல்
பகர்கஞ்சி காய்ச்சிக்கொடுத்
தொந்தமாய்ப் பத்தியந் தப்பாமல் வைத்திடு
தோய்ந்தகுளி ரும்ஜுரம்விடும்
தும்புரு பராசர கிம்புருடர் நாரதர்
துதிபெரிய நாயகிமகிழ்
செந்தளிர் பாதர்பெரு விடையீசர் கிருபையால்ச்
சீர்பெருகு போசலகுலம்
செல்வ நிரைத் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
சீருடனு ரைத்தமுறையே. -13

(இ-ள்) சுத்திசெய்த கௌரீ பாஷாணம் $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து வில்லை தட்டி, 2 வராட்டியில் புடமிடவும். பின்பு இதனையொரு சுத்தமான கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டுப் பயறளவுள்ள குளிகைகளாகச்செய்து வைத்துக் கொள்ளவும். இதில் ஒரு குளிகையைப் பத்து மிளகின் தூளுடன் சேர்த்துக் கொடுக்கவும்.

இவ்வாறு 2 நாளைக்கு உட்கொண்டு கஞ்சி வாய்ச்சிக் கொடுக்கவும். குளிர் ஜ்வரம் தீரும்.

---

## 14. ஜ்வரங்களுக்குச் 'சாதிலிங்கப் பாஷாண குளிகை'

சாதிலிங்க மெலிப் பாஷாண மரிதாரம்
சட்டமொடு சுத்திசெய்து
சார்ந்தபொன்னூமத்தை யிலைச்சாந்தில் நாள்முழுதும்
சரியாகவே யூறவைத்
தோதியப டிக்கந்தச் சாற்றினி லரைத்ததை
ஒளிர்குன்றி நேர்குளிகைசெய்
தொன்றையிஞ் சிச்சாத்தில் கொடுசீத சுரம்விடும்
வுயர்பயத் தம்கட்டுமே
நீதியுட னேகொடுத் தெண்ணெயைக் கையினால்
நேர்ந்திடா ததுபத்தியம்
நேத்தியா முருங்கையிலை யின்சாறு கூட்டவும்
நில்லாது சீதச்சுரம்
பாதிமதி பூண்டபெரு விடையீசர் கிருபையால்
பராசர சிங்கமெனுங்
கற்பர்குண னுக்குநிகர் சரபேந்திர பூபதி
பண்பாயு ரைத்தமுறையே. 14

(இ-ள்.) சுத்திசெய்த லிங்கம்.
,, எலிப்பாஷாணம்
,, தாளகம்

இவைகளைச் சமனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு பொன்னூமத்தையிலைச் சாறுவிட்டு ஒருநாள் முழுதும் ஊற வைத்து மறுநாள் நன்றாக அரைத்து குன்றியளவுள்ள மாத்திரைகளாகச் செய்யவும். இதை நிழலிலுர்த்திப் பத்திரப்படுத்தி, சீத ஜ்வரங்களில் ஒரு மாத்திரையை இஞ்சிச் சாற்றிலுரைத்துக் கொடுக்கவும்.

பத்தியம்:— பயத்தங்கஞ்சி கொடுக்கவும். நல்லெண்ணெயைக் கையினால் கூடத் தொடக்கூடாது. முருங்கையிலைச்சோறு கூட்டிக்கொள்ளலாம். குளிருடன் கூடிய ஜ்வரம் நிற்கும்.

---

## 15. சகலஜ்வரங்களுக்கும் 'தாளகபற்பம்'

அந்தநற் தாளகத் தையெருக் கம்பாலி
லங்கரைத்தே வில்லைசெய்
தப்பாமல் விராட்டியொரு மூன்றதை முறித்துவைத்
ததன்மீதி லோறாலிலை
முந்தவைத் ததன்மீதில் வில்லைதனை வைத்துமேல்
மூடியோ ராலிலையினால்
முன்கணக் குப்படி விராட்டியைத் திட்டமொடு
முறித்துவைத் தேநயமதாய்
இந்தவித மேபுட மிட்டெடுத் தேயதை
யீயுமனு பானமதுகேள்
யெழிலான தேனில்க்கொ டுத்திடில் மாறலாய்
எழுந்தகுளிர் காய்ச்சல்விடுமே
சுந்தரிக் கன்பர்பெரு விடையீசர் கிருபையால்
சுபமிலகு போசகுலன்
சோழநிகர் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
சொல்லுமிது நல்லமுறையே. 15

(இ-ள்) சுத்திசெய்த தாளகம் 1 பலமெடுத்துக் கல்வத்தில் வைத்து எருக்கம்பால் விட்டு நன்றாக அரைத்துக் காலணா அளவுள்ள வில்லைகளாகத்தட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

ஒருசாண் அகலமுள்ள 3 வராட்டிகளை எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கிக் கீழே பரப்பவும். அதன் மேல் ஒரு ஆலிலையை வைத்து அதில் ஷை தாளக வில்லைகளை வைத்து மேலே இன்னொரு ஆலிலையை வைத்து மூடி முன்போல் 3

வராட்டிகளின் துண்டுகளை மேலே போட்டுக் கொளுத்தி விடவும். தாளகம் பற்பமாகும்.

இப்பற்பகத்தில் ஒரு அரிசியளவெடுத்துத் தேனில் கொடுக்கவும். மாறி மாறி வரும் குளிர் காய்ச்சல் தீரும்.

---

## 16. குளிர் ஜ்வரத்திற்கு 'வெள்ளைப் பாஷாண மாத்திரை'

சங்கநிற வெள்ளைப்பா ஷாணைங் கழஞ்சியுஞ்
சாரமுள துருசியரையாம்
சார்ந்திடுங் கழஞ்சியூ மத்தையிலை யின்சாரதில்
சட்டமூட னொருசாமமே
அங்ஙனை யரைத்துமிள குக்குநிகர் குளிகைசெய்
தக்குளிர் சுரவருமுறை
யந்தநாள் விடியவு மிரண்டுநா ழிகைக்குமுன்
பாய்க்குளிகை யொன்றைநன் றாய்க்
கொங்குலவு பொற்பசுவி நற்பாலி லீந்திடில்
குளிர்சுரமும் விட்டோடுமே
கோமள பவானியபி ராமிசிவ காமிதிகழ்
கோகிலநல் வாணிகௌரி
மங்கையிட வைத்தபெரு விடையீசர் கிருபையால்
மாகன மேருநிகராய்
மகிழ்ந்துநற் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
மானமர னுரைசெய் முறையே. 16

இ-ள்.)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | வெள்ளைப்பாஷாணம் | —40 | குன்றியெடை |
| ,, | துருசு | —20 | ,, |

இவ்விரண்டையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு, ஊமத்தையிலைச்சாறு விட்டு நன்றாக ஒரு ஜாமம் (3மணி நேரம்) அரைக்கவும். இதை மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு, குளிர் ஜ்வரம் வரும் நாளன்று (Malaria) காலை 2 நாழிகைக்குள்ளாக ஒரு மாத்திரையை

எடுத்துப் பசுவின் பாலுடன் விழுங்கவும். குளிர்சுரம் நிற்கும்.

---

## 17. சகல ஜ்வரங்களுக்கும் "ஸுரஸாதி கஷாயம்"

சீதங்கள் சூழ்ந்திடுந் துளசிகஞ் சாங்கோரை
 கிளர்முத்தக் காசுமூன்றில்
கிரமமொடு முக்குறுணி தண்ணீர வந்துவிடு
 கேள்கடுகு ரோகணியுடன்
யேதமில் வாத்திப்பி லியுமொரு துணியினி
 லியல்பாய் முடிந்துபோட்டே
யெரித்தி டறுநாழியா கக்காய்ச்சி மூன்றுநா
 ளீந்திடதை யாறுபொழுதில்
ஆதவன் முன்பெதிர்த் திடுபனிகள் போலவே
 வச்சுரமும் விட்டோடுமே
வம்பிகை பராசக்தி பெரியநா யகிகௌரீ
 யன்பருத் தமலிங்கராம்
நாதசங் கீதர்பெரு விடையீசர் கிருபையால்
 நாகரீகமிகு தஞ்சைவாழ்
நற்புருஷ மேருவாம் சரபேந்திர பூபதி
 நன்றா யுரைத்தமுறையே. 17

(இ-ள்.) துளசி
கஞ்சாங்கோரை
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு (2 பலமெடுத்துக்) கல்லுரலிலிட்டு இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு 3 மரக்கால் ஜலம்விட்டு, அதனுடன்,

கடுகுரோகிணி
திப்பிலி

இவ்விரண்டையும் (வகைக்கு ½ பலமெடுத்து) ஒரு வெள்ளைத்துணியில் வைத்து முடிச்சாகக் கட்டிப்போடவும்.

பின்பு பாத்திரத்தை அடுப்பின் மேலேற்றி 6 படியாகும் வரை ($3\frac{3}{4}$ சேர்) வற்றக்காய்ச்சவும். இக்கஷாயத்தை 6 பங்குகளாக்கி வேளையொன்றுக்கு $\frac{1}{6}$ பங்கு வீதம் தினம் 2 வேளை காலையிலும் மாலையிலும் பருகவும். சூரியனைக்கண்ட பனியைப்போல் ஜ்வரங்கள் தீரும்.

---

## 18. குளிர்சுரம், ஆமஜ்வரம் முதலானவைகளுக்கு "ரஸாதி குளிகை"

சொன்னசிறு புள்ளடிவேர் கடுக்காயும் மிளகு
சுக்கிரதம் நேர்வாளமும்
சொற்கடுக ரோகணிவ கைக்கொரு விராகனெடை
சுகியெலு மிச்சம்பழம்
நன்னயச் சாத்தினி லரைத்தெடுத் துக்கொண்டு
நற்சுண்டைக் காயினிகறாய்
நண்ணுமொழி லுண்டையைப் புளியினுள் ளேவைத்து
நழுவாம லுண்டபிறகே
யின்னமொரு வார்த்தைகேள் வெந்நீர்கு டிக்கவு
மிகுகைகால் சுத்திவெந்நீ
ரிப்படிச் செய்துவரில் குளிர்சுரம் வேமஞ்சுர
மெல்லாம் பறந்தோடுமே
பொன்னணித் தஞ்சைபெரு விடையீசர் கிருபையால்
போசமக ராசனெனவே
பூசுரர்கள் சங்கநிறை சரபேந்திர பூபதி
புண்ணிய னுரைத்த முறையே. 18

(இ ள்) சிறுபுள்ளடிவேர்
கடுக்காய்த்தோல்
மிளகு
சுக்கு
சுத்திசெய்த பாதரஸம்
,, நேர்வாளம்
கடுகரோகிணி

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். பின்பு இதனைச் சுண்டைக்காய் அளவுள்ள குளிகைகளாக உருட்டிவைத்துக் கொள்ளவும் வேண்டும்போது ஒரு உருண்டையை கோதுகளில்லாத புளி யினுள்ளே வைத்து விழுங்கிவிடவும். பின்பு வெந்நீர் சாப்பிடவும்.

**பத்தியம்:—** கை, கால்கள், கழுவ வெந்நீரையே உப யோகிக்கவும். குளிர் சுரம், ஆமச்சுரம் முதலானவைகள் தீரும்.

குறிப்பு:— இம்மாத்திரை நன்றாகப் பேதியாகும் குண முள்ளதால் ஜாக்கிரதையாக உபயோகிக்கவும்.

## 19. ஜ்வரங்களுக்கு 'நிலவேம்புக் கஷாயம்'

துங்கநில வேம்புகோ ரைக்கிழங் கொடுசீந்திற்
துளிர்பொன் முசுட்டைவேரும்
துய்யபரி மளமெழும் வெட்டிவேர் சட்டமாய்
இலங்கும் விலாமிச்சவேர்
திங்கள்நிகர் சுக்கையும் வகைக்கிரு வராகனெடை
திடமாயி டித்தவுடனே
தண்ணீரி ரண்டுபடி விட்டுழக் காய்க்காய்ச்சித்
திறமையுட னேகொடுத்தால்
அங்கம்வ ருத்திடுஞ் சுரமெலாந் தீருமே.
அதிகபல முண்டாகுமே
அந்தரி நிரந்தரி சுந்தரி தயாநிதி
யபிராமி யபையபாணி
சங்கரர் மகிழ்ந்தருள்செய் போசள குலாதிபதி
சகலகலை நிறைதஞ்சைவாழ்
சரசகுண தருமதுரை சரபேந்திர பூபதி
ஸரளமொடு சொன்னமுறையே. 19

(இ-ள்) நிலவேம்பு
கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி
பொன்முசுட்டைவேர்
வெட்டிவேர்
விலாமிச்சைவேர்
சுக்கு

முதலான சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 2 படி தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி, உழக்காகும் வரை வற்ற வைத்து வடிக்கட்டிக் கொடுக்கவும். வலியுடன் கூடிய ஜ்வரங்கள் தீரும். உடம்பிற்கும் பலத்தையுண்டாக்கும்.

---

## 20. விடுபடாத ஜ்வரங்களுக்குக் 'கடுகரோகிணி மாத்திரை'

செங்கடுக ரோகிணி புகையூரல் நல்மஞ்சள்
சீறான கொத்தமல்லியுஞ்
சேர்வகைக் கரைக்கழஞ் சல்லாமல் நேல்வாளம்
சேர்த்திடெட்டரைக்கழஞ்சி
அங்கடுக் காய்ப்பொடியைக் கற்றாழஞ் சோத்தினி
லளாவிப் பிசைந்துகொண்டு
அந்தநீர் தன்னைவிட்டரைத்தெடுத்துக் கொண்டதைப்
பயறுநிகர் குளிகைசெய்து
பங்குட னுலர்த்தியே கற்றா நீரிலப்
பால்முலைப் பாலில்முன்பு
பகர்குளிகை மூன்றுநா ளொன்றொன்று கொடுவிடு
படாச்சுரமும் விட்டோடுமே
சங்கரர் மகிழ்ந்தருள் செய்கிருபையால் நல்லோர்கள்
சகலருந் துதிசெய்விசையன்
சரசமர நிறைவுரை சரபேந்திர பூபதி
சற்குணனுரைத்தமுறையே. 20

(இ-ள்) கடுகுரோகிணி ஓட்டடை
மஞ்சள் கொத்தமல்லிவிதை

முதலானவைகள் வகைக்கு — 20 குன்றியளவும் சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு $8\frac{1}{2}$ கழஞ்சு (சுமார் $1\frac{1}{10}$ பலம்) எடுத்துக்கொள்ளவும்.

சோற்றுக் கற்றாழையைக் கொண்டுவந்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கடுக்காய்த்தூள் சேர்த்திடித்து ஒரு பாத்திரத்தில் அமுக்கி வைக்கவும். அதிலிருந்து சாறு வடியும். இதைத் தனியாக எடுத்து வடிகட்டிக் கொள்ளவும்.

மேற்சொன்ன மருந்துகளைக் கல்வத்திலிட்டுச், சோற்றுக் கற்றாழைச் சாறு விட்டரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். இதை நிழலில் உலர்த்திக் கொண்டு கற்றாழைச்சாற்றிலோ, அல்லது முலைப் பாலிலோ ஒரு குளிகையை இழைத்துக் கொடுக்கவும். இம் மாதிரி 3 நாட்களுக்கொரு தடவை கொடுக்கவும்.

விடாத ஜ்வரங்கள் தீரும். நன்றாகப் பேதியாகுந் தன்மையையுடையது.

---

## 21. குளிர் ஜ்வரங்களுக்கு 'வெள்ளைப் பாஷாண மாத்திரை'

இங்கித மிருந்திடும் வெள்ளைப்பா ஷாணமு
மிரண்டது கழஞ்சியதனை
யெருக்குநற் பாலினி லெட்டுநாளூறவைத்
தெடுத்துநன் றாய்க்கழுவியே
அங்கந்தப் பாலலா மறுபாலில் நாள்முழுது
மரைத்துநய மாயெடுத்தே
அழகான கம்பரிசி நேர்குளிகை செய்தொன்றை
யந்தமுட சர்க்கரையிலீ

சங்கையில் லாமலே கஞ்சிகாய்ச் சிக்கொடு
சார்ந்தகுளி ரும்சுரமுமே
சட்டமாய்த் தீருமேல் பெரியநாயகி கௌரீ
சங்கரியிடங் குலவும்நற்
பங்கயப் பாதர்பெரு விடையீசர் கிருபையால்
பராசரர் புகழ்கிரீடி
பாங்குபெரு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
பண்புட னுரைத்தமுறையே. 21

(இ-ள்) வெள்ளைப்பாஷாணம் 2½ வராகனெடை (ஒரே கட்டியாக) எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு, அது முழுகும்வரை எருக்கம்பால்விட்டு 8 நாளைக்கு ஊறவைக்கவும். பின்பு அக்கட்டியை எடுத்துச் சுத்த ஜலத்தில் கழுவி ஒரு கல்வத்திலிட்டு, மீதமுள்ள எருக்கம் பாலினாலோ அல்லது புதிய பாலினாலோ ஒரு நாள் முழுவதும் அரைக்கவும்.

கம்பரிசிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு, சர்க்கரையில் ஒரு குளிகையைக் கொடுக்கவும். அன்று கஞ்சி மாத்திரமே சாப்பிடவும். குளிர் ஜ்வரம் தீரும்.

---

## 22. குளிர் ஜ்வரங்களுக்கு "பாஷாணலிங்க மாத்திரை"

சாதிலிங் கந்துய்ய வெள்ளைப்பா ஷாணமும்
சரிவகைக் கிருசழஞ்சி
சார்ந்திடும் பாகலின் னிலைச்சாறு விட்டதைச்
சட்டமுட னிருநாழிகை
யோதிய படிக்கரைத் துக்கொண்டு பயறுநிக
ரொணங்குளிகை செய்தொன்றையே
யுண்முலைப் பாலினில் கருப்புட்டி தன்னிலீ
யுற்றகுளி ருப்சுரம்விடும்

கோதிலாப் பத்தியம் வைத்திடுநல் வெற்றிவேல்
குமரகுரு பரமுருகரைக்
குழந்தையாய் பெற்றுமகிழ் பெரியநா யகிகௌரீ
கோமள பவானிவாணி
யாதிபர மேச்வரி தயாநிதி பராசக்தி
அய்யர்பெரு விடையீசனார்
அருள்கிருபை பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
யான்பாயு ரைத்தமுறையே. 22

(இ-ள்.) சுத்திசெய்த லிங்கம் 3 கழஞ்சு
,, வெள்ளைப்பாஷாணம் ,,

இவற்றைக் கல்வத்திலிட்டுப் பாகலிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து (சுமார் 1 மணி நேரம்)ப் பயறளவுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்ளவும்.

இதிலொன்றை எடுத்து முலைப்பாலிலோ அல்லது பனை வெல்லத்திலோ வைத்து விழுங்கிடவும். குளிர் ஜ்வரம் நீங்கும்.

## 23. ஸகல ஜ்வரங்களுக்கும் "கெந்தகாதி மாத்திரை"

கெந்தகம் வெங்காரம் நேர்வாளம் ரஸமுமே
கேள்வகைக் கோர்கழஞ்சி
கிரமமாய்ச் சுத்தியது செய்தெடுத் துக்கொண்டு
கிளர்ந்திடும் குளிர்ந்தநீரில்
நதமுட னேயிந்த னாலுவகை மேலுநன்
றாயரைத் தெடுபயறினேர்
மாத்திரைகள் செய்துஓர் கடலைநிகர் வெண்ணைய
தனிலனு பானமுடனே
யிந்தவித மீந்திடில் முந்தவரு சுரமெலாம்
யினித்தெண்ட னிட்டோடுமே
யிந்தி ராணி மாதங்கி சிங்காரி பார் வதி
யெங்கள்பெரு விடையீசர்பால்

அந்தரி பராசக்தி பெரியநாயகி கௌரி
 யருளினா லென்னாளுமே
யணிதஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
 யகமகிழ்ந் துரைத்தமுறையே. 23

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
 ,, பாதரசம்
 ,, நேர்வாளம்
 பொரித்த வெங்காரம்

முதலானவைகளை வகைக்கு 1¼ வராகனெடை எடுத்துக் கொள்ளவும். ஒரு சுத்தமான கல்வத்தில் இரஸத்தையும் கெந்தகத்தையும் போட்டுக் கஜ்ஜலிசெய்து பின்பு மற்ற இரு சரக்குகளையும் போட்டுக் குளிர்ந்த ஜலம் விட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரை களாகச்செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

இதிலொரு மாத்திரை எடுத்து கடலைப் பிரமாணம் பசு வெண்ணெயுடன் சேர்த்து உட்கொடுக்க ஜ்வரங்கள் தீரும்.

---

## 24. ஸகல ஜ்வரங்களுக்கும் "தாளகமாத்திரை"

தாளகம் வெங்காரம் வகைக்கொரு கழஞ்சியும்
 தானுரைசெய் நேர்வாளமும்
தகுநாற் கழஞ்சியது சேர்த்துப்பின் னதிமதுரம்
 தானரைத் தெடுத்தொருமையாய்க்
கேளதனை நன்றாக நீரைவிட் டுக்கலக்
 கிக்கொதிக ளிட்டவுடனே
கிரமமா யந்தநீர் விட்டரைத் திடுகுளிகை
 செயுமனு பானமதுகூறு
வாளணிக் கண்ணியர் முலைப்பாலி லிஞ்சியில்
 வளருகற் றாழைநீரில்

வனங்குளிகை மூன்றுநா ளீந்திடில் விடாமல்முன்
வந்தசுரம் விட்டோடுமே
தோளணிவு மாபதிம யேசரருள் கிருபையால்
துலங்குநல் தஞ்சைநகர்வாழ்
துதிபெற்ற மன்னர்புகழ் சரபேந்திர பூபதி
சுந்தரனு ரைத்தமுறையே. 24

(இ-ள்.) சுத்திசெய்த தாளகம் 1 கழஞ்சு
,, நேர்வாளம் 4 ,,
பொரித்த வெங்காரம் 1 ,,

இவைகளை ஒரு சுத்தமான கல்வத்தில் வைத்து அதி மதுர கஷாயம்விட்டு நன்றாக அரைத்துப் (பயறளவுள்ள) மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு மாத்திரையை எடுத்து முலைப்பாலிலோ அல்லது இஞ்சிச்சாற்றிலோ, அல்லறு கற்றாழைச்சாற்றிலோ, சமயம் போல் மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும். நன்கு மலம் கழிந்து நாட்பட்ட ஜ்வரங்கள் தீரும்.

## 25. தாப ஜ்வரத்திற்கு 'அரிதாரக் குளிகை'

அஞ்சாமல் நல்லரி தாரத்தை யேசுத்தி
யாக்கியுட னேநீற்றிடும்
அந்தநற் சுண்ணாம் பிரண்டுவகை சமதைசேர்த்
தரைத்துளுந் துக்குநிகராய்
மிஞ்சாம லேகுளிகை செய்துமேற் திரிகடுகு
மெனங்கொத்த மலிச்சூரணம்
மென்பொடிகள் போட்டொன்றைத் தேனிற்
கொடுத்தநாள்
மேச்சுரம் குளிரதிகமாம்
அஞ்சாது மற்றைநாள்ச் சீராகும் மூன்றுநா
ளீந்தால் தாபசுரம்விடும்
இலங்கும் முருங்கையிலை கஞ்சிகாய்ச் சிக்கொடுத்
திடில்பின்னை யும்வராது

பஞ்சாய்ப்ப ரந்திடும் பத்தியமோ ரேபொழுது
பண்பாய்ச்செய் சிவபூசையால்ப்
பலன்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
பாங்காயு ரைத்தமுறையே. 25

(இ-ள்) சுத்திசெய்த தாளகம் — 1 வராகனெடை
நீற்ற கற்சுண்ணாம்பு — ,,

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுச், சுத்த ஜலம் விட்டு நன்றாகவரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலிலுலர்த்தவும், இதிலொரு மாத்திரை எடுத்துத் திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி)ச் சூரணத்திலோ அல்லது கொத்தமல்லிவிதைச் சூரணத்திலோ கூட்டித் தேன்விட்டுக் குழைத்துக் குளிர் ஜ்வரங்களுக்குக் கொடுக்கவும். 3 நாட்களுள் தாப ஜ்வரங்களும் தீரும்.

**பத்தியம்:—** முருங்கையிலைக் கஞ்சிக் காய்ச்சிக் கொடுக்கவும், ஜ்வரங்கள் அனைத்துந் தீரும்.

## 26. ஸகல ஜ்வரங்களுக்கும் 'ஏலாதி குளிகை'

ஏலமில வங்கமதி மதுரம்நன் னாரிவே
ரிலங்குகொத் தமல்லி சுக்கு
இலுப்பையின் பூவெள்ளி லோத்திரம் சந்தன
மேழில் கோரைக் கிழங்கு சீனி
கோலமாம் கடுகுரோ கணிமுந்தி ரிப்பழம்
குலவுபே ரீச்சம்பழம்
குணமான வெட்டிவேர் தண்டினிட வகையெலாங்
கூட்டியே சமதையாக்கி
ஆலைக்க ரும்பின்நற் சாற்றினி லரைத்தெடுத்
தக்கடலை நேர்குளிகைசெய்
தவ்வேகச் சுரங்கண்டு இரண்டுநாள் மூன்றுநா
ளதிலொன்றை முலைப்பாலிலீ
மேலச்சு ரந்தீரும் வாமிசிவ காமியுட
மேவுசங் கரர்கிருபையால்

மேலான தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
பாங்கா யுரைத்தமுறையே. 26

(இ-ள்) ஏலக்காய் கிராம்பு
அதிமதுரம் நன்னாரிவேர்
கொத்தமல்லி சுக்கு
இலுப்பைப்பூ வெள்ளிலோத்திரம்
சந்தனத்தூள் கோரைக்கிழங்குச்சர்க்கரை
கடுகுரோகிணி திராக்ஷைப்பழம்
பேரீச்சம்பழம் வெட்டிவேர்

இவைகளையெல்லாம் சமனெடை எடுத்துக் கல்லுரலி லிட்டிடித்துப் பின்பு கல்வத்திலிட்டுக் கருப்பஞ்சாறு விட்டு நன்றாக அரைத்துக்கொண்டு கடலைப்பருமனுள்ள மாத்திரை களாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

நன்றாக ஜ்வரம் அடிக்கையில் இம்மாத்திரையில் ஒன்றையெடுத்து முலைப்பாலிலிழைத்துக் கொடுக்கவும். இவ்வாறு 2 அல்லது 3 நாட்களுக்குக் கொடுத்தால் எல்லா விதமான ஜ்வரங்களும் தீரும்.

## 27. சகல ஜ்வரங்களுக்கும் 'வெட்டிவேர் மாத்திரை'

இருவேலி சந்தனம் விலாமிச்சை தாமரை
யின்வளையம் நெல்விமுள்ளி
எழிலான செங்கழு நீர்க்கோட்டம் வண்டுரு
ழினித்தாம ரைத்தாதோடும்
மருவுலா வியபச்சைக் கர்ப்பூரம் கேசமதி
மதுரம்பே ரீச்சம்பழம்
மதுரமுந் திரிப்பழம் வளருமுத் தக்காசு
மகிமைகர்ப் பூரமிளகும்
அருமைபற் பாடகம் தண்ணிலொட்டாங்கிழங்
கவ்வகையெலா முலைப்பா

லதிலரைத் துத்தூது வளங்காயி னோர்குளிகை
யதிலொன்றை முலைப்பாலில்
வருஞ்சுர மெலாமுழலை மேலெரிவு நிற்குமே
வலிமைதரு சிவபூசையால்
வளமைபெரு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
வண்மையாய் சொன்னமுறையே. 27

| | | |
|---|---|---|
| (இ-ள்) | வெட்டிவேர் | சந்தனத்தூள் |
| | விலாமிச்சைவேர் | தாமரையிலையினுட்சுருள் |
| | நெல்லிவற்றல் | செங்கழுநீர்க் கிழங்கு |
| | கோஷ்டம் | தாமரைப்பூத்தது |
| | அதிமதுரம் | பேரீச்சம்பழம் |
| | திராக்ஷப்பழம் | கோரைக்கிழங்கு |
| | கர்ப்பூரம் | மிளகு |
| | பற்பாடகம் | தண்ணீர்விட்டான் கிழங்கு |

முதலான சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து இடித்துக் கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு நேக வரைத்துக் கொள்ளவும். குளிகைகளாக உருட்டுவதற்கு 5 நிமிட நேரத்திற்குமுன்,

பச்சைக்கர்ப்பூரம் — 1 வராகனெடையும்
குங்குமப்பூ — ,,

போட்டு நன்றாகவரைத்துப் பின்பு தூதுவளங்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும்.

சுரம், உடம்பு எரிச்சல், உழலை முதலான ரோகங்களுக்கு முலைப்பாலில் கொடுக்கவும். அவை தீரும்.

## 28. தாப, சீத ஜ்வரங்களுக்குத் 'துத்தாதி குளிகை'

பாலணித் துத்தம்ரச மொவ்வோர் கழஞ்சிசேர்
பகர்நாவி யிருகழஞ்சு
பத்துக்க ழஞ்சிநேர் வாளம்ம னோசிலை
பண்புட னரைக்கழஞ்சு

சீலம்நற் சாதிலிங் கமறு கழஞ்சிசி
றந்திடும் வெங்காரமோ
சேரநாற் கழஞ்சியும் மெலுமிச்சம் பழச்சாத்தில்
சீருடனி ரண்டுசாமம்
கோலமுட னேயரைத் துளுந்துநிகர் குளிகைசெய்
கூறுமிஞ் சிச்சாற்றினிற்
கொடுத்திடிற் மூன்றுநாள் தாபசீ தச்சுரம்
கொடூரம்வீட் டோடும் நிசமாய்
நீலமயி லைப்பாகம் வைத்துமகி ழுத்தமரை
நேசமொடு செய்பூசையால்
நெஞ்சமகிழ் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
நேமமொடு சொன்ன முறையே. 28

| | | | |
|---|---|---|---|
| (இ ள்) | சுத்திசெய்த பால்துத்தம் | $1\frac{1}{4}$ | வராகனெடை |
| ,, | பாதரசம் | $1\frac{1}{4}$ | ,, |
| ,, | நாபி | $2\frac{1}{2}$ | ,, |
| ,, | நேர்வாளம் | $12\frac{1}{2}$ | ,, |
| ,, | மனோசிலை | 20 | குன்றியெடை |
| ,, | சாதிலிங்கம் | $7\frac{1}{2}$ | வராகனெடை |
| | பொரித்த வெங்காரம் | 6 | ,, |

முதலான சரக்குகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைக்கவும். 2 ஜாமங், கள் (6 மணிநேரம்) சென்றபின் உளுந்தளவுள்ள மாத்திரை களாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இக்குளிகையிலொன்றை இஞ்சிச்சாற்றுடன் 3 நாட் களுக்குக் கொடுக்கத் தாப ஜ்வரம், சீத ஜ்வரம் முதலான வைகள் தீரும்.

## 29. தாப, சீத ஜ்வரங்களுக்குச் ''சாதிலிங்க மாத்திரை''

சாதிலிங் கம்நெல்லிக் காய்கெந்த கஞ்சுக்கு
சார்ந்தவெங் காரமிளகு

சாந்தமா மிந்துப்பு நாபியுட னேழுமே
சரிவகைக் கிருகழஞ்சு
கோதிலா நேர்வா ளம்மொரு கழஞ்சியும்
கொண்டிடெலு மிச்சம்பழக்
குணமான சாற்றினி லரைத்ததைப் பயறுநிகர்
குளிகைசெய் தேயுலர்த்தி
மீதிலங் குஞ்செப்புப் பரணிதனில் வைத்தொன்றை
மேன்மையிஞ் சிச்சாற்றிலீ
மேல்வயிறு போந்தாபச் சுரம்விடு மஞ்சளொடு
மேன்னொச்சிக் கொழுந்திலீவாய்
ஓதிடுஞ் சீதசுரம் தீரும் முழுதுமே
வுள்ளபடி சிவபூஜையால்
உயர்தஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
உத்தம னுரைத்த முறையே. 29

(இ-ள்.)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த சாதிலிங்கம் | — | 2½ | வராகனெடை |
| ,, நெல்லிக்காய் கெந்தகம் | — | | ,, |
| ,, நாபி | — | | ,, |
| ,, நேர்வாளம் | — | 1¼ | ,, |
| பொரித்த வெங்காரம் | — | 2½ | ,, |
| ,, இந்துப்பு | — | | ,, |
| மிளகு | — | | ,, |
| சுக்கு | — | | ,, |

இவற்றை கல்வத்திலிட்டுப் பொடிசெய்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாகவரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டவும். இதை நிழலில் உலர்த்தி ஒரு செப்புப் பரணியில் பத்திரப்படுத்தவும்.

இதிலொன்றை எடுத்து இஞ்சிச்சாற்றிலிழைத்துக் கொடுக்க நன்றாகப் பேதியாகித் தாபசுரங்கள் தீரும்.

சீத ஜ்வரங்களானால் மஞ்சளும், நொச்சிக்கொழுந்துஞ் சேர்த்துக் காய்ச்சின கஷாயத்தில் கொடுக்கவும்.

## 30. சகல ஜ்வரங்களுக்கும் ''கொன்றைவேர்க் கஷாயம்''

கந்தமிகு கொன்றைவேர் பற்பாட கஞ்சிறுகாஞ்
சோறியின் வேருமுத்தக்
காசுசித் தாமுட்டி வேருமா டாதொடை
கடுகரோ கணிசீந்திலின்
அந்தமாங் கொடிதன்னி லொட்டான் கிழங்குடன்
துவரலாற தேவதாரம்
அவ்வகையி லொன்றினுக் கோரிரு கழஞ்சிசேர்த்
ததனிலிரு நாழிநீர்விட்
டிந்தவித மேயுழக் காய்க்காய்ச்சி யேவடித்
தெடுத்தொரு கழஞ்சிதேன்விட்
டுந்திடில் லொன்றைவிட் டுற்றதா பச்சுர
மிடர்சன்னி வாதச்சுரம்
முந்தப்ப றந்திடும் சிவபூஜை மகிமையால்
முழுதும்வச் சிரதேகமாம்
முத்தமிழ்த் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
முக்யமொடு சொன்ன முறையே. 30

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கொன்றைவேர் | ஆடாதோடைவேர் |
| | பற்பாடகம் | கடுகரோகிணி |
| | சிறுகாஞ்சோறிவேர் | சீந்தில்கொடி |
| | கோரைக்கிழங்கு | தண்ணீர்விட்டாங்கிழங்கு |
| | சிற்றாமுட்டிவேர் | தேவதாரு |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து. ஒரு பாத்திரத்தில் இட்டுத் தண்ணீர் 2 படி (சின்னப்படி 1) விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக வற்றவைக்கவும். இதை வடிக்கட்டித் தேன் $1\frac{1}{4}$ வராகனெடை கூட்டிப் பருகிவர ஒன்றைவிட்டொரு நாள் வரும் தாப ஜ்வரம், சன்னிபாத ஜ்வரம் முதலானவை தீரும்.

## 31. தாப ஜ்வரங்களுக்கு "மடல் துத்த குளிகை"

மடல்துத்தந் தாளகம் நல்லசுண் ணாம்புஞ்ச
    மதைகூட்டி மிளகினிகராய்
மணிக்குளிகை செய்தொன்றைத் திரிகடுகு கொத்தமல்லி
    மருவுசூ ரணத்திஞுடனே
யிடரில்லாத் தேனிலு முதனாளில் நீரிலும்
    ஈந்தால்தா பச்சுரம்விடும்
யோகத் திலும்நல்ல பழனிமலை தன்னிலும்
    யெங்கும்நி றைந்தமூர்த்தி
அடல்கொண்ட சூரனைக் கொடிவாக னங்களாய்
    யடக்கிவரு மெழில்கந்தரை
யன்புடன் பெற்றுமகிழ் பெரியநா யகிகௌரி
    அம்மணி பராசக்திபால்
நடமிடு பாதர்பெரு விடையிசர் கிருபையால்
    நாகரீக மோகனம் நிறை
நரபதிகள் பணிதஞ்சைச் சரபேந்திர பூபதி
    யன்பாயு ரைத்தமுறையே. 31

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சுத்திசெய்த | மடல்துத்தம் |
| | ,, | கல்சுண்ணாம்பு |
| | ,, | தாளகம் |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு. வெந்நீர் விட்டு நன்றாக அரைக்கவும். ஒரு பகல் முழுவதும் அரைத்த பின் இதை மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொன்றை எடுத்து, சுக்கு, மிளகு, திப்பிலி, கொத்தமல்லிவிதை இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்ததூள் ஒரு வெருகடியுடன் கலந்து ஜ்வரம் வந்த நாளன்று வெந்நீருடன் கொடுக்கவும். 2-வது நாளன்று ஷை சூரணத்துடன் ஒரு மாத்திரையைக் கலந்து தேன் விட்டுக் குழைத்துச் சாப்பிடவும். தாப ஜ்வரங்கள் தீரும்.

## 32. சகல ஜ்வரங்களுக்கும் "துத்நாதி மாத்திரை"

துத்தமரி தாரமிர தம்வெள்ளைப் பாஷாணம்
துருசியொவ் வோர்வகைக்குத்
துதித்தொரு கழஞ்சிசேர்த் தூமத்தை யிலைச்சாத்தில்
துலங்குநா ழிகைமூன் றதை
வைத்தரைத் துச்சிறு பயறளவு குளிகைசெய்
வண்மையுட னேயுலர்த்தி
வண்மிளகு பத்துநற் மொடிசெய்து போட்டுமேல்
வயணமொடு வெந்நீர்தனில்
சித்தமலை யாமலொரு குளிகையீ மறுநாளும்
செப்பியபடிக் கொன்றையீச்
சிதறிடும் சுரமெலாம் கஞ்சிவார் பத்தியஞ்
செந்தாம ரைப்பூநிறம்
உத்தம பதத்தர்பெரு விடையீசர் கிருபையால்
உல்லாச போசனிகராய்
உயர்தஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
உண்மையொடு சொன்னமுறையே. 32

| | | |
|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த | துத்தம் | $1\frac{1}{4}$ வராகனெடை |
| ,, | தாளகம் | ,, |
| ,, | பாதரசம் | |
| ,, | வெள்ளைப்பாஷாணம் | ,, |
| ,, | துருசு | |

முதலான சரக்குகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச் சாறுவிட்டு நன்றாக 3 நாழிகையளவு அரைக்கவும். பின்பு இதைப் பயறளவுள்ள சிறுசிறு மாத்திரைகளாகச்செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். இம்மாத்திரையில் ஒன்றை எடுத்துப் பத்து மிளகின் சூரணத்துடன் சேர்த்து வெந்நீருடன் உட்கொள்ளவும். இவ்வாறு 2 அல்லது 3 நாட்களுக்குக் கொடுக்கவும். ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம்:** அந்த நாட்களில் கஞ்சி வார்த்து சாப்பிடவும்.

★ ❊ ❊ ★

## 33. குளிர் ஜ்வரத்திற்கு "வெள்ளைப்பாஷாண மாத்திரை"

இலங்குநல் வெள்ளைப்பா டாணமுக் கழஞ்சிமே
   லெழில்துத்த மிருகழஞ்சி
யிந்தவகை நேர்மையா யூமத்தை யிலைச்சாத்தி
   லிரண்டுநா ழிகையரைத்துத்
துலங்குசிறு பயறுநிகர் குளிகைசெய் தேயதைத்
   துய்யநிழ னிலுலர்த்தித்
தோய்ந்தவொன் றைக்ககருப் புக்கட்டி யில்கொடு
   துடர்ந்துவரு மறுநாளும்
நலஞ்செய்பத் தியங்கஞ்சி பத்துநா ழிகைக்குமேல்
   நன்றாகத்த லைமுழ்கியே
நயந்திடொரு பொழுது சோறுண்ணலாம் குளிரினோடு
   நண்ணுசுர முந்தீருமே
அலங்காரக் கொன்றைபல புஷ்பம்வில் வங்களா
   லன்புடன் சிவபூசைசெய்
அரசர்கள் சிகாமணி சரபேந்திர பூபதி
   யகமகிழ்ந் துரைசெய்முறையே. 33

(இ-ள்.)

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் $3\frac{3}{4}$ வராகனெடை
   ,, துத்தம் $2\frac{1}{2}$ ,,

இவ்விரு சரக்குகளையும் கல்வத்திலிட்டு, ஊமத்தை இலைச்சாறுவிட்டு 2 நாழிகை மட்டும் நன்றாக அரைத்துச் சிறுசிறு பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும். இதை நிழலில் உலர்த்திவைத்து வேளைக்கு ஒரு மாத்திரையை எடுத்துப் பனைவெல்லத்துடன் உட்கொள்ளவும். மறுநாளும் இவ்வாறே செய்யவும்.

**பத்தியம்:** கஞ்சி காய்ச்சிச் சாப்பிடவும். 10 நாழிகைக்கு மேல் (சுமார் 11 மணி அளவில்) வெந்நீரில் ஸ்நானம் செய்யவும். பின்பு ஒருவேளை மாத்திரம் சாதம் சாப்பிடவும். குளிர் ஜ்வரங்கள் தீரும்.

## 34. சீத ஜ்வரங்களுக்குத் "தசமூல கடித்ரயாதி கஷாயம்"

பெருவாகை தசமூலங் கண்டங்கத் திரிபெருங்
குமிள்நெருஞ் சில்வம்
பின்புசிறு வழுதலைமுன் னைப்பாதி ரியிந்தப்பே
ரானவே ரும்பலவும்
திருவாய்ந்த சித்தமல்லி பேராமல்லி மூலமொடு
திரிகடுகு சுக்கு கோஷ்டம்
திப்பிலியின் மூலநற் திப்பிலியீ வகையெலாம்
திட்டமுட னேயிடித்தே
யிருபடி யிளநீர்விட் டுழக்காகக் காய்ச்சியே
யிருபொழுது மறவாமலே
யீந்திடில் அவ்விழ்த சீதச்சுரங் களுமெலாம்
பறந்திடும் நொடியிலே
மருவுலவு தாரிலகு யெரியநா யகிகௌரி
மனமகிழ் செய் சிவகிருபையால்
மந்தரப் புயர்சலன சரபேந்திர பூபதி
மங்களக ரன்சொல் முறையே. 34

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | பெருவாகைவேர் | சித்தாமல்லி |
| | கண்டங்கத்திரி | பேராமல்லி |
| | பெருங்குமிழ் | சுக்கு |
| | நெருஞ்சில் | திப்பிலி |
| | வில்வம் | மிளகு |
| | சிறுவழுதலை | கோஷ்டம் |
| | முன்னை | கண்டந்திப்பிலி |
| | பாதிரி | திப்பிலி |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக் கல்லுரலில் இட்டு ஒன்றிரண்டாக இடித்து, 2 படி (சின்னப்படி 1 ) இளநீர்விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றக் காய்ச்சி வடிக்கட்டிக், காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். சீத ஜ்வரங்களனைத்தும் வெகு எளிதில் குணமாகும்.

## 35. சீத ஜ்வரங்களுக்குப் பேதியாக "நேர்வாள மாத்திரை"

சுந்தர மிகுந்திடும் நேர்வாள மெண்பலம்
சுக்கு வெண் காரமிளகு
சொல்லிரதங் கெந்தகம் வகைக்கொரு பலஞ்சேர்த்து
சூழ்ந்திடிள நீரிலதனை
அந்தமுட னேயரைத் துக்குன் றி நேர்குளிகை
யைச்செய்து லர்த்தி நயமாய்
அப்பசுவி னற்பாலில் கருப்புகட்டி தன்னிலீ
அச்சீதச் சுரந்தீருமே
மந்திர ஸ்வரூபியபி ராமிசிவ காமிநல்
மாதங்கி யபயபாணி
மாதவர் சகோதரி சிங்காரி பார்வதி
மால்பெரிய நாயகியிடஞ்
சந்ததம் மேவுபெரு விடையீசர் கிருபையால்
சகல கலை நிறைவல்லவன்
சற்குண வசீகரன் சரபேந்திர பூபதி
சட்டமொடு சொன்னமுறையே. 35

| | | |
|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த நேர்வாளம் | | 8 பலம் |
| ,, | பாதரசம் | 1 பலம் |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | ,, |
| பொரித்த வெங்காரம் | | ,, |
| சுக்கு | | ,, |
| மிளகு | | ,, |

முதலில் ஒரு சுத்தமான கல்வத்தில் இரஸத்தையும் கெந்தகத்தையும் இட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து பின்பு சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகப்போட்டு. இளநீர் விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணியளவுள்ள மாத்திரை களாகச்செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். வேண்டும் போது ஒரு மாத்திரையை எடுத்துப் பசுவின் பாலில் கரைத்துப் பனைவெல்லம் போட்டுப் பருகவும். ஒரு தடவை மலங்கழிந்து சீத ஜ்வரம் மாறும்.

## 36. சகல சீத ஜ்வரத்திற்கும் "துத்தாதி மாத்திரை"

துத்தநல் கௌரீபா ஷாணமரி தாரமும்
துருசுநேர் வாளமிதலால்
துலங்குநல் வெண்கார மிவைசமதை நிறைகூட்டி
துதிஷூமத் தஞ்சாற்றினில்
வைத்தரைத் துளுந்துநிக ராய்க்குளி கைசெய்து
மேல்வளர் நிழலுலர்த்தி
வனங்குளிர் வரும்போதி லோர்குளி கையும்பத்து
வண்மிளகை யுஞ்சேர்த்ததை
மெத்தவு மரைத்திளம் வெந்நீரில் மூன்றுநாள்
மேன்மையுட னேகொடுத்து
மேன்மப்ப யத்தங்கஞ்சி குளிர்ந்தநீர் வார்த்திடில்
மேவாது சீதச்சுரம்
வுத்தண்ட மூர்த்திபெரு விடையீசர் பூசையி
லுறுதிமதி நிறையுலாசன்
உயர்தஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
யுண்மையா யுரைசெய்முறையே. 36

(இ-ள்.) சுத்திசெய்த துத்தம்
,, கௌரீபாஷாணம்
,, தாளகம்
,, துரிசு
,, நேர்வாளம்
பொரித்த வெங்காரம்

இவைகளை வகைக்குச் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து, உளுந்துப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி, நிழலில் உலர்த்திக் கொள்ளவும். குளிர் சுரம் வரும்போது இதில் ஒரு மாத்திரையை எடுத்துப் பத்து மிளகின் சூரணத்துடன் கலந்து இளஞ்சூடான வெந்நீருடன் உட்கொள்ளவும். இவ்வாறு 3 நாட்களுக்குச் செய்யவும்.

**பத்தியம்:** பயற்றங்கஞ்சியுடன் குளிர்ந்தநீர் விட்டுச் சாப்பிடவும். சீத ஜ்வரங்கள் தீரும்.

## 37. தாப, வாத, சீத ஜ்வரங்களுக்குச் "சாதிலிங்க குளிகை"

மேலான சாதிலிங் கந்கெந்த கம்சுக்கு
  மிளகிந்துப் புத்திப்பிலி
மேலும்வெங் காரமிவ் வகைக்கிரு கழஞ்சியு
  மிகச்சுத்த நேர்வாளமும்
பாலார்ந்த தோரெனங் கழஞ்சிசேர்த் தெலுமிச்சம்
  பழச்சாத்தி லேயரைத்துப்
பயறளவு குளிகைசெய் தொன்றையிஞ் சிச்சாற்றில்
  பகர்தாப சுரத்தினுக்கு
காலான வாதசீ தச்சுரத் திற்குமேல்
  கடுநொச்சிக் கொழுந்துமிளகு
கமழ்மஞ்ச ளின்கஷா யத்தொரு கழஞ்சியில்
  கனகுளிகை கொடுசுரம்விடும்
சேலந்த செங்கண்ணி பெரியநா யகிகௌரீ
  சித்தமகிழ் சிவகிருபையால்
சிங்கார முயர்தஞ்சை சரபேந்திர பூபதி
  சீருடனு ரைத்தமுறையே. 37

(இ-ள்) சுத்திசெய்த சாதிலிங்கம்
  ,, நெல்லிக்காய் கெந்தகம்
  ,, நேர்வாளம்
 பொரித்த வெங்காரம்
 இந்துப்பு சுக்கு
 மிளகு திப்பிலி

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். இதை நிழலில் உலர்த்திக்கொண்டு தாபஜ்வரமானால் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும்.

வாதசீத ஜ்வரமானால்
  நொச்சிக்கொழுந்து
  மிளகு

மஞ்சள்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்து ஒன்றாகக் கூட்டிக் கஷாயம் வைத்து அதில் ஒரு மாத்திரையை இழைத்துக் கொடுக்கவும். ஜ்வரம் தீரும்.

## 38. தாப ஜ்வரங்களுக்கு 'விளாமிச்சைக் கஷாயம்'

விலாமிச்சம் வேரத்தித் திப்பிலி னாணலின்
வேருசிறுகாஞ் சோறியின்வேர்
வெட்டிவேர் பற்பாட கம்முத்தக் காசுமிவை
விபரமாய்ச் சமதைகூட்டி
யெலாமி டித்துத்தூ ளதாக்கி மூவிரல்கொண்
டதெடுத்து நீரில்போட்டு
உடனெரித்துப் பதப்படிக் கிக்காய்ச்சிக் கொண்டதை
யீந்திடில் தாபச்சுரம்
நிலாது பாருள்ளு ழலையுந்தா கமுந்தீரும்
நேர்த்தியுள பொரிக்கஞ்சியே
நேமமுள பத்தியம் பெரியநா யகிகௌரீ
நிமலிசுந் தரிமாதங்கி
வுல்லாச மதிநேசர் பெருவிடையீசர் பூசைநித
முள்ளபடி செய்மகிமையால்
ஓங்குபுகழ் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
உண்மையொடு சொன்னமுறையே. 38

(இ-ள்) விளாமிச்சைவேர்
யானைத்திப்பிலி
நாணல்வேர்
சிறுகாஞ்சோறிவேர்
வெட்டிவேர்
பற்பாடகம்
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ பலமெடுத்து உலர்த்திக் கல் உரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துக்கொண்டு, மூ வி ர ல்

கொள்ளுமளவு தூளை ஒரு பாத்திரத்தில் போட்டு 8 மடங்கு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்தைப் பருகத் தாபசுரம், உழலை தாகம் முதலானவைகள் தீரும்.

பத்தியம்: பொரிக்கஞ்சி சாப்பிடவும்.

## 39. சந்நிபாத ஜ்வரங்களுக்குக் "கெந்தகாதி குளிகை"

சந்தமிகு கெந்தகம் நல்லிரதம் வெங்கார
மகவல் பற்பம் பச்சைநாபி
கதிர்சங்கு பற்பமிவை வகையொன்றுக் கோர்பலம்
கனமிளகு நல்திப்பிலி
யிந்தவகை யொன்றினுக் கொன்றரைப் பலமுட
னிவையெலாம் கல்வமதிலிட்
டேயெலு மிச்சம் பழச்சாற்றில் ரெண்டுநா
ளேயரைத் துக்குன்றிநேர்
முந்தநற் குளிகைசெய் தேநிழலு லர்த்தியே
மூங்கிற்கு ழாயிலிடுமேல்
மொழிசந்நி வாதத்திற் கிஞ்சியிற் சுரத்திற்கு
முதிர்வெத்தி லைச்சாற்றிலீ
அந்தமா மொருபலஞ் சர்க்கரைப் பானகம்
அளித்திடில் சுரமும் விடுமே
வரன்கிருபை பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
யன்பாயு ரைத்த முறையே. 39

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரஸம்
,, நாபி
சங்கு பற்பம்
பொரித்த வெங்காரம்

இவைகள் வகைக்கு ஒரு பலம்

மிளகு
திப்பிலி
இவ்விரண்டும் வகையொன்றுக்கு $1\frac{1}{2}$ பலம்

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் ஒரு கல்வத்திலிட்டுக் கஜ்ஜலி செய்து, பின்பு பற்பம் முதலான சரக்குகளைப்போட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு நாள்வரை கையோயாமலரைக்கவும்.

பின்பு குன்றிமணிப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக்கொள்ளவும். இவைகளை மூங்கில் குழாய்க்குள் பத்திரப்படுத்தவும். சன்னிபாத ஜ்வரமானால் (Typhoid) இதிலொரு குளிகையெடுத்து இஞ்சிச்சாற்றில் சாப்பிடவும். சாதாரண ஜ்வரங்களானால் வெற்றிலைச்சாற்றில் ஒரு குளிகை உட்கொள்ளவும். அல்லது மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு, 1 பலம் சர்க்கரைத் தண்ணீருடன் விழுங்கிவிடவும். அவை தீரும்.

## 40. ஸகல ஜ்வரங்களுக்கும் "வெள்ளிலோத்ர நெய்"

சங்கநிறம் வெள்ளிலோத் திரமுந்தி ரிப்பழம்
சந்தனமி லுப்பையின்பூ
சாரமுமி குந்திடதி மதுரமிவ் வகையெலாம்
சரிவகைக் கொருகழஞ்சி
பங்கமில் லாமலாப் பாலினி லாறுபடி
பண்பாக விட்டரைத்துப்
பசுவின்நெய் யொருநாழி நல்லநீ ரொருநாழி
பகர்ந்தபடி யேகலந்தே
இங்கித மிலங்குமந் தாக்கினிய தாய்க்காய்ச்சி
யிறக்கியே வடித்தெடுத்தே
இயல்புடன் கேசாதி பாதமுத லாய்ப்பூசி
விடதாப சுரந்தீருமே
மங்கள நயங்குலவு பெரியநா யகிகௌரீ
மங்கைபங் காளரருளால்

மகிழ்ந்துநற் றஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
    மதுரமொடு சொன்னமுறையே. 40

(இ-ள்.) வெள்ளிலோத்திப்பட்டை
திராக்ஷைப்பழம்
சந்தனத்தூள்
இலுப்பைப்பூ
அதிமதுரம்

முதலான சரக்குகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்துப் பசுவின்பால் விட்டு நன்றாக அரைத்து, 6 படி (பட்டணம் படி $\frac{3}{4}$) பசுவின் பாலுடன் குழப்பி, பசுவின் நெய் 1 படியும் (பட்டணம் படி $\frac{1}{8}$) சுத்தஜலம் 1 படியும் விட்டு, எல்லாவற்றையும் ஒன்று கலந்து, அடுப்பின்மேல் ஏற்றி சிறு தீயினாலெரித்துப் பதத்தில் இறக்கவும். இதை வடிகட்டிப் பத்திரப்படுத்தவும்,

தாப ஜ்வரத்தினால் அவதியுறும் நோயாளியின் பாத முதல் தலையுச்சிவரை இந்நெய்யை ஒரே சீராகப் பூசவும். ஜ்வரம் தீரும்.

குறிப்பு:— வெள்ளிலோத்திரப்பட்டை கிடைக்காவிட்டால் விளாம்பட்டையை எடுத்துக்கொள்ளவும்.

## 41. சகல ஜ்வரங்களுக்கும் ''கெந்தகாதி மாத்திரை''

கெந்தகம் சூதமரி தாரவெங் காரமொடு
    கிளர்வெள்ளை நாபிதுத்தம்
கேளிந்த வகையினெடை சுத்திசெய் நேர்வாளம்
    கிரமமுடனே சமதைசேர்த்து
இந்தவகை யெட்டுமித மாய்முலைப் பாலினில்
    வேரான சிறுகீரையின்
இயல்புற்ற சாற்றினி லரைத்ததைப் பயறுநிகர்
    இங்கிதமுடன் குளிகைசெய்

தந்தமாம் நிழலினில் உலர்த்தியொன் றிஞ்சிதனில்
அச்சீத சுரத்தினுக்கி
யடல்வாதச் சுரத்திற்கும் நீரடைப் பாகில்கை
யாந்தகரைச் சாறுதனிலீ
தொந்தமாய் வந்தசுர மெல்லாம் பறந்திடும்
துய்யபெரு விடையீசனார்
துணைபடி பணிந்துவாழ் சரபேந்திர பூபதி
துதித்தபடி சொன்னமுறையே. 41

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, தாளகம்
பொரித்த வெங்காரம்
சுத்திசெய்த பாதரஸம்
,, வெள்ளைப்பாஷாணம்
,, நாபி
,, துத்தம்
,, நேர்வாளம்

இவைகளை வகைக்கு ($1\frac{1}{4}$ வராகனெடை) வீதமெடுத்து ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு, முதலில் ரஸத்தையும், கெந்தகத்தையும் கஜ்ஜலிசெய்து, பின்பு மற்ற சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டு, முலைப்பால்விட்டு ஒருநாள் அரைக்கவும். மறுநாள் சிறுகீரைச்சாறுவிட்டு நன்றாக அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு நிழலில் உலர்த்தவும், சீத ஜ்வரமானால் ஒரு குளிகையை இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும்.

வாத ஜ்வரம், நீரடைப்பு முதலியவைகளுக்கு இம்மாத்திரையிலொன்றை எடுத்துக் கையாந்தகரைச் சாற்றில் கொடுக்கவும். தொந்த ஜ்வரங்களும் தீரும்.

## 42. சன்னிபாத ஜ்வரத்திற்கு ''தாளகாதி பற்பம்''

தாளகங் கெந்தகம் நேர்வாள மரிதாரம்
தாமிர பற்பம்நாவி

தனிமனோ சிலையிரத முஞ்சமதை சேர்த்ததைத்
 தருங்கல்வத் தினில்வைத்துமேல்
கேளன்நி லப்பனைக் கிழங்கினூட சாத்திலங்
 கேயரைத் தெடுகுப்பியில்
கிரமமாய் வைத்துநற் சேலைமண் செய்துடன்
 கிளர்க்குக் குடப்புடமிடு
மீளவு மெடுத்தாறி னால்பொடிகள் செய்நாலு
 மென்குன்றி நிகர் வெற்றிலை
மேலவைந்து மிளகுவைத் தம்மருந் துண்டபின்
 வெந்நீர்கொ டுத்திடுசுரம்
நீளந்த சன்னிவா தந்திரும் பத்தியம்
 நிறைகஞ்சி சோறுமோரு
நிமலரருள் பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
 நேமமொடு சொன்னமுறையே. 42

(இ-ன்) சுத்திசெய்த தாளகம்
 ,, நெல்லிக்காய் கெந்தகம்
 ,, நேர்வாளப்பருப்பு
 ,, பத்ரதாளகம் (மடல்)
 தாம்ரபற்பம்
 சுத்திசெய்த நாபி
 ,, மனோசிலை
 ,, பாதரஸம்

இவைகளைச் சமனெடுத்துக் கொள்ளவும். முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலியாகச்செய்து, பின்பு சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகப்போட்டு நிலப்பனங்கிழங்கின் சாறுவிட்டு நன்றாக அரைக்கவும், பின்பு சிறுசிறு வில்லைகளாகத்தட்டிக் காயவைத்து, ஒரு அகலில் வைத்து, மேலே மற்றொரு அகலினால் மூடிச் சேலைமண்செய்து காயவைக்கவும், மறுநாள் அதைக் குக்குட புடத்திலிடவும். புடம் நன்றாக ஆறியபின் அகலைத்திறந்து சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

இதில் 4 குன்றி எடையெடுத்து ஒரு வெத்திலையில் வைத்து, 5 மிளகுஞ்சேர்த்து, நன்றாக மென்று தின்னவும். பிறகு வெந்நீர் குடிக்கவும். சன்னிபாத ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம் :** வேண்டிய அளவு கஞ்சி காய்ச்சிச் சாப்பிடவும். மோர் சாதம் சாப்பிடலாம்.

குறிப்பு — குக்குடபுடம் ஒரு முழம் நீளமும் ஒரு முழ உயரமும் உள்ளபடி வரட்டிகளை அடுக்கிப் புடம்போடுதல்.

---

## 43. ஜ்வரங்களுக்கு "சாதிலிங்கக் குளிகை"

சாதிலிங் கங்கடுக் காய்கடுக ரோகிணி
 சட்டமுள நேர்வாளமும்
சார்ந்ததிப் பிலிதான்றிக் காய்நெல்லி முள்ளியிலை
 சரிவகைக் கோர்கழஞ்சு
கோதிலகற் றாழஞ்சோற் றிற்கடுக்காய் பொடிகூட்டிப்
 பிசைந்த நீரைக்
கொண்டரைத் துப்பாவட் டங்காயி நேர்குளிகை
 குணமுடன் செய்தபிறகே
ஓதிடும் நன்னிழலு லர்த்திவைத் துக்கொண்டு
 ஒர்குளிகை முலைப்பாலிலீ
உண்டான சுரமெல்லாந் தீருமேல் பாலன்ன
 முண்ணலாம் பத்தியமீதெ
நீதிநெறி தவறாத போசல குலாதிபதி
 நிமலர்சங் கார்கிருபையால்
நித்யகல் யாணகுண சரபேந்திர பூபதி
 நெஞ்சுகந் துரைசெய்முறையே. 43

(இ-ள்.) சுத்திசெய்த சாதிலிங்கம்
கடுக்காய்த்தோல்
கடுகரோகிணி
சுத்திசெய்த நேர்வாளம்
திப்பிலி

தான்றிக்காய்த்தோல்

நெல்லிமுள்ளி

முதலான சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துக்கொள்ளவும். நன்றாக முற்றிய சோற்றுக் கற்றாழையைக் கொண்டுவந்து சிறுசிறு துண்டுகளாக்கிக் கடுக்காய்த்தூள் சேர்த்து இடித்து, ஒரு பாத்திரத்தில் அமுக்கி வைக்கவும். மறுநாள் அதைப்பிழிய அதிலிருந்து சாறு இறங்கும்.

மேலே சொல்லப்பட்ட சரக்குகளைக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச்சாறுவிட்டு நன்றாக அரைத்து, பாவட்டங்காயள வுள்ள மாத்திரைகளாகச் செய்யவும். இவைகளை நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டும்போது ஒரு குளிகையை முலைப்பாலில் இழைத்துக்கொடுக்கவும். பல வித ஜ்வரங்களும் தீரும்.

பத்தியம்:— பால் சாதம் சாப்பிடவும்.

## 44. ஜ்வரங்களுக்குக் "கெந்தகாதி மாத்திரை"

கெந்தகம் வெங்கார மிரதமிம் மூன்றுமே
கேளுசம பாகமதுசேர்
கேளறுநேர் வாளமு மோராறு காசெடை
கிரமமது தப்பாமலே
இந்தவகை யெல்லாங்கை யாந்தகரைச் சாறுவிட்
டேயரைத் துளுந்துநிகராய்
யேர்குளிகை செய்தொன்றை புளியின்நற் கொட்டைநிகர்
யெழில்வெண்ணெ யில்கலந்தே
அந்தமுள்ள ஓர்வெத்தி லைக்குள்வைத் தேயதை
அடங்கலு முண்டபிறகே
அந்தக்கு ளிர்ந்தநீர் கொடுதேக வாகரிந்
தனேகசுரம் விட்டோடுமே

சந்ததமு நல்லபெரு விடையீசர் கிருபையால்
சகலகலை நிறைசுந்தரன்
சற்குண பூஷணன் சரபேந்திர பூபதி
சட்டமுட னிட்டமுறையே.

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, வெங்காரம்
,, பாதரஸம்
இச்சரக்குகள் வகைக்கு 1 வராகனெடை
சுத்திசெய்த நேர்வாளம் 6 ,, 44

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்ற சரக்குகளைக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு நேகவரைத்து, உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

ஒரு குளிகையையெடுத்துப் புளியங்கொட்டையளவு பசு வெண்ணெயில் வைத்து, ஒரு வெத்திலையுடன் சுருட்டிச் சாப்பிடவும். பின்பு குடிப்பதற்குக் குளிர்ந்த ஜலம் கொடுக்கவும்.

தேகவாகறிந்து மாத்திரையைக் கொடுக்க பற்பல ஜ்வரங்களும் தீரும்.

குறிப்பு: பேதியுடன் கூடிய ஜ்வரத்திற்கு இம்மாத்திரையைக் கொடுக்கக்கூடாது.

## 45. பற்பல ஜ்வரங்களுக்கும் ''தைலம்''

கடல்நுரை விலாமிச்ச வேர்மஞ்சள் பொன்மெழுகு
கடுகரோகிணி வெட்டிவேர்
கம்பிப்பி சின்கெந்த கஞ்சந்த னம்முத்தக்
காசுமஞ் சிட்டிகோஷ்டம்
இடரிலா ததிமதுரம் மிலுப்பைப்பூ சதகுப்பை
யெழிற்சுக்குப் பெருங்குரும்பை

இந்துப்பு வகைக்கொரு காசிடைகள் சேர்மோரி
 லேயரைத் தெண்ணெய்நாழி
இடமோரி லாறுபடி விட்டெரித் தரைதவடித்
 தேயுடம் பிற்பூசவும்
தேகங்கை காலெரிவு விஷமச்சு ரங்களொடு
 சீதச்சு ரங்களல்லால்
உடனேவ ருஞ்சுரங்க ளெல்லாம்ப றந்திடும்
 உமைபாகர் பூஜையதனால்
உத்தமகு ணத்தைநிறை சரபேந்திர பூபதி
 உண்மையாய்ச் சொன்னமுறையே. 45

(இ-ள்.)

| | |
|---|---|
| கடல்நுரை | வெட்டிவேர் |
| இலாமிச்சைவேர் | கம்பிப்பிசின் |
| மஞ்சள் | நெல்லிக்காய் கெந்தகம் |
| பொன்மெழுகு | சந்தனத்தூள் |
| கடுகரோகிணி | கோரைக்கிழங்கு |
| மஞ்சிஷ்டா | கோஷ்டம் |
| அதிமதுரம் | இலுப்பைப்பூ |
| சதகுப்பை | சுக்கு |
| பெருங்குரும்பை | இந்துப்பு |

முதலிய சரக்குகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து அம்மியின் மேல் வைத்துப் பசுவின் மோர்விட்டரைத்து,

நல்லெண்ணெய் 1 படியும் (5 சேர்)
பசுவின்மோர் 6 படியும் (30 சேர்)

கூட்டி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தை உடம்பில் தேய்த்துக்கொண்டுவர,

கைகாலெரிச்சல்
விஷம ஜ்வரம்
சீத ஜ்வரம்

முதலானவைகள் தீரும்.

## 46. ஜ்வரங்களுக்குச் ''சாதிலிங்க குளிகை''

நன்னய மிகுஞ்சுக்கு சாதிலிங் கம்பச்சை
நாபிவெங் காரம்நிறைகேள்
நன்றாய் வகைக்குமோ ரோர்பலஞ் சேர்த்துமேல்
நாலுபல மேதிப்பிலி
யின்னவகை யைந்தையும் முதிர்ந்திடும் காடியில்
எலுமிச்சம் பழச்சாற்றினில்
லேயதை யரைத்தெடுத் துக்கொண்டு குன்றிமணி
யின்னிகர தாய்க்குளிகைசெய்
சொன்னதொரு குளிகையொன் றிஞ்சிநற் சாற்றினில்
சுகியெலு மிச்சம்பழச்
சுகந்தநற் சாற்றினில் காடியி லீந்திடில்
சுரமெலாம் விட்டோடுமே
அன்னபூ ரணிபெரிய நாயகி யிடங்குலவு
மய்யர்பெரு விடையீசர்செய்
அருள்பெருகுந் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
அன்பாயு ரைத்தமுறையே. 46

(இ-ள்) சுத்திசெய்த சாதிலிங்கம்
,, நாபி
பொரித்த வெங்காரம்
சுக்கு
இவைகள் வகைக்கு ஒரு பலம்
திப்பிலி 4 பலம்

இவைகளைக் கல்வத்திலிட்டு, புளித்த காடிவிட்டு ஒரு நாள் முழுதும் அரைக்கவும். மறுநாள் எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் உள்ள மாத்திரை களாக உருட்டிக்கொள்ளவும்.

இதில் ஒரு குளிகையை எடுத்து இஞ்சிச் சாற்றிலோ அல்லது எலுமிச்சம் பழச்சாற்றிலோ அல்லது காடியிலோ இழைத்துக் கொடுக்கவும். ஜ்வரங்கள் தீரும்,

## 47. திரிதோஷ ஜ்வரங்களுக்கு "இலுப்பைப் பூ மாத்திரை"

பண்பான நல்லிலுப் பைப்பூவு மொருபங்கு
    பகர்கடுக ரோகணியிரு
பங்குநேர் வாளமும் தப்பாம லேமூன்று
    பங்குட னிவ்வகையெல்லாம்
நண்பாய்க் குளிர்ந்தநீர் விட்டரைத் துக்குளிகை
    நற்குன் றி மனுநிகர்செய்து
நல்பித்தச் சுரத்திற்கு வாதச்சு ரத்திற்கு
    நறும்வெல்லம் சர்க்கரையிலீ
தினம்பார்க்கும் சேத்தும சுரத்திற்கு மனுபானம்
    தேனிலொவ் வோர்குளிகையீ
தீங்கான சுரமெல்லாம் நீங்கிப்ப றந்திடும்
    திங்களில கும்சடையினற்
பெண்பாலில் வைத்தபெரு விடையீசர் பூசையில்
    பிரியவுற் றிடுமுத்தமன்
பெரியோர்கள் சித்தமகிழ் சரபேந்திர பூபதி
    பெருமையாய்ச் சொன்னமுறையே. 47

| | | |
|---|---|---|
| (இ-ள்) | இலுப்பைப்பூ | 1 பலம் |
| | கடுகரோகிணி | 2 பலம் |
| | சுத்திசெய்த நேர்வாளம் | 3 பலம் |

இவைகளைக் கல்வத்திலிட்டு குளிர்ந்த ஜலம் விட்டு நன்றாக அரைத்துக் குன்றியணிப் பிரமாணமுள்ளமாத்திரைகளாகஉருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

பித்த ஜ்வரமானால் வெல்லத்திலும், வாத ஜ்வரமானால் சர்க்கரையிலும், கப ஜ்வரமானால் தேனிலும் ஒவ்வொரு மாத்திரை கொடுக்கவும். அவைகள் தீரும்.

## 48. சகல ஜ்வரங்களுக்கும் "நேர்வாள மாத்திரை"

நேர்வாளம் சுத்திசெய் துள்ளிலையு மேலொடும்
    நீக்கிக்க டுகுரோகிணி

நிறைசமதை சேர்த்தெலு மிச்சம்ப முச்சாற்றில்
நேர்ந்தரைத் துளுந்துநிகராய்
சீர்வாய்ந்த குளிகைசெய் துலர்த்திப்பித் தவாதச்
சேத்துமச் சுரத்திற்குமேல்
செப்புகல் சர்க்கரையி லிஞ்சியில் தேனோடும்
சேர்த்துத்திப் பிலியிலீவாய்
ஏர்வாய்ந்த குன்றிமணி நிகர்விரே சனத்திற்கு
மீந்திடதி லதிகமானால்
எதில்சிறு கீரைவே ரரைத்துமோ ரில்கொடுத்
தீரமாம் துணிகொப்புள்சேர்
பார்வாய்ந்த சுரம்விடும் முருங்கையிலைச் சாறுடன்
பத்தியம் பாலன்னமுமே
பரமரருள் கிருபையால் சரபேந்திர பூபதி
பாங்காயு ரைத்தமுறையே. 48

(இ-ள்.) நேர்வாளத்தின் மேலோட்டையும் உள்ளே இருக்கும் இலையையும் நீக்கிச் சுத்திசெய்து, அதற்குச் சமனெடை கடுகுரோகிணி சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து, உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

பித்த ஜ்வரத்திற்குக் கல்கண்டுத்தூளோடும், வாத ஜ்வரமெனில் இஞ்சிச்சாற்றிலும், கப ஜ்வரத்திற்குத் தேனிலும், திப்பிலிச் சூரணத்திலும் ஒரு மாத்திரை கொடுக்கவும்

பேதியாக வேண்டுமெனில் குன்றிமணிப் பிரமாணம் இம்மாத்திரையை விழுங்கவும். நன்றாகப் பேதியாகும்.

பேதி அதிகமானால் சிறு கீரை வேரை, மோர்விட்டு அரைத்துக் கொடுக்கவும்.

தொப்புளின் மேல் ஈரத்துணியையும் போடவும். ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம்:—** முருங்கையிலை ரஸத்துடன் பால்சாதம் சாப்பிடவும்.

## 49. உள்காய்ச்சலுக்கு "பஞ்சாமிர்தம்"

ஏலம்நன் னாரிவேர் மிளகுநற் சீரக
மெழில்நிலப் பனைக்கிழங்கு
மிளகுதிப் பிலியிந்த வகைக்குமோ ரோர்பலம்
இடித்திடும் சூரணமுதல்
சீலமுள சர்க்கரையி லேழுபலம் நாரிநெய்
சிறந்தபே யன்பழத்தைச்
சீராயு ரித்ததில் பதினைந்து போட்டுமேல்
சேர்த்துநய மாய்ப்பிசைந்து
கோலமுயர் சூரியப்பு டத்திலதை வைத்திடு
கொடுகொட்டைப் பாக்குநிகராய்க்
கொண்டபின் னுள்காய்ச்ச லெல்லாம் பறந்திடும்
குஞ்சரமுக க்கடவுளை
வேலரைப் பெற்றுமகிழ் சிவகாமி நேசர்பெரு
விடையீசர் கிருபையதனால்
வெற்றிபெரு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
விபரமொடு சொன்னமுறையே. 49

(இ-ள்.) ஏலக்காய்
நன்னாரிவேர்
சீரகம்
நிலப்பனைக்கிழங்கு
திப்பிலி
முதலான சரக்குகள் வகைக்கு ஒரு பலம்

| | |
|---|---|
| சர்க்கரை | 7 பலம் |
| மிளகு | 2 பலம் |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து, அதனுடன் 15 பேயன் வாழைப்பழத்தை நெய் யுடன் கூட்டிப்பிசைந்து, எல்லாவற்றையுமொன்று கலந்து சூரியபுடத்தில் வைக்கவும். இதில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்துச் சாப்பிட்டுவர, உள்காய்ச்சல் அனைத்துந்தீரும்.

## 50, சகல ஜ்வரங்களுக்கும் ''சாதிலிங்க குளிகை''

சாதிலிங் கம்வெள்ளைப் பாழாணம் சுக்கிரதம்
சரிவகைக் கொருகாசெடை
சார்ந்ததிப் பிலிமிளகு கெந்தகம் சீரகம்
சமவகைக் கரைக்காசெடை
ஓதிடும் பச்சரிசி நாலுகா செடையுட
னுண்டான பலவகைநிறைக்
குள்ளநிறை நேர்வாள முஞ்சுத்தி செய்துசேர்த்
துயர்ந்திடெலு மிச்சம்பழத்
தீதிலாச் சாறுவிட் டரைத்தெடுத் துக்கொண்டு
திறமையுடனே குளிகைசெய்
தேயொன்றை யீந்திடில் சுரமெல்லாந் தீர்ந்திடும்
திகழ்பெற்ற தஞ்சைநகர்வாழ்
பேதுத்த பாதர்பெரு விடையீசர் கிருபையால்
பூசுரர்கள் சங்கமகிழப்
பொன்மாரி பொழிகின்ற செங்கைமுகில் சரபேந்திர
பூபதியு ரைத்தமுறையே. 50

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சுத்திசெய்த லிங்கம் | —1 | வராகனெடை |
| ,, | வெள்ளைப்பாஷாணம் | — | ,, |
| ,, | பாதரஸம் | — | ,, |
| ,, | நெல்லிக்காய் | | |
| | கெந்தகம் | —½ | வராகனெடை |
| | திப்பிலி | — | ,, |
| | மிளகு | — | ,, |
| | சீரகம் | — | ,, |
| | சுக்கு | —1 | வராகனெடை |
| | பச்சரிசி | —4 | ,, |
| | சுத்திசெய்த நேர்வாளம் | —10 | வராகனெடை |

இவைகளைக் கல்லத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். இதிலொன்றையெடுத்து (வெந்நீருடன்) விழுங்கப் பலவித ஜ்வரங்களுந் தீரும்.

## 51. சீத ஜ்வரங்களுக்கு ''சந்தனாதி மாத்திரை''

இலக்குமணச் சந்தனம் கெந்தகம் வெட்டிவேர்
இலவங்கப் பட்டையிரதம்
பேர்கடுக ரோகிணி விலாமிச்சை வேர்கோஷ்டம்
எழில்சண்ப கத்தரும்பு
துலங்குமணி நேர்வாள மதிமதுர மிதுவெலாந்
துதிவகைக் கொருகழஞ்சி
துய்யவெங் காரங்க ழஞ்சியரை யிளநீரில்
தோய்ந்திடவு மேயரைத்தே
அலங்காரப் பாவட்டங் காயிநேர் குளிகைசெய்
ததனையிள நீரிலுடனே
யாகட்டு மேலுலர்த் திக்கொண்டு மீயலாம்
அச்சீதச் சுரமும்விடுமே
நலங்களுயர் யெங்கள்பெரு விடையீசர் கிருபையால்
நால்வேத சங்கர்பலர்சூழ்
நராதிபர் சிகாமணி சரபேந்திர பூபதி
நாகரீக னுரைசெய்முறையே. 51

(இ-ள்) சந்தனத்தூள்
சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
வெட்டிவேர்
லவங்கப்பட்டை
சுத்திசெய்த பாதரஸம்
கடுகரோகிணி
இலாமிச்சைவேர்
கோஷ்டம்
சண்பகமொட்டு
சுத்திசெய்த நேர்வாளம்
அதிமதுரம்

முதலான சரக்குகள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை
பொரித்த வெங்காரம் 20 குன்றி எடை

அவைகளுள், ரஸத்தையும் கெந்தகத்தையும் முதலில் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்துகொண்டு

பின்பு, மற்றச் சரக்குகளை ஒன்றன்பின்னொன்றாகப் போட்டு இளநீர்விட்டு நன்றாக அரைக்கவும். நன்றாக மசிந்தபின் இதைப் பாவட்டம் விதைப் பிரமாணமுள்ள குளிகைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

சீத ஜ்வரத்திற்கு ஒரு குளிகையை யெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

## 52. நீடித்த ஜ்வரம், திரிதோஷ ஜ்வரம் முதலானவை களுக்கு 'இரதாதிச் சூரணம்'

நன்னய மிருந்திலகு மிரதமொடு கெந்தகம்
நாபியொரு வகையினிறைகேள்
நயந்தொரு வராகனெடை யிந்துப்பி ரண்டதாய்
நாட்டிடு வராகனெடையே
பின்னரை வராகனெடை யாமிளகு நேர்வாளம்
பிசகாம லோர்பத்தது
பேசிய வராகனெடை சேர்சுத்தி செய்ததைப்
பேரான சூரணமதாய்ச்
சொன்னபடி செய்துசிமி ழிலடைத் துக்கொண்டு
சூழுளுந் துக்குநிகராய்ச்
சொற்சர்க்க ரையில்கொடு பழங்காய்ச்சல் திரிதோஷச்
சுரமுழுதும் விட்டோடுமே
பொன்னணி பதத்தர்பெரு விடையீசர் பூசையில்
புகழ்பெற்ற புருஷோத்தமன்
போசல குலபதி தஞ்சைவாழ் சரபேந்திர
பூபதிவு ரைத்தமுறையே. 52

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்

,, பாதரஸம்

,, நாபி

| | | |
|---|---|---|
| இவைகள் வகைக்கு | | ஒரு வராகனெடை |
| பொரித்த இந்துப்பு | — 2 | ,, |
| மிளகு | — ½ | ,, |
| சுத்திசெய்த நேர்வாளம் | — 10 | வராகனெடை |

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, மற்ற சரக்குகளையும் ஒவ்வொன்றாகப் போட்டுச் சூரணித்துக் கொள்ளவும்.

வேண்டும்போது இச்சூரணத்தில் உளுந்துப் பிரமாண மெடுத்துச் சர்க்கரையுடன் கலந்து உட்கொள்ளவும்.

நீடித்த ஜ்வரம், திரிதோஷ ஜ்வரம் முதலியவை நீரும்.

## 53. குளிர்ஜ்வரம், வரள் ஜ்வரம் முதலியவை களுக்குத் 'துருசு மாத்திரை'

சந்தநிறை துருசியொரு பலமுமூ மத்தையிலைச்
 சாற்றினில் லொருமூன்றுநாள்
சட்டமுட னேயதை யரைத்தெடுத் துக்கொண்டு
 சரிபச்சைப் பயறுநிகராய்
யிந்தவித மேகுளிகை செய்துலர்த் திப்பின்னால்
 எழில்கருப் புட்டிதனிலே
ஏர்குளிகை யொன்றொன்று தப்பாமல் முன்றுநா
 ளீந்திடில் பத்தியமுமே
அந்தகைப் புப்புளிப் புத்தள்ளி வைத்திடி
 லணுகாது குளிர்காய்ச்சலும்
அல்லாம லேவரள் காய்ச்சலுந் தீருமே
 யபிராமி யபயபாணி
சுந்தரிக் கன்பர்பெரு விடையீசர் கிருபையால்
 சுபமிலகு தஞ்சைநகர்வாழ்
சொல்லரிச் சந்திரன் சரபேந்திர பூபதி
 சொன்னதிது நல்லமுறையே. 53

(இ-ள்) சுத்திசெய்த துருசு ஒரு பலமெடுத்துக் கல்வத்தில் வைத்து ஊமத்தையிலைச் சாறுவிட்டு நன்றாக 3 நாட்களுக்கு அரைத்துப் பச்சைப்பயறளவுள்ள குளிகைகளாகச் செய்து நிழலில் உலர்த்தவும்.

இதில் ஒரு குளிகை எடுத்துப் பனைவெல்லத்துடன் விழுங்கவும். இவ்வாறு 3 நாளைக்குத் தினம் ஒரு குளிகை வீதம் உட்கொள்ள, குளிர் ஜ்வரம் வரள் ஜ்வரம் முதலான வைகள் தீரும்.

பத்தியம்:— கசப்புச்சுவையுள்ள பண்டங்களையும், புளிப்புச் சுவையுள்ள பண்டங்களையும் நீக்கிவிடவும்.

## 54. ஜ்வரத்திற்குக் 'குருவிச்சவேர்க் கஷாயம்'

குருவிச்ச வேருபற் பாடகஞ் சுக்கேலம்
கொத்தமல்லி நற்சீரகம்
குருந்தோட்டி வேருமில வங்கம்நன் னாரிவேர்
குளிர்செய் நெல்லிப்பருப்பு
மருவுற்ற செண்பகப் பூமுத்தக் காசோடு
மருவுசீந் திற்கொடியிடி
மட்டுடன் நானாழி நீர்விட்டு நாழியாய்
மலையாம லுங்காய்ச்சியே
இருபொழுது மேயுழக் குழக்காக வுங்கொடுத்
திடுபத்தியங் களதுகேள்
இயல்பான கஞ்சிகாய்ச் சிக்கொடுத் தால்சுரம்
மிருதண்ட னிட்டோடுமே
தருவுற்ற தாளர்பெரு விடையீசர் கிருபையால்
தஞ்சைநக ராதிபதியாய்த்
தமிழருமை நிறைசதுர சரபேந்திர பூபதி
தனதுட னுரைத்தமுறையே. 54

(இ-ள்) குருவிச்சவேர்
பற்பாடகம்

சுக்கு
ஏலக்காய்
கொத்தமல்லி
சீரகம்
சித்தாமுட்டிவேர்
கிராம்பு
நன்னாரிவேர்
நெல்லிப்பருப்பு
செண்பகமொட்டு
கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி

இவைகளை வகைக்கு ½ பலமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, 4 படி தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி 1 படியாகும் வரை வற்றக்காய்ச்சி வடிக்கட்டவும்.

தினம் இருவேளை காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு உழக்கு வீதம் கொடுக்கவும். ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம்:—** அரிசி நொய்க்கஞ்சி மாத்திரமே சாப்பிடவும்.

## 55. தீராத ஜ்வரத்திற்குச் சாதிலிங்க குளிகை

சாதிலிங் கங்கௌரி பாஷாணம் நல்துரிசி
சாரந்த வெண்பாஷாணம்
சத்துள மனோசிலை நேர்வாளத் துள்விழம்
சாடிப்பொன் னரிதாரமும்
ஓதிய வகைக்குமொரு பணவெடை நிறுத்ததை
உற்பனமாய்ச் சேர்த்துமே
லுயர்பாக விலைவெதுப் பிப்பிழிந் திடுசாத்தி
லுள்ளபடி யேயரைத்துக்

சோதிலா நல்லதேத் தாம்வித்தி னிகரான
குளிகைசெய் தேநிழனிலக்
குணத்துட னுலர்த்தியே முலைப்பாலி லீந்திடில்
கொடுஞ்சுர மெலாந்தீருமே
பாதிமதி வேணிபெரு விடையீசர் கிருபையால்
பலகோடி புண்யநதியும்
பணிகெங்கை யாடிவரு சரபேந்திர பூபதி
பார்த்திப னுரைத்தமுறையே. 55

(இ-ள்.) சுத்திசெய்த சாதிலிங்கம்
,, கௌரீபாஷாணம்
,, துருசு
,, வெள்ளைப்பாஷாணம்
,, மனோசிலை
,, நேர்வாளம்
,, தாளகம்

இவைகளை வகைக்கு ஒரு பணவெடை ($3\frac{1}{2}$ குன்றி) எடுத்துக் கல்வத்திலிட்டுப் பாகலிலையை ஒரு சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றி வெதுப்பிச் சாறுபிழிந்து, அதனா லரைத்துக் கொள்ளவும். நன்கு மையானபின் தேத்தாங் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு மாத்திரையை எடுத்து முலைப்பாலுடனே இழைத்துக் கொடுக்கப் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

## 56. பற்பல முறை ஜ்வரங்களுக்கும் துத்தாதி குளிகை

சுந்தரத் துத்தமரி தாரம்வெண் காரமும்
சுப்பிரமுய ரப்பிரகமெனச்
சொல்கின்ற கெந்தகம் துருசியிர தங்கௌரி
சூழிந்த வகைசமதைசேர்த்

தந்தமுள பாகலிலைச் சாத்திணி லரைந்துமே
லானசிறு பயறினிகராய்
அற்புதக் குளிகையைச் சீரகஞ் சர்க்கரையி
லனுபான மறவாமலே
இந்தவித மேகொடு வரிசையா யொன்றைவிட்
டிரண்டைவிட் டேமூன்றைவிட்
டேநாலை விட்டுவரு சீதச்சு ரந்திரு
மெங்கள்சிவ காமிகௌரீ
யந்தரிக் கன்பர்பெரு விடையீசர் கிருபையால்
அகமகிழ்ந் தென்னாளுமே
யணிதஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
யன்னதாதா சொல்முறையே. 56

(இ-ள்.) சுத்திசெய்த துத்தம்
,, தாளகம்
,, அப்ரகம் (கிருஷ்ணா)
,, கெந்தகம்
,, துருசு
,, பாதரஸம்
,, கௌரீபாஷாணம்
பொரித்த வெங்காரம்

இவைகளைச் சமனெடை எடுத்து, முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து. பாக்கியுள்ள சரக்குகளை ஒவ்வொன்றாகச் சேர்த்துப் பாகலிலைச்சாறுவிட்டு நன்றாக அரைத்துப் பயறு அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும். பின்பு இதை நிழலில் உலர்த்திச் சர்க்கரைகலந்த சீரகச்சூரணத்துடன் ஒவ்வொரு குளிகை வீதம் தினந்தோறும் கொடுக்கவும்

ஒன்றைவிட்டு ஒருநாள்வரும் ஜ்வரம். 2 நாளைக்கு ஒரு முறை ஜ்வரம் வருதல், மூன்று நாளைக்கொருமுறை உண்டாகும் ஜ்வரமும், நான்கு நாளைக்கு ஒரு தடவை ஏற்படும் ஜ்வரம் முதலான பலவித முறை ஜ்வரங்களும் தீரும்.

## 57. ஜ்வரங்களுக்குக் 'கெந்தகாதி பற்ப மாத்திரை'

கெந்தகங் காரீய பற்பம்வெள் ளிபற்பம்
கிளர்பச்சை நாவியிரதம்
கெட்டாத் தாமிரத்தின் பற்பம்நேர் வாளம்
கேள்பொன் னூமத்தைவிரையு
இந்தவகை யொன்றினுக் கீரிரு வராகனெடை
இயல்புட னெலாஞ்சேர்ந்து
மேவிஞ்சி நற்சாத்தி லில்நொச்சியின் சாத்தினி
லெழில்சேர் முல்லைச்சாத்தினில்
அந்தமுடன் மூன்று நாளோரொரு சாறுவிட்
டரைத்திடான் பதுசாமமேல்
குன்றிநிகர் குளிகை யொன்றிஞ்சிச் சாற்றிலீந்
தாகியொரு சாமமதுபார்
வந்தசுர முந்திரு முந்தமார்க் கண்டருக்கு
வந்துதவு சிவகிருபையால்
வளம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
வண்மையாய்ச் சொன்னமுறையே. 57

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, நாபி
,, பாதரஸம்
,, நேர்வாளம்
,, பொன்னூமத்தைவிதை
காரீயபற்பம்
வெள்ளிபற்பம்
தாமிரபற்பம்

இவைகளை வகைக்கு 4 வராகனெடை வீதமெடுத்து, முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலிசெய்து பின்பு பற்பவகைகளைச் சேர்த்து அரைக்கவும். கடைச்சரக்குகளை ஒவ்வொன்றாகச்சேர்த்து இஞ்சிச் சாறு நொச்சிச்சாறு, முல்லைச்சாறு முதலியவைகளைத் தனித் தனியேவிட்டு மும்மூன்று நாட்களரைக்கவும். கடைசியாகச் சொல்லப்பட்ட சாறுவிட்டு அரைத்தானபின் 9 ஜாமங்கள் (1¼ நாட்கள்) கல்வத்துடனே வைத்திருந்து பின்னர் குன்றி

மணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும். இதில் ஒரு குளிகை எடுத்து இஞ்சிச்சாற்றில் உரைத்துக் கொடுக்கவும். 3 மணி நேரத்திற்குள் எவ்விதமான ஜ்வரமும் நிற்கும்.

---

## 58. சகல ஜ்வரங்களுக்கும் "வெள்ளிலோத்திரக் கஷாயம்"

குருவெள்ளி லோத்திரம்நெய் தல்கிழங் கீச்சங்கு
 ரும்பைதா மரையின்வளையம்
குளிர்சந் தனமிலுப் பைப்பூமுத் தக்காசு
 செருகுலவு குழைவிழலின்வேர்
இருவேலி வேர்முந்தி ரிப்பழம திமதுர
 மிந்தவகை பிசகாமலே
யிருநாழி நீர்வார்த்த ரைத்துப்ப தப்படிக்
 கெரித்துழக் காய்க்காய்ச்சியே
பருகக்கொ டுத்திடுமுன் நில்லாது சுரமெலாம்
 பஞ்சாய்ப ரந்தோடுமே
பார்வதி யுமாகௌரீ சிங்காரி பசுபதி
 பலநாமி யபயபாணி
மருமலர ணிந்திடும் பெரியநா யகியிடம்
 மருவுசங் கரர்கிருபையால்
மாட்சிபெறு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
 மாதயவு டன்சொல் முறையே. 58

(இ-ள்.) வெள்ளிலோத்திரம்
நெய்தல்கிழங்கு
ஈச்சங்குரும்பை
தாமரையிலையினுட்சுருள்
சந்தனத்தூள்
இலுப்பைப்பூ
கோரைக்கிழங்கு
விழல்வேர்
வெட்டிவேர்

திராக்ஷைப்பழம்
அதிமதுரம்

இவைகளை வகைக்கு (1 பலம் வீதம்) எடுத்துக் கல்லுரலி லிட்டிடித்து 2 படி தண்ணீர் (சின்னபடி ஒன்று) விட்டு அரைத்துக் கலக்கி அடுப்பின்மேல் வைத்து எரித்து, உழக்காக அதாவது எட்டிலொன்றாக வற்ற வைக்கவும். இதைப் பருகிவரப் பற்பல ஜ்வரங்களுந் தீரும்.

※—※—※

## 59. ஜ்வரங்கள், சன்னிக்குச் 'சாதிலிங்காதிக் கலிக்கம்'

சாதிலிங் கம்பச்சை நாவிதிப் பிலிமிளகு
சாரமுள வெங்காரமுஞ்
சமதையாய்ச் சேர்த்திடெ லுமிச்சம் பழத்தினுட
சாற்றினில ரைத்துநயமாய்க்
கோதிலாக் குன்றிமணி நிகர்மாத்தி ரைகள்செய்
துக்கொண்டு நிழலுலர்த்திக்
குப்பைமே னிச்சாற்றில் சாரணைச் சாற்றில்நற்
கோதையர் முலைப்பாலினில்
ஓதிவெத் திலைச்சாற்றி லோர்வகையில் குளிகையு
ரைத்துப்போட் டிடுகலிக்கம்
வுண்டான சகலஜ்வர முஞ்சன்னி வாதமும்
ஓடுங்கிப் பயந்தோடுமே
வேதியர் பணிந்தபெரு விடையீசர் கிருபையால்
வீரசிங் காசனமதில்
விஞ்ஜைநிறை தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
விசையனுரை செய்தமுறையே. 59

(இ-ள்.) சுத்திசெய்த சாதிலிங்கம்
,, நாபி
திப்பிலி
மிளகு
பொரித்த வெங்காரம்

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும். இவைகளை நிழலில் காயவைத்துப் பத்திரப்படுத்தி, வேண்டும்போது இதிலொன்றையெடுத்துக்

குப்பைமேனிச்சாறு

சாறணைக்கிழங்குச்சாறு

முலைப்பால்

வெத்திலைச்சாறு

முதலியவைகளிலேதேனுமொன்றில் உரைத்துக் கண்களுக்குக் கலிக்கமிடவும், சகலவிதமான ஜ்வரங்களும், ஜன்னிகளுந் தீரும்.

குறிப்பு:— இது மிகவும் காரமுள்ள மருந்தாகையால் இம்மருந்தைச் செய்தவுடன் கண்களில் போடக்கூடாது. ஒருவருடம் அல்லது 2 வருடங்கள் சென்றபின்னர் தான் உபயோகித்தல் வேண்டும். ஆகவே இம்மருந்தை நிதானித்துப் பிரயோகிக்கவும்.

---

## 60. குளிர்க்காய்ச்சலுக்கு 'துத்தாதி குளிகை'

துத்தம் நற்சீரகஞ் சாதிலிங் கங்களொடு
துருசுபா ஷாணமிவை சேர்த்
துகையாய் வகைக்கொரு வராகனெடை சேர்த்தெலாம்
துதிமுலைப் பால்விட்டரை
மெத்தவும் நயத்துடன் குன்றிமணிநிகரதாய்
மேலானமாத் திரைசெய்
மேனிழ லுலர்த்தியே நன்முலைப் பாலினின்
மிதத்துட னோர்மாத்திரை
வைத்ததை யீந்திடில் வாந்தியாம் வயிறுபோம்
வருங்குளிர் வெதுப்புவிடுமே

வன்பகற் குக்கஞ்சி யிராத்திரிக் குச்சோறு
 வளர்முருங் கைச்சாறிடு
சத்தகே மகத்துநிர் முத்தமால் தம்நிறை
 சங்கரர்செய் யுங்கிருபையால்
சந்தகம் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
 சட்டமொடு சொன்னமுறையே. 60

(இ-ள்) சுத்திசெய்த துத்தம்
 ,, லிங்கம்
 ,, துரிசு
 ,, வெள்ளைப்பாஷாணம்
 சீரகம்

முதலானவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு, முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் வைத்துக் கொள்ளவும்.

இதிலொரு மாத்திரையையெடுத்து முலைப்பாலுடன் கொடுக்கவும். ஒரு தடவை வாந்தியாவதுடன், வயிறும் கழியும். குளிர் காய்ச்சல் தீரும். பகல் நேரத்தில் கஞ்சி மாத்திரம் குடிக்கவும். இரவில் சாதம் சாப்பிடவும். முருங்கைப் பிஞ்சு ரஸம் சாப்பிடலாம்.

✳✳✳✳

## 61. சகல ஜ்வரங்களுக்கும் 'ஸுரஸாதி கஷாயம்'

பொருந்துந் திருத்துளசி வேப்பலகு காவட்டம்
 புல்லுசுக் குக்கடுக்காய்
பூசினிக் கொடியூசி மல்லிவே ரல்லாது
 புகரில்கூத் தங்குதம்பை
திருந்துசீந் திற்கொடி யிந்தவகை யொன்பதும்
 திறமையுடன் சேர்த்தபிறகே
திட்டமா யொருகுறுணி நீர்விட்ட ரைத்துமேல்
 திடமாக நாலிலொன் றாய்

வருந்தாம லேகாய்ச்சித் தினந்தின மாழாக்கு
    வார்த்துவெச் செனப்படுத்தி
வயணமுட னேகொடுத் தால்சுலங் கிச்சுரம்
    வந்தவழி பார்த்தோடுமே
யருந்ததி மகிழ்ந்துபணி பெரியநா யகிகௌரிக்
    கன்பர்சங் கரர்கிருபையா
லணிதஞ்சை நகரிழ்வாழ் சரபேந்திர பூபதி
    யச்சுதனு ரைத்தமுறையே. 61

(இ-ள்) துளசி
வேப்பம் ஈர்க்கு
காவட்டம்புல்
சுக்கு
கடுக்காய்த்தோல்
பூஷணிக்கொடி
ஊசிமல்லிகைவேர்
கூத்தங்குதம்பை
சீந்தில்கொடி

ஆக இந்த ஒன்பது வகைச் சரக்குகளையும் கல்லுரலி லிட்டு நன்றாக இடித்து, ஒரு மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகும் வரை வற்றவைக்கவும். இதில் தினந்தோறும் ஒரு ஆழாக்கு வீதம் எடுத்துச் சாப்பிட்டு வரவும். பற்பல ஜ்வரங்களும் தீரும்.

## 62. ஜ்வரங்களுக்கு 'உசீராதி கஷாயம்'

இருவேலி வேர்மணத் திடும்விலா மிச்சம்வே
    ரிலகுசித் தாமுட்டிவே
ரேலமுத் தக்காசு தாமரையின் வளைமோ
    ரிலைத்தாம ரைகள்பூஷணிப்
பருங்கொடி சீதேவி செங்கழு நீர்கோட்டம்
    பகர்ந்திடும் சீந்திற்கொடி

பண்பான சந்தனச் சிராயிந்த வகையெலாம்
பார்த்துநன் றாய்ச்சேர்த்துமே
லொருமையுட னிருநாழி நீர்வாற்ற ரைத்ததை
யுழக்கினள வாய்க்காய்ச்சியே
யுற்றிடுக ஷாயம்கொ டுத்திடில் சுரமெலாம்
ஓட்டாமல் வீட்டோடுமே
மருவுற்ற பாதர்பெரு விடையீசர் கிருபையால்
மகிழ்சிபெற் றென்னாளுமே
மதிமன்னர் துதிதஞ்சைச் சரபேந்திர பூபதி
மான்பானு ரைசெய்முறையே. 62

(இ-ள்.) வெட்டிவேர்
இலாமிச்சைவேர்
சித்தாமுட்டிவேர்
கோரைக்கிழங்கு
ஏலக்காய்
தாமரையிலைச்சுருள்
ஓரிலைத்தாமரை
பூஷணிக்கொடி
சீதேவி செங்கழுநீர் (சகதேவி)
கோஷ்டம்
சீந்திக்கொடி
சந்தனச்சிராய்

இவைகளை வகைக்கு (1 பலம்) வீதம் எடுத்துக் கல் உரலிலிட்டு நன்றாக இடித்து 2 படி சுத்த ஜலம் (சின்னபடி ஒன்று) விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்று ஆக்கி இறக்கவும். அக்கஷாயத்தைப் பருகிவரப் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

****

## 63. திரிதோஷ ஜ்வரங்களுக்கு "வெட்பாலையாதி கஷாயம்"

கோலமிகு வெட்பாலை யரிசிபேய்ப் புடல்சுக்கு
கோஷ்டம்நில வேம்புசீந்திற்

கொடிகளா டாதோடை கண்டங்கத் திரிவேரு
　　கோரைக்கி ழங்கிறுடனே
சீலமுள பற்பாட கஞ்சிறு காஞ்சோறி
　　செப்புவகை சமதைநிறையாய்
சேர்த்திடித் துக்கொண்டு காய்ச்சிடு கழாயத்தைச்
　　சிதறாம லேகொடுத்து
வரலகிரி தருவாத பித்தசேஷ் மச்சுரம்
　　வாதனைகள் நீங்கிவிடுமே
வாமியபி ராமிசிவ காமிகர நேமிநல்
　　வாமிபல னாமிகௌரி
பாலமதி வேணிபெரு விடையீசர் கிருபையால்
　　பராசரர் கப்பமிடவே
பகீரதன் கீர்த்திபெரு சரபேந்திர பூபதி
　　பார்த்திபனு ரைத்தமுறையே. 63

(இ ள்.) வெட்பாலையரிசி
　　பேய்ப்புடல்
　　சுக்கு
　　கோஷ்டம்
　　நிலவேம்பு
　　சீந்தில்கொடி
　　ஆடாதோடை
　　கண்டங்கத்திரி
　　கோரைக்கிழங்கு
　　பற்பாடகம்
　　சிறுகாஞ்சோறிவேர்

இவைகளை வகைக்கு (ஒரு பலம்) வீதமெடுத்து, நன்றாக உலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்ளவும். இதில் 1 பலமளவெடுத்து 1 சேர் ஜலம் விட்டு ஊறவைத்து, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டில் ஒன்றாக்கி வடிகட்டிச் சாப்பிடவும்.

வாதம், பித்தம், கபம் முதலானவைகளின் பிரகோபத்தினாலுண்டான ஜ்வரங்கள் அனைத்தும் தீரும்.

## 64. சகல ஜ்வரங்களுக்கும் 'ஹரீதக்யாதி கஷாயம்'

கந்தந்த ருங்கடுக் காய்சுக்கி னோடுதான்
 றிக்காம்கொத் தமலிவசம்பு
கனத்தநில வேம்புபற் பாடகஞ் சிறுதேக்கு
 கதிர்முத்தக் காசுசீந்திற்
விந்தைபெரு தேவதா ரங்களிவ் வகையெலாம்
 விபரமுட னேசமதையாய்
வெண்டும்ப டிக்கிடித் தேவைத்துக் கொண்டுமூ
 விரல்கொண்ட தூளெடுத்து
முந்தநந் நீர்விட்டுக் காய்ச்சுங் கழாயத்தை
 மொழிந்தபடி யேகொடுத்தால்
முரண்டாயெ ழுந்திடுஞ் சுரமெலாந் தீருமே
 முழுதுவச் சிரதேகமாம்
செந்தமிழில் நேசர்பெரு விடையீசர் கிருபையால்
 சிங்கார மிகுதஞ்சைவாழ்
செல்வமும் கல்விநிறை சரபேந்திர பூபதி
 சீருடனு ரைத்தமுறையே. 94

(இ-ள்) கடுக்காய்த்தோல்
சுக்கு
தான்றிக்காய்த்தோல்
கொத்தமல்லி
வசம்பு
நிலவேம்பு
பற்பாடகம்
கண்டுபாரங்கி
கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி
தேவதாரம்

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துவைத்துக் கொள்ளவும்.

இதில் மூவிரல் கொண்ட அளவு தூளையெடுத்து 1 சேர் ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி $\frac{1}{4}$ சேராகும் வரை வற்றக்

காய்ச்சவும். இதை வடிக்கட்டித் தினம் இருவேளைப் பருகிவரப் பற்பல ஜ்வரங்களும் தீரும். தேகமும் பலப்படும்.

## 65. ஜ்வரங்களுக்கு 'இரஸகந்தி குளிகை'

அந்தரஸம் நேர்வாளம் வஸ்மைதரு கெந்தக
மல்லாமல் வெங்காரமு
மதனையு மேசுத்தி செய்தெடுத் துக்கொண்ட
தைவெற்றிலைச் சாற்றினில்
சந்தனத் திற்குநிகர் நன்றாய ரைத்துமேல்
சரிகுளிகை பயறளவுசெய்
சலியாம லோர்குளிகை யனுபான மோடுகொடு
சார்ந்திடுஞ் சுரந்தீருமே
தந்திமுக ரைக்குகரை மைந்தராய்ப் பெற்றுமகிழ்
தாயெனுமு மாபார்வதி
தயாநிதி மனோன்மணி பெரியநா யகிகௌரி
தடங்கரி குமாரிசத்தி
சுந்தரிக் கன்பர்பெரு விடையிசர் கிருபையால்
சுபமுயரு தஞ்சைநகர்வாழ்
சோழநிகர் கீர்த்திபெரு சரபேந்திர பூபதி
சொன்னளின வன்னமுறையே. 95

(இ-ள்.) சுத்திசெய்த பாதரஸம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
,, நேர்வாளம்
பொரித்த வெங்காரம்

இவைகளில் இரஸத்தையும், கெந்தகத்தையும் முதலில் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து, பின்னர் மற்றச் சரக்குகளைப்போட்டு, வெற்றிலைச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். சந்தன விழுது போன்று அரைத்துக்கொள்ளல் நன்று. பின்பு இவைகளைப் பயறு அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரையெடுத்து வெந்நீரிலோ அல்லது தக்கபடி. வேறு அனுபானத்திலோ கொடுத்தால் ஜ்வரம் தீரும். (இரண்டு அல்லது மூன்று தடவை மலப்பிரவ்ருத்தியும் ஆகும்)

****

## 66. வாத ஜ்வரத்திற்குக் 'கொத்தமல்லிக் கஷாயம்'

கொத்தமல்லி சுக்குமுத் தக்காசு பேய்ப்புடல்
குளிர்ந்திடுஞ் சீந்திற்கொடி
குலவுசிறு காஞ்சோறியின் வேரிந்த வகையெலாம்
கூட்டிவள மாயிடித்து
வைத்ததில் கிரமமாய் நீரைவிட் டுக்காய்ச்சும்
வண்ணக்க ஷாயமதனை
வடித்தெடுத் துக்கொண்டு குடித்திடில் பிடித்திடும்
வாதசுர வேதனைகள்போம்
நித்தபரி பூரணி பராசக்தி மாதங்கி
நீலமணி வேணிவாணி
நீதியரி வேதனுரை யாகமபு ராணர்துதி
நிமலிபார் வதிகல்யாணி
சித்தமகிழ் நேசர்பெரு விடையீசர் கிருபையால்
சீர்பெருகு தஞ்சைநகர்வாழ்
சிங்காச னாதிபதி சரபேந்திர பூபதி
செய்துங்க னுரைசெய்முறையே. 66

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கொத்தமல்லிவிதை | பேய்ப்புடல் |
| | சுக்கு | சீந்தில்கொடி |
| | கோரைக்கிழங்கு | சிறுகாஞ்சோறிவேர் |

இவைகளை வகைக்குச் சமனெடை எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து, ஒரு டப்பியில் பத்திரப்படுத்தவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு தூளை எடுத்து ஒருசேர் ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாகக் காய்ச்சி வடிக்கட்டிச் சாப்பிட

எல்லாவிதமான வாத ஜ்வரங்களும் தீரும்.

## 67. சீத ஜ்வரம், விஷம ஜ்வரத்திற்கும் 'அரிதாரக் குளிகை'

நாகரீக மேவுமரி தாரமுட னேசொல்லும்
நாகங்க ளஞ்சியாறு
நன்மைபெற் றிடுதுரிசி முக்கால்க ழஞ்சிசேர்
நன்றாக மூன்றுவகையும்
பாகலிலை யின்சாறு விட்டரைத் துக்கொண்டு
பகருளுந் திற்குநிகராய்ப்
பண்புடன் குளிகைசெய் சீதச்சு ரத்திற்கும்
பழவிஷ சுரத்திற்குமே
தேகம்ந டுங்கிடும் நளிர்ச்சுரத் திற்குமேற்
திட்டமுட னோர்குளிகை
வைத்தேயிஞ் சிச்சாற்றி லனுபான மோடுகொடு
திகைத்தோடு மச்சுரமெலாம்
ஆகமபு ராணபுகழ் பெரியநா யகிகௌரீக்
கன்பர்பெரு விடையீசர்
அருள்கிருபை பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
அன்பாயு ரைத்தமுறையே. 67

(இ-ள்.) சுத்திசெய்த தாளகம் $7\frac{1}{2}$ வராகனெடை
,, நாகம் ,,
,, துரிசு 30 குன்றியெடை

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பாகலிலைச்சாறு விட்டு நன்றாக அரைத்து உளுந்துப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

சீத ஜ்வரங்களுக்கும், தீராத விஷ ஜ்வரத்திற்கும், அதிகக் குளிருடன் கூடிய ஜ்வரத்திற்கும் ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்கவும். அவைகள் தீரும்.

## 68. ஜ்வரத்திற்கு 'மடல் துத்த பாஷாண மாத்திரை

மடல்துத்த மேயொரு கழஞ்செலிப் பாஷாண
 மட்டுமொரு பணவெடைகளு
மத்தையிலை யின்சாறு விட்டரைத் துக்குன்றி
 மணியைநிகர் குளிகைசெய்து
திடமுள நிழலினி லுலர்த்திவைத் துக்கொண்டு
 திகழுற்றி டும்பாலினிற்
தித்திக்கும் நல்லவெல் லத்திலொரு குளிகையைத்
 தேறுதலை யாய்க்கொடுகமா
வுடனேசெவ் விளநீர்கொ டுத்திடுகொ டாதுகே
 ளுயர்புளிப் பெண்ணெய்கைப்பு
உள்ளபடி பத்தியம் பாலோடுஞ் சோறுமே
 லுண்ணலாஞ் சுரந்திருமே
நடனமிடு பாதர்பெரு விடையீசர் கிருபையால்
 நாதசங் கீதாபுகழ்
நலம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
 யன்பாயு ரைத்தமுறையே. 68

(இ-ள்,) சுத்திசெய்த மடல்துத்தம் $1\frac{1}{4}$ வராகனெடை
 ,, எலிப்பாஷாணம் 1 பணவெடை

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஊமத்தை இலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு மாத்திரை எடுத்துப் பசுவின் பாலிலோ, அல்லது வெல்லத்திலோ கொடுக்கவும். உடனே செவ்விள நீரைப் பருகக் கொடுக்கவும்.

**பத்தியம்:** புளிப்பு, கைப்பு முதலிய சுவைகளுள்ள பதார்த்தங்களை நீக்கவும். நல்லெண்ணெயையும் உபயோகிக்கலாகாது. பாலுஞ் சோறும் வேண்டிய அளவு சாப்பிடவும். ஜ்வரங்கள் தீரும்.

குறிப்பு: பணவெடை $3\frac{1}{3}$ குன்றி

*****

## 69. தொந்த ஜ்வரங்களுக்குச் 'சப்தனாதிக்கஷாயம்

சந்தனத் தின்சிராய் சீந்திற்நில வேம்புகொத்
    தமலிதா மரையின்வளையம்
சரியாய்வ கைக்கிரு காசெடைகள் சேர்த்துமேல்
    சகலமு மிடித்தொருமையாய்
முந்தவுரை செய்தபடி யிரண்டுபடி நீர்விட்டு
    முழுதுமுழக் காய்க்காச்சியே
முரண்டாம வேயதனை நன்றாக்கொ டுத்துவரில்
    மீறியெழு கின்றவாந்தி
தொந்தமாய் நீண்டசுர மல்லாம லேவுழலை
    தொண்டைதனி லருவருப்புத்
துதிவாய ரோசக மெல்லாம்ப றந்திடும்
    துட்டவினை கிட்டாதினி
அந்தணர் நயந்துபணி சிவகிருபை பெற்றுவாழ்
    முற்சுகுண சிந்தாமணி
யகிலமெங் குந்துதிசெய் சரபேந்திர பூபதி
    யன்பாயு ரைத்தமுறையே. 69

(இ-ள்.) சந்தனச்சிராய்
சீந்தில்கொடி
நிலவேம்பு
கொத்தமல்லிவிதை
தாகரையினிலைச்சுருள்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து 2 படி சுத்த ஜலம் (சின்ன படி 1) விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக அதாவது எட்டில் ஒன்றாகக் காய்ச்சவும்.

இதை வடிகட்டித் தினம் 2 வேளை பருகிவர அதிகமான வாந்தி, தொந்த ஜ்வரங்கள், பழைய ஜ்வரங்கள், உழலை முதலான ரோகங்கள் தீரும்,

## 70. கப ஜ்வரங்களுக்குத் 'துரிசு அரிதாரக் குளிகை'

சுந்தரஞ் சேர்மயில் துத்தமரி தாரமும்
சுட்டவெண் சங்குநீறும்
சொல்நிறைகள் சமதையாய்ச் சுத்திசெய் துகொண்டு
துய்யவெற் றிலைச்சாற்றினில்
அந்தமுட னிருநாலு சாமம ரைத்துளுந்
ததனைநிகர் மாத்திரைகள்செய்
தமைமூன்று நாள்நல்ல வெல்லத்தி லீந்திடில்
அநேகச்சுர கபசுரமெலாம்
முந்தவது திருநல் மன்னவர் சிகாமணி
மிருதுவான கானமூர்த்தி
முத்தமிழ்செய் யுதத்மகு ணத்தைநிறைக் கற்றவர் சொல்
மோகன வுலாசவிசையன்
கந்தரையு கந்தருள்செய் சிவகிருபை பெற்றுவாழ்
கமலைமகிழ் முகவிலாசன்
கனகவரை வேவுபுய சரபேந்திர பூபதி
கருத்துடனு ரைத்தமுறையே. 70

(இ-ள்.) சுத்திசெய்த மயில்துத்தம்
,, தாளகம்
சங்குபற்பம்

இவைகளைச் சமனெடை எடுத்து ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு விட்டு 8 ஜாமங்கள் அதாவது இருபகல்கள் முழுவதும் அரைத்து உளுந்தளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக் கொள்ளவும்.

இம்மாத்திரையிலொன்றை எடுத்து வெல்லத்தினுள் வைத்து 3 நாளைக்குக் கொடுக்கவும். அனேகவிதமான ஜ்வரங்களும், கப ஜ்வரகளும் தீரும்.

## 71. ஜ்வரங்களுக்குச் "சிறுகாஞ்சோறிக் கஷாயம்'

ஓதுசிறு காஞ்சோறியின் வேருபற் பாடகம்
    முலவுசிறு வழுதலையின்வேர்
அந்தசெங் கழுநீரு நிலவேம்பு சிறுதேக்கு
    ஒளிர்சுக்கு சீந்திற்கொடி
தாதுத்த கண்டங்கத் திரிவேருங் கோஷ்டமொடு
    தப்பாலத் திப்பிலிமுதல்
தானிந்த வகையெலாம் சேர்த்ததனி லிருநாழி
    தண்ணீரும் விட்டரைத்தே
மீதுழக் காய்க்காய்ச்சி நன்றாய்க்கொ டுத்திடில்
    மிரண்டுசுர விட்டோடுமே
மேதினியி லேயம்பத் தாறுதே சந்துதிசெய்
    மேலான தஞ்சைநகர்வாழ்
போதுத்த பாதர்பெரு விடையீசர் கிருபையால்
    புகழ்பெற்ற புருஷோத்தமன்
போசல குலாதிபதி சங்கநிதி சரபேந்திர
    பூபதியு ரைத்தமுறையே.

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சிறுகாஞ்சோறிவேர் | சிறுதேக்கு |
| | பற்பாடகம் | சுக்கு |
| | சிறுகத்திரிவேர் | சீந்தில்கொடி |
| | செங்கழுநீர்க்கிழங்கு | கண்டங்கத்திரிவேர் |
| | நிலவேம்பு | கோஷ்டம் |
| | யானைத்திப்பிலி | |

71

இவைகளைச் சமனெடுத்து (வகைக்கு 1 பலம்) உலர்த்திக் கல்லுரலிலிட்டு, ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்தில் இட்டுச் சுத்த ஜலம் 2 படி விட்டு அரைத்து ஊறவைக்கவும். பின்பு இதை அடுப்பின் மேலேற்றி உழக்காகும்வரை எரித்து வடிக்கட்டிக்கொண்டு தினம் 2 வேளை கொடுக்கவும். பற் பல ஜ்வரங்களும் தீரும்.

## 72. ஜ்வரங்களுக்குத் ''தாளக கோரோசனைக் குளிகை''

பொன்னினரி தாரமரி தாரம்நேர் வாளமும்
புகரிலாக் கோரோசன்ன
புனிதவெங் காரமோர் வகைக்கொரு கழஞ்சுவேர்
புகன்றவகை தப்பாமலே
நன்னய மிகுந்திடெலு மிச்சம்ப ழச்சாற்றில்
நாகரீக மாயரைத்து
நண்புற்ற குன்றிமணி நிகரான குளிகையை
நன்றாயு லர்த்தியொன்றை
சொன்னபடி பொடிசெய்து முலைப்பாலி னிற்கொடு
சுரமெலாம் விட்டோடுமே
சொற்பசுவி நற்பாலி லன்னங்கொ டுத்திடிற்
சுகமான பத்தியமிதே
கன்னிபால் வைத்தபெரு விடையீசர் கிருபையால்
கமலைநிறை கஞ்சைநகர்வாழ்
கவிஞர் சிந்தாமணி சரபேந்திர பூபதி
கருணையொடு சொன்னமுறையே. 72

(இ-ள்.) சுத்திசெய்த மடல் தாளகம்
,, பிண்டதாளகம்
கோரோசனை நேர்வாளம்
பொரித்த வெங்காரம்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டிக் காயவைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரையை எடுத்துப் பொடித்து, முலைப் பாலில் குழப்பி உட்கொள்ளவும் ஜ்வரங்கள் தீரும். இரண்டு அல்லது மூன்றுமுறை மலங்கழியும்.

**பத்தியம்:** பசுவின் பால்விட்டுச் சாதம் சாப்பிடவும்.

## 73. தாப ஜ்வரங்களுக்கு "உசீராதி கஷாயம்"

விலாமிச்சை வேர்வெட்டி வேருசெந் தொட்டிநில
　　வேம்புபற் பாடகமொடு
வேகமி குந்திடுஞ் சுக்குசீந் திற்கொடி
　　வெளிருகோ ரைக்கிழங்கு
அலாலப் பொன்முகட் டைவேர் கொத்தமல்லி
　　பத்துவகை யத்தனையுமெத்த
நயமாயப் புவிட்டுக் காய்ச்சிவைத் திருப்பதப்
　　படிக்குடியி நீர்கொடுகமா
பொல்லாத தாபசுர மெலாமெதிர் நிலாமலே
　　போகுஞ்ச லாஞ்செய்துமேல்
பூபாலர் சங்கமு மதுரகவி வாணரும்
　　புகழ்ந்திடுங் கீர்த்தி விஜையன்
கலாமணி யணிந்தபெரு விடையீசர் கிருபையால்
　　கற்பகமெனத் தஞ்சைவாழ்
கனநவீன மதுரவுரை சரபேந்திர பூபதி
　　கனதையாய்ச் சொன்னமுறையே. 73

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | விலாமிச்சைவேர் | சுக்கு |
| | வெட்டிவேர் | சீந்தில்கொடி |
| | செந்தொட்டி | கோரைக்கிழங்கு |
| | நிலவேம்பு | பொன்முகட்டைவேர் |
| | பற்பாடகம் | கொத்தமல்லிவிதை |

முதலான பத்துச் சரக்குகளையுஞ் சமமெடுத்துக் கல் உரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துக் காயவைக்கவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து 1 சேர் தண்ணீருடன் போட்டு அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாக எரித்து வடிக்கட்டிச் சாப்பிடவும். தாப ஜ்வரங்கள் தீரும்.

## 74. சீத ஜ்வரங்களுக்கு 'எலிப்பாஷாண மாத்திரை'

சுந்தர மிலங்கெலிப் பாஷாண மரிதாரம்
　　சுகமான சாதிலிங்கம்

சுத்தியது செய்துபொன் னுரமத்தஞ் சாத்தினில்
 சொல்லுமொரு நாளூறவைத்
தந்தநற் சாறுவிட் டரைத்ததைக் குன்றிமணி
 யச்சமதை யாய்க்குளிகைசெய்
தக்குளிகை யொன்றையிஞ் சிச்சாத்தி லீந்திடில்
 அணுகாது சீதச்சுரம்
தொந்தமா யப்போதி லெண்ணெயைக் கையினால்
 தொடாதிருப் பதுபத்தியம்
துதித்திடும் நன்முருங் கைக்காய்க் குழம்பிட்டுத்
 துய்த்திடில் வாய்க்குருசியாம்
சந்தனக் கதம்பமணி சுந்தரியி டங்குலவு
 சங்கரர் தரும் கிருபையால்
சந்தத மகிழ்ந்துவளர் சரபேந்திர பூபதி
 சற்குணனு ரைத்தமுறையே. 74

(இ-ள்.) சுத்திசெய்த எலிப்பாஷாணம்
 ,, தாளகம்
 ,, லிங்கம்

இம் மூன்றையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுப் பொன் னுரமத்தைச் சாறுவிட்டு ஒரு நாள் முழுதும் ஊற வைக்கவும். மறுநாள் அதே சாறு விட்டு நன்றாக அரைக்கவும். பின்பு குன்றி மணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும்.

இதிலொன்றை எடுத்து இஞ்சிச்சாற்றில் கொடுக்க சீத ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம்:—** நல்லெண்ணெயைக் கையினால் கூடத் தொடக்கூடாது. முருங்கைக்காய்க் குழம்பு சாப்பிடவும்.

## 75. 'ஜ்வரங்களுக்குத் திராக்ஷாதி கஷாயம்'

சுந்தர மிகுந்திலகு முந்திரிச் சம்பழம்
 சொல்லிலுப் பைப்பூவுடன்

சோகந் தணிந்திடு விலாமிச்சை வேர்நல்ல
சுகந்தருகோ ரைக்கிழங்கு
விந்தைசிறு காஞ்சோறி வேருசித் தாமுட்டி
வேரினுட னேதிரிபலை
வெற்றிசெய் யும்பெருங் குமிளோரு வகைக்கினி
விராகனெடை ரெண்டுசேர்த்தே
இந்தவ கையெல்லா மிடித்தெடுத் துக்கொண்டி
ரண்டுபடி நீர்வார்த்ததை
எரித்துழக் காய்க்காய்ச்சிக் கொடுத்திடில் சுரமெலாம்
இனிவரே னென்றோடுமே
பைந்தமிழ்த் தஞ்சைநகர் சிவகிருபை பெற்றுவாழ்
பதுமமலர் முகவிலாசன்
பராசரர் கண்டுபணி சரபேந்திர பூபதி
பண்பாயு ரைத்தமுறையே. 75

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | திராக்ஷைப்பழம் | சித்தாமுட்டி |
| | இலுப்பைப்பூ | கடுக்காய்த்தோல் |
| | இலாமிச்சைவேர் | தான்றிக்காய்த்தோல் |
| | கோரைக்கிழங்கு | நெல்லிவற்றல் |
| | சிறுகாஞ்சோறிவேர் | பெருங்குமிழ் |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, 2 படி சுத்த ஜலம் விட்டு (சின்ன படி 1) அடுப்பின் மேலேற்றி உழக்காகும் வரை வற்றக் காய்ச்சவும். இதைத் தினம் 2 வேளை கொடுத்தால் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

## 76. சகல ஜ்வரங்களுக்கும் 'கெந்தகாதி குளிகை'

கெந்தகமு மூன்றுபங் கிரதமும் மொருபங்கு
ளைர்நாவி பங்குரெண்டு
கேளிதைச் சுத்திசெய் தேமிளகு சமதையாக்
கிச்சாதிக் காய்ப்பலமரை

யந்தமிகு மெலுமிச்சப் பழச்சாறு வார்த்தை
யரைத்துமேற் பயறுநிகராய்
னனிழலு லர்த்தியனு பானமிஞ் சிச்சாற்றி
லல்லாமேச் சுக்குச்சாற்றினில்
இந்தவித மாகக்கொ டுத்திடில் ஜ்வரமெலாம்
ஏங்கிப்ப யந்தோடுமே
லிங்கிதமி குந்திடும் பெரியநா யகிகௌரீ
இதயமகிழ் கனசுந்தரர்
செந்தமிழ்க் கன்பர்பெரு விடையீசர் கிருபையால்
செழித்திடும் போசலகுலன்
சீர்பெருகு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
சிறப்புடன் சொல்லுமுறையே. 76

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 3 | பலம் |
| ,, | பாதரசம் | 1 | ,, |
| ,, | நாபி | 2 | ,, |
| ,, | ஜாதிக்காய் | $\frac{1}{2}$ | ,, |
| ,, | மிளகு | 5 | ,, |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்லுரலில் இட்டு அரைத்துக் கஜ்ஜலி செய்து. பின்பு இருசரக்குகளையுஞ் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பச்சைப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இஞ்சிச்சாற்றிலோ அல்லது சுக்குக் கஷாயத்திலோ ஒரு மாத்திரை கொடுக்கப் பலவித ஜ்வரங்களும் தீரும்

❋❋❋❋

## 77. சகல ஜ்வரங்களுக்கும் ''கடுகரோகிணி மாத்திரை''

அந்தமிகு கடுகுரோ கணிசாதி லிங்கம்நல்
லரிதார மொடுதிப்பிலி
அவ்வகைக் கொருபலம் சேர்த்துகஞ் சாச்சாத்தி
லரைத்தெடுத் துப்பயறுபோல்

சுந்தரக் குளிகைசெய் தாபச் சுரத்திற்கு
சொல்முலைப் பாலிலல்லால்
சொற்பசுவி னற்பாலி லீந்துவிடு மேல்வாதச்
சுரத்திற்கு விழுதியிலையில்
முந்தியெழு சேட்டுமச் சுரத்திற்கு மேலுமுசு
முசுக்கைகை யாந்தகரையில்
முனங்குளிர் சுரத்திற்கு யிஞ்சிசுக் கில்கொடு
முறிந்துசுர விட்டோடுமே
கந்தரைப் பெற்றபெரு விடையீசர் கிருபையால்
கனகசிங் காசனமதில்
கனத்தஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
கஞ்சநிதி சொன்னமுறையே. 77

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கடுகரோகிணி | 1 பலம் |
| | சுத்திசெய்த லிங்கம் | ,, |
| | ,, தாளகம் | ,, |
| | திப்பிலி | ,, |

முதலான சரக்குகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுக் கஞ்சாச்சாறுவிட்டு நன்றாக அரைக்கவும். பின்பு இதைப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொண்டு நிழலில் உலர்த்தவும்.

தாப ஜ்வரங்களுக்கு ஒரு குளிகை முலைப்பாலிலோ அல்லது பசுவின் பாலிலோ கொடுக்கவும்.

வாத ஜ்வரமானால் ஒரு குளிகை விழுதியிலைச்சாற்றில் சாப்பிடவும்.

கபத்தினாலேற்பட்ட ஜ்வரமானால் முசுமுசுக்கைச் சாற்றிலோ, அல்லது கையாந்தகரைச் சாற்றிலோ கொடுக்கவும்.

குளிர் ஜ்வரமாகில் இஞ்சிச்சாற்றில் ஒரு மாத்திரையைக் கொடுக்கவும்.

## 78. சகல ஜ்வரங்களுக்கும் "முஸ்தாதி கஷாயம்"

மருவுற்ற கோரைக்கி ழங்குகொட் டைப்பாக்கு
    மருசிவதை வேர்கடுக்காய்
மாகடுக ரோகிணி குளிர்ந்திடு மிந்துப்பு
    மகிமைபெரு சீந்திற்கொடி
குருவிச்ச வேர்களிப் பாக்கினோடு சுக்குமே
    கூட்டியிவ் வகைகள்முழுதும்
குணமான நீரைவிட் டுக்காய்ச்சிக் கொண்டந்தகக்
    குடிநீர் கொடுத்தவுடனே
கருவுற்ற மலமெலாம் நிர்மலம தாகுமே
    காய்ச்சலது விட்டோடுமே
கங்கைமதி வேணிபணி சங்கரர் சதாசிவர்
    கந்தமிகு கமலமலரின்
திருவுத்த பாதர்பெரு விடையீசர் கிருபையால்
    திலீபநிகர் தஞ்சைநகரில்
தினமுமன மகிழ்வளர் சரபேந்திர பூபதி
    திறமையோடு சொன்னமுறையே. 78

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | கோரைக்கிழங்கு | பொரித்த இந்துப்பு |
| | கொட்டைப்பாக்கு | சீந்தில்கொடி |
| | சுத்திசெய்த சிவதைவேர் | குருவிச்சவேர் |
| | கடுக்காய்த்தோல் | களிப்பாக்கு |
| | கடுகரோகிணி | சுக்கு |

இவைகளை வகைக்கு (ஒரு பலமெடுத்து) வெயிலில் உலர்த்திக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக் கொண்டு மூவிரல் கொள்ளுமளவு எடுத்து, ஒரு சேர் ஜலம் விட்டு ஊறவைத்து அடுப்பின்மேலேற்றி எரித்து எட்டிலொன்றாகச் சுண்டவைத்து இறக்கவும்.

இக்கஷாயத்தை வடிக்கட்டிப் பருகிவர ஒரு தடவை மலம் கழிந்து ஜ்வரமும் தீரும்.

## 79. சகல ஜ்வரங்களுக்கும் "துத்தாதி மாத்திரை"

துத்தமதி லேயெட்டுக் கெந்தகமு மேயாறு
துதித்திடரி தாரமைந்து
துடர்நாவி யேழுநேர் வாளமது பனிரெண்டு
துய்யவெங் காரமூன்றே
யத்தனையு மல்லாலூ மத்தைவித்து மேயிரண்டு
சுக்கிரெண் டுநிறைசேர்த்த
திவ்வகை யெலாவ்வேர்ச் சாற்றினி லரைத்தெடுத்
தேகுளிகை பயறளவுசெய்
கைத்தலம் வைத்திடதி லோர்குளிகை யிளநீரில்
கணக்கினுட னேகொடுத்தால்
காய்ச்சலெல் லாமொரு மூச்சிற்ப றந்திடும்
கார்த்திகையு மாபவானி
நித்தபரி பூரணிபெ ரியநாய கிபங்கில்
நேசர்பெரு விடையீசர்செய்
நிறைகிருபை பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
நேசமொடு சொன்னமுறையே. 79

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த | துத்தம் | 8 | பலம் |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | 6 | ,, |
| ,, | தாளகம் | 5 | ,, |
| ,, | நாபி | 7 | ,, |
| ,, | நேர்வாளம் | 12 | ,, |
| ,, | ஊமத்தை வித்து | 2 | ,, |
| பொரித்த வெங்காரம் | | 3 | ,, |
| சுக்கு | | 2 | ,, |

முதலான சரக்குகளைக் கல்வத்திலிட்டு, நன்றாகப் பொடித்து ஊமத்தை வேர்ச்சாறு (தண்ணீர் விட்டுப் பஞ்சு போலிடித்துப் பிழிந்த நீர்) விட்டு ஒருநாள் முழுவதும் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும். இதை நிழலில் உலர்த்திக்கொண்டு பத்திரப்படுத்தி, வேண்டும்போது ஒரு மாத்திரையை இளநீரில் கொடுக்கவும். எப்பேர்ப்பட்ட ஜ்வரங்களும் தீரும்.

## 80. ஜ்வரங்களுக்குக் "கெந்தகத்திரி பாஷாணாதி குளிகை"

சுந்தரம் நிறைந்திலகு கெந்தகந் திரிட்லை
சுக்குநேர் வாளமிளகு
சொல்விரதம் நல்கடுக் காய்ச்சிவதை வேரோடும்
சூழ்ந்திடும் கொடிவேலிவேர்
யிந்தவகை தப்பாம லொன்பதுஞ் சமதையா
யெழிலூமத் தஞ்சாறுவிட்
டேயரைத் துக்கொண்டு குன்றிமணி நிகரதா
யிப்படிக்கிக் குளிகைசெய்
அந்தநற் குளிகையொன் றீந்திடு முலைப்பாலில்
அச்சுரமும் விட்டோடுமே
அந்தரி நிரந்தரி துரந்தரி சௌந்தரி
உமாபெரிய நாயகியிடம்
சந்தகம் மகிழ்ந்தபெரு விடையீசர் கிருபையால்
சகலகலை பெற்றுநிதமும்
சல்லாப முற்றுவாழ் சரபேந்திர பூபதி
சரஸமொடு சொன்னமுறையே. 79

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 1 பங்கு |
| | ,, பாதரஸம் | ,, |
| | கடுக்காய்த்தோல் | 2 |
| | தான்றிக்காய்த்தோல் | 1 |
| | நெல்லிவற்றல் | 1 |
| | சுக்கு | 1 |
| | மிளகு | 1 |
| | சுத்திசெய்த நேர்வாளம் | 1 |
| | ,, சிவதை வேர் | 1 |
| | ,, கொடிவேலி வேர் | 1 |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பிற்பாடு மருந்துச் சரக்குகளை இடித்து வஸ்திர காயஞ்செய்த சூரணத்தைச் சேர்த்து, ஊமத்தையிலைச் சாறுவிட்டு நன்றாக அரைக்க

வும். பின்பு, குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும். இதில் ஒரு குளிகை எடுத்து முலைப்பாலில் இழைத்து உட்கொள்ளவும். ஒரு தடவை நன்றாக மலம் கழித்து ஜ்வரங்களும் தீரும்.

## 81. விடாத ஜ்வரங்களுக்கு "அரிதாரக் குளிகை"

நெஞ்சமகி ழரிதாரம் நல்லெலிப் பாடாணம்
    நேர்வாள மொடுசிவதையும்
நேர்த்தியாந் திரிகடுகு சமதையாய்ச் சேர்த்துடன்
    நேசுத்தி செய்தபிறகு
செஞ்சொலூ மத்தையிலைச் சாற்றில ரைத்துமேல்
    சிறந்திடு முளுந்துநிகராய்
செய்திடுங் குளிகையை விடாச்சுரத் திற்கதைச்
    செப்புமுலைப் பாலிலீவாய்
வஞ்சீ தச்சுரத் திற்கிஞ்சிச் சாற்றினில்
    வயணமுட னேகொடுத்தால்
வந்தமுன் சுரமெல்லாம் பஞ்சாய்ப் பறந்திடும்
    வன்பிணிக ளனுகாதினி
தஞ்சைமன் பர்க்கருள்செய் சிவபூசை மகிமை
    தருமதுரை யாய்த்தஞ்சைவாழ்
தருவைநிகர் செங்கைதிகழ் சரபேந்திர பூபதி
    தனபதிவு ரைத்தமுறையே. 80

(இ-ள்.) சுத்திசெய்த தாளகம்

,, எலிப்பாஷாணம்

,, நேர்வாளம்

,, சிவதைவேர்

சுக்கு

திப்பிலி

மிளகு

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடித்து ஊமத்தையிலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து, உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

இக்குளிகையிலொன்றை எடுத்து விடாத ஜ்வரங்களுக்கு முலைப்பாலில் கொடுக்கவும் சீத ஜ்வரங்களானால் இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும். பற்பல ஜ்வரங்களும் தீரும்.

✲✲✲✲✲

## 82 ஜ்வரங்களுக்குத் "துத்த அரிதாரப் பற்ப மாத்திரை"

துத்தமதி லொருபல மரிதார மூன்றுபலம்
துதித்திடுங் கல்சுண்ணாம்பு
தூயமொடு மூன்றுபலம் கற்றாழைச் சாற்றினில்
துரிதமுட னேயரைத்து
வைத்திடு புடத்தினில் மேலெடுத் தேதுளசி
வண்சாற்றி லேயரைத்து
வயணமாய் பயறளவு குளிகைசெய் தீந்திடில்
வந்தசுரம் விட்டோடுமே
நித்யகல் யாணிபரி பூரணி பராசக்தி
நிமலிநா ரணிபவானி
நீலமயில் வேலரைப் பெற்றுமகி ழுத்தமி
நேயமுட னேதஞ்சைவாழ்
உத்தம மிதந்திடும் பெருவிடையர் பங்கிலே
உகந்திடு மபயபாணி
யுனதருள் நிறைந்துளர் சரபேந்திர பூபதி
வுளமகிழ்ந்துரை செய்முறையே. 82

| | | |
|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த | துத்தம் | 1 பலம் |
| ,, | தாளகம் | 3 ,, |
| ,, | கல்சுண்ணாம்பு | 3 ,, |

முதலான சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கற்றாழைச்சாறு (கடுக்காய்த்தூள் சேர்த்திடித்துப் பிழிந்த

சாறு) விட்டு நன்றாக அரைத்துச் சிறு சிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைக்கவும்.

இதை ஒரு அகலில் ஒன்றின்மேலொன்று படாமல் வைத்து மேல் ஓடுபோட்டு மூடிச் சீலைமண் செய்து, உலர்ந்த பின் இரண்டு அல்லது மூன்று வரளியில் புடமிடவும். பின்பு இதைத்திறந்து உள்ளிருக்கும் மருந்தை ஒரு கல்வத்தில் இட்டுத் துளசிச்சாறு விட்டு நன்றாக அரைத்துப் பயறளவு உள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

ஒரு குளிகையை எடுத்துத் துளசிச்சாற்றிலோ அல்லது வெந்நீரிலோ கொடுக்கச் ஜ்வரங்கள் தீரும்.

## 83. சகல ஜ்வரங்களுக்கும் கெந்தகாதி மாத்திரை

சுந்தரக்கெந் தகம்நாபி யீரதம் மூன்றும்
சூழ்வகைக் கொருகாசெடை
சொல்லுமூ மத்தைவிரை மூன்றுகா செடைகளாம்
சுக்குதிப்பிலி மிளகுமே
அந்தமாய் பனிரெண்டு காசெடைகள் சேர்த்திதெலாங்
கல்வத்தினில் விட்டுமே
லாமெலி மிச்சம்ப ழச்சாற்றி நாள்முழுது
மரைகுன்றி நிகர் குளிகைசெய்
திந்தவித நிழலினி லுலர்த்தியீ யொன்றைவிட்
டிரண்டைவிட் டேமூன்றைவிட்
டேநாலே விட்டுவரும் சுரவிழ மச்சுரம்
எல்லாம்ப றந்தோடுமே
கந்தரக் கந்தராக் காரைக்கா லம்மைக்குக்
கருணையொடு மாங்கனிதரும்
கற்றால் பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
கனதையாய்ச் சொன்னமுறையே. 83

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்

,, நாபி

,, பாதரஸம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

| | | |
|---|---|---|
| ஊமத்தைவிதை | 3 | வராகனெடை |
| சுக்கு | 4 | ,, |
| திப்பிலி | 4 | ,, |
| மிளகு | 4 | ,, |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு இதர சரக்குகளைச் சூரணித்துப் போட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒருநாள் முழுதும் நன்றாக அரைத்துக் குண்டுமணிப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டவும். இவைகளை நிழலில் உலர்த்திக்கொண்டு, ஒரு குளிகையெடுத்து வெந்நீருடன் உட் கொள்ளவும்.

ஒன்றைவிட்டொரு நாள் வரும் ஜ்வரம். இரண்டு நாளைக்கு ஒரு தடவை வரும் ஜ்வரம், மூன்று நாட்களுக்கு ஒருமுறை ஏற்படும் ஜ்வரம், நாலு நாட்களுக்கு ஒருமுறை உண்டாகும் ஜ்வரம், விஷம ஜ்வரம் முதலான பலவித ஜ்வரங்களும் தீரும்,

## 84. திரிதோஷ ஜ்வரங்களுக்குக் ''கடுகரோகிணி மாத்திரை''

சுந்தரக் கடுகரோ கணியிலுப் பைப்பூவுஞ்
சுத்திசெய் நேர்வாளமும்
சொல்வகை கோரோரு கழஞ்சிசேர் சுற்றாழஞ்
சோத்தினி லரைத்தெடுத்தே
அந்தப்ப ருத்திவிதை நீர்குளிகை செய்துமேல்
தேனிழலி லேயுலர்த்தி

யப்பாலி ரண்டுமாத் திரைகளிளம் வெந்நீரில்
அனுபான மொடுகொடுத்தால்
முந்தவரு வாதபித் தச்சேட்டு மச்சுரம்
முனைமுறிந் திட்டோடுமே
முதன்மை மாணிக்க வாசகர்க் குகந்தேடியை
மொழிந்திடச் செய்தமூர்த்தி
பைந்தமிச்சொற் மதுரையில் விந்தைவிளை யாடலறு
பத்துனா லதுசெய்தருள்
பரமரைப் போற்றிவாழ் சரபேந்திர பூபதி
பண்பா யுரைத்தமுறையே. 84

(இ-ள்.) சுத்திசெய்த நேர்வாளம்
இலுப்பைப்பூ
கடுகரோகிணி

இம்மூன்று சரக்குகளையும் தனித்தனியே $1\frac{1}{4}$ வராகன் எடையெடுத்துச் சோற்றுக்கற்றாழையுடன் கடுக்காய் கூட்டி இடித்துப்பிழிந்த சாற்றைவிட்டு, நன்றாக அரைத்துப் பருத்தி விதைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். வேண்டும்போது இளஞ்சூடான வெந்நீருடன் இரண்டு மாத்திரைகள் கலந்து விழுங்கவும்.

வாத, பித்த கபம் முதலான தோஷங்களின் பிரகோபத்தி னாலேற்பட்ட பற்பல ஜ்வரங்களும் தீரும்.

குறிப்பு: இது நன்றாகப் பேதியாகும். குணமுள்ளதால் அதிசாக்கிரதையாக உபயோகிக்கவும்.

## 85 முறைக்காய்ச்சலுக்குக் "கெந்தகாதி மாத்திரை"

கந்தமிகு கெந்தகந் தாளகம னோசிலை
கபரிதா மிரபற்பம்
கனமயில் துத்தமிர தங்கௌரீ பாஷாணம்
கர்ப்பூர சிலாசத்துடன்

அந்தமுள துளசியின் சாற்றினில் மூன்றுநா
ளரைத்துக்கம் பரிசிநிகராய்
அக்குளிகை செய்தொன்றைச் சீரகந் திப்பிலியி
லனுபான முடனுண்மையாய்
இந்தவித மீந்திடிற் கிரமமா யொன்றைவிட்
டிரண்டைவிட் டேமூன்றைவிட்
டேனாலே விட்டிடும் சுரமும்சீ தச்சுரமு
மெல்லாம்ப ரந்தோடுமே
செந்தமிழ் முனிக்கெதிர் மணக்கோல மோடுவரும்
சிவபூசை மகிமையாதனால்
செயம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
சீருடனு ரைத்தமுறையே. 85

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, தாளகம்
,, மனோசிலை
,, சோழி
,, மயில்துத்தம்
,, பாதரஸம்
,, கௌரீபாஷாணம்
,, கர்ப்பூர சிலாஜத்து
தாமிர பற்பம்

முதலான சரக்குகளை வகைக்கு ( ஒரு வராகனெடை ) வீதமெடுத்துக்கொள்ளவும். முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்ற சரக்குகளைப் போட்டுச் சூரணித்துத் துளசிச்சாறு விட்டு 3 நாட்களுக்கு நன்றாக அரைக்கவும். நாலாவது தினத்தன்று இம்மருந்தைக் கம்பரிசிப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்,

இதில் ஒரு குளிகையை எடுத்துத் திப்பிலிச் சூரணத் திலோ அல்லது சீரகச் சூரணத்திலோ சேர்த்துச் சாப்பிடவும்.

இதனால் ஒன்றுவிட்டொரு நாள் வரும் ஜ்வரம், இரண்டு நாட்களுக்கொரு தடவை ஏற்படும் ஜ்வரம், மூன்று நாட்களுக்கொருமுறை உண்டாகும் ஜ்வரம், நான்கு தினத்திற்கு ஒருமுறை வரும் ஜ்வரம் முதலான பற்பல ஜ்வர வகைகளும் தீரும்.

## 86. தாப ஜ்வரத்திற்கு "முஸ்தாதி கஷாயம்"

வாசமுத் தக்காசு கோஷ்டமிரு வேலிவேற்
　　வாய்ந்தசுக் குச்சந்தனம்
வண்மை சீந்திற் கொடிநல்லி லுப்பைப்பூ
　　வகையொன்றுக் கோர்கழஞ்சு
நேசமா யுவ்வகை யெல்லாமரைத் திருநாழி
　　நீரைவிட் டேயுழக்காய்
நேர்த்தியொடு காய்ச்சிநற் றேனிற்கொ டுத்திடில்
　　நிலாதுதா பச்சுரமுமே
தேசமெங் குந்துதிசெய் சம்மந்த ருக்காகத்
　　திகழ்மதுரை வைகையாற்றில்
தண்ணீரி லேபோடு மேடெதிர் நடந்திடத்
　　திடமகிமை யேசெய்திடும்
ஈசரீரு பாதமதி லாசையொடு பூசைபுரி
　　யேர்போ சலகுலதிலகன்
எழில்தஞ்சை நகரில்வாழ் சரபேந்திர பூபதி
　　இன்பமொடு சொன்னமுறையே. 86

(இ-ள்.) கோரைக்கிழங்கு
　　கோஷ்டம்
　　வெட்டிவேர்
　　சுக்கு
　　சந்தனத்தூள்
　　சீந்தில்கொடி
　　இலுப்பைப்பூ

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ளவும். இத்தூளை ஒரு பாத்திரத்திலிட்டு 2 படி சுத்த ஜலம் விட்டு (சின்னப்படி 1) அடுப்பின்மேல் ஏற்றி எரித்து, உழக்குக் கஷாயமாகச் சுண்டியபின் இறக்கவும். இக்கஷாயத்துடன் தேன்சிறிதுவிட்டுச் சாப்பிடத் தாபஜ்வரங்கள் தீரும்.

## 87. தாப ஜ்வரத்திற்கு "இலவங்காதி மாத்திரை"

சுந்தர மிகுந்திடில வங்கங்க லங்கொம்பு
    சொற்செண்ப கத்தரும்பு
சூழ்ந்தசாத் திரவேதி திருமேனி யரிதாரம்
    சுகந்தமிகு கோரோசனை
யிந்தவகை திட்டமொடு சமதையா கக்கூட்டி
    யிளமுலைப்பால் வார்த்தரைத்
தேகுளிகை செய்தொன்றை வெந்நீரில் மூன்றுநா
    ளீதாபச் சுரந்தீருமே
கந்தமிகு சோலையும் வாவிமுத லாவியே
    கருணைநிறை பழனிமலைவேல்
கந்தர்க்கு கந்திடும் பொதிகையி னகஸ்தியர்சொல்
    கனநளின மதுரமிலகும்
பைந்தமிழ் சங்கநிறை மதுரையாள் பாணர்க்கு
    பண்டுதிரு முகமெழுதுநற்
பரமரருள் பெற்றுவாழ் சரபேந்திர பூபதி
    பார்த்திபனு ரைத்தமுறையே. 87

(இ-ள்) கிராம்பு
மாஸ்கொம்பு
செண்பகமொட்டு
சாத்திரவேதி (கொடுக்காப்புளி)
சுத்திசெய்த தாளகம்
குப்பைமேனி
கோரோசனை

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் கல்வத்திலிட்டுத் தூளாக்கி முலைப்பால்விட்டு நன்றாக அரைக்கவும். பின்பு இதை மிளகுப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதில் ஒன்றையெடுத்து வெந்நீருடன் விழுங்கவும். இவ்வாறு 3 நாட்கள் செய்யத் தாபச் ஜ்வரங்கள் தீரும்.

## 88. தாப ஜ்வரங்களுக்குச் "சாதிலிங்க குளிகை"

நன்னய மிகுந்திலகு சாதிலிங் கம்மிளகு
நாபிவெங் காரமல்லால்
நாகரீக மேவுநல் திப்பிலியிவ் வகையெலாம்
நயந்ததைச் சமதை நிறையாய்
சொன்னபடி யேயெலு மிச்சம்ப ழச்சாற்றில்
சொல்மூன்று சாமமதனை
சூட்சமுட னேயரைத் தேகுளிகை செய்தொன்றைச்
சொல்லுமனு பானமுடனே
இன்ன விதமீந் திடுபொல் லாத்தாப
சுரமெல்லாம் முறிந்தோடுமே
இன்பமாய் பாண்டியன் மகிழ்ந்திடக் கெங்கைதனை
யெழிலான சோலைமலையில்
முன்னமே வந்திட வரந்தரு தயாகர
மூர்த்திசங் கரர்கிருபையால்
முழுதுநற் றஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
மோகனனு ரைத்தமுறையே. 88

(இ-ள்.) சுத்திசெய்த லிங்கம்
,, நாபி
மிளகு
திப்பிலி
பொரித்த வெங்காரம்

முதலியவைகளைச் சமனெடையாக எடுத்துக் கல்வத்தி விட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக 3 ஜாமங்கள்

வரை (காலை 6 மணி முதல் மத்தியானம் 3 மணி வரை) அரைக்கவும். பின்பு இதனைப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டவும் வேண்டும்போது ஒரு மாத்திரையை எடுத்துத் தக்க அனுபானத்தில் (வெந்நீர்) கொடுக்கத்தாப ஜ்வரங்கள் தீரும்.

## 89. வாத, மாந்த ஜ்வரங்களுக்குச் ''சாதிலிங்க இஞ்சி குளிகை''

சாதிலிங் கம்பச்சை யிஞ்சியு மொருபங்கு
    சாரமுள நல்திப்பிலி
சட்டமா யிருபங்கு வெங்கார மிருபங்கு
    சரியாய்ப்பொ ரித்து நயமாய்
மீதிலகு நல்லெலு மிச்சம்ப ழச்சாத்தில்
    மேலுமொரு நாழிவெயிலில்
மிதமாக வைத்தந்தச் சாத்தினி லரைத்ததை
    மென்குன்றி மணியைநிகராய்
கோதிலாக் குளிகைசெய் தொன்றதிற் கொடுவாதங்
    கொடூரமாந் தச்சுரமலால்
குளிர்காய்ச்ச லும்பல சுரமெலாந் தீருமே
    குலவுபாண் டியன்மதுரையில்
ஆதிநா ளில்நரி யெலாம்பரிகள் செய்துமகிழ்
    அய்யர்பெரு விடையீசனார்
ரருள் நிறைந் திடுதஞ்சை சரபேந்திர பூபதி
    யன்புட னுரைத்தமுறையே. 89

(இ-ள்.) சுத்திசெய்த சாதிலிங்கம்
இஞ்சி

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | 1 பலம் |
| திப்பிலி | 2 பலம் |
| பொரித்த வெங்காரம் | 2 ,, |

அவைகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுச் சரக்குகள் முழுகும்வரை எலுமிச்சம் பழச்சாறு விட்டு 1 நாழி

(40 நிமிடங்கள்) நேரம் வெய்யிலில் வைக்கவும். பின்பு அச்சாற்றினாலேயே சரக்குகளை நன்றாக அரைத்துக் குன்றி மணிப் பிராமணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

அதிலொன்றை எடுத்து வெந்நீருடன் உட்கொள்ள வாத ஜ்வரங்கள், மாந்த ஜ்வரங்கள் முதலானவைகள் தீரும்.

## 90. சகல ஜ்வரங்களுக்கும் "சந்தனாதி உருண்டை"

மருவார்ந்த சந்தனம் விலாமிச்ச வேருமதி
மதுரமமுமி ரதங்கெந்தகம்
மருவுமுத் தக்காசு பற்பாட கங்கோட்ட
மகிமையுள்ள நேர்வாளமும்
யிருவேலி வெருவெங் காரமிவ் வகையெலா
மிளநீரி லேயரைத்தே
யேர்குன்றி மணியைநிகர் குளிகைசெய் தேயொன்றை
யீந்திடில் நீரிலல்லால்
பருவமா மங்கையர் முலைப்பாலி னிற்கொடு
பறந்திடுஞ் சுரமுழுதுமே
பண்டைநாள் மணிமுத்தா நதிதனிற் போட்டபொருள்
பக்தர்சுந் தரர்க்காகவும்
திருவாரூ ரிற்கமலா லயத்தி லந்தருந்
தியாகர் பெரு விடையீசனார்
திருவடி பணிந்துவாழ் சரபேந்திர பூபதி
தீர்க்கமாய்ச் சொன்னமுறையே. 90

(இ-ள.) சந்தனத்தூள்
விலாமிச்சைவேர்
அதிமதுரம்
சுத்திசெய்த பாதரஸம்
,, கெந்தகம்

கோரைக்கிழங்கு
பற்பாடகம்
கோஷ்டம்
சுத்திசெய்த நேர்வாளம்
வெட்டிவேர்
பொரித்த வெங்காரம்

முதலான சரக்குகளுள், முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜலியாகச் செய்து, பின்பு மற்றச் சரக்குகளை ஒவ்வொன்றாகப்போட்டு இளநீர் விட்டு நன்றாக அரைக்கவும். இவைகளைக் குன்றி மணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்

வேண்டும்போது இக்குளிகையிலொன்றை எடுத்துத் தாய்ப்பாலில் உட்கொள்ள ஜ்வரங்கள் அனைத்துந் தீரும்.

✻✻✻✻✻

## 91. ஜ்வரங்களுக்கு 'கெந்தக மடற்துத்த குளிகை'

கெந்தகம் பின்மடற் றுத்தம்நேர் வாளமும்
    கிராம்பிரத மதிவிடையமும்
கிரமமோர் கழஞ்சிசேர் வெத்திலைச் சாத்திலங்
    கேயரைத் துக்குன்றிநேர்
சந்தமொடு குளிகைசெய் தேநிழலு லர்த்தியே
    சட்டமா யொன்றையிஞ்சிச்
சாற்றினி லீந்திடில் ஏழுநா ழிகைதன்னில்
    சார்ந்தசுரம் விடும்பத்தியம்
கந்தந்த ரும்முருங் கைக்காயு மிலையாலால்
    கனத்திடும் பூழணியிலை
கஞ்சிவார்க் கவுமெழி லப்பருக் காய்ப்பண்டு
    கருணைவை கையாற்றினில்
அந்தமுள நன்மணக் கோலமுட னேவருநல்
    லய்யர்பெரு விடையீசனார்
அருள்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
    அன்பாயு ரைத்தமுறையே. 91

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, மடல்துத்தம்
,, நேர்வாளம்
,, பாதரஷம்
கிராம்பு
அதிவிடையம்

முதலான இச்சரக்குகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துக் கொள்ளவும். முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து, அதற்குப்பின் மற்ற சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டு வெற்றிலைச்சாறு விட்டு நன்றாக அரைக்கவும்.

இதைக் குன்றியளவுள்ள மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். நிழலில் நன்றாக உலர்த்தியபின், இதில் ஒன்றை எடுத்து இஞ்சிச்சாறுடன் உட்கொள்ளவும். 7 நாழிகைக்குள் ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம்:—** முருங்கைக்காய், முருங்கையிலைக் கஞ்சி, பூஷணியிலைச் சேர்ந்த கஞ்சி முதலியவைகளை உட்கொள்ளவும்.

**குறிப்பு:—** பேதியுடன் கூடிய ஜ்வரத்திற்குக் கொடுக்கக் கூடாது.

## 92. பலவித ஜ்வரங்களுக்கும் ''அரிதாரச் சுண்ணாம்புக் குளிகை''

சகிகநிற மாங்கடுஞ் சுண்ணாம்பு மரிதாரம்
சரிவகைக் கிருகழஞ்செடை
சட்டமாய்ச் சேர்த்ததில் மிதிபாக லின்னிலைச்
சாறுவிட் டொருநாழிகை
அங்கரைத் துக்குன்றி நிகர்குளிகை செய்தொன்றை
யடர்தாபச் சுரத்திற்குமேல்

அம்முலைப் பாலிலீ சீதச்சு ரத்திற்குக்
  கனாசுக் குக்கஷாயத்
திங்கிதமு டன்கொடு மந்தச்சு ரதத்திற்கு
  மேலுதவு வெந்நீர்தனில்
யெல்லாச்சு ரந்தீரு மங்களமி குங்கடவு
  ளெங்கள்சுந்த ரர்மகிழவும்
செங்கலைத் தங்கமாய்ப் பண்டைநா ளுண்டுசெய்
  சிவபூசை மகிமையதனால்
செழித்துநற் றஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
  சீருடனு ரைத்தமுறையே 92

(இ-ள்) நீற்ற கடுஞ்சுண்ணாம்பு $2\frac{1}{2}$ வராகனெடை
சுத்திசெய்த தாளகம் $2\frac{1}{2}$ ,,

இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு மிதிபாகலிலைச்சாறு விட்டு நன்றாக 1 நாழிகையளவு (20 நிமிடம்) அரைத்துக் குண்டுமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

ஒரு மாத்திரையை எடுத்து முலைப்பாலிலுடன் கொடுக்கத் தாப ஜ்வரங்கள் தீரும்.

சீத ஜ்வரங்களானால் சுக்குக்கஷாயத்தில் ஒரு மாத்திரை கொடுக்கவும். மந்த ஜ்வரத்திற்கு ஒரு மாத்திரையை வெந்நீரில் சாப்பிடவும்.

## 93. கொடூரமான ஜ்வரங்களுக்குச் 'சாதிலிங்க நாபி மாத்திரை'

சாதிலிங்க கத்தினிறை யீரிரு வராகனெடை
  சட்டமுள நேர்வாளமும்
சரியிரு வரகனெடை பின்னுமறு வராகனெடை
  சார்ந்துவரும் நாபியிதெலாம்
கோதிலா இஞ்சியின் சாற்றினி லரைத்ததைக்
  கூறுமிள கிற்குநிகராய்க்

குளிகைசெய் தொன்றையனு பானமுட னேகொடு
கொடுஞ்சுரமும் விட்டோடுமே
ஆதிநா ளம்பமூர்த் திக்குவிஷ மிட்டத
முதமது செய்சங்கரர்
யானைவந் தேசரண மென்றிடச் செய்தவர்ச்
சிலைகள லைக்கடலிடு
மிதிலங் கச்செய்யு மெய்யர்பெரு விடையீசர்
மென்பாத பூசையதனால்
மேருநிகர் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
மேன்மையாய்ச் சொன்னமுறையே. 93

| | | | |
|---|---|---|---|
| (இ-ன்.) | சுத்திசெய்த சாதிலிங்கம் | 4 | வராகனெடை |
| ,, | நேர்வாளம் | 2 | ,, |
| ,, | நாபி | 6 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறுவிட்டு நன்றாக அரைத்து மிளகுப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

இதில் ஒரு மாத்திரையையெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளப் பலவித கொடூரமான ஜ்வரங்களும் நீரும்.

குறிப்பு:— இம்மருந்தில் நாபி அதிகமாகச் சேர்ந்து இருப்பதால், வெகு ஜாக்கிரதையாக உபயோகித்தல் வேண்டும்

## 94. சகல ஜ்வரங்களுக்கும் 'திராக்ஷாதி மாத்திரை'

முந்திரிச் சம்பழம் கடுகரோ கணிநாபி
முருகுபே ரீச்சம்பழம்
மொய்த்திடு மிலுப்பையின் பூவுவெங் காரமேல்
முக்யமாம் நேர்வாளமும்
இந்தவகை யொன்றினுக் கோரோரு வராகனெடை
யெழில்சாதி லிங்கமொன்ப

தேயவ்வ ராகனெடை சேர்த்தெலாங் கற்றாழை
யின்சாற்றி லெயரைத்து
வந்தருங் குன்றிமணி நேர்குளிகை செய்தொன்றை
வலிமையிஞ் சிச்சாற்றிலீ
வாதசீ தப்பித்தச் சேட்டுமச் சுரமுழுதும்
வந்தவழி பார்த்தோடுமே
சுந்தரர் குப்பண்டு கட்டமுது தலையின்மேல்
சுமந்துவரு சிவகிருபையால்
சுகம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
சொல்லுமிது நல்லமுறையே. 94

(இ-ள்.) திராக்ஷைப்பழம்
கடுகரோகிணி
சுத்திசெய்த நாபி
பேரிச்சங்காய்த்தோல்
இலுப்பைப்பூ
பொரித்த வெங்காரம்
சுத்திசெய்த நேர்வாளம்
முதலான சரக்குகள் வகைக்கு 1 வராகனெடை
சுத்திசெய்த லிங்கம் 9 ,,

இவைகளைக் கல்வத்திலிட்டு, கடுக்காய்த்தூள் சேர்த்து இடித்துப்பிழிந்த கற்றாழை சாறுவிட்டு, நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும்.

இதிலொன்றை எடுத்து இஞ்சிச்சாற்றுடன் கொடுக்க வாத, சீத, பித்த, ச்லேஷ்ம ஜ்வரங்களனைத்தும் தீரும்.

## 95. ஜ்வரத்திற்குக் 'கௌரீபாஷாணக் குளிகை'

கோலஞ்சி றந்திடும் கௌரீபா ஷாணமது
கொண்டுவந் தேநயமிகுங்
கொம்புநற் பாகலிலைச் சாற்றினில் பொல்லாத
கொடுமமத் தஞ்சாற்றினில்

சிலமுட னேயதை யரைத்தெடுத்துக்கொண்டு
சிறுபயறி னளவுகுளிகை
செய்திஞ்சிச் சாற்றினி லலாமிளகு சுக்கொடுஞ்
சேர்ந்ததிப் பிலிக்கஷாயம்
மேலதனி லாவதனு பானமுட னோர்குளிகை
மிதத்தினுட னேகொடுத்தால்
எச்சுரமும் நீங்குமே பத்தியங் கஞ்சிசோறு
மெய்வேடனுக் கருள்செய்யும்
நீலகண் டத்தர்பெரு விடையீசர் பூசையில்
நேசமிகு போசராஜன்
நீண்டபுகழ் நிறைதஞ்சைச் சரபேந்திர பூபதி
நேமமொடு சொன்னமுறையே. 95

(இ-ள்) சுத்திசெய்த கௌரிபாஷாணம் 1 பலம் எடுத்துக் கல்வத்திலிட்டுக் கொம்புப் பாகலிலைச் சாறுவிட்டு ஒருநாள் முழுதும் அரைக்கவும். மறுநாள் ஊமத்தையிலைச் சாறுவிட்டு அத்தினம் முழுவதும் நன்றாக அரைத்துப் பயறு அளவுள்ள மாத்திரைகளாக உருட்டவும்,

இதிலொரு மாத்திரையை எடுத்து இஞ்சிச்சாற்றிலோ அல்லது திரிகடுகக் கஷாயத்திலோ (சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றையும் சேர்த்திடித்து வைத்த கஷாயம்) கொடுக்க எவ்வித ஜ்வரங்களும் தீரும்.

**பத்தியம்:—** அரிசி நொய்க்கஞ்சி மாத்திரமே சாப்பிடவும்.

## 96. திரிதோஷ ஜ்வரங்களுக்கு "இலுப்பைபூ மாத்திரை"

ஒருபங் இலுப்பையின் பூகடுக ரோகிணி
யுள்ளபடி யிருபங்குமே
லொளிர்சுத்த நேர்வாள மூன்றுபங் கிதுவெலாம்
ஒருமித்து நீர்வார்த்தரைத்

தருமையுட னேயெடுத் துக்குன்றி மணியைநிக
    றாய்குளிகை செய்துநிழலில்
லதையுலர்த் திப்பித்த வாதச்சு ரத்திற்கு
    மனுபான மிஞ்சிதனிலீ
வருந்தாமற் திப்பிலி யோடுமிலுப் பைப்பூவில்
    வண்குளிகை யொன்றீந்திடில்
வந்தமுன் சுரமெலாம் கிட்டாமல் விட்டிடும்
    வன்முதலை வாய்மதலையைத்
திரும்பவுந் தொண்டற்கு வந்தருள்செய் சிவபூசை
    திறமையொடு செய்மகிமையால்
திடம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
    தீர்க்கமுற் றுரைசெய்முறையே. 96

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | இலுப்பைப்பூ | 1 பலம் |
| | கடுகரோகிணி | 2 ,, |
| | சுத்திசெய்த நேர்வாளம் | 3 ,, |

இம்மூன்றையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக் கொள்ளவும்.

பித்த ஜ்வரம், வாத ஜ்வரம் முதலியவைகளுக்கு இதில் ஒரு மாத்திரை எடுத்து இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும்.

திப்பிலிச் சூரணத்துடனோ அல்லது இலுப்பைப்பூச் சூரணத்துடனோ ஒரு மாத்திரை விழுங்கவும். சகல ஜ்வரங்களும் தீரும்.

## 97. ஜ்வரங்களுக்கு 'வெங்காரக் குளிகை'

சங்கநிறம் வெங்காரம் நாபியிர தம்மூன்றும்
    சரிவகைக் கொருகாசெடை
சார்ந்தநேர் வாளமது கேள்பத்துக் காசெடை
    சட்டமுள பெருங்காயமும்

பங்கமில நாலுகா செடைகள்சேர்த் தெலுமிச்சம்
பழச்சாறு விட்டரைத்து
பண்புடன் குளிகைசெய் தொன்றதனி லீந்திடில்
பரந்திடுஞ் சுரமுழுதுமே
சங்கமதி லேபண்டு தொண்டர்க்கு சுந்துபிர
சங்கமது செய்தமூர்த்தி
சங்கரி மகிழ்ந்துதன் தங்கையென வந்துதிசெய்
சங்கரியி டங்குலவுவார்
திங்களோடு செஞ்சடை யிலங்குபெரு விடையீசர்
திறமையுட னருள்கிருபையால்
திருமருவு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
திட்டமொடு சொன்னமுறையே. 97

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | பொரித்த வெங்காரம் | 1 | வராகனெடை |
| | சுத்திசெய்த வத்ஸநாபி | 1 | ,, |
| | ,, பாதரஸம் | 1 | ,, |
| | ,, நேர்வாளம் | 10 | ,, |
| | பொரித்தப் பெருங்காயம் | 4 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு ஒரு நாள் முழுதும் அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் காய வைத்துக் கொள்ளவும்.

இதிலொன்றை எடுத்து வெந்நீரில் உட்கொள்ள ஜ்வரங்கள் அனைத்தும் தீரும்.

## 98. ஜ்வரங்களுக்குக் 'கெந்தக தாம்ராதி மாத்திரை'

கெந்தகம் தாம்பிரத் தின்பற்பம் நாபியிவை
கிரமமொடு சமபங்குசேர்
கிளர்சாதி லிங்கமிரு பங்குடன் சேருபிற
கேநொச்சி யிலைச்சாறுவிட்
டந்தவுரை தப்பாம லேயதனை மூன்றுநாள்
அரைத்துளுந் திற்குநிகராய்

குளிகை செய் தொன்றை நொச் சியின்சாத்தி
லாய்ந்தமிள கின்பொடியுடன்
யிந்தவித மேகொடுத் தால்சுர மெலாந்தீரு
மிலங்குமை லாப்பூரினில்
எலும்பையு மடந்தையாய் செய்திடு தயாநிதிக்
கேர்பெரிய நாயகிமகிழ்
செந்தளிர்ப் பாதர்பெரு விடையீசர் கிருபையால்
செல்வநிறை போசலகுலன்
செயம்பெற்றுத் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
சீருடனு ரைத்தமுறையே. 98

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, நாபி
இவைகள் வகைக்கு 1 வராகனெடை
சுத்திசெய்த லிங்கம் 2 ,,

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடியாக்கி நொச்சி இலைச்சாறுவிட்டு 3 நாள் அரைக்கவும். பின்பு இதை உளுந்துப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு குளிகையையெடுத்து நொச்சிச் சாற்றிலோ அல்லது மிளகுச் சூரணத்திலோ உட்கொள்ளக் கொடுக்கவும். ஜ்வரங்கள் தீரும்.

## 99. ஜ்வரங்கள், உழலை முதலியவைகளுக்குச் 'சீரகாதி கஷாயம்'

கந்தமு மிகுந்திடும் சீரகம ரத்தைவெங்
காயமுமி ளகுதிப்பிலி
காரமுள சாரணை யின்வேர்வெள் ளைப்பூண்டு
கசக்கும்வேப் பம்பிண்ணாக்கு
இந்தவகை சேர்த்திளம் வெந்நீரி லேயரைத்
தீர்ந்திட-தி லுழலையானாள்

இலங்குநற் தாமரையின் வளையந் துவைத்ததி
　　லெழுஞ்சாற்றில் நற்சீரகம்
சந்தச்சாத் திரவேதி சர்க்கரையுங்கோரோசனை
　　யெலுச்சம் பழச்சாற்றில்
கலந்து கொடுபத்தியம் பொரிகஞ்சி
　　சகலசுர முந்தீருமே
சுந்தரர் மணந்தனில் தொண்டுமுறி வுண்டென்று
　　சொல்கின்ற சிவகிருபையால்
சுபமிலகு தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
　　சொன்னவின வன்னமுறையே. 99

(இ-ள்.) சீரகம்
சிற்றரத்தை
வெங்காயம்
மிளகு
திப்பிலி
சாரணைவேர்
வெள்ளைப்பூண்டு
வேப்பம்பிண்ணாக்கு

இவைகளை வகைக்கு 1 வராகனெடையெடுத்து அம்மியின் மேல் வைத்து வெந்நீர்விட்டு நன்றாக அரைத்து, வெந்நீருடன் கலக்கிக் கொடுக்கவும். உழலையானால்,

தாமரையிலையினுட்சுருளின் சாறு
சீரகம்
சாத்திரவேதி (கொடுக்காப்புளி)
சர்க்கரை
கோரோசனை

முதலானவைகளை எலுமிச்சம்பழச் சாற்றுடன் ஒன்று கூட்டியரைத்து உட்கொள்ளவும்

பத்தியம்:— பொரிக்கஞ்சி மாத்திரமே சாப்பிடவும் பற்பல ஜ்வரங்களுந் தீரும்.

## 100. ஜ்வரங்களுக்கு 'அரக்குச் சந்தனாதித் தைலம்'

சந்தனங் கஸ்தூரி மஞ்சள்மண வெட்டிவேர்
சதகுப்பை நன்னாரிவேர்
சரளதேவ தாரமருள் வேர்கடுக ரோகணி
சட்டமுள மஞ்சிட்டியும்
அந்தமுய ரதிமது ரம்நல்ல ரக்கிதுவு
மோர்வகைக் கிருவாசெடை
அலதுவிரு வங்கிழங் கிருபலம் சேர்த்ததை
யரைத்தைந்து நாள்காய்ச்சியே
இந்தப்ப தத்தில்வடித் துள்ளுக்குங் கொண்டுமே
வெழிலுடம் பில்பூசியே
இலங்குதலை யுமூழ்கி வந்திடிற் சுரமுமே
லெல்லாமி ரண்டோடுமே
முந்தரிச் சுனருக்கு வரமெலாந் தந்துதவு
முதல்வர்சங் கரர்கிருபையால்
முற்றமிழ்த் தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
முக்யமொடு சொன்னமுறையே. 100

(இ-ள்.) சந்தனத்தூள்
கஸ்தூரி மஞ்சள்
வெட்டிவேர்
சதகுப்பை
நன்னாரிவேர்
சரள தேவதாரு
மருள்வேர்
கடுகரோகிணி
மஞ்சிட்டி
அதிமதுரம்
நல்லரக்கு

| | |
|---|---|
| முதலான சரக்குகள் வகைக்கு | 2 வராகனெடை |
| *மெருகங்கிழங்கு | 2 பலமும் |

---

*மெருகு என்பதற்கு ஸம்ஷ்கிருதத்தில் கஜகர்ணிகா எனப்பெயர்.

இவைகளை நன்றாக உலர்த்திக் கல்லுரலில் இட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, அம்மியின் மேல்வைத்துத் தண்ணீர் விட்டரைத்து, *நல்லெண்ணெய் 5 சேருடன் குழப்பி அடுப்பின் மேலேற்றிச் சிறுகச் சிறுக எரித்து ஐந்தாவது நாளன்று இதைப் பக்குவப்படுத்தி (மெழுகு பதம்) இறக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனளவெடுத்துப் பசுவின் பாலுடன் தினம் இருவேளை சாப்பிடவும்.

இத்தைலத்தையே உடம்பின் மேலும் பூசவும். தலையில் தேய்த்துக்கொண்டும் ஸ்நானஞ் செய்யலாம். பற்பல ஜ்வர வகைகளும் தீரும்.

## 101. ஜ்வரங்கள் நீங்குவதற்கான உபாயங்கள்

வாசனைநி றைந்திலகு போசன தாம்பூலம்
வண்மையுள நல்சந்தனம்
வன்னமலர் மாலைநகர்ப் பூாம்நெய் நல்லெண்ணெய்
வாய்க்குருசி தருஞ்சர்க்கரை
நேசமாம் வஞ்சியைத் தொடுவதும் பார்ப்பதும்
நேர்த்தியுள புதுவஸ்திரம்
நேர்சிவப் புக்கலைகள் மெத்தைகுளிர் காற்றது
நெஞ்சினிற் கடுங்கோபமாய்ப்
பேசவொண் ணாதிவ்வ கைப்படி நடப்பவரைப்
பிடித்த சுரம் விட்டோடுமே
பெரியநா யகிபங்கில் வாழுமுத் தமலிங்கர்
அபிருக்கர் கருங்கிருபையால்
போசமக ராஜநிகர் சகலகலை வல்லவன்
போசல குலாதிபதிநற்
புலவர் சிந்தாமணி தஞ்சைவாழ் சரபேந்திர
பூபதியு ரைத்தமுறையே. 101

* செய்யுளில் கூறப்படவில்லை. ஆனால் மருந்துகளின் தொகுப்பைப் பார்த்தால் இம்மருந்து தைலமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

(இ-ள்)

1. மிக்க ருசியையுடைய மிதமான போஜனம்
2. தாம்பூல தாரணம்
3. சந்தனம் பூசிக்கொள்ளல்
4. பலவகை நிறங்களுள்ள புஷ்பம் மாலைகள் முதலிய வைகளை வேண்டிய அளவு உபயோகப்படுத்துதல்.
5. பச்சைக் கர்ப்பூரம். நெய், நல்லெண்ணெய், ஜீனி முதலியவைகளை உபயோகித்தல்.
6. ஸ்திரீகளைப் பிரியமாகத் தொடுதல், அவர்களையும் பார்த்துக்கொண்டிருத்தல்
7. புது வஸ்திராதிகளைத் தரித்துக்கொள்ளுதல்.
8. மெத்தையிலிருத்தல்
9. குளிர்ச்சியான காற்று
10. அதிக கோபத்துடன் பேசாதிருத்தல்

முதலான உபாயங்களைக் கையாண்டு வந்தால் எவ்வித ஜ்வரங்களும் தீரும்.

## 102. ஜ்வரங்களுக்கு "அதிவிடைய மாத்திரை"

அதிவிடையம் நெல்லிக்காய்க் கெந்தக மந்தமாம்
பின்கிராம் பிரதமல்லால்
அந்தமுட னேசுத்தி செய்திடும் நேர்வாள
மதுவகைக் கிருகழஞ்சு
முதிராத வெற்றிலைச் சாறுதனி லிந்தவகை
முழுதுநன் றாயரைத்து
மொழிகின்ற குன்றிமணி நிகர்குளிகை செய்தொன்றை
முன்பூசிச் சாற்றிலிடுமேல்
கதிருத்த சுக்கின்க ஷாயமத னிற்கொடு
கமழ்துள சியின்சாத்திலீ

கடுஞ்சுர மெலாம்விடும் சீர்காழி தன்னிலே
கடவுள்சம் மந்தமூர்த்தி
மதிமகிழ் திடப்பண்டு திருமுலைப் பாலுதவு
மங்கைபங் காளரருள்சேர்
மங்கள வசீகரன் சரபேந்திர பூபதி
மாகனதை யாய்ச்சொல்முறையே. 102

(இ-ள்) அதிவிடையம்
சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
கிராம்பு
சுத்திசெய்த பாதரசம்
,, நேர்வாளம்

முதலான சரக்குகள் வகைக்கு 2½ வராகனெடை எடுத்துக் கல்வத்திலிட்டுத் தூள் செய்து, துளிர் வெற்றிலைச் சாறுவிட்டு நன்றாக (2 நாட்கள்) அரைத்துக் குண்டுமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காய வைக்கவும்.

இதிலொரு மாத்திரை எடுத்து இஞ்சிச் சாற்றிலோ, சுக்குக் கஷாயத்திலோ, துளசிச் சாற்றிலோ, சமயத்திற்கு ஏற்றாப் போல் கொடுக்கவும். பற்பல ஜ்வர வகைகளும் தீரும்.

## 103. பற்பல ஜ்வரங்களுக்கும் ''கெந்தகாதி மாத்திரை''

கெந்தகம் நாபிரசம் வெகார மனபேதி
கௌரிதுத் தங்கடுக்காய்
கிளர்கடுக ரோகிணி அக்கிராக் காரமொடு
கேளுவா ளப்பருப்பு
தொந்தமுட னேதான்றிக் காயுநல் சுக்குமேல்
துரிசுயரி சித்திப்பிலி
தொகையிந்த வகையெலாம் சமனதயாய்ச் சேர்த்ததை
துய்யகை யாந்தகரையின்

அந்தபச் சைச்சாற்றி லோயா:ம லேழுநா
ளரைத்ததைச் சிறுபயறுபோ
லக்குளிகை நிழலினி லுலர்த்திக்கொ டுத்துவரி
லச்சுரமும் விட்டோ. டுமே
சுந்தரிக் கன்பர்பெரு விடையீசர் கிருபையால்
சோழநிகர் திருப்பணிசெயும்
சுத்தமதி மெத்தநிறை சரபேந்திர பூபதி
சுபவிசைய னுரைசெய்முறையே. 103

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, நாபி
,, பாதரஸம்
,, அன்னபேதி
,, கௌரீபாஷாணம்
,, துத்தம்
,, நேர்வாளப்பருப்பு
,, துருசு
பொரித்த வெங்காரம்
கடுக்காய்த்தோல்
கடுகரோகிணி
அக்கிராக்காரம்
தான்றிக்காய்த்தோல்
சுக்கு
அரிசித் திப்பிலி

முதலான சரக்குகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீத மெடுத்துக்கொள்ளவும் முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து, பின்பு மற்றச் சரக்குகளைப்போட்டுத் தூள் செய்துகொண்டு கையாந்தகரைச் சாறுவிட்டுக் கையோயாமல் 7 நாளைக்கு அரைக்கவும்.

பின்பு சிறு பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இதிலொரு மாத்திரையை எடுத்து வெந்நீரில் உட்கொள்ளப் பலவிதமான ஜ்வரங்களும் தீரும்.

## 104. பலவகை ஜ்வரங்களுக்கும் "வேலிப்பருத்திக் குளிசம்"

மங்கள நலங்களுறு யரந்நியினிற் தலைமூழ்கி
மாதங்கி யபிராமிசீர்
மலரடியு கந்தொருமை யாய்ப்பணிந் தேபோற்றி
மகிழ்ந்துவெள் ளிக்கிழமையில்
சங்கையில் லாமலவ் வேலிப்ப ருத்திக்குச்
சார்ந்தகாப் புக்கட்டியே
சட்டமாய் சாம்பிராணி தூபங்கொ டுத்துடன்
சனிக்கிழமை தன்னில்வந்தே
அங்கந்த வேரினுக் கேபலி கொடுத்து
வேரறா மல்பிடுங்கு
குளிசமாடி வைத்தசுரம் வரும்போது கையினில்
கைக்கட்டில் சுரந்தீருமே
பங்கையப் பாதர்பெரு விடையீசர் கிருபையால்
பலகலைகள் நிறைசந்திரன்
பந்துஜன ரெட்சகன் சரபேந்திர பூபதி
பார்க்குணனு ரைத்தமுறையே. 104

(இ-ள்.) வெள்ளிக்கிழமை சாயங்காலத்தில் தலைமுழுகி அம்பிகையை நமஸ்கரித்து, வேலிப்பருத்திச் செடிக்குக் காப்புக்கட்டவும். பின்பு, சாம்பிராணித் தூபம், தீபம், ஹாரத்தி முதலியவைகளும் போடவும்.

மறுநாள் சனிக்கிழமையன்று அச்செடிக்குப் பலி கொடுத்து, அதன் வேரை அருந்துவிடாமல் பிடுங்கவும்.

இதைக் குளிசமாக்கி (தாயத்துக்குள் போட்டு) ஜ்வர ரோகியின் கையில் வைத்துக் கட்டிவிடவும். ஜ்வரங்கள் தீரும்.

## 105 தாப ஜ்வரத்திற்குச் ''சாதிலிங்க கோரோசனை மாத்திரை''

வன்னம திலங்குநல் சாதிலிங் கங்கோஷ்டம்
வாசமுள கோரோசனை
வண்மைநிறை தாளகம் சமதையா கக்கூட்டி
வளருமத் தஞ்சாறுவிட்
டின்னவகை சேர்த்தரைத் தேமிளகின் நேர்க்குளிகை
யேசெய்து லர்த்தியொன்றை
யெழில்கருப் புக்கட்டி யில்கொடுத் தால்விடு
மிடரான தாபச்சுரம்
நன்னய வுலாசமாம் திருப்பரங் குன்றத்தில்
நற்கீத ருக்காகவே
நாகரீக மேவுசரசு வதியமுனை துதிகங்கை
நதியமைத் திடுகந்தரை
சன்னலமாய் முத்தமிடு வுத்தமி பராசக்தி
கௌரீபங்கா ளரருளால்
கனம்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
கருத்துட னுரைத்தமுறையே. 105

(இ-ள்) சுத்திசெய்த லிங்கம்
உயர்ந்த கோஷ்டம்
கோரோசனை
சுத்திசெய்த தாளகம்

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடிசெய்து, ஊமத்தையிலைச் சாறுவிட்டு நேக அரைத்து, மிளகுப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி, வைத்துக்கொள்ளவும். இதிலொரு குளிகையை எடுத்துப் பனைவெல்லத்திற்குள் வைத்துச் சாப்பிடவும். தாப ஜ்வரங்கள் தீரும்.

## 106. குளிர் ஜ்வரங்களுக்கு "இலாமிச்சை வேர் அடை கஷாயம்"

இருவேலி வேரிலா மிச்சம்வேர் நன்னாரி
யின்வேர்கு ருந்தோட்டிவேர்
இலங்குசெந் தொட்டிவேர் சுக்குபற் பாடக
மெழிலான சீந்திற்கொடி
மருவார்ந்த கோரைக்கி ழங்கினுட னொன்பதும்
மட்டுடநீ குடித்துநயமாய்
மருவநந் நீர்விட்ட டைக்கஷா யங்களாய்
மலையாம லேவைத்துமேற்
பருகக்கொ டுத்திடிற் குளிர்சுர மெலாம்விடும்
பகர்வேத கீதர்மகிழப்
பலகன்னி காதானம் வித்தைநிறை தானமும்
பலதிசைகள் கொண்டாடவே
திருவுற் றிலங்குநூத் தெட்டுச்சி வாலயம்
திறமையொடு செய்மகிமையால்
திகழ்பெற்று தஞ்சைவாழ் சரபேந்திர பூபதி
தீர்க்கமுட னுரைசெய்முறையே. 106

(இ-ள்.) வெட்டிவேர்
விலாமிச்சைவேர்
நன்னாரிவேர்
குருந்தோட்டிவேர் (சிற்றாமுட்டி)
செந்தொட்டிவேர்
சுக்கு
பற்பாடகம்
சீந்தில்கொடி
கோரைக்கிழங்கு

ஆக 9 வகைச் சரக்குகளையும் வகைக்குச் சமனெடை எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு குத்தளவு எடுத்து 2 சேர் ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துக் கஷாயத்தை இறுத்துச் சாப்பிட்டு மறுபடியும் அதனுடன்

தண்ணீர் விட்டுச் சுண்டவைத்து அக்கஷாயத்தை இறுத்துச் சாப்பிடவும். இவ்வாறு குடித்துவந்தால் எவ்வித குளிர் ஜ்வரமும் தீரும்.

## வாழி

பார்கொண்ட கீர்த்தியுயர் தஞ்சையுயர் மேவுமதி
பதிபோசல குலதிலகன்
பகர்செய்மனு நீதியுள துளசேந்திர னருள்பாலன்
பரமசிவ னருள்கிருபையால்
பேர்கொண்ட தன்வந்தரி கொங்கணர் அகஸ்தியர்
பெருப்போகர் சட்டமுனியார்
பெரியோர்கள் சொல்கின்ற சாஸ்திரத் தின்வழிகள்
பிசகாம லேமிகவுணர்
சீர்கொண்ட சந்ததி தழைத்திடு முத்தமன்
சிங்காச னாதிபதிநற்
செல்வமும் தர்மம்நிறை சரபேந்திர பூபதி
செப்பும்வகை தப்பாமலே
வார்கொண்ட ஜ்வரமெலாம் தீர்ந்திடக் குளிகைபல
வழுத்தினேன் குடிநீருடன்
வண்மையாய் நூத்தெட்டு சிவநாம மகிமையால்
வாழியிச் சகமுழுதுமே. 107

(இ-ள்.) தஞ்சை நகரையாளும் போசல வம்சத்தில் உதித்த மனுநீதி தவராத துளசேந்திர மகாராசன் புத்திரனை சரபேந்திரன் சொல்படி, தன்வந்தரி, கொங்கணர், அகஸ்தியர், போகர், சட்டமுனி முதலிய பெரியோர்கள் சொல்லும் சாஸ்திரத்தின் வழிகள் பிசகாமல், ஜ்வரரோகம் தீருவதற்கான மாத்திரைகளும், கஷாயங்களும் முறை தவராமல் இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. இவைகளை உபயோகித்து இச்சகத்திலுள்ளோர் அனைவரும் சுகமாக வாழட்டும்.

## சுவடி நெம்பர் 49லிருந்து ஜ்வரம், அஜீரணம் முதலானவைகளுக்கான கஷாய, சூரண, லேகிய, நெய் வகைகள் கூறப்படுகின்றன.

### 107. பழஞ்சுரத்திற்கு எண்ணெய்

நன்னயவெண் ணொச்சிகரு நொச்சியல்லால்
நண்ணுகழற் கொடியோடு சாரணையிந்நான்குஞ்
சொன்னபடி யிலைச்சாற்றில் வகையொன்றுக்கே
சுகமாயத்தா னுரிசேர்த்தா மணக்கெண்ணெய்
இன்னமந்தக் கோழிமுட்டை யிரண்டினுள்ளா
யிலங்கும்வெள்ளைக் கருவும்விட்டுக் கொண்டே சுக்கு
பின்னதுகேள் காலேரைக்கால் பலமேகூட்டிப்
பிசகாம லெரித்துநன்றா யெடுத்திடாயே. 108
எடுத்ததிலோர் காசெடைக ளுள்ளேகொண்டே
யெழிலுடம்பிற் றடவிவந்தா லகலாமற்றான்
அடுத்தபழஞ் சுரங்களெல்லாம் வாசியாமே
யந்தணர்க்கும் பெரியோர்க்கு மெளியோர்க்கெல்லாம்
உடுத்தநல்ல வஸ்திரபூ ஷணமுஞ் செம்பொன்
னும்பழசம் பளமுடனென் னாளுமன்னங்
கொடுத்துதவு தருமதுரை தஞ்சையாளுங்
குபேரசர பேந்திரமால் கூறும்வாறே. 109

(இ-ள்) வெண்ணொச்சியிலைச்சாறு
கருநொச்சியிலைச்சாறு
கழற்சிக்கொடியிலைச்சாறு
சாரணையிலைச்சாறு

இவைகளை வகைக்கு ½ படி வீதமெடுத்து ஆமணக்கு எண்ணெய் ½ படியுடன் கலந்து, 2 கோழி முட்டையின் வெள்ளைக்கருவை விட்டுக் குழப்பி,

சுக்குச் சூரணம் காலேயரைக்கால் பலம் போட்டு, அடுப்பின் மேலேற்றி நன்றாக எரித்து மெழுகுப் பதத்தில் எரித்து இறக்கி வடிசட்டிக்கொள்ளவும்.

இதிலொரு காசளவெடுத்து உள்ளுக்குச் சாப்பிட்டு, உடம்பிலும் தேய்த்து வரவும். நாட்பட்ட ஜ்வரங்கள் தீரும்.

குறிப்பு: இவ்விடத்தில் ½ படி என்பது பெரியபடி வீசம்படியாகும்.

✲✲✲✲✲✲

## 108. பழங்காய்ச்சலுக்கு 'அதிவிடய நெய்'

அதிவிடைய முந்திரிகைப் பழம்வெட்பாலை
யரிசியத்தித் திப்பிலிவி லாமிச்சம்வேர்
விதிக்கும்நெல்லிப் பருப்புவேம்பு மல்லால்வில்வ
வேர்சந்த னந்திப்பி லிதப்பாமல்
உதித்திடுமிப் பலபலவாம் வகையொன்றுக்கே
யொன்றரை வராகனிடை சரியாய்க்கூட்டித்
துதித்தபடி யரைத்தெடுத்துப் பசுவின்னெய்யுந்
துகைநாழி விட்டெரித்தே யின்னந்தானே. 110

இன்னமுந்தா னல்லதண்ணீர் நாழிவார்த்தே
யெரித்திடுமந் தாக்கினியாய்த் தண்ணீரெல்லாஞ்
சொன்னபடி வத்தினபின் பதத்திற் பார்த்துச்
சுகமாக வடித்தெடுத்தே யுதையந்தன்னில்
முன்னமதில் மூன்றுகா செடைக வீந்தால்
மூறிந்துபோம் பழஞ்காய்ச்ச லிருமலோடே
வன்னமுள்ள கைகாலி னெரிவும் நன்றாம்
வாய்மைசர பேந்திரமா லுரைத்தவாறே. 111

| | | |
|---|---|---|
| (இ-ள்) | அதிவிடையம் | திராக்ஷைப்பழம் |
| | வெட்பாலையரிசி | யானைத்திப்பிலி |
| | விலாமிச்சம்வேர் | நெல்லிப்பருப்பு |

வேப்பம்வேர் வில்வவேர்
சந்தனத்தூள் திப்பிலி

இவைகளை வகையொன்றுக்கு 1½ வராகனெடை வீதம் எடுத்துப்பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்துப்

பசுவின் நெய் 1 படியுடனும்
சுத்த ஜலம் 1 ,,

குழப்பி அடுப்பின் மேலேற்றி மந்தாக்கினியாலெரித்து தண்ணீரெல்லாம் வற்றியவுடன் மெழுகு பதத்திலிறக்கவும்.

இதில் மூன்று காசெடையளவு (½ அணா அளவு) எடுத்து உட்கொள்ள நாட்பட்ட ஜ்வரங்கள் தீரும். இருமல், கைகால்களில் எரிச்சல் முதலானவைகளும் குறையும்.

******

## 109. நாட்பட்ட ஜ்வரத்திற்கு 'நிலவேம்பு கடாயம்'

அலங்கார நிலவேம்பு கோட்டஞ்சீந்தி
வானசிறு வழுதலைவே ரமுக்கிராவேர்
துலங்குசிறு காஞ்சோறிநற் கடுக்காயாடா
தோடையிலை சுக்கும்வகைக் கோர்கழஞ்சு
கலங்காம விரண்டுபடி தண்ணீர்விட்டுக்
காய்ச்சியுழக் கானபின்சர்க் கரையைப்போட்டு
நலங்களுடன் பத்துநா ளுண்டால்மெத்த
நாள்பட்ட ஜ்வரங்களெல்லாம் பறந்துபோமே. 112

(இ-ள்.) நிலவேம்பு
கோஷ்டம்
சீந்தில்கொடி
சிறுவழுதலைவேர் (சிறுகத்தரி)
அமுக்கிராக்கிழங்கு
சிறுகாஞ்சோறிவேர்
கடுக்காய்த்தோல்
ஆடாதோடையிலை
சுக்கு

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு (1¼ வராகனெடை வீத மெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, 2 படி சுத்த ஜலம் (சின்னபடி 1) விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றக் காய்ச்சவும். இதனை வடிக்கட்டிச் சர்க்கரை கூட்டிக் குடிக்கவும்.

இவ்வாறு 10 நாட்கள் சாப்பிட நாட்பட்ட ஜ்வரங்கள் அனைத்துந் தீரும்.

## 110. சீத ஜ்வரத்திற்கு ''அரிதாரக் குளிகை''

அரிதாரம் பாற்றுருசி யிரதமல்லால்
கடுகரோ கணியிவ்வ கைகள் நான்குஞ்
சரியாக நிறைகூட்டிக் காடித்தண்ணீர்
சட்டமொடு விட்டரைத்தே யுளுந்துக்கொப்பாய்
வரிசையதாய் குளிகைசெய்து நிழலில்நன்றாய்
வைத்துலர்த்திச் சீரகம்வெந் நீரிலீந்தால்
பரிவாய்சீ தசுரம்போம் பசுவின்பாலிற்
பத்தியமா யன்னமுண்ணிற் பாங்குதானே. 113

(இ-ள்.) சுத்திசெய்த மடல் தாளகம்
,, பால் துருசு
,, பாதரஸம்
கடுகரோகிணி

இவைகளைச் சமனெடையெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து, காடித் தண்ணீர்விட்டு நன்றாக (2 நாட்கள்) அரைத்து, உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும் இவைகளை நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டும்போது ஒரு மாத்திரையை யெடுத்து ஜீரகக் கஷாயத்தில் உட்கொள்ளவும்.

**பத்தியம்:—** பால்சாதம் சாப்பிடவும். சீத ஜ்வரங்கள் தீரும்.

## 111. குளிர் ஜ்வரத்திற்கு வெருகங் கிழங்கெண்ணெய்

நல்லவிருகங் கிழங்குதண்டு மிலையுஞ்சேர்த்து
நறுக்கியெடுத் தேபலந்தான் பத்துகூட்டிச்
சலமதனில் பதினாலு நாழிவிட்டுச்
சட்டமுட நானாழி யாகக்காய்ச்சி
யிலவங்கம் வசம்புசத குப்பைகோஷ்ட
மோடுவெருகங் கிழங்கரத்தை தேவதாரம்
அலதுவெட்பா லையினரிசி வெந்தயத்தோ
டல்வகையொன் றினுக்குநிறை யியம்பக்கேளே. 114

இயம்புகின்ற தொருகழஞ்சு சரியாய்க்கூட்டி
எண்ணெயொரு நாழிபசு வின்பாலப்பால்
நயம்பெறவு மிருநாழி விட்டுக்காய்ச்சி
நற்பதத்தி லேயிறக்கி வடித்துக்கொண்டு
தயங்காம லுண்டுபின்னு முடலில்பூசத்
தான்குளுரும் பழவெதுப்பும் .........
செயமிலகுந் தஞ்சைபில்வாழ் நாகரீகன்
கீர்த்திசர பேந்திரமால் செப்பும்வாறே. 115

(இ-ள்.) வெருகங்கிழங்கை சமூலமாக (தண்டு, இலை முதலியுடைவைகளுடன்) 10 பலம் எடுத்துச் சிறுசிறுத் துண்டுகளாக நறுக்கி ஒரு பெரும் பாத்திரத்திலிட்டு 14 படி சுத்த ஜலம் விடவும். பின்பு இதையடுப்பின் மேலேற்றி 4 படியாகும் வரை வற்றக்காய்ச்சி இறுத்துக்கொள்ளவும். இதனுடன்,

| | |
|---|---|
| வசம்பு | கிராம்பு |
| சதகுப்பை | கோஷ்டம் |
| வெருகங்கிழங்கு | சிற்றரத்தை |
| தேவதாரம் | வெட்பாலையரிசி |
| வெந்தியம் | |

முதலான கடைச்சரக்குகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துப், பசுவின் பால்விட்டு நன்றாக அரைத்து,

சுத்தமான நல்லெண்ணெய் 1 படியும்
பசுவின் பால் 2 படியும்

சேர்த்துக் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும். இதை வடிக்கட்டிப் பத்திரப்படுத்தவும். இந்த எண்ணெயில் (ஒரு காசெடை) எடுத்துச் சாப்பிடவும். தேகத்தின் மேலும் பூசவும். குளிர் ஜ்வரம் நாட்பட்ட ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

குறிப்பு: வெருகு என்பது மெருகன் கிழங்காகும்.

## 112. பழஞ் ஜ்வரத்திற்கும் வீக்கத்திற்கும் 'எலுமிச்சம் பழ எண்ணெய்'

சீலமிகு நல்லெண்ணெ யிரண்டுநாழி
செப்பெலுமிச் சம்பழச்சாற் றினானாழி
கோலமுயர் சாம்பிராணி பலந்தான்காலே
குங்கிலிய மரைப்பலங்காற் பலமே மஞ்சள்
சாலவும்வேப் பம்பருப்புப் பலமோர்காலாஞ்
சட்டமாயெவ் வாஞ்சேர்த்த ரைத்துக்கூட்டி
மேலதனைக் காய்ச்சிதென்றா யிறக்கும்போதில்
மென்சிரங்கை போட்டிடுபூ நாகந்தானே. 116

நாகமது போட்டுவடித் தெடுத்துக்கொண்டு
நயந்துடம்பிற் றடவிவைத்தே யுடனேபோக்கில்
தேகமதி லுண்டான வீக்கம்வாடும்
திரும்பவும் விடாச்சுரமு மல்லாலின்னம்
மாகபட மானபழஞ் ஜுரமுந்தீரும்
மலையரச னீன்றபச்சை மயிலைவாம
பாகம்வைத்தார் பூசைதனில் நேசமுற்ற
பார்த்தன்சர பெந்திரமால் பகரும்வாறே. 117

(இ-ள்.) நல்லெண்ணெய் 2 படி
எலுமிச்சம்பழச்சாறு 4 படி

இவ்விரண்டையும் ஒன்று கலந்து, அதனுடன்

| | |
|---|---|
| சாம்பிராணி | $\frac{1}{4}$ பலம் |
| குங்கிலியம் | $\frac{1}{2}$ பலம் |
| மஞ்சள் | $\frac{1}{4}$ பலம் |
| வேப்பம்பருப்பு | $\frac{1}{4}$ ,, |

முதலான சரக்குகளைத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துச் சாறுகூட்டிய எண்ணெயுடனே குழப்பியடுப்பின் மேலேற்றி எரித்துப் பதமாக்கிக் கீழிறக்கும் தருவாயில், பூநாகம் (மண்ணுண்ணி பாம்பு) ஒரு சிரங்கை அதிலிட்டுப் பொரிந்தபின் கீழிறக்கவும். பின்பு வடிக்கட்டி ஒரு பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

இத்தைலத்தை உடம்பில் பூசிவரத் தேகத்திலேற்படும் வீக்கம், விடாத ஜ்வரங்கள் முதலானவைகளுடன், நாட்பட்ட ஜ்வரங்களும் தீரும். கைகண்டது.

******

## 113 பழய ஜ்வரங்களுக்குப் 'பலாச்வகந்தாதி தைலம்'

பதினாறு பலமமுக்கி ராவெட்டு
பலஞ்சித்தா முட்டியின்வேர் பேராமுட்டி
அதின்வேரெட் டுபலமிம் மூன்றுங்கூட்டி
யபயடியே சிதறாம லிடித்தெடுத்து
சதிருளநாள் கேமரக்காற் தண்ணீர்விட்டு
சட்டமொடு நான்கிலொரு பங்காய்க்காய்ச்சி
புதியநல்ல கொம்பரக்குப் பலமீரெட்டுப்
போட்டுவே ரேகாய்ச்சி யின்னங்கேளே. 118
இன்னமுமொன் றரைப்படிநல் லெண்ணெய்வார்த்தே
யிவ்வகையெல் லாங்காய்ச்சித் தயிரின்மீதில்
நன்னயமாய் நிற்குமந்தத் தெளிவாம்நீரில்
நயந்தாறு படியிறுத்து விட்டுக்காய்ச்சி
முன்னமதி மதுரமரே ணுகஞ்செங்கோஷ்ட
முள்ளங்கி விரைகோரைக் கிழங்குமஞ்சள்
வன்னமிகுஞ் செவ்வல்லிக் கொடிநன்னாரி
மரல்கிழங்குஞ் சந்தனமேல் பகருவேனே. 119

பகருகின்ற தண்ணீர்விட் டான்கிழங்கு
பாங்குவிலா மிச்சம்வேர் தேவதாரந்
திகழ்கடுக ரோகிணியுஞ் சமதைசேர்த்துத்
திட்டமுட னிடித்தெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி
சுகமாகத் தலைமுழுகிற் சமயமதல்லாற்
சுவாசகா சம்பழய சுரமும்நன்றாம்
மகராசன் கீர்த்திவிக் கிரமார்களைக்கு
மகிழ்செய்சர பேந்திரமால் சொன்னவாறே. 120

(இ-ள்.) அமுக்கிராக்கிழங்கு 16 பலம்
சித்தாமுட்டிவேர் 8 ,,
பேராமுட்டிவேர் 8 ,,

இவைகளைச் சிறுசிறுத் துண்டுகளாக நறுக்கிக் கல்லுரலி விட்டு ஒன்றிரண்டாக இடித்து 4 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி 1 மரக்காலாக வற்றக் காய்ச்சவும். 16 பலம் கொம்பரக்கை டோலா யந்திரமாகக் கட்டி 4 மரக்கால் தண்ணீர் விட்டு ஒரு மரக்காலாகச் சுண்டின பின்பெடுத்த கஷாயத்தையும் முன்கஷாயத்துடனே கலந்து கொள்ளவும். இதனுடன்

சுத்தமான நல்லெண்ணெய் 1½ படியும்
தயிரின் தெளிவு நீர் 6 ,,

விட்டு ஒன்று கலந்துகொண்டு அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். பின்பு அதனுடன்

| | |
|---|---|
| அதிமதுரம் | காட்டுமிளகு |
| செங்கோஷ்டம் | முள்ளங்கிவிதை |
| கோரைக்கிழங்கு | மஞ்சள் |
| செவ்வல்லிக்கொடி | நன்னாரிவேர் |
| மருளங்கிழங்கு | சந்தனத்தூள் |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | விலாமிச்சைவேர் |
| தேவதாரு | கடுகரோகிணி |

இவைகளை வகைக்கு (½ பலம்) வீதமெடுத்துத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துக் கொதிக்கும் எண்ணெயுடனே சேர்த்து நன்றாக எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தினந்தோறும் தலையில் தேய்த்து முழுகிவரச் சுவாச காஸம், நாட்பட்ட ஜ்வரம் முதலானவைகள் தீரும்.

குறிப்பு:— டோலா யந்தரம்:— ஒரு வாயகன்ற சட்டியினுடைய வாயின் குறுக்காக ஒரு குச்சியை வைத்து அதன் நடுவே பக்குவம் செய்யப்பட வேண்டிய சரக்கை ஒரு மூட்டையாகக் கட்டிச் சட்டிக்குள் தொங்கவிடவும். பின்பு சட்டியில் வேண்டிய திரவ பதார்த்தத்தை விட்டு டீ சரக்குள்ள மூட்டை அதில் நன்றாக மூழ்கும்படிச் செய்து, அடுப்பின் மேலேற்றி எரிக்கவும்.

## 114. பழைய ஜ்வரங்களுக்குச் சத்திச்சாரணை நெய்

உயர்ந்தசிவ சத்தியினங் கிழங்கிற்றானே
யோரெலுமிச் சங்காயி னளவுகொண்டே
மயங்காம லேசதுரக் கள்ளிப்பாலை
வார்த்திரண்டும் பிசறினாப் போலரைத்து
நயந்தூணாங் கொழுந்திலொரு பிடியுமேல்நெய்
நன்றுழக்கா மணக்கெண்ணெயோ ருழக்குங்கூட்டி
வியன்பெறவுங் காய்ச்சியந்த நெய்யையுண்டால்
விடாச்சுரமும் பழஞ்சுரமும் விட்டேபோமே. 121

(இ-ள்.) சத்திச்சாரணைக்கிழங்கு ஒரு எலுமிச்சங்காய் பிரமாணமெடுத்து, அதனுடன் சதுரக்கள்ளிப்பால் கொஞ்சம் விட்டு நன்றாகப் பிசைந்து, ஊணாங்கொழுந்து ஒரு பிடியும் போட்டு அதனுடன்,

| | |
|---|---|
| பசுவின் நெய் | 1 உழக்கும் |
| ஆமணக்கெண்ணெய் | 1 ,, |

விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்நெய்யில் ஒரு காசெடையெடுத்து உட்கொள்ள, நீடித்த ஜ்வரங்களும், வெகு நாட்பட்ட ஜ்வரங்களும் தீரும்.

குறிப்பு: இம்மருந்து பேதியாகும் குணமுள்ளதால் நிதானித்து உபயோகிக்கவும்.

## 115. பழுஞ் ஜ்வரங்களுக்குத் திராய் எண்ணெய்

ஓதுதிராய்ச் சமூலமரைத் தெலுமிச்சங்கா
  யொத்தபடி யவ்வளவே பூணாகஞ்சேர்த்
தெரியெண்ணெ யைவார்த்துக் காதிக்கவைத்து
  யேவிரண்டு காசெடையே தினமுமுண்ணும்
போதுபழஞ் சுரம்நீங்கி வாசியாகும்
  பூரணிப வானியபி ராமிசத்தி
மாதுமையாள் பங்கபத பூசையாலே
  மகிழ்ந்துசர பேந்திரமா லுரைசெய்தவாறே. 122

(இ-ள்.) திராய் கொடியைச் சமூலமாக எடுத்து அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காய் பிரமாணம் எடுத்து, அதே எடை மண்புழுச் சேர்த்து, நல்லெண்ணெய் 5 சேருடனே குழப்பி அடுப்பின் மேலேற்றிக் காதிக்கவைக்கவும். இந்த எண்ணெயில் ஒரு காசளவெடுத்துச் சாப்பிடவும். நாட்பட்ட ஜ்வரங்கள் தீரும்.

## 116. பழுஞ் ஜ்வரத்திற்கு முக்கூட்டெண்ணெய்

வெள்ளிண்டின் வேரிலைதி ராய்சமூலம்
  விஷ்ணுவின் கிராந்திநா யுருவிபூளை
ஒள்ளியவே லிப்பருத்தி கழற்சி வெள்வேல்
  ஓராறிவ் வகைவேரா மணக்கினெண்ணெய்

எள்ளினெண்ணெய் நெய்யுள்ளி வசம்புங்கூட்டி
யெரித்துண்டால் பழஞ்சுரங்க ளெல்லாந்தீரும்
வள்ளிமண வாளரறு முக ... ...
— ... — ...சரபேந்திரமா லுரைத்தவாறே. 123

(இ-ள்) வெள்ளை இண்டம்வேர்
,, இலை
திராய் சமூலம்
நாயுருவி
சிறுபூளை
வேலிப்பருத்தி
கழற்சிக்கொடி
வெள்வேல்

முதலானவைகளின் வேர் வகைக்கு ½ பலம் வீதம் எடுத்து அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்து,

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | 1 | சேர் |
| நல்லெண்ணெய் | 1 | ,, |
| பசுவின் நெய் | 1 | ,, |

முதலியவைகளுடனே கலந்து, அதனுடன் உள்ளிப் பூண்டும். வசம்பும் தனித்தனி ½ பலமெடுத்து அரைத்து, எல்லாவற்றையும் ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும். இந்த எண்ணெயை வடிக் கட்டி உட்கொள்ள (துட்டெடை) நாட்பட்ட ஜ்வரங்கள் தீரும்.

## 117. வாத ஜ்வரத்திற்கு வெங்கார மாத்திரை

சந்தநிறை வெண்கார மிளகு (சுக்கு)
...... — திப்பிலியிவ் வகையொன்றுக்கே
பந்தமுட னோர்கழஞ்சு சரியாய்க்கூட்டி
— — — ஊமிச் சம்பழத்தின் சாறுதன்னில்

சுந்தரமா யரைத்தெடுத்துக் குன்றிநேர்க்
குளிகையொன் றைகொத்த மல்லிசுக்கில்
அந்தநற்க ஷாயமிட்டுக் கொடுத்து (வந்தா) — —
— (லவ்) வாத சுரங்களெல்லா மகன்றுபோமே. 124

(இ-ள்.) பொரித்த வெங்காரம் $1\frac{1}{4}$ வராகனெடை
மிளகு ,,
சுக்கு
திப்பிலி

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இதிலொரு குளிகையெடுத்துக் கொத்தமல்லிக் கஷாயத் துடனோ அல்லது சுக்குக் கஷாயத்துடனோ உட்கொள்ளக் கொடுக்க வாத ஜ்வரங்கள் தீரும்.

✳✳✳✳✳

## 8. பழமையான ஜ்வரத்திற்குத் திப்பிலி உருண்டையும் கஷாயமும்

நன்னயமாந் திப்பிலிவெங் காரஞ்சுக்கு
.. ... (உயர்) சாதிலிங்க மிளகுங்கூட்டி
சொன்னவகை தப்பாம லிஞ்சிச்சாற்றிற்
சுகமாக வேயரைத்து மீ(வாயப்பா)
வன்னமுள்ள குளிகையைச்செய் தொன்றையிஞ்சி
வனச்சாற்றிற் கொ... — — .. தீரும்
இன்னும்நல்ல பத்தியங்கேள் பசுவின்பாலி
லேய்னமு மீபந்துவந்தா ... ... 125

சட்டமுள தழுதாழை வேருமன்றிச்
சார்ந்திடுமுத் தாமணிவேர் — ... —
— - டநெல் லிப்பருப்பும் நல்லவிஷ்ணு
க்ராந்தியிவ் வகைகளைந்தே யுங்கஷாய

மிட் ... ... ... ... ... ... — — — சுரமுந்தீருந்
திங்களனி ஈசரருள் கிருபையாலே
மட்டலரப் பொன்னளகை ... — —
மருவுசர பேந்திரமால் சொன்னவாறே. 126

(இ-ள்.) திப்பிலி
பொரித்தவெங்காரம்
சுக்கு
சுத்திசெய்த சாதிலிங்கம்
மிளகு

முதலியவைகளைச் சமவெடை எடுத்துத் தூள் செய்து கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றி மணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக் கொள்ளவும். வேண்டும்போது ஒரு குளிகை எடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.

**பத்தியம்:** பசுவின் பால்விட்டுச் சாதம் உண்ணவும்.

தழுதாழைவேர்
உத்தாமணிவேர்
நெல்லிப்பருப்பு
விஷ்ணுக்ராந்தி
... — — ... — —

இந்த ஐந்து வகை வேர்களையுஞ் சமனெடுத்துக் கல் உரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதை உட்கொள்ள ஜ்வரங் கள் தீரும்.

---

*இச்செய்யுட்களில் சிற்சில பாகங்களின் ஏடுகள் சிதைந்து போயுள்ளபடியால் அவைகளின் பொருளை கூடிய வரை நிதானித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 119. வாத ஜ்வரங்களுக்குச் சாதிலிங்க குளிகை

வன்னமுள்ள வெங்காரம் .. னும்
வகைக்கொரு வராகனெடை சாதிலிங்கம்
பின்னது வராகனெடை ......... — -
பேசியவ ராகனெடை நான்கிதெல்லாஞ்
சொன்னபடி யேயிரண்டு நா - — மற்
ருமெழுமிச் சம்பழத்தின் சாறுவிட்டு
நன்னயமா யரைத்தெடுத்துக் குன்றிநேராய்
நா — .........செய்வா யெல்லாந்தானே. 127

எல்லாந்தா னிழலதனி லுலர்த்தியப்பா
வியலிஞ்சி யின்சாற்றினி லேயீந்தால்
பொல்லாத கொடும்வாதச் சுரமுந்தீரும்
... - ரசனம் மருந்தின் வண்மை
சொல்லார்ந்த நல்லோர்கள் பெரியோர்கள்
(போச) நிகர் திருப்பணிசெய் சுகிர்தசாலி
சல்லாப மன்னர்பலர் போற்றுங்கீர்த்தி
......பூபதிசொற் சட்டந்தானே. 128

(இ-ள்.) பொரித்த வெங்காரம் 1 வராகனெடை
... — ... ... — - ... —
சுத்திசெய்த லிங்கம்
— ... — — ... — ... ...4 வராகனெடை

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 2 நாட்கள் அரைத்துக் குன்றிமணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு மாத்திரையை எடுத்து இஞ்சிச்சாற்றில் கொடுக்க வாத ஜ்வரங்கள் நீங்கும்.

(✳✳!✳✳)

## 120. வாத ஜ்வரத்திற்குச் சந்தனாதி கஷாயம்

சந்தனஞ்சீந் திற்கொடிகோ ரைக்கிழங்கு
சார்ந்தசிறு காஞ்சோறிநற் சுக்கோடைந்தாம்

இந்தவகை பிசகாமற் சமதைகூட்டி
யெல்லாந்தா னிடித்தெடுத்த தண்ணீர்விட்டுப்
பந்தமுட னேயெரித்துக் காய்ச்சியப்பாற்
பக்குவமா யெட்டிலொரு பாகமாகச்
சிந்தைமகிழ்ந் தேயதனை யுண்டேவந்தால்
சேர்ந்திடும்வா தங்சுரமுஞ் சிதறிப்போமே. 129

(இ-ள்.) சந்தனத்தூள்
சீந்தில்கொடி
கோரைக்கிழங்கு
சிறுகாஞ்சோறிவேர்
சுக்கு

இவைகளைச் சமனெடுத்து ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்குச் சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதைத் தினந்தோறும் உட்கொள்ள வாத ஜ்வரங்கள் தீரும்.

## 121. வாத ஜ்வரத்திற்கு 'நிர்குண்டிக் கஷாயம்'

எந்தநொச்சிக் கொழுந்திலொரு பிடிதான்கொண்டே
யரத்தைசிறு காஞ்சோறிவேர் வெள்வெங்காயஞ்
சுந்தரமுக் காவளைவேர் காவளைவேர்
சுக்குகற் றாழஞ்சருகு வேப்பையீர்க்கு
குந்தமித மேபொன்மு சுட்டையின்வேர்
கடுகுரோ கணிபேரா முட்டியவ்வேர்
பந்தமொடு சதகுப்பை வகையொன்றுக்கே
பண்புடனே யோர்கழஞ்சு திட்டஞ்சேரே. 130

திட்டமாய் சொன்னபடி யிடித்துக்கொண்டு
திரும்பவுந்தா னேயதிலோர் குறுணித்தண்ணீர்
விட்டதனை யிருநாழி யாகக்காய்ச்சி
வெச்செனவைத் தொருமூன்று நாளேயுண்டால்
கொட்டமிடு மவ்வாத சுரமேநன்றுங்
கோதானம் பூதான முன்னதானம்

இட்டமுயர் கன்னிகா தானஞ்செய்யு
மெங்கள்சர பேந்திரமா லியம்புவாறே. 131

(இ-ள்) கருநொச்சி அல்லது வெண்ணொச்சிக்கொழுந்து
ஒருபிடி
சித்தரத்தை
சிறுகாஞ்சோறிவேர்
வெள்ளைவெங்காயம்
முக்காவேளைவேர்
காய்வேளைவேர்
சுக்கு
சுற்றாழஞ்சருகு
வேப்பம் ஈர்க்கு
பொன்முசுட்டைவேர்
கடுகரோகிணி
பேராமுட்டிவேர்
சதகுப்பை

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை விதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துக் கொள்ளவும் இதிலொரு மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்தை இறுத்து 3 நாட்களுக்கு உட்கொள்ளவும். வாத ஜ்வரங்கள் தீரும்.

## 122. வாத ஜ்வரங்களுக்குக் 'கெந்தகாதி குளிகை'

கெந்தகந்திப் பிலிகடுக்காய் மிளகுநெல்லி
கிளர்தரும்வெண் காரமிர தம்நேர்வாளம்
சுந்தரஞ்சே ரிந்துப்புச் சமதைகூட்டிச்
சொல்லுமந்த நொச்சியிலைச் சாற்றைவிட்டே
யந்தமுடனிவ்வகையொன் பதையும் நன்றா
யரைத்தெடுத்துக் குளிகைசெய்தே யுலர்த்திக் கொண்டு
பந்தமதாய் நல்லவெல்லத் தினிலேயீந்தால்
பறந்திடும்வா தச்சுரங்க ளெல்லாந்தானே. 132

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
திப்பிலி
கடுக்காய்த்தோல்
மிளகு
நெல்லிவற்றல்
பொரித்த வெங்காரம்
சுத்திசெய்த பாதரஸம்
,, நேர்வாளம்
பொரித்த இந்துப்பு

இவைகளைச் சமெனடுத்துக் கொண்டு, முதலில் ஒரு கல்வத்தில் இரஸத்தையும் கெந்தகத்தையுமிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து பின்பு மற்ற சரக்குகளை ஒன்றன் பின் ஒன்றாகப்போட்டு, கருநொச்சியிலைச் சாறுவிட்டு நன்றாக அரைக்கவும். நன்றாக மசிந்தபின் குன்றிமணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு நிழலில் உலர்த்திக் கொள்ளவும்

ஒரு குளிகையை வெல்லத்திற்குள்ளே வைத்து விழுங்கி விடவும். நன்றாக மலப்ரவ்ருத்தியாகி வாத ஜ்வரங்கள் தீரும்.

## 123. வாத ஜ்வரம் முதலானவைகளுக்குச் சுக்காதி கஷாயம்

காரமிகுஞ் சுக்கோடு கோரைக்கிழங்கு
  கடுக்காய்பற் படாகமற்ற தேவதாரம்
சாரமுள்ள சிறுதேக்குப் பெருங்குரும்பை
  சகியாத வசம்புமல்லாற் கொத்தமல்லி
சேரந்த வகையொன்றுக்கு நிறைதப்பாமற்
  செப்புமிரு காசெடையே போட்டிடித்து
நீரதிலே யிரண்டுபடி விட்டுழக்காய்
  நேர்மையுடன் காய்ச்சிவடித் தெடுத்துக்கொண்டே.

கொண்டபின்பு பெருங்காயம் பொடியாய்செய்து
கூறரைக்கா செடைபோட்டுக் குடிநீரீந்தால்
துண்டரீக்கஞ் செய்வயத்தின் நோதல்பக்கச்
சூலைவீக்கம் நெஞ்சுவலி யிருமலின்னம்
பண்டார வாதச்சுரஞ் சுவாசகாசம்
பண்பாயிக் கலியுகத்தி லன்னதாதா
தண்டமிழ்வா ணர்க்குமறை யோர்க்குமார்க்குந்
தயைசெய்சர பேந்திரமால் சாற்றும்வாறே. 134

(இ-ள்.) சுக்கு
கோரைக்கிழங்கு
கடுக்காய்த்தோல்
பற்பாடகம்
தேவதாரு
சிறுதேக்கு
பெருங்குரும்பை
வசம்பு
கொத்தமல்லி

இவைகளை வகைக்கு 2 காசெடையெடுத்துக், கல்லுரலில் இட்டு ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு சின்னபடி ஒன்று ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாகும்படி வற்றக் காய்ச்சி இறக்கவும். இதனுடன் பொரித்த பெருங்காயம் ½ காசெடை பொடிசெய்து போட்டுக்கொள்ளவும்.

இதைப் பருகிவர வயிற்றிலுண்டாகும் நோய்கள், பக்கச் சூலை, வீக்கம், நெஞ்சுவலி, இருமல், வாதஜ்வரம், சுவாச காசம் முதலானவை தீரும்.

******

## 124. வாத ஜ்வரத்திற்குச் சந்தன உசீராதி கஷாயம்

அந்தமலை யிருவேலி யாடாதோடை
யல்லாம லேகோரைக் கிழங்குஞ்சுக்கு

சுந்தரப் பற்பாடகம் விலாமிச்சவேர்
சொல்மிளகு திப்பிலியும் வேப்பம்பட்டை
இந்தவகை யொன்பதையுஞ் சமதைசேர்த்து
இடித்தெடுத்துக் கொண்டதனில் கற்கமீறுச்
சந்தனமாத் திரமதிகம் போட்டுமுன்சொற்
சரக்கிதெல்லாந் தான்கூடச் சரியாய்ப்பின்னே. 135

பின்னதிலே முன்னாழி நந்நீர்விட்டுப்
பிசகாமல் நாழியதாய் சுண்டக்காய்ச்சி
நன்வயமாங் குடிநீரை கொடுத்தேவந்தால்
நன்னியவி ரோசனமு மாகுங்கண்டாய்
சொன்னவுரை தப்பாது பொல்லாவந்தச்
சுரந்தீரு மீசருட பூசையாலே
பொன்னிநதி சூழ்சோழ தேசமெங்தம்
போற்றுசர பேந்திரமால் புகன்றவாறே. 136

(இ-ள்.) வெட்டிவேர்
ஆடாதோடை
கோரைக்கிழங்கு
சுக்கு
பற்பாடகம்
இலாமிச்சைவேர்
மிளகு
திப்பிலி
வேப்பம்பட்டை

இவைகளை வகைக்கு 1 பலமெடுத்து உலர்த்திக் கல் உரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ளவும். இதனுடன் சரியளவு சந்தனத்தூள் சேர்த்துக் கலந்து கொண்டு ஒரு பாத்திரத்திலிட்டு 3 படி தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு படியாகக் காய்ச்சி இறக்கி, வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் பருகிவர (தினம் 3 வேளை) நன்றாக மலம் கழிந்து வாத ஜ்வரங்கள் தீரும்.

## 125. பித்த ஜ்வரம் முதலானவைகளுக்குக் கடுகரோகிணிக் கஷாயம்

சுந்தரமாங் கடுகரோகணிக் கடுக்காய்
சொல்லும்வில்வப் பத்திரிவேர் முத்தக்காசு
சந்தனதான் றிக்காய்பொற் சிந்தில்தண்டு
காஞ்சோறி வேர்சுக்கு.........நெல்லி
யந்தநற்பேய் புடற்சரகுஞ் சிற்றாமுட்டி
யவ்வேரொவ் வேர்வகைக்குக் கழஞ்சுமூன்றாங்
கந்தமெனபற் பாடகநாற் கழஞ்சுக்கூட்டி
கணக்குடனோர் குறுணிநந்நீர் விட்டுத்தானே. 137

விட்டதனை நாவிலொரு பங்காய்க்காய்ச்சி
விபரமொடு கொடுத்துவந்தால் பித்துப்பேத்தல்
சட்டமதாய் யுடம்பழத்தல் நாவிற்காய்ச்சல்
சகியாத தாகமது வாய்க்குள் புண்ணும்
மட்டடங்கா தெழுந்தபித்த சுரமும்நன்றா
மாமறையோர் பெரியோர்சொற் கவிஞர் நல்லோர்
யிட்டர்பந்து வெனுந்தாரா கணங்கள்பல
சூழ்ந்துசர பேந்திரமால் இயம்புவாறே. 138

(இ-ள்.) கடுகரோகிணி
கடுக்காய்த்தோல்
வில்வ இலை
வில்வவேர்
கோரைக்கிழங்கு
சந்தனத்தூள்
தான்றிக்காய்த்தோல்
சிந்தில்கொடி
சிறுகாஞ்சோறிவேர்
சுக்கு
நெல்லிவற்றல்
பேய்ப்புடல்
சிற்றாமுட்டி

இவைகள் தனித்தனியே $3\frac{3}{4}$ வராகனெடை

பற்பாடகம் ½ பலம்

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்று இரண்டாக இடித்துச், சுத்த ஜலம் 1 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக்கி இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவர

அதிகமான உளரல், உடம்பு புரளல், காய்ச்சல், தாகம் வாய்ப்புண், பித்த ஜ்வரம் முதலானவை தீரும்

******

## 126. வாத ஜ்வரங்களுக்குப் பொன் முசுட்டைக் கஷாயம்

கோலமிகு பொன்முசுட்டை வேர்நற்சுக்கு
குலவுகண்டங் கத்திரிவேர் முன்னைவேருஞ்
சீலமுள்ள கொன்றையின் கிழங்குசீந்திற்
சேர்ந்தசிறு வழுதலைவே ரல்லாலந்த
மேலணிப்பற் பாடகமிவ் வகையொன்றுக்கு
மீதமிருகா செடைகூட்டி யிடித்துக்கொண்டு
சாலநன்னீ ரிருபடிவிட் டுழக்காய்காய்ச்சி
சாப்பிடில்வா தச்சுரமும் பறந்துபோமே. 139

சொன்னசிறு காஞ்சோறிவேர் வில்வத்தின்வேர்
சுக்குகொத் தமல்லிசிற்றா முட்டிவேரும்
வன்னமுத்தக் காசுபற்பாடகமதெல்லாம்
வகைக்கிரண்டு காசெடைசேர்த் திடித்துக் கொண்டு
நன்னயமா மிருபடிதண்ணீரைவிட்டு
நண்ணுமுழக் காய்காய்ச்சி வடித்துத்தானே
பின்னந்தக் குடிநீரை யுண்டேவந்தால்
பேசாமற் வாதசுர முழுதும்போமே. 140

(இ-ள.) பொன்முசுட்டைவேர்
சுக்கு
கண்டங்கத்திரி
முன்னைவேர்

கொன்றைவேர்
சீந்திற்கொடி
சிறுகத்தரி
பற்பாடகம்

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்துக் கல் உரலிலிட்டு இடித்து, ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றக் காய்ச்சவும். இதைப் பருகிவர வாத ஜ்வரங்கள் தீரும்.

சிறுகாஞ்சோறிவேர்
வில்வவேர்
சுக்கு
கொத்தமல்லிவிதை
சிற்றாமுட்டிவேர்
கோரைக்கிழங்கு
பற்பாடகம்

இவைகளை வகைக்கு 2 காசெடை எடுத்துக் காய வைத்துக் கல்லுரலில் இட்டிடித்து, தண்ணீர் 2 படி (சின்னப் படி ஒன்று) விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து உழக்கு ஆகும் வரை வற்றக்காய்ச்சவும். இக்கஷாயத்தைச் சாப்பிட வாத ஜ்வரங்கள் தீரும்.

## 127. வாத ஜ்வரத்திற்கு ஆடாதோடைக் கஷாயம்

நல்லாடா தோடையிலை சீந்திற்றண்டு
நண்ணியவா சந்தருங்கோ ரைக்கிழங்கு
வல்லாரச் சுக்குப்பேய்ப் புடலுமிந்த
வகைக்கிரண்டு காசெடைவைத் திடித்துக் கொண்டே
யெல்லாஞ்சேர்த் திருபடிநந் நீரைவார்த்தே
யெரித்துழக்காய்க் காய்ச்சிவடித் துண்டேவந்தால்
சொல்லாதந்த பெரியோர்முன் கல்லார்போலச்
சொல்லாம லவ்வாத சுரந்தான்போமே. 141

(இ-ள்.) ஆடாதோடையிலை
சீந்தில்கொடி
கோரைக்கிழங்கு
சுக்கு
பேய்ப்புடல்

இவைகளை வகைக்கு 2 காசெடை விதமெடுத்து, இடித்துத் தண்ணீர் சின்னப்படியொன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி உழக்காகும் வரை வற்றக் காய்ச்சவும் இதை உட்கொண்டுவர வாத ஜ்வரங்கள் தீரும்.

## 128. வாத ஜ்வரங்களுக்குச் சந்தனாதி கஷாயம்

வாசமுள்ள சந்தனங்கோ ரைக்கிழங்கு
வண்மைசிறு காஞ்சோறிவேர் சீந்திற்சுக்கீர்
காசெடையொவ் வோர்வகைக்குச் சரியாய்கூட்டி
கட்டுடனே யெடுத்ததெல்லா மெடுத்துக்கொண்டு
பேசியதோ ரிரண்டுபட்ட ஜலத்தைவார்த்து
பின்பதனை யெரித்துழக்காய் வடித்தேயுண்டால்
பசவிடுவா தச்சுரமு நல்ல ...... ...
புண்ணியமுன் பாவமெனப் பொடித்துப்போமே. 142

(இ-ள்) சந்தனத்தூள்
கோரைக்கிழங்கு
சிறுகாஞ்சோறிவேர்
சீந்திற்கொடி
சுக்கு

இவைகளை வகைக்கு 2 காசெடை விதமெடுத்து இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்றுவிட்டு நன்றாகக் கொதிக்க வைத்து ஒரு உழக்காக வற்றவைக்கவும். இதனை உட்கொள்ள வாத ஜ்வரங்கள் தீரும்.

## 129. வாத ஜ்வரங்களுக்கு விஷ்ணுக்ராந்திக் கஷாயம்

சீலமுய ரந்தவிஷ்ணு கிரந்திசுக்கு
சிறந்திடும்வே லிப்பருத்தி வேர்க்கடுக்காய்
கோலமுள்ள வவ்வாத மடக்கிவேர்
குலவுநெல்லி வகைக்கிருகா செடையேகூட்டி
சாலவுமே யிரண்டுபடி நந்நீர்விட்டுச்
சட்டமுட னேயுழக்காய்க் காய்ச்சிக்கொண்டு
மேலதனை மூன்றுநா ளுண்டேவந்தால்
மிகவாத சுரங்களெல்லாம் விட்டுப்போமே. 143

(இ-ள்.) விஷ்ணுக்ராந்தி
சுக்கு
வேலிப்பருத்திவேர்
கடுக்காய்த்தோல்
வாதமடக்கிவேர்
நெல்லிவற்றல்

இவைகளை வகைக்கு 2 காசெடை வீதமெடுத்துக் கல் உரலிலிட்டிடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் சின்னப் படி ஒன்றுவிட்டு, அடுப்பின் மேலேற்றி ஓர் உழக்காகும் வரை வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்தை 3 நாட்களுக்கு உட்கொள்ள வாத ஜ்வரங்கள் தீரும்.

## 130. பித்த ஜ்வரங்களுக்கு முஸ்தாதிக் கஷாயம்

கந்தமிகுங் கோரையின் கிழங்குசுக்கு
காட்டிலுறு பயத்தம்வேர் சீந்திற்றண்டு
சுந்தரசித் தாமுட்டி பேராமுட்டிசொல்லும்
வெட்டிவே ரும்நற்சீர கத்தோடெட்டாம்
இந்தவகை சமபாகம் சேர்த்திடித்தே
யெரித்திடுங்க ஷாயமதைக் கொடுத்தேவந்தால்
அந்தவள பித்தசுரந்தான் பசித்தபேர்க்கே
யன்னமிடு வார்பிணிபோ லகலப்போமே. 144

(இ-ள்.) கோரைக்கிழங்கு
சுக்கு
காட்டுப் பயத்தம்வேர்
சீந்தில்கொடி
சிற்றாமுட்டிவேர்
பேராமுட்டிவேர்
வெட்டிவேர்
சீரகம்

இவைகளை வகைக்கு 2 காசெடை எடுத்துக் கல்லுரலில் இட்டு ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு, சின்னப்படி ஒன்று சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக வற்ற வைக்கவும். இதனைப் பருகி வரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 131. பித்த ஜ்வரத்திற்கு திராக்ஷாதி கஷாயம்

முந்திரிகைப் பழம்நாகப் பூநன்னாரி
முத்தக்கா சதிமதுர மல்லாவின்ன
அந்தநெய்த விலுப்பைப்பூ சிற்றாமுட்டி
யதின்வேர்வி லாமிச்சம்வேர் வகையொன்றுக்கே
பந்தமுட னோர்கழஞ்சு சேர்த்திடித்து
பசுவின்பால் மூவுழக்குத் தண்ணீர்நாழி
சுந்தரஞ்சேர் செங்கருப்பஞ் சாறுகேளு
சொல்லுகின்ற தோருழக்குத் திட்டந்தானே. 145

திட்டமாய்ச் சேர்த்ததிலே முன்னேசொன்ன
திடமான சூரணத்தில் பிசகிடாமல்
சட்டமது மூவிரற்கொண் டெடுத்துப்போட்டு
சார்ந்திடுநீர் பால்கருப்பஞ் சாறுகூட்டி
மட்டமுட னெரித்துநன்றாய் நித்தம்நித்தம்
மலைக்காம லெட்டிலொன்றாய் காய்ச்சிக்கொண்டு
யிட்டமுற வேவடித்துக் குடித்திட்டாக்கால்
யிடற்செய்பித்தச் சுரங்களெல்லாம் பறந்து போமே. 146

(இ-ள்.) திராக்ஷைப்பழம்
சிறுநாகப்பூ
நன்னாரிவேர்
கோரைக்கிழங்கு
அதிமதுரம்
நெய்தல் (அல்லிப்பூ)
இலுப்பைப்பூ
சிற்றாமுட்டிவேர்
இலாமிச்சம்வேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு எடுத்து அதனுடன்,

| | |
|---|---|
| பசுவின்பால் | 3 உழக்கு |
| தண்ணீர் | சின்னப்படி $\frac{1}{2}$ |
| கருப்பஞ்சாறு | உழக்கு 1 |

இவைகளைச் சேர்த்துக் கொதிக்கவைத்து (எட்டில் ஒன்றாகும்வரை) வடிக்கட்டிச் சாப்பிட்டால் பித்த ஜ்வரங்கள் யாவும் தீரும்.

## 132. பித்த ஜ்வரத்திற்குக் கோரைக்கிழங்கு கஷாயம்

செப்புமுத்தக் காசுநல்ல சீந்திற்றண்டு
சீரான திப்பிலிபொன் மெழுகுநெய்தல்
ஒப்புளபற் பாடகம்நன் னாரியின்வேர்
யுயர்ந்திடுசந்தனஞ் சமதைகொண்டே
வைத்தபடியே சேர்த்திடித்து மூவிரற்கொண்
டவ்வளவே யிருநாழி நீரிற்போட்டு
கைப்பதமா யுழக்குநிறை காய்ச்சியுண்டால்
கதித்திடுபித் தச்சுரம்போங் கலங்கித்தானே. 147

(இ-ள்.) கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி

திப்பிலி
பொன்மெழுகு
நெய்தல்கிழங்கு
பற்பாடகம்
நன்னாரிவேர்
சந்தனத்தூள்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணித்துக் கொள்ளவும். மூவிரல் கொண்ட அளவு இச்சூரணத்தை எடுத்து தண்ணீர் சின்னபடி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதைச் சாப்பிட்டு வரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

குறிப்பு:— மெழுகைச் சிறுசிறு துண்டுகளாக்கிப் பாக்கிச் சரக்குகளைத் தூளாக்கியபின் சேர்த்துக்கொள்ளவும்.

## 133. பித்த காய்ச்சலுக்கு திராக்ஷாதி கஷாயம்

மருவுமுந்திரி கைப்பழம்பற் பாடகஞ்சீர்
மண்ணுவரட் சுண்டிசுக்கு சீந்திற்றண்டு
ஒருமைமுத்தக் காசிவ்வ கையொன்றுக்கே
ரொவ்வொரு பலங்கூட்டி யிடித்துக்கொண்டே
யிருநாழி நீரைவிட்டே யுழக்காய்க்காய்ச்சி
யிறுத்துதைய காலமதிற் தப்பாமற்றான்
பருகிவந்தால் வாய்புலம்பல் பித்தக்காய்ச்சல்
பஞ்சாகப் பறந்தோடுங் கணத்திற்றானே. 148

(இ-ள்.) திராக்ஷைப்பழம்
பற்பாடகம்
வரட்சுண்டி (ஆடுதீண்டாப்பாளை வேர்)
சுக்கு
சீந்திற்கொடி
கோரைக்கிழங்கு

முதலியவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக் காய வைத்துக், கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, உழக்கான பின்பு கீழே இறக்கவும். இக்கஷாயத்தைத் தினம் அதிகாலையில் பருகிவர வாய்ப்புலம்பல், பித்த ஜ்வரம் முதலானவை தீரும்.

## 134. வாத ஜ்வரங்களுக்கு 'அகத்திவேர்க் கடாயம்'

இலங்கிடு மகத்திவேர் சிற்றாமுட்டி
    பெழில்வேர்சுக் குக்கடுக்கா யல்லாலின்னம்
நலங்கொள்கண் ங் கத்திரிவேர் வகையொன்றுக்கே
    நண்ணுமிரு காசெடைகள் சரியாய்க்கூட்டி
கலங்காம லிடித்திரண்டு படிநீர்விட்டுக்
    காய்ச்சியுழக் காய்வடித்துக் கொண்டேயுண்டால்
பலங்கள்செய் யும்வாத சுரங்களெல்லாம்
    போகாம லேபறக்குஞ் சுறுக்கில்தானே. 149

(இ-ள்) அகத்திவேர்
சிற்றாமுட்டிவேர்
சுக்கு
கடுக்காய்த்தோல்
கண்டங்கத்திரிவேர்

முதலானவைகளை வகைக்கு 2 வராகனெடைகள் வீதம் எடுத்துக், காயவைத்துக் கல்லுரலிலிட்டு, ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொண்டு ஒரு பாத்திரத்திலிட்டுச், சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து, உழக்கானபின் இறக்கவும்.

இதைச் சாப்பிட்டுவர வாத ஜ்வரங்கள் தீரும்.

## 135. வாத ஜ்வரங்களுக்கு 'ஆமணக்கம்வேர் கஷாயம்'

சுந்தரமா யிலங்கிடுமா மணக்கின்வேருஞ்
சொல்லுகின்ற பேர்மல்லி யின்சமூலம்
நந்தலில்லா தவ்வாத மடக்கிவேரு
நல்லசிறு புள்ளடியுஞ் சுக்கோடைந்தாம்
இந்தவகை யொன்றினுக்கு நிறையைக்கேளா
யிரண்டதுகா செடைகூட்டி யிடித்துக்கொண்டு
பந்தமுட னிருபடிநீர் விட்டுக்காய்ச்சிப்
பருகிவந்தா லிடர்வாதச் சுரமும்போமே. 150

(இ-ள்) ஆமணக்கம்வேர்
பேராமல்லிச்சமூலம்
வாதாமடக்கிவேர்
சிறுபுள்ளடிச்சமூலம்
சுக்கு

இச்சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, தண்ணீர் சின்னப் படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி உழக்காகும் வரை எரித்து இறக்கவும் இக்கஷாயத்தை உட்கொள்ள வாத ஜ்வரங்கள் தீரும்.

## 136. பித்த ஜ்வரங்களுக்கு 'இலாமிச்சைவேர்க் கஷாயம்'

நன்னவில மிச்சம் பேராமுட்டி
நறும்வேலி முரண்டிசிற்றா முட்டிசுக்கு
வன்னமிகுங் கொத்தமல்லி நெல்லிமுள்ளி
வளம்பெருங்கோ ரைக்கிழங்குஞ் சமமாகச்சேர்த்
தின்னவகை யெட்டையுந்தா னிடித்தேயப்பா
லெழிலான சலத்தைவிட்டுக் காய்ச்சிக்கொண்டு
சொன்னபடி யேகுடிநீ ருண்டேவந்தால்
சூழ்ந்தபித்த சுரங்களெல்லாந் துலைந்துபோமே. 151

(இ-ள்.) இலாமிச்சம்வேர்
பேராமுட்டி
வேலிமுரண்டி (வேலிப்பருத்தி)
சிற்றாமுட்டி
சுக்கு
கொத்தமல்லிவிதை
நெல்லிமுள்ளி
கோரைக்கிழங்கு

இவைகளைச் சமனெடுத்து வகைக்கு 2 வராகனெடைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வைத்துக் கொள்ளவும். இதையொரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றக் காய்ச்சி இக்கஷாயத்தை இறுத்துச் சாப்பிடவும். பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 137. பித்த ஜ்வரங்களுக்கு 'முஸ்தாதிக் கஷாயம்'

சந்தம்நிறை கோரையின்கி ழங்குமற்றச்
சதாவரிக் கிழங்குமுசு முசுக்கைசுக்கு
கந்தமிகும் வெட்டிவேர் கொத்தமல்லி
காட்டுருப யத்தையின்வேர் சித்தரத்தை
சுந்தரமா மதிமதுரஞ் சமபாகஞ்சேர்
சோம்பாம விடித்தெடுத்துத் தண்ணீர்விட்டு
பந்தமுட னேகாய்ச்சி வடித்தேயுண்டால்
பறந்திடும்பித் தச்சுரங்கள் பயந்துதானே. 152

(இ-ள்.) கோரைக்கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு
முசுமுசுக்கை
சுக்கு
வெட்டிவேர்
கொத்தமல்லிவிதை

காட்டுப்பயத்தஞ் செடியின் வேர்
சித்தரத்தை
அதிமதுரம்

இவைகளைச் சமனெடுத்துக் (வகைக்கு) 1 பலம்) காய வைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பானையிலிட்டுச் சுத்த ஜலம் பெரியபடி 1 விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 138. பித்த ஜ்வரத்திற்கு 'இலாமிச்சைவேர்க் கஷாயம்'

சட்டமுள்ள மணக்குமிலா மிச்சம்வேருஞ்
சந்தனங்கோ ரைக்கிழங்குஞ் சீந்திற்தண்டும்
இட்டமுயர் சுக்கொடுசெங் கோட்டமெல்லா
மியல்புடனே சமபாகஞ் சேர்த்திடித்தே
திட்டமாய் நல்லதண்ணீர் விட்டுக்காய்ச்சி
திகட்டாம லேகுடிநீர் சாப்பிட்டாக்கால்
கொட்டமிடுந் துட்டபித்தச் சுரங்களெல்லாம்
குலைந்தோடும் பருதிகண்ட கங்குற்போலே. 152

(இ-ள்.) இலாமிச்சம்வேர்
சந்தனத்தூள்
கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி
சுக்கு
செங்கோஷ்டம்

முதலான சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து உலர்த்திக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச், சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை எரித்து இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 139. பித்த ஜ்வரத்திற்கு 'இருவேலிக் கஷாயம்'

இருவேலித் துண்டுசுக்குச் சீந்திற்றண்டு
மிலுப்பைப்பூ நன்னாரி யின்வேர்கோஷ்டம்
மருவுலவு சந்தனமு மல்லாலின்ன
மன்னுமெழில் தண்ணீர்விட்டான் கிழங்கினோடே
அருமையதி மதுரமிவை சமதைகூட்டி
யதையிடித்தே யிருநாழி நீரைவிட்டு
இருபொழுது முழக்குழக்காய்க் காய்ச்சியுண்டா
லிடர்செய்பித்த சுரமுழுதும் வாசியாமே. 154

(இ-ள்) வெட்டிவேர்
சுக்கு
சீந்தில்கொடி
இலுப்பைப்பூ
நன்னாரிவேர்
கோஷ்டம்
சந்தனக்கட்டை
தண்ணீர்விட்டான் கிழங்கு
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்துக் கல்லுரலில் விட்டு ஒன்றிரண்டாக இடித்துத், தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை எரித்து இறக்கவும் தினந்தோறும் இக்கஷாயத்தைக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 140. பித்த ஜ்வரங்களுக்குத் தான்றிக்காய் கடாயம்

அந்த தான்றிக்காய் நற்சிற்றா முட்டிவே
ரானகோ ரைக்கிழங் குபற்பா டகஞ்
சந்தப் பேய்ப்புடல் கடுக்காய் நெல்லி
சார்ந்திடு மதுரத் தோடுமிவ்வகை

பந்தமா மூன்று பங்கினுக் கோர்பங்காய்
பாங்குடன் கடையின் மருந்துங் கூட்டி
தொந்தமா யிடித் தேயதில் மூவிரற்
றோய்ந்திடவ் வளவே போட்டி டின்னமே. 155

இன்னந் தானிரண் டேநாழி நீரை
விட்டே யுழக்காய்க் காய்ச்சி வடித்ததை
நன்னய ங்களாய் நித்தமுங் காலமே
நன்றியுட னுண்டிடிற் பித்தசுரந் தீரும்
பொன்னணிச் சடையிற் கொன்றை வில்வமும்
பூண்ட சங்கரனாற் பாத பூசையால்
சொன்னதாஞ் சரபேந் திரபூபதி
சோழ தேசமற் றெங்குங்கொண் டாடவே. 156

(இ-ள்) தான்றிக்காய்த்தோல்
சிற்றாமுட்டிவேர்
கோரைக்கிழங்கு
பற்பாடகம்
பேய்ப்புடல்
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 3 பலம் வீதம் எடுத்துக்கொண்டு கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவு தூளையெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டுச், சுத்த ஜலம் சின்னப் படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி இறக்கவும் இதனைத் தினந்தோறும் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 141. பித்த ஜ்வரத்திற்கு வாள மாத்திரை

நல்லநேர் வாள மாறுக ழஞ்சது
நாட்டுவாய் கடுகுற் றிடுரோகிணி

மெல்ல வேயதி லாறுக மூஞ்சிடு
  மேலுஞ் சேரிர சத்திற் கழஞ்சொன்று
சொல்லச் சர்க்கரை மூவைந்து காசெடை
  சூட்ச மாமுலைப் பாலில ரைத்துமேல்
ஒல்ல வேபெரி தாம்பயற் றுக்குநேர்
  வுண்டை செய்ததைக்காயவும் வைத்திட்டே. 157

வைத்தபின் னேழுநா டிச்சப் பத்திய
  வண்மையாஞ் சுரத்திற் குமுலைப் பாலில்
சுத்தமா யுழக்கே கூட்டியோ ருண்டை
  சொற்படிக் கினிச்சட் டமா யீந்திடில்
ஊத்தமஞ் செய்வி ரேசன மாகிமே
  லுற்றிடும் பித்தக் காய்ச்சலுந் தீருமே
நித்தமுஞ் சிவனார் பாதபூசையால்
  நீண்டு வாழ்சர பேந்திரன் சொன்னதே. 158

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சுத்திசெய்த நேர்வாளம் | — 6 கழஞ்சு |
| | கடுகரோகிணி | — ,, |
| | சுத்திசெய்த பாதரஸம் | — ,, |
| | சர்க்கரை | — 15 வராகனெடை |

இவைகளையொரு சுத்தமான கல்வத்திலிட்டு, முலைப்பால் விட்டு நன்றாக 2 அல்லது 3 நாட்கள் அரைக்கவும். பின்பு பெரும் பயறுப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு மாத்திரையெடுத்து முலைப்பால் ஒரு உழக்குடனே உட்கொள்ளவும். நன்றாக மலங்கழிந்து, பித்த ஜ்வரங்கள் தீரும்.

****

## 142. பித்த, ஸந்நிபாத ஜ்வரங்களுக்கு 'ஏலாதி குளிகை'

ஏலம் வெட்டிவேர் முந்திரி கைப்பழம்
  யேர்வி லாமிச்சம் வேர்சுக் கிலுப்பைப்பூ

கோல வெத்திலையின்கொடி சந்தனங்
கூறிடுந் தேவ தாரங்கோ ரோசனை
சீலமா மந்தப்பொற் பேரீச் சம்பழஞ்
சேய நல்லில வங்கம்நன் னாரிவேர்
மேலத் தாளீச பத்திரி மாஞ்சிலு
மெச்சிடு மதுர மோடு மின்னமே. 159

இன்னங் கேளிவ் வகைக்கோர் கழஞ்சுசே
ரிட்டமாங் கடுகுற் றிடும் ரோகிணி
சொன்னதோர் பலஞ்சேர்த் திளநீர் விட்டு
சுத்த மாயரைத் தெல்லா மெடுத்ததை
நன்மைக் குன்றிக் கொப்புட னுண்டைசெய்
நன்றாய்த் தானிழல் தன்னிலு லர்த்தியே
பின்னந்த தாகம் நாவில் வரட்சி
செய்பித் தத்தின் சுரத்திற்கிள நீரிலே. 160

நீரிலே நல்ல வெந்நீரி லேகொடு
நீண்டிடுஞ் சன்னி தோஷமுஞ் சேர்ந்திடில்
வாரிலங் கிடுமக் குதிரைவா லிவண்மை
வேரச் சாற்றி லீந்திடிற் கேளினிப்
பாரி சைந்திடு பித்தச்சு ரங்களும்
பாரமாஞ் சன்னித் தோஷமும் வாசியாம்
யேரி ணங்கிய வாதசு ரத்திற்கே
யீந்தி டாம விருப்பது நன்றதே. 161

(இ-ள்) ஏலக்காய்
வெட்டிவேர்
திராக்ஷைப்பழம்
இலாமிச்சம்வேர்
இலுப்பைப்பூ
சுக்கு
வெத்திலைக்கொடி
சந்தனத்தூள்
தேவதாரு

கோரோசனை
பேரீச்சம்பழம்
கிராம்பு
நன்னாரிவேர்
தாளீசபத்திரி
சடாமாஞ்சில்
அதிமதுரம்
இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை
கடுகரோகிணி 1 பலம்

இவைகளை ஒரு சுத்தமான கல்வத்திலிட்டுத் தூளாக்கி, இளநீர் விட்டு 2 நாட்கள் நன்றாகவரைக்கவும். பின்பு, குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி, நிழலில் காயவைக்கவும்.

தாகம், நாவறட்சி முதலியவைகளுள்ள பித்த ஜ்வரங்களுக்கு இளநீரிலோ அல்லது வெந்நீரிலோ ஒரு மாத்திரை கொடுக்கவும். ஸந்நிபாத ஜ்வரமாகில், முதியார் கூந்தலின் வேர்ச்சாற்றில் சாப்பிடவும். பித்த ஜ்வரங்களானாலும் இவ்வாறே சாப்பிடலாம். வாத ஜ்வரங்களுக்கு இம்மாத்திரையைக் கொடுக்கக் கூடாது.

## 143. பித்த ஜ்வரங்களுக்குப் 'பூசினிக்கொடி கஷாயம்'

பூசி னிக்கொடி கற்றாழை யின்சோறு
போற்றிடு மாடா தோடையற் பாடகம்
வாசஞ் சேர்சுக்கு மல்லாற் கொத்தமல்லி
வைத்தி டித்துத்தண் ணீரதில் விட்டுமேல்
நேச மாயெரித் தெட்டிலொன் றாய்க்காய்ச்சி
யிறுத்து முண்டிடி ராத்திரி வேளையில்
ஆசில் லாதன்ன முண்டபின் னாற்குடி
யக்க ணம்பித்தக் காய்ச்சல்விட் டோடுமே. 162

(இ-ள்) பூசினிக்கொடி

கற்றாழைச்சோறு

ஆடாதோடை

பற்பாடகம்

சுக்கு

கொத்தமல்லிவிதை

முதலான சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீத மெடுத்து இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும்- இக்கஷாயத் தை இறுத்து, இரவுச் சாப்பாட்டிற்குப் பின்பு பருகவும். பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 144. கப ஜ்வரத்திற்குச் 'சந்தனாதி கஷாயம்'

சந்த னங்கடுக் காய்ச்சிற்றா முட்டிவேர்
சார்ந்த செங்கழு நீர்கோஷ்டஞ்சுக்குயர்
கந்தஞ் சேர்செண்ப கப்பூமுத் தக்காசு
கட்டுறு மிலவங் கம்நன் னாரிவேர்
கொத்த லந்தவி லாமிச்சம் வேரந்தக்
கொத்த மல்லியு நற்சிறு தாம்பயறு
அந்த மாமது ரமிரு வேலிவேர்
ஆன தோர்வகை யொன்றுக்கு வீதமே. 163

நித்தந் தானிரு நாழிச லத்திலே
நேசத் தோடிட்டு நன்றாயெ ரித்துமேல்
சுத்த மாயுழக் காகவுங் காய்ச்சியே
சொன்ன வாறிரு போதுந்தா னுண்டிடில்
மெத்தச் சேட்டுமத் தின்சுரம் வாசியா
மீன நேத்ரி பங்கில்வாழ் சங்கரர்
அத்த னிற்பாத பூசையி லாசைசெய்
யற்பு தசர பேந்திரன் சொன்னதே. 164

(இ-ள்) சந்தனத்தூள்
கடுக்காய்த்தோல்
சிற்றாமுட்டிவேர்
செங்கழுநீர்க் கிழங்கு
கோஷ்டம்
சுக்கு
செண்பகப்பூ
கோரைக்கிழங்கு
கிராம்பு
நன்னாரிவேர்
இலாமிச்சைவேர்
கொத்தமல்லி விதை
சிறுபயறு
அதிமதுரம்
வெட்டிவேர்

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை விதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு, இடித்துச் சுத்த ஜலம் சின்னப் படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரிக்கவும். அதில் உள்ள கஷாயம் ஒரு உழக்கு ஆனபின்பு, அடுப்பின்மேல் இருந்து இறக்கிய கஷாயத்தை வடிக்கட்டிக், காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். கபத்தின் பிரகோபத்தினால் உண்டான ஜ்வரங்கள் தீரும்.

❋❋❋❋

## 145. பித்த சந்நி ஜ்வரங்களுக்குத் 'திப்பிலி முலாதி கஷாயம்'

செப்பு திப்பிலி மூலமெ வட்சாரஞ்
சிருறுங் கொடி வேலிகி ராம்பிஞ்சி
யெப்பு டன்செவ்வி யங்கடு கிந்துப்
போடுற்றி டும்முருக் கம்வேரி நற்பட்டை
கைப்ப தாம்நொச்சி மென்னிலை வெள்ளுள்ளி
காதற் செம்முருங் கைவேர்ப் பட்டையும்

தப்பில் முக்கடு குங்கூட்டிக் காய்ச்சியே
தானுண் டாற்பித்த சன்னிவிட் டோமே. 165

நீதந் தான்கழஞ் சொன்றது கூட்டிப்பின்
நேர்மை யாயிடித் தெல்லாமெ டுத்ததில்
காதலாய்க் குறுணித் தண்ணீர் வார்த்துமேற்
காய்ச்சி யேவடித் தேயிரு நாழியின்
வீதமாய் நித்தம் வெச்சென வுண்டிடில்
வேகமாம் பித்தக் காய்ச்சலும் வாசியாம்
பூதலந் தனிலெண் ணேழு தேசமும்
போற்று மால்சர பேந்திரன் சொன்னதே. 166

(இ-ள்) திப்பிலிமூலம்
எவச்சாரம்
கொடிவேலிவேர்
கிராம்பு
இஞ்சி
செவ்வியம்
கடுகு
பொரித்த இந்துப்பு
முருக்கவேர்ப்பட்டை
கருநொச்சியிலை
வெள்ளைப்பூண்டு
செம்முருங்கை வேர்ப்பட்டை
சுக்கு
திப்பிலி
மிளகு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் ஒரு மரக்கால்விட்டு அடுப்பின்மேல் ஏற்றி எரித்து எட்டிலொன்றாக்கி (சின்னபடி $\frac{1}{2}$ ) இறக்கவும். இக் கஷாயத்தைப் பருகிவரப் பித்த ஜ்வரம், சன்னிபாத ஜ்வரம் முதலானவை தீரும்.

## 146. பித்த ஜ்வரங்களுக்குத் ‘திராக்ஷாதி கஷாயம்’

அந்த முர்திரி கைப்பழம் மாகாளி
யக்கி ழங்குவி லாமிச்சம் வேர்சுக்கு
கந்தஞ் சேர்மூத்தக் காசுநன் னாரிவேர்
காத லோங்குங் கரும்பினிற் றுண்டமுஞ்
சந்த மார்பச்சை யின்பய றும்பே
ரீச்சம்ப ழத்தோடு செங்கழு நீர்க்கிழங்
குந்த ழங்கிய மாமது ரங்களுங்
கூட்டு வாய்வகை யொன்றுக்குத் திட்டமே. 167

திட்ட மாயிரு காசெடை சேர்த்திடித்
தேயிரண்டது வாம்படி நீருமே
விட்டன லிட்டெ ரித்துப்ப தந்தர
வேயு மக்காகக் காய்ச்சிவ டித்ததை
சட்ட மாகவு முண்டிட வேமுந்தச்
சார்ந்திடும் பித்தக் காய்ச்சலும் வாசியாம்
அட்ட திக்குள்ள மன்னர் கொண்டாடு
நல்லர்ப் புதச்சர பேந்திரன் சொன்னதே. 168

(இ-ள்) திராக்ஷைப்பழம்
மாகாளிக்கிழங்கு
இலாமிச்சம்வேர்
சுக்கு
கோரைக்கிழங்கு
நன்னாரிவேர்
கருப்பந்துண்டுகள்
பச்சைப்பயறு
பேரீச்சம்பழம்
செங்கழுநீர்க்கிழங்கு
அதிமதுரம்

முதலான சரக்கு வகைகளைத் தனித்தனியே 2 வராக னெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச் சின்னப்படி ஒன்று சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு

உழக்காகக் காய்ச்சவும். இதை வடிகட்டிச் சாப்பிட்டு வரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 147. பித்த ஜ்வரங்களுக்கு 'உசீராதி கஷாயம்'

சட்ட மாம்வெட்டி வேர்த்தண்டு வாசஞ்
சேர்சந்த னஞ்சிந்தில் மாமது ரஞ்சுக்கு
யிட்டநன்னாரி வேர்க்கோட்ட மோர்வகைக்
கேயிரண்டது காசெடை சேர்த்திடித்
திட்ட நீரிரண் டேபடி விட்டெரித்
தேயு ழக்காகக் காய்ச்சிவ டித்துத்தேன்
மட்ட மாய்க்குத்தி யக்குடி நீருண்டால்
மற்றந் தபித்தக் காய்ச்சல்விட் டோடுமே. 169

(இ-ள்) வெட்டிவேர்
சந்தனத்தூள்
சிந்தில்கொடி
அதிமதுரம்
சுக்கு
நன்னாரிவேர்
கோஷ்டம்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு உழக்காகும் வரை வற்ற வைக்கவும். இக்கஷாயத்தை இறுத்துத் தேன் விட்டுப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 148. பித்த ஜ்வரத்திற்கு 'இலாமிச்சைக் கஷாயம்'

வாச மேவும்வி லாமிச்சை வேர்சுக்கு
வண்மை பொன்முசுட் டைவே ரீதலால்,
ஊச லாடிய சிந்திற்கோ ரைக்கிழங்
கோர்வ கைக்கினி மூன்றது காசெடை

நேச மாயிடித் தேமூன்று தான்படி
நீரை விட்டுழக் காகவுங் காய்ச்சியே
போச னத்தின்முன் பாகக்கொ டுத்திடில்
போய்ப்ப றந்திடும் பித்தசு ரங்களே. 170

(இ-ள்) இலாமிச்சை வேர்
சுக்கு
பொன்முசுட்டைவேர்
சீந்திற்கொடி
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு 3 வராகனெடை விதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் 3 படி (சின்னப்படி $1\frac{1}{2}$) விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகு மட்டும் எரித்து, வடிகட்டிக்கொண்டு சாப்பாட்டுக்கு முன்னால் சாப்பிடப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

✳✳✳✳✳

## 149. பித்த ஜ்வரத்திற்குக் 'கொத்தமல்லிக் கஷாயம்'

கொத்த மல்லிபற் பாடகம் வெட்டிவேர்
கோல மாஞ்சிறு காஞ்சோறி வேர்சுக்கு
முத்த முந்தரு நன்னில வேம்புமொவ்
வோர்வ கைக்கினி மூன்றது காசெடை
வைத்த தைப்பின் பிடித்துக்கொண் டேமூன்று
வன்மை யாம்படி நீர்விட்டு முக்காகச்
சுத்த மாய்க்காய்ச்சிச் சொற்படிக் கீய்ந்திடில்
சூழ்ந்திடு மேபித்தக் காய்ச்சல்விட் டோடுமே. 171

(இ-ள்) கொத்தமல்லிவிதை
பற்பாடகம்
வெட்டிவேர்
சிறுகாஞ்சோறிவேர்
சுக்கு
நிலவேம்பு

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, 3 படி (பட்டணம் படி ¾) சுத்தஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகச் சுண்டும்வரை யெரித்து இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகி வரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 150. பித்த ஜ்வரத்திற்குத் 'திராக்ஷாதி கஷாயம்'

சந்த மேதரு முந்திரி கைப்பழஞ்
    சார்ந்த திப்பிலி கோஷ்டம்பற் பாடகம்
அந்த மேவுநற் செங்கழு நீர்க்கிழங்
    கான சந்தனஞ் சுக்கு நன்னாரிவேர்
இந்த வோர்வகைக் கேயிரு காசெடை
    யிட்டி டித்திரண் டேபடி நீர்விட்டு
பந்தத் தோடுழக் காகவுங் காய்ச்சியப்
    பாலுண்டாற் பித்தக் காய்ச்சல்விட் டோடுமே. 172

(இ-ள்) திராக்ஷைப்பழம்
திப்பிலி
கோஷ்டம்
பற்பாடகம்
செங்கழுநீர்க் கிழங்கு
சந்தனத்தூள்
சுக்கு
நன்னாரிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சின்னப்படி ஒன்று சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்தைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 151. கப ஜ்வரத்திற்குக் ''கஸ்தூரி மஞ்சள் கஷாயம்''

கந்தமேவிய கஸ்தூரி தான்றிக்காய்
    கைத்த பேய்புட லூற்றச மூலமுஞ்
செந்த ளிற்தேவ தாரநற் றிப்பிலி
    சீந்தில்த் தண்டுகடுக் காய்வேப்பம் பட்டை
அந்தஞ் சூழ்நெல்லி முள்ளிகோஷ் டங்கொன்றை
    யந்தவேர்ப் பட்டை யெட்டும ருந்தினில்
பந்த மாயிரு பங்குலைவத் தோர்பங்கப்
    பாற்க டைச்சரக் கிட்டிடு திட்டமே. 173

திட்ட மாயிடித் தேயொரு வேளைக்குத்
    தேர்ந்து மூவிரற் கொண்டதெ டுத்ததில்
விட்டு நீரிரு நாழியு ழக்காக
    வேயெரித் திரண்டே நாட்கொ டுத்திடில்
துட்ட சேத்துமத் தின்சுரம் வாசியாந்
    தூய்ய சுந்தரர் செந்தமிழ் பாடலில்
இட்டம் வைத்தருள் சங்கரர் பூசையால்
    என்றும் வாழ்சர பேந்திரன் சொன்னதே. 174

(இ-ள்) கஸ்தூரி மஞ்சள்
தான்றிக்காய்த்தோல்
பேய்ப்புடல் சமூலம்
தேவதாரு
திப்பிலி
சீந்தில்கொடி
கடுக்காய்த்தோல்
வேப்பம்பட்டை
நெல்லிமுள்ளி
கோஷ்டம்
கொன்றை வேர்ப்பட்டை

முதலானவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வைத்துக் கொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவு

எடுத்துச் சின்னப்படி ஒருபடி தண்ணீர் விட்டு அடுப்பின்மேல் ஏற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இக்கஷாயத்தை 2 நாட்களுக்குப் பருகிவரக் கப ஜ்வரங்களனைத்தும் தீரும்.

## 152. கப ஜ்வரத்திற்குச் "சிறுகாஞ்சோறிக் கஷாயம்"

சுந்த ரச்சிறு காஞ்சோறி வேராடா
தோடை பச்சிலை சுக்குவரட் சுண்டில்
கந்தஞ் சேர்தேவ தாரமுத் தக்காசு
கட்டுறுங் கடுக் காய்நெல்லி முள்ளிநல்
பந்ததான் றிக்காய் வெட்டும ருந்திரு
பங்கொ டுங்கடை யிற்சரக் கோர்பங்குஞ்
சந்த மாயிடித் தேயெடுத் துப்பின்பு
சார்ந்த பூவிரற் கொண்டது நித்தமே. 175

காரஞ் சேர்சுக்குப் புன்முள்ளுக் கத்திரி
கண்டங் கத்திரி நல்லபி ரண்டையும்
வேர டர்ந்திடா டாதோடை யீர்க்கும்வல்
வேகமாங் கடு குற்றிடும் ரோகணி
நேர தாய்வகை யாறுமொன் றாய்க்கூட்டி
நேம மாய்காய்ச்சித் திப்பிலி மென்பொடி
சேர வேயிட்டுந் தான்குடி நீருண்டாற்
செப்பிடுங் கபத் தின்சுரந் தீருமே. 176

(இ-ள்) சிறுகாஞ்சோறிவேர்
ஆடாதோடை இலை
சுக்கு
வரட்சுண்டி இலை (ஆடு தீண்டாப்பாளை)
தேவதாரு
கோரைக்கிழங்கு
கடுக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி
தான்றிக்காய்த்தோல்

முதலான இம்மருந்துச் சரக்குகளை வகைக்கு 1 வராக னெடை வீதமெடுத்து நிழலிலுலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வாயிலிட்டுக்கொண்டு.

சுக்கு
முள்ளுக்கத்திரி
கண்டங்கத்திரி
பிரண்டைத் துண்டுகள்
ஆடாதோடை ஈர்க்கு
கடுகரோகிணி

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு இதற்கு 8 மடங்கு ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்று ஆக்கி இறக்கிய கஷாயத்துடன் திப்பிலிச் சூரணமும் சேர்த்து விழுங் கவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 153. கப ஜ்வரங்களுக்குக் "குண்டலாதி வேர்க் கஷாயம்"

அந்தஞ் சேர்சங்கம் வேர்குமிழ் வேர்சுக்
கோடக்கை யாந்தக ரைவசம் போமமும்
பந்த மாயின்னந் தான்கண்டங் கத்திரி
பாங்கு டன்சம பாகங்கள் கூட்டியே
முந்த தைக்காய்ச்சி யுண்டுவந் தாலந்த
மூர்க்க மாங்கபத் தின்சுரம் வாசியாஞ்
சுந்த ரச்சங்க நாதசங் கீதருஞ்
சூழ்ந்து வாழ்சர பேந்திரன் சொன்னதே. 177

(இ-ள்) சங்கம்வேர்
குமிழம் வேர்
சுக்கு
கையாந்தகரை சமூலம்
வசம்பு

ஓமம்
கண்டங்கத்திரிவேர்

இவைகளைச் சமமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலில் இட்டு, ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டு. எட்டு மடங்கு சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும்வரை வற்ற வைத்துப் பருகிவரக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 154. கப ஜ்வரங்களுக்குத் "தூதுவளைக் கஷாயம்"

*சீலத்தூ துவளை வேருசெம் முள்ளி*
*சேர்ந்திடு முள்ளுகத் தரிவேர் சுக்குக்*
*கோலஞ் சேர்கண்டங் கத்தரி வேர்சமம்*
*கூட்டி யேயிடித் தேநல்ல நீர்விட்டு*
*மேலதைக் காய்ச்சிக் கொண்டுநற் றிப்பிலி*
*மென்பொடி யிட்டுத் தேனுஞ்சத் தேகுத்திச்*
*சாலவே யுண்ணச் சூழுங்க பச்சுரஞ்*
*சார்ந்தி டாததில் தீர்ந்திடும் பாரிதே.* 178

(இ-ள்) தூதுவளைவேர்
செம்முள்ளிவேர்
முள்ளுக்கத்திரிவேர்
சுக்கு
கண்டங்கத்திரிவேர்

இவைகளைச் சமமெடுத்து நன்றாக நிழலிலுலர்த்திக் கல்லுரலிலிட்டு இடித்து, 8 மடங்கு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்துடன், திப்பிலிச் சூரணமும், தேனும் விட்டுச் சாப்பிடக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 155. கப ஜ்வரத்திற்குப் "படோலாதி கஷாயம்"

பொல்லாப் பேய்புடல் வேலிப்ப ருத்திவேர்
    போர்ந்திடுங் கடுக்காய் முள்ளுக் கத்திரி
யல்லா மற்கடு குற்றநல் ரோகணி
    யாடா தோடையீர்க் குக்கண்டங் கத்திரி
வல்லா ருந்தான்றிக் காய்நெல்லி முள்ளியின்
    வண்மை யாம்மர மஞ்சள்சுக் குஞ்சம
மெல்லாஞ் சேர்த்திடித் தேகாய்ச்சிக் கொண்டதை
    யீந்தி டிற்கபத் தின்சுரந் தீருமே. 179

(இ-ள்) பேய்ப்புடல்
வேலிப்பருத்திவேர்
கடுக்காய்த்தோல்
முள்ளுக்கத்திரிவேர்
கடுகரோகிணி
ஆடாதோடை. ஈர்க்கு
கண்டங்கத்திரிவேர்
தான்றிக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
மரமஞ்சள்
சுக்கு

இவைகளைச் சமமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலின் இட்டு ஒன்றிரண்டாகவிடித்து, 8 மடங்கு ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைத்து, இறுத்துச் சாப்பிடவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 156. பித்த ஜ்வரங்களுக்குத் 'திராக்ஷாதி கஷாயம்'

நன்னயந்தரு முந்திரி கைப்பழம்
    நாகப் பூசுக்குச் செங்கழு நீர்க்கிழங்
கின்னம் நன்னாரி வேர்மது ரங்கூட்டி
    யெவ்வ கைக்கிரு காசெடை வைத்திடி

சொன்ன வாரிரண் டேபடி நீர்விட்டுச்
சூட்ச மாயுழக் காகவுங் காய்ச்சியே
பின்னந் தக்குடி நீர்வடித் துண்டிடிற்
போற்றி டும்பித்தக் காய்ச்சலை மாற்றுமே. 180

(இ-ள்) சுக்கு
திராக்ஷைப்பழம்
சிறுநாகப்பூ
செங்கழுநீர்க் கிழங்கு
நன்னாரிவேர்
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை விதமெடுத்துக் காயவைத்து ஒன்றிரண்டாகவிடித்துச் சுத்த ஜலம் (சின்னப்படிக்கு) ஒருபடி விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக் காகும் வரை வற்றக்காய்ச்சவும்.

இக்கஷாயத்தைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 157. பித்தக் காய்ச்சலுக்கு 'முஸ்தாதி கஷாயம்'

முத்தக் காசுவிலா மிச்சவேர் கந்தம்
முற்று சந்தனஞ் சுக்கிரு வேலிவேர்
கொத்த லர்ந்திடும் பற்பாட கத்தோடுங்
கூறு மோர்வகைக் கீர்கழஞ் சேநிறை
வைத்தி டித்ததி லேயிரு நாழிநீர்
வார்த்து ழக்காகக் காய்ச்சி வடித்ததை
சித்தந் தான்மகிழ்ந் தேநித்த முண்டிடிற்
சேர்ந்திடும் பித்தக் காய்ச்சலுந் தீருமே. 181

(இ-ள்) கோரைக்கிழங்கு
இலாமிச்சைவேர்
சந்தனத்தூள்
சுக்கு

வெட்டிவேர்

பற்பாடகம்

முதலான சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீத மெடுத்து, ஒன்றிரண்டாகவிடித்துச் சுத்த ஜலம் 1 படி விட்டு (சின்னப்படி ½) அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டில் ஒன்றாக்கி இறக்கவும்.

இதனைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

❋❋❋❋

## 158. பித்த ஜ்வரங்களுக்குச் "சீரகாதிப் பால்"

சந்தச் சீரக மோர்பலம் வெட்டிவேர்
சாற்றி டோர்பலஞ் சந்தன மோர்பலம்
அந்தமுந் திரிகைப் பழமீர் பலமல்
லாலத்தித் திப்பிலி தானோர் கழஞ்சதே
பந்த மாயிரு நாழிநந் நீர்வார்த்தப்
பாலுழக் காகக்காய்ச் சியபால் நாழி
பிந்த வேவிட்டு முக்காகக் காய்ச்சியே
பித்தக் காய்ச்சலுக் குண்டிடில் நன்றதே. 182

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சீரகம் | 1 | பலம் |
| | வெட்டிவேர் | — | ,, |
| | சந்தனத்தூள் | — | ,, |
| | திராக்ஷைப்பழம் | — 2 | ,, |
| | யானைத்திப்பிலி | — 1¼ | வராகனெடை |

இவைகளை இடித்துச் சின்னப்படி ஒன்று சுத்த ஜலம் விட்டுப் பசுவின் பால் சின்னப்படி ½ யும் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகு மட்டும் வற்றக் காய்ச்சவும். பின்பு இக்கஷாயத்தை இறுத்துப் பருகிவரப் பித்தக்காய்ச்சல்கள் தீரும்.

## 159. கப ஜ்வரத்திற்குப் ''பார்ங்கியாதி கஷாயம்''

*சுந்த ரஞ்சேர் சிறுதேக்குப் பெருமர*
*வேர்மிள காடா தோடை யின்வேர்*
*கந்த மிகுஞ்சுக் குகையாந் தகரைச்*
*சங்கம் வேரொடு தேட்கடை வேர்நேராய்*
*யித்த வகைசேர்த் திடித்தோர் மூவிரற்*
*தூளிரு நாழி யின்னீர் தன்னில்*
*பந்தமு டன்காய்ச்சி யுழக்குண் டிடிற்*
*சேட்டுமச் சுரந்தான் பறந்து போமே.* 183

(இ-ள்) சிறுதேக்கு
பெருமரத்தின்வேர்
மிளகு
ஆடாதோடையின் வேர்
சுக்கு
கையாந்தகரை
சங்கம்வேர்
தேட்கொடுக்கிவேர்

இவைகளை சமனெடுத்து நிழலிலுலர்த்திக் கல்லுரலில் இட்டு ஒன்றிரண்டாக இடித்தத் தூளில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு, சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் எரித்து இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவரக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 160. கப ஜ்வரத்திற்கு 'கடுகரோகிணியாதி கஷாயம்'

*சீலமுள்ள கடுகரோ கிணிகடுக்காய்*
*மஞ்சிட்டி தேவதாரம்*
*கோலமுயர் நற்செவ்வியம் வகைக்கிரு*
*கழஞ்சுநிறை கூட்டிக்கொண்டு*

மேலதனை யிடித்தெடுத்துத் தண்ணீரி
லிருநாழி மிதமாய்விட்டு
சாலவுந்தா னேயெரித்தே யெட்டிலொரு
பாகமது சட்டந்தானே. 184

சட்டமாய்க் காய்ச்சிவடித் தேயெடுத்துக்
கொண்டுபின்பு சாற்றக்கேளாய்
திட்டமொடு திப்பிலியு மிந்துப்புமே
சமதையாய்ச் சேர்த்துத்தானே
யிட்டமதா யிருமருந்து தூள்படுத்தி
மென்பொடிக ளிட்டேயுண்டால்
தொட்டமிடும் பொல்லாத சேட்டுமச்
சுரங்களெல்லாங் குணமதாமே. 185

(இ-ள்.) கடுகரோகிணி
கடுக்காய்த்தோல்
மஞ்சிட்டிக் கிழங்கு
தேவதாரம்
செவ்வியம்

முதலான சரக்குகள் வகைக்கு 2½ வராகனெடை வீத மெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு ஊறவைத்து, அடுப்பின் மேலேற்றி எட்டிலொரு பங்காகுமட்டும் எரிக்கவும். இக் கஷாயத்தை வடிக்கட்டிக் கொண்டு, திப்பிலிச் சூரணமும், இந்துப்புச் சூரணமும் வகைக்கு 1¼ வராகனெடை வீதம் போட்டுக் கஷாயத்தைப் பருகவும், ச்லேஷ்ம ஜ்வரங்கள் குணமாகும்.

## 161. பித்த ஜ்வரங்களுக்குத் 'தீராக்ஷாதி கஷாயம்'

முந்திரிகைப் பழங்கடுக ரோகிணிகொன்
றைப்பழம்நல் முத்தக்காசு
சுந்தரபற் பாடகமிவ் வகைக்கிரு
கழஞ்சுநிறை சுகமாய்க்கூட்டி

பந்தமுட னிடித்துநன்னீ ரிருநாழி
விட்டுழக்காய்ப் பதத்திற்காய்ச்சி
யிந்தவண்ண முண்டுவந்தால் பொல்லாத
பித்தசுரங்க ளெல்லாம்போமே. 186

(இ-ள்.) திராக்ஷைப்பழம்
கடுகரோகிணி
கொன்றைப்பழம்
கோரைக்கிழங்கு
பற்பாடகம்

முதலியவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீத மெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாகவிடித்துச் சின்னப்படி ஒன்று சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்றக் காய்ச்சவும். இதனைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 162. பித்தக் காய்ச்சலுக்குத் 'திராக்ஷாதி கஷாயம்'

நன்னயஞ்சேர் முந்திரிகைப் பழம்பேரீச்
சம்பழம்நன்னாரிவேரு
கன்னாலி மிளகரணையிரு வேலியின்வே
ரதிமதுரங் காரஞ்சேரும்
அன்னசுக்குப் பெருந்துத்தி வேருகோ
ரோசனையி தல்லாமற்றான்
யின்னம்விலா மிச்சம்வே ரிலுப்பைப்பூ
சந்தனத்தோ டியம்பக்கேளே. 187

இயம்பும் நெய்தற்கிழங்கு நரிப்பயத்தம்
........ – ...களெல்லாங்கூட்டி
தயங்காம லேயிடித்து முன்னாழி
யிளநீரிற் றானேபோட்டு
நயங்கொளந்தச் சிறுபயறும் நெற்பொரியு
மொருதுணியில் நன்றாய்க்கட்டி
வியந்தகுமுன் மருந்தின்நீ ருடன்சேர்த்து
யின்னமுந்தான் விளம்பக்கேளே. 188

விளம்புவண்ணந் தப்பாம லேயுரியாய்
காய்ச்சியதில் விபரமாக
வளம்பெருநற் சர்க்கரையாய்த்
தக்கதிட்டு வடித்துக் கொண்டு
உளம்பொருந்த வொவ்வொருழக் காய்த்தினந்தா
னிருபொழுது முறுதிலைத்தே
தளம்பாம லுண்டுவந்தால் பொல்லாத
பித்தசுரமுந் தானேபோமே. 189

(இ-ள்) திராக்ஷைப்பழம்
பேரீச்சம்பழம்
நன்னாரிவேர்
மிளகரணைவேர்
வெட்டிவேர்
அதிமதுரம்
சுக்கு
பெருந்துத்திவேர்
கோரோசனை
விலாமிச்சம்வேர்
இலுப்பைப்பூ
சந்தனத்தூள்
நெய்தல்கிழங்கு
நரிப்பயற்றஞ் செடி

இவைகளைச் சமனெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக விடித்து (வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை) இளநீர் சின்னப் படி $1\frac{1}{2}$ சேர்த்துக் கலக்கி, அதில் சிறு பயறும், நெற்பொரியும் சேர்த்துக் கட்டிய முடிச்சைப் போட்டு அடுப்பின் மேலேற்றி எரிக்கவும். இக்கஷாயம் ஆறிலொன்றாக ஆகியவுடன் கீழிறக்கி வடிக்கட்டிக் கொண்டு வேண்டிய அளவு சர்க்கரை கூட்டிக்கொள்ளவும். இக்கஷாயத்தில் வேளைக்கு ஒரு உழக்கெடுத்துத் தினம் 2 வேளை பருகிவரப் பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 163. கப ஜ்வரத்திற்கு முஸ்தாதிக் கஷாயம்

வெல்லமுத்தக் காசுபெருங் குறும்பையின் வேர்
கோஷ்டமதி விடையஞ்சுக்கு
பல்லவஞ்சூழ் புங்கம்விரைத் தோல்மிளகு
வேப்பலகு பருத்திவேரு
நல்லபெருங் குமிழ்கடுக ரோகிணிகீழ்
காய்நெல்லிவேர் நாகப்பூவுஞ்
சொல்லந்த மணத்தேவ தாரமொடு
பேசுவகைச் சுகமாய்க் கேளே. 190

சுகமாய்ப்பேய்ப் புடல்சீந்திற் கொடிசிறுகாஞ்
சொறியிதெலாஞ் சொல்லுமொவ்வோர்
வகைக்கதுமுக் கழஞ்சுநிறை கூட்டியீடித்
தொருநாழி வளநீர் வார்த்து
பகருழக்காய் காய்ச்சியதி லிந்துப்புக்காற்
கழஞ்சுமிட்டுப் பண்பாயுண்டால்
அகமயக்கஞ் செய்திடுஞ்சேட் டுமச்சுரத்தை
வாசிசெய்யு மமுதமாமே. 191

(இ-ள்.) கோரைக்கிழங்கு
பெருங்குறும்பை வேர்
கோஷ்டம்
அதிவிடையம்
சுக்கு
புங்கங்கொட்டைத் தோல்
மிளகு
வேப்பம் ஈர்க்கு
பருத்திவேர்
பெருங்குமிழ் வேர்
கடுகரோகிணி
கீழாநெல்லி வேர்
சிறுநாகப்பூ
தேவதாருக்கட்டை
பேய்ப்புடல்

சீந்தில்கொடி
சிறுகாஞ்சோறிவேர்

இச்சரக்குகளை வகைக்கு 3¾ வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துப் பத்திரப் படுத்தவும். இதில் (மூவிரல் கொள்ளுமளவு) எடுத்துத் தண்ணீர் சின்னப்படி ½ விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டி லொன்றாகும் வரை வற்ற வைத்து இறுத்து, இந்துப்பு 10 குன்றிமணி நிறை போட்டுப் பருகவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 164. கப ஜ்வரத்திற்குக் "குண்டலாதி கஷாயம்"

சங்கம்வேர் கண்டங்கத் திரிவேர்தூ
தூவளைவேர் சாயவேரும்
பங்கமிலா வீழிவேரா டாதோடை
யின்வேரும் பாரில்மேவும்
பொங்கமுள முள்ளிவே ரேழுவேருஞ்
சரியிடித்துப் போட்டுத்தண்ணீர்
வங்கணமா யிருநாழி விட்டுழக்காய்க்
காய்ச்சியதை வடித்திடாயே. 192

வடித்துநல்ல திப்பிலியைச் சட்டியிலே
பொன்வறுக லாய்வறுத்துப்
பொடித்துநற்றே னுங்கலந்து மந்திசந்தி
யுண்ணுமதிற் போகும்வியாதி
துடித்தசேத் துமசுரமும் பறந்தோடுந்
தஞ்சைநகர் துரைத்தனஞ் செய்
படித்தவர்கட் கன்புசெய்யுஞ் சரபேந்திர
மகராசன் பகர்மருந்தே. 199

(இ-ள்.) முட்சங்கன் வேர்
கண்டங்கத்திரிவேர்
தூதுவளைவேர்

இம்புராவேர்
வீழிவேர்
ஆடாதோடைவேர்
முள்ளிவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துக் காய வைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாகவிடித்து வைத்துக் கொள்ளவும். பின்பு இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளும் அளவெடுத்து எட்டு மடங்கு ஜலம் விட்டு, அடுப்பின் மேல் ஏற்றி$\frac{1}{8}$ பாகமாகச் சுண்டவைத்து இறுத்துக் கொள்ளவும்.

இதனுடன் திப்பிலியைப் பொன் வறுவலாக வறுத்துச் சூரணித்துப் போட்டுச் சிறிது தேனும் விட்டுத் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பருகவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 165. கப ஜ்வரங்களுக்குச் "சீந்தில் கஷாயம்"

சீந்தில்த் தண்டுட னடாதோடை
நிலவேம்புடனே சிறுகாஞ்சோறி
சாந்தமுடனே சமனாய்க் கொண்டு
யிருநாழி நீ ரதனைவார்த்துப்
பாந்தமுட னுழக்காகக் காய்ச்சி
யதைக்கொள் நீயும் பத்துவேளை
காந்த மிகுஞ்சேற் றுமத்தின் சுரமக
லும்மெனமானுங் கருதும்வாறே. 194

கொண்டிடனு பானமிரண் டினிலொன்றைச்
சுரத்தினுட கூறறிந்து
மண்டிஞ்சேத் துமஜ்வரங்கள் பறக்குமிகு
வேளையுண்ணு வைந்துநாடான்
மண்டலத்தில் கீர்த்திபெரும் பந்துஜன
சேகரன்வித் துவசனர்க்கன்பன்
அண்டினரைக் கார்க்குஞ்சரத் பேந்திரனுண்
ணறியவுண்டை யருந்திப்பாரே. 195

(இ-ள்) சீந்தில் தண்டு
ஆடாதோடை
நிலவேம்பு
சிறுகாஞ்சோறி

இவைகளைச் சமனெடுத்து (வகைக்கு 1 பலம்) ஒன்றிரண்டாகவிடித்துச் சின்னப்படி 1 படி சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாக இறக்கித் தினம் 2 வேளை சாப்பிடவும். 5 நாட்களுள் கப ஜ்வரங்கள் தீரும்.

## 166. கப ஜ்வரங்களுக்கு "வசாதி கஷாயம்"

வசம்பாடா தோடையினீர்க் கும்பிரண்டை
வேருடனே வளமாஞ்சுக்கு
நிசம்பாப்பா ரமுள்ளி வேர்கடுக
ரோகணியும் விளம்புமாறு
மிசபாகச் சமபாக மாகவுமே
தட்டியதை யியல்பதாகச்
சுசியான நாழிசலம் விட்டுழக்காய்க்
காய்ச்சியதைத் துணியாற்றானே. 196

துணியாலே வடிகட்டிற் றேன்விட்டுத்
திப்பிலியின் றூளும்போட்டு
வுணுநீயு மந்திசந்தி மூன்றுநா
டனிர்சேற்றும முற்றதாபங்
கணிலேகா ணுமற்பறந் தோடுமந்தச்
சிவனுடைய கருணையாலே
மணியணியுந் திருமார்பன் சரபேந்திர
பூபனருள் வைத்யமாமே. 197

(இ-ள்) வசம்பு
ஆடாதோடை யீர்க்கு
பிரண்டைவேர்

சுக்கு
பாப்பாரமுள்ளி (வெள்ளைக்கண்டங்கத்திரிவேர்)
கடுகரோகிணி

இவைகளை வகைக்கு ( $\frac{1}{4}$ பலம் ) வீதமெடுத்துக் காய வைத்து நன்றாகவிடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்றக்காய்ச்சவும். பின்பு இக்கஷாயத்தை வடிக்கட்டித் தேனும் திப்பிலிச் சூரணமும் போட்டுத் தினம் 2 வேளை காலையிலும் மாலையிலும் சாப்பிடவும். 3 நாட்களுள் கப ஜ்வரங்கள் தீரும்.

## 167. கப ஜ்வரங்களுக்குச் ''சித்திரமூலாதிக் கடாயம்''

சித்திரமூ லம்பாப்பா ரமுள்ளி
வேருடனே செம்முள்ளிவேர்
சுத்தசிறு வழுதலைவேர் சுக்கைந்துஞ்
சரிபாகத் தொடுத்தெடுத்து
யித்தனையுந் தட்டியொரு நாழிநீர்
விட்டுழக்கா யிதமாய்க்காய்ச்சி
நித்தமந்தி சந்தியுமூன் றேநாளு
முண்ணநோ யேகுந்தானே. 198

ஏகுஞ்சேத் துமசுரமுங் கால்கண்ட
பஞ்சதுபோ லிருந்திடாது
பாகமிகு முக்கனிதேன் பாய்ந்துமிளஞ்
செந்நெல்வளர் பண்ணைசூழும்
யோகதஞ்சா புரிக்குதுரை சோழவள
நாட்டுக்கோ ரும்பர்கோமான்
வாகுளபா வலர்திறமை யறிசரபேந்
திரனுணர்ந்த வண்மைதானே. 199

(இ-ள்) கொடிவேலி வேர்ப்பட்டை
பாப்பார முள்ளிவேர்
செம்முள்ளிவேர்

சிறுகத்திரிவேர்
சுக்கு

இவைகளை வகைக்கு ( ¼ பலம் ) வீதமெடுத்துக் கல்லுரலில் லிட்டிடித்து, சுத்தஜலம் சின்னப்படி ½ படி விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக வற்றவைத்து இறக்கவும். இக்கஷாயத்தைத் தினம் இரு வேளையிலும் பருகி வரவும். 3 நாட்களுள் கப ஜ்வரங்கள் தீரும்.

## 168. கப ஜ்வரங்களுக்குக் "கடுகரோகிணி மாத்திரையும் சுக்காதிக் கடாயமும்"

சடுகரோ கணியுமொரு கழஞ்சுநேர்
வாளவிடங் கடுகப்போக்கி
யடவுடனே நாற்கழஞ்சு மிதைநாழி
வறகாலி யாட்டுப்பாலை
வடியவே காய்ச்சிகோ ரசனையுங்
கழஞ்சுமதில் வகையாய்ச்சேர்த்துத்
துடியாக வரைத்துகற்றா முஞ்சோறுங்
கடுக்காயின் றூளும்போடே. 200

போட்டெல்லாம் பிசைந்தரைத்துக் குன்றியள
வுண்டைசெய்து புதுமையாக
வாட்டமிலா நிழல்தனிலே யுலர்த்தியந்த
வுண்டைதனை வைத்துக்கொண்டு
நாட்டினிற்சுக் குப்பாலி லோருண்டை
யிடுவின்னம் நவில்வேனென்று
தாட்டிகப்பே ராமுட்டி வேர்சுக்குக்
காய்ச்சியநீ ரினிற்கொள்வாயே 201

சுக்குடனே பாப்பார முள்ளிவே
ருடனாட தோடையிர்க்கும்
பக்குவமாஞ் சிறுவழுத லையின்வேருங்
காவளைவேர் பாரில்தானே

யெக்கிவளர் செம்முள்ளி வேருடனே
முஞ்சமனாய் எடுத்துத்தட்டி
யொக்கவுமே நாழிநீர் விட்டதிலே
காய்ச்சுழக் காகத்தானே. 202

ஆகவடிக் கட்டியதிற் திப்பிலித்தூள்
தேன்கூட்டி யந்திசந்தி
யாகவிரு வேளையுண்ணு சுக்காதிக்
கடாயமிதுக் ககலும்நோய்கேள்
போகுஞ்சேத் துமச்சுரமு மூன்றுநா
ளிற்கடவுள் பூசைசெய்து
வாகுபெருந் தஞ்சைசர பேந்திரனரு
ளிம்முறையின் மகிமைதானே. 203

(இ-ள்.) கடுகுரோகிணி 1¼ வராகனெடை
சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 5 ,,

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு, சின்னப்படி ½ படி ஆட்டுப்பாலுக்கு 1 ¼ வராகனெடை கோரோசனை போட்டு காய்ச்சிச் சுண்டவைத்த பாலைவிட்டு, நன்றாக அரைக்கவும். பின்பு அதனுடன் கற்றாழஞ் சோற்றையும், கடுக்காய்த் தூளையும் வகைக்கு 1¼ வராகனெடை சேர்த்து நன்றாக அரைத்துக்கொண்டு, குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதில் ஒரு மாத்திரையை எடுத்துச் சுக்குக் கஷாயத்திலோ அல்லது பசுவின் பாலிலோ சாப்பிடவும். 2 அல்லது 3 தடவை மலங்கழிந்து கப ஜ்வரங்கள் நீங்கும்.

சுக்கு
பாப்பாரமுள்ளி (வெள்ளைக்கண்டகத்திரி)
ஆடாதோடையீர்க்கு
சிறுகத்திரிவேர்
காய்வேளை வேர்
செம்முள்ளி வேர்
பேராமுட்டிவேர்

ஆக இந்த 7 வகைச் சரக்குகளையும் வகைக்கு $\frac{1}{4}$ பலம் விதமெடுத்து இடித்துச் சின்னப்படி $\frac{1}{2}$ படியளவு தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து இறக்கி வடிக்கட்டித் திப்பிலிச் சூரணமும், தேனும் விட்டுக் கலந்துத் தினம் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

3 நாட்களுள் கப ஜ்வரங்கள் தீரும்.

## 169. கப ஜ்வரத்திற்கு 'வெட்பாலைக் கஷாயம்'

அந்தவெட்பா லையினரிசி நல்லசிறு
காஞ்சோறியு மாடாதோடை
சந்தமுத்தக் காசுமிவ் வகைக்கிரு
கழஞ்சுநிறை கணக்காய்ச்சேர்த்துப்
பந்தமுட னிருநாழி நீரதுவிட்
டுழக்காகும் படியேகாய்ச்சி
யிந்துப்பு மென்பொடியிட் டீந்திடிற்சேத்
துமச்சுரங்க ளெல்லாம்போமே. 204

(இ-ள்) வெட்பாலையரிசி
சிறுகாஞ்சோறிவேர்
ஆடாதோடைவேர்
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு 2 $\frac{1}{2}$ வராகனெடை விதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரிக்கவும். எட்டிலொன்றாக வற்றியபின் இக்கஷாயத்தை வடிக்கட்டி இந்துப்புச் சேர்த்துச் சாப்பிடவும். கப ஜ்வரங்கள் தீரும்.

குறிப்பு: ஆம அதிசாரத்தோடு கூடிய ஜ்வரங்களுக்கும் இதை வழங்கலாம்

## 170. சேத்தும ஜ்வரத்திற்கு "முஸ்தாதி கஷாயம்"

மருவுமுத்தக் காசுகொன்றைத் தோல்கடுகு
ரோகிணியு மன்னும்வேலிப்
பருத்திபுரந் தோல்சிறுமூ லகஞ்சிறுக்கீ
ரையின்வேர்பண் பாய்வகைக்கே
யிருகழஞ்சு கூட்டியிடித் தெடுத்ததிலே
யிருநாழி யின்னீர்விட்டே
ஒருமையுட னேயெரித்தோ ருழக்காகக்
காய்ச்சிவடித் தோதக்கேளே. 205

ஓதக்கேள் சாரமுள்ள திப்பிலியிற்
காற்கழஞ்சு முயற்சியான
சீதளந்தோய்ந் திலங்குமிந்துப் புத்தனிலே
காற்கழஞ்சு சேர்த்திரண்டும்
நீதமுட னேயரைத்து மென்பொடியிட்
டுக்குடியின் னீரேயுண்டால்
ஆதவனைக் காண்பனிபோல் சேத்துமச்சு
ரங்களெல்லா மகன்றுபோமே. 206

(இ-ள்) கோரைக்கிழங்கு
கொன்றைப்பட்டை
கடுகரோகிணி
வேலிப்பருத்தித்தோல்
திப்பிலி
சிறுக்கீரைவேர்

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக்கி இறக்கவும்.

இக்கஷாயத்தை இறுத்துத் திப்பிலி 10 குன்றியெடையும் இந்துப்பு 10 குன்றியெடையும் சூரணித்துப்போட்டுப் பருகவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 171. கப ஜ்வரங்களுக்கு ''வேப்பலகுக் கஷாயம்''

செப்பியவேப் பலகுசுக்கு கச்சோல
மதிவிடயஞ் சீந்திற்தண்டோ
டொப்பிலா நற்தேவ தாரமத்தக்
கோஷ்டமிவை யோர்வகைக்கே
வைப்பதரைக் கழஞ்சதில்நீ ரிருநாழி
விட்டுழக்காய் வடித்திந்துப்பு
கொப்பிலுற்ற தேன்கலந்துண் டாற்சேத்து
மச்சுரங்கள் குணமதாமே. 207

(இ-ள்.) வேப்பலகு
சுக்கு
கச்சோலம்
அதிவிடையம்
சீந்தில்கொடி
தேவதாரம்
கோஷ்டம்

இவைகளை வகைக்கு 20 குன்றியெடை வீதமெடுத்து நன்றாக இடித்து, சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றவைத்து, இறுத்து இந்துப்பும், தேனும் கொஞ்சம் கலந்து சாப்பிடவும்.

கப ஜ்வரங்கள் தீரும்.

XXXX

## 172. கப ஜ்வரங்களுக்குப் ''பலா குடுச்யாதி கஷாயம்''

அந்தமிகுஞ் சித்தமட்டி வேருகண்டங்
காலியின்வே ரரத்தைசீந்தில்
இந்தவகை யொன்றினுக்கு முக்கழஞ்சு
நிறைகூட்டி யிடித்துத்தண்ணீர்
பிந்தவுந்தா னிருநாழி விட்டுழக்காய்க்
காய்ச்சிநற்றிப் பிலித்தூள்போட்டு

பந்தமுடனுண்டுவந்தால் சேத்துமச்சு
ரங்களெல்லாம் பறந்துபோமே. 208

(இ-ள்.) சிற்றாமுட்டிவேர்
கண்டங்கத்திரிவேர்
சிற்றரத்தை
சீந்தில்கொடி

இச்சரக்குகளை வகைக்கு 3¾வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீர் 2 படி (சின்னப்படி ஒன்று) விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காகும்வரை வற்றவைத்து, இறுத்துத் திப்பிலிச் சூரணம் போட்டுப் பருகவும். கப ஜ்வரங்கள் தீரும்

## 173. கபஜ்வரம், வெள்ளோக்களம் முதலியவைகளுக்குத் "தூதுவளையாதிக் கஷாயம்"

தூதுவளைவேர் சங்கம்வேர் பேரரும்பில்
வேராடா தோடையின்வேர்
ஓதுசிறு வழுதலைவே ரின்புராவேர்
கடுக்காயு யர்ந்தசுக்கு
மீதுவகைக் கோர்கழஞ்சு சரிகூட்டி
யிடித்ததிலே மிதமாய்நீரப்
போதுமிரு நாழிவிட்டு ழக்காகக்
காய்ச்சிவடி பொருத்தந்தானே. 209

பொருத்தமந்தத் திப்பிலியிந் துப்புமொன்றாய்
மென்பொடிகள் போட்டுக்கொண்டே
அருந்திவந்தால் பொல்லாத சேட்டுமச்சு
ரங்களுட னல்லாவின்னந்
திருந்தாம லெழுந்திடும்வெள் ளோக்காள
மிகுநோயுந் தீருமிந்த
மருந்தின்முறை கூறியது சரபேந்திர
பூபதியே மகிழ்ந்துதானே. 210

(இ-ள்) தூதுவளைவேர்
சங்கம்வேர்
பேராமுட்டிவேர்
ஆடாதோடைவேர்
சிறுகத்திரிவேர்
இம்பூராவேர்
கடுக்காய்த்தோல்
சுக்கு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாகும் வரை வற்றவைத்து வடிகட்டிக் கொள்ளவும். இக் கஷாயத்தில் திப்பிலித்தூளும் இந்துப்பும் சேர்த்துப் பருகவும். இதனால் கப ஜ்வரங்களும் வெள்ளோக்காளமும் தீரும்.

****

## 174. கப ஜ்வரத்திற்கு "ஹரித்ராதி கஷாயம்"

வன்னமஞ்சள் நற்கடுக ரோகிணிபொற்
செவ்வியமொடு வண்கடுக்காய்
நன்னயஞ்சே ருந்தேவ தாரமொவ்வோர்
வகையினுக்கே நன்றாய்மூன்றே
சொன்னது வராகனெடை யிடித்தநீ
ரொருநாழி சுகமாய்விட்டு
முன்னமுழக் காய்க்காய்ச்சி யுண்டிடிற்சேத்
துமச்சுரந்தான் முறிந்துபோமே. 211

(இ-ள்) மஞ்சள்
கடுகரோகிணி
செவ்வியம்
கடுக்காய்த்தோல்
தேவதாரம்

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, ஒரு உழக்காகும்வரை வற்ற வைத்துச் சாப்பிடவும்.

கப ஜ்வரங்கள் தீரும்.

## 175. தலைபாரம், இடுப்புவலி, வீக்கம், கபஜ்வரம், முதலானவைகளுக்கு 'நிலவேம்புக் கஷாயம்'

நிலவேம்பு வெட்பாலை யரிசிகண்டங்
    கத்திரிவேர் நீர்கடுக்காய்
நல்கடுக ரோகிணிதிப் பிலிமிளகு
    பொற்கொன்றை நன்றும்வேருங்
குலவியபேய்ப் புடல்கோரைக் கிழங்குசிறு
    வழுதலைவேர் கூட்டிக்கொண்டே
அலதொருவ கைக்கிரண்டு காசெடைசேர்த்
    திடித்ததனி லப்புத்தானே. 212

அப்புநன்றா யிருபடிவிட் டேயெரித்துக்
    காய்ச்சிவடித் தப்பாற்கேளுஞ்
செப்புமுறை தப்பாம லொவ்வொருழக்
    குத்தினமுஞ் சீராய்த்தானே
ஒப்புடனுண் டாலிருமல் தலைபார
    மிடுப்புவலி வுடம்பின்வீக்கம்
வெப்புளசேத்து மச்சுரந்தான் புண்ணியமுன்
    பாபமென விலகிப்போமே. 213

(இ-ள்) நிலவேம்பு
வெட்பாலையரிசி
கண்டங்கத்திரிவேர்
கடுக்காய்த்தோல்
கடுகரோகிணி
திப்பிலி

மிளகு
பொற்கொன்றைவேர்
பேய்ப்புடல்
கோரைக்கிழங்கு
சிறுகத்திரிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்துச் சாப்பிடவும். தினம் ஒரு உழக்கு வீதம் இதனையுட்கொள்ள இருமல், தலைபாரம், இடுப்புவலி, உடம்புவீக்கம் கப ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

## 176. கப ஜ்வரத்திற்குச் 'சந்தனாதி கஷாயம்'

சந்தனம்நெய் தற்கிழங்கு நிலவேம்பு
    வெட்டிவேர்த் தண்டிதல்லால்
கந்தவிலா மிச்சைகண்டங் கத்திரிகோ
    ரைக்கிழங்கு காரச்சுக்கு
சுந்தரபற் பாடகம்பொன் முசுட்டையின்வே
    ரிடித்துநந்நீர் சுண்டக்காய்ச்சி
முந்தவுஞ்சர்க் கரையதுபோட் டுண்டாற்சேத்
    துமச்சுரந்தான் முறிந்துபோமே. 214

(இ-ள்) சந்தனத்தூள்
நெய்தல்கிழங்கு
நிலவேம்பு
வெட்டிவேர்
இலாமிச்சைவேர்
கண்டங்கத்திரிவேர்
கோரைக்கிழங்கு
சுக்கு
பற்பாடகம்
பொன்முசுட்டைவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து இடித்துச் சின்னப்படி ஒன்று சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகச் சுண்டவைத்துச் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 177. சேத்தும ஜ்வரங்களுக்குக் "கொத்தமல்லிக் கடாயம்"

கொத்தமல்லி பொன்முசுட்டை வேருசுக்கு
 நிலவேம்புக் கொடிநீள்சீந்தில்
முத்தக்கா சுஞ்சிறுகாஞ் சோறிதூது
 வளைவேரு மொழிபற்பாட
கத்தையுஞ்சேர்த் திடித்திரண்டு படிநீர்விட்
 டுழக்காகக் காய்ச்சியுண்டால்
நித்தமுந்தான் வாதனைசெய் சேத்துமச்சு
 ரங்களெல்லாம் நீங்கிப்போமே. 215

(இ-ள்) கொத்தமல்லிவிதை
பொன்முசுட்டைவேர்
சுக்கு
நிலவேம்பு
சீந்தில்கொடி
கோரைக்கிழங்கு
தூதுவளைவேர்
பற்பாடகம்

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடையெடுத்து இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்துச் சாப்பிடக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 178. கப ஜ்வரத்திற்குத் ''தேவதார்வாதி கஷாயம்''

கந்தமிகுந் திலங்குகின்ற நற்றேவ
தாரம்நெல்லிக் காய்ப்பருப்பு
சுந்தரஞ்சே ருங்கடுக்காய் திராயாடா
தோடையல்லாற் சுக்குங்கூட்டிப்
பந்தமுட னிடித்துநன்னீர் விட்டுழக்கா
சுக்காய்ச்சிப் பண்பாயுண்டால்
சிந்தனைசெய் பொல்லாத சேத்துமச்சு
ரங்களெல்லாஞ் சிதறிப்போமே. 216

(இ-ள்) தேவதாரு
நெல்லிக்காய்க்குள்ளிருக்கும் பருப்பு
கடுக்காய்த்தோல்
திராய்
ஆடாதோடைவேர்
சுக்கு

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இடித்து, சின்னப்படியாலொன்று சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை எரித்து வடிகட்டிச் சாப்பிடவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 179. கபகாசம், ஜ்வரம் முதலானவைகளுக்குச் சுண்ட்யாதி கஷாயம்

மட்டிலங்குஞ் சுக்குகண்டங் கத்திரியும்
போட்டிடித்து மட்டமாய்த்தண்ணீர்
விட்டெரித்துக் காய்ச்சியதில் திப்பிலியின்
மென்பொடிதான் வேண்டத்தக்க
திட்டுண்டால் பீனிசஞ்சேத் துமச்சுரஞ்
சேத்மகாச மெல்லாந்தானே
ஒட்டிடா மற்பறக்குஞ் சூரியன்முன்
கங்குலொப்பா யொடுங்கித்தானே. 217

(இ-ள்) சுக்கு,கண்டங்கத்திரிவேர் இவ்விரண்டையும் வகைக்கு (2 வராகனெடை) வீதமெடுத்து நசுக்கித் தண்ணீர் சின்னப்படி ஒன்றுவிட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து உழக்காக்கி இறக்கவும். இதனுடன் வேண்டிய அளவு திப்பிலிச் சூரணமிட்டு உட்கொள்ளவும். கப ஜ்வரம் பீனசம், கபகாசம் முதலானவைகள் தீரும்.

## 180. கப ஜ்வரங்களுக்கு "முன்னைக் கஷாயம்"

முன்னையின்வேர் சுக்குகண்டங் கத்திரிவேர்
சீந்திலும்பொன் முசுட்டைவேரும்
பின்னைசிறு வழுதலைவேர் பற்பாட
கங்களிவை பிசகாமற்றான்
யின்னவகை யொன்றினுக்கே கழஞ்சதுசேர்த்
திருநாழி யேநீர்விட்டே
அன்னதுழக் காய்க்காய்ச்சி யுண்டிடிற்சேத்
துமச்சுரந்தா னகன்றுபோமே. 218

(இ ள்) முன்னைவேர்
சுக்கு
கண்டங்கத்திரிவேர்
சீந்தில்கொடி
பொன்முசுட்டைவேர்
சிறுகத்திரிவேர்
பற்பாடகம்

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சின்னப்படி ஒன்று ஜலம் விட்டு, அடுப்பின்மேல் ஏற்றி எரித்து உழக்காக்கிப் பருகக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 181. கப ஜ்வரத்திற்குச் "சீந்தில் கொடிக் கஷாயம்"

சுந்தரஞ்சேர் சீந்திலா டாதோடை
பேய்ப்புடலுஞ் சுக்குங்கூட்டி
யிந்தவகை யொன்றினுக்கே மூன்றது
வராகனெடை யிடித்துப் போட்டுப்
பந்தமிரு நாழிநந்நீர் விட்டுழக்காய்க்
காய்ச்சியதைப் பண்பாயுண்டால்
வந்தடுத்த பொல்லாத சேத்துமச்சு
ரங்களெல்லாம் வாசியாமே. 219

(இ-ள்) சீந்தில்கொடி
ஆடாதோடைவேர்
பேய்ப்புடல்
சுக்கு

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்து இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை சுண்டவைத்துச் சாப்பிடக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 182. கப ஜ்வரங்களுக்குப் 'படோலாதி கஷாயம்'

கைத்திடும்பேய்ப் புடல்கடுக ரோகணிவேப்
பலகுமுத்தக் காசுசீந்தில்
உத்தமாந்தி ருபலையிவ் வகைக்கிரண்டு
காசெடைசேர்த் தொன்றாய்க்கூட்டி
வைத்திடித்தீர் நாழிதண்ணீர் விட்டுழக்காய்க்
காய்ச்சியதை வடித்தேயுண்டால்
மெத்தவுந்தான் வாதனைசெய் சேத்துமச்சு
ரங்களெல்லாம் மெலிந்துபோமே. 220

(இ-ள்) பேய்ப்புடல்
கடுகரோகிணி
வேப்பலகு

கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
தான்றிக்காய்த்தோல்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். கப ஜ்வரங்கள் தீரும்.

## 183. கப ஜ்வரங்களுக்குத் "திரிகடுகுக் கஷாயம்"

திரிகடுகு நல்கண்டங் கத்திரியோ
டுற்றசிறு தேக்குசீந்தில்
உரியசிறு வழுதலையோர் பெருங்குமிழ்வேர்
வகைக்குநிறை யுரைக்கக்கேளாய்
சரியிரு வராகனெடை சேர்த்திடித்தே
யிருநாழி சலத்தைவார்த்து
வரிசையுழக் காய்க்காய்ச்சி யுண்டிடிற்சேத்
துமச்சுரந்தான் வாசியாமே. 221

(இ-ள்) சுக்கு
திப்பிலி
மிளகு
கண்டங்கத்திரிவேர்
சிறுதேக்கு
சீந்தில்கொடி
சிறுகத்திரிவேர்
பெருங்குமிழ்வேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று

விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்ற வைத்துச் சாப்பிடக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 184. கப ஜ்வரங்களுக்குச் "சிறுகாஞ்சோறிவேர் கஷாயம்

மருவுசிறு காஞ்சோறி பற்பாடகம்வேப்
 பலகுபடோல் மணந்தான்சேரும்
மிருவேலி கடுகரோ கிணியிவையோர்
 வகைக்குநிறை யிருகழஞ்சே
ஒருமையுடன் சேர்த்திடித்தே முந்நாழி
 நீரைவிட்டே யுழக்காய்க் காய்ச்சிப்
பருகிவந்தா லொட்டாமற் சேத்துமச்சு
 ரங்களெல்லாம் படிந்துபோமே. 222

(இ-ள்) சிறுகாஞ்சோறி
பற்பாடகம்
வேப்பம் ஈர்க்கு
பேய்ப்புடல்
வெட்டிவேர்
கடுகரோகிணி

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை எடுத்துக் கல்லுரலில் விட்டு இடித்துத் தண்ணீர் சின்னப்படி $1\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றவைத்துச் சாப்பிடக் கப ஜ்வரங்கள் தீரும்

## 185. கப ஜ்வரத்திற்குக் "கடுகரோகிணிச் சுக்குக் கஷாயம்"

அக்கடுக ரோகணியும் மூன்றது
 வராகனெடை யல்லாலின்னஞ்
சுக்கதுதா னிருமூன்று காசெடைசேர்த்
 திடித்துநன் றாய்ச் சொன்னவாறே

மூக்கியமா யிருபடிநீர் விட்டுழக்காய்க்
காய்ச்சியுண்டால் மூன்றுநாளில்
உக்கிரஞ்செய் பொல்லாத சேத்துமச்சு
ரங்களெல்லா மோடிப்போமே. 223

(இ-ள்) கடுகரோகிணி 3 வராகனெடை
சுக்கு 6 ,,

இவ்விரண்டையும் கல்லுரலிலிட்டு இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை எரித்துப் பருகவும். 3 நாட்களுள் கப ஜ்வரங்கள் தீரும்.

## 186 கபத்திற்குக் 'கொத்தமல்லிக் கஷாயம்'

வன்னமிகுங் கொத்தமல்லி பேய்ப்புடல்கோ
ரைக்கிழங்கு வளருஞ்சிந்தில்
நன்னயஞ்சேர் சுக்குகண்டங் கத்திரிபெ
ருங்குறும்பை நறும்வில்வவேர்
யின்னம்வெட்டி வேர்கடுக ரோகணியிவ்
வகைசமதை யிடித்துப்போட்டுச்
சொன்னபடி தப்பாமல நன்னீரை
விட்டதனைச் சுகமாய்த்தானே, 224

சுகமாக வேயெரித்துப் பக்குவந்தான்
பார்த்துநன் றாய்ச் சுண்டக்காய்ச்சி
யகலாம லேவடித்துத் திப்பிலியின்
மென்பொடிதா னதிலேபோட்டே
யிகழாம லேகொடுத்தால் வலுதோஷத்
துடன்கூட்டி யிடர்செய்யந்தப்
புகரான சேத்துமச்சு ரங்களெல்லாம்
ஓட்டாமல் போகுந்தானே. 225

(இ-ள்) கொத்தமல்லிவிதை
பேய்ப்புடல்
கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி
சுக்கு
கண்டங்கத்திரி வேர்
பெருங்குறும்பை
வில்வவேர்
வெட்டிவேர்
கடுகரோகிணி

இவைகளை சமனெடுத்துக் (வகைக்கு 2 வராகனெடை) கல்லுரலிலிட்டு இடித்து சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டி லொன்றாக்கி இறக்கவும், இக்கஷாயத்தை வடிகட்டித் திப்பிலித்தூள் போட்டுச் சாப்பிட மிகுதியான கபத்தினாலுண்டான ஜ்வரங்கள் தீரும்.

## 187. கப ஜ்வரங்களுக்குச் "செங்கழுநீர்க் கிழங்குக் கஷாயம்"

செங்கழுநீர்க் கிழங்குநில வேம்புகண்டங்
கத்திரிவேர் சிந்திற்சுக்கு
கொங்கடற்கோ ரைக்கிழங்கு சந்தனச்சி
ராயுமல்லாற் கொத்தமல்லி
யிங்கிதஞ்சேர் பொன்முசுட்டை வேரும்விலா
மிச்சையின்வே ரிலங்குமந்தத்
துங்கவெட்டி வேருபற்பா டகமிதெல்லாங்
கூட்டிநன்றாய்த் துதிசெய்வாரே. 226

துதித்தபடி யேசமதை சேர்த்திடித்துக்
கொண்டெடுத்துத் தூய்நீர் தன்னை
விதித்தபடி வார்த்தெரித்துப் பக்குவமாந்
தப்பாமல் வேண்டும்வாறே

கொதித்தவுட னேவடித்துத் திப்பிலியின்
மென்பொடிதான் கூடப்போட்டுக்
கதித்திடா தோருழக்கே யுண்டாற்சேத்
துமச்சுரந்தான் கடந்துபோமே. 227

(இ-ள்.) செங்கழுநீர்க்கிழங்கு
நிலவேம்பு
கண்டங்கத்திரிவேர்
சீந்தில்கொடி
சுக்கு
கோரைக்கிழங்கு
சந்தனச்சிராய்
கொத்தமல்லிவிதை
பொன்முசுட்டைவேர்
இலாமிச்சைவேர்
வெட்டிவேர்
பற்பாடகம்

இவைகளை வகைக்கு (2 வராகனெடை) வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சின்னப்படி ஒன்று சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கி வடிகட்டித் திப்பிலிச் சூரணம் போட்டுப் பருகவும்

கப ஜ்வரங்கள் தீரும்.

## 188. கப ஜ்வரத்திற்குப் 'பொன் முசுட்டைக் கஷாயம்'

சட்டமுள்ள பொன்முசுட்டை வேருசிறு
வழுதலைவேர் சகத்தோர்க்கெல்லாம்
யிட்டமதா மதிமதுரம் வெட்பாலை
யரிசியிவை யெல்லாங்கூட்டித்

திட்டமுட னிடித்துநந்நீர் விட்டுழக்
காய்க்காய்ச்சித் தினந்தானுண்டால்
கொட்டமிட் டருந்தகுணச் சேத்துமச்சு
ரங்களெல்லாங் குணமதாமே. 328

(இ-ள்) பொன்முசுட்டைவேர்
சிறுவழுதலைவேர் (சிறுகத்திரிவேர்)
அதிமதுரம்
வெட்பாலையரிசி

இவைகளை வகைக்கு (2 வராகனெடை) எடுத்து, இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்காக வற்ற வைத்துத் தினந் தோறும் பருகவும்.

கப ஜ்வரங்கள் தீரும்.

## 189 கப ஜ்வரத்திற்கு ''தூதுவளை வேராதிக் கடாயம்''

தூதுவளை வேராடா தோடையிலை
வேர்க்கடுக்காய் சுக்குசீந்தில்
தீதில்சிறு வழுதலைவேர் சங்கம்வேர்
நல்லசிறு தேக்கிதல்லால்
மீதுகீழ்க்காய் நெல்லிவேர்சுந் தரஞ்சேரும்
செவ்வியமி ளகிதெல்லாம்
ஓதும்வகைக் கோர்சழஞ்சு கூட்டியிடித்
தேயதிலே யோதந்தானே. 229

ஓதந்தா னேகுறுணி விட்டெரித்துப்
பின்னாலி லொன்றாய்க்காய்ச்சி
நீதமுட னேவடித்துப் பக்குவமா
கக்கொடுத்தால் நெடுநாள்பொல்லா

வாதனைசெய் யுஞ்சேத்து மச்சுரமுந்
திர்ந்துநன்றாய் வாசியாகுஞ்
சீதளகஞ் சத்திருவாழ் சரபேந்திர
பூபதிதான் செப்பும்வாறே. 230

(இ-ள்.) தூதுவளைவேர்
ஆடாதோடையிலை
கடுக்காய்த்தோல்
சுக்கு
சீந்தில்கொடி
சிறுகத்திரிவேர்
சங்கம்வேர்
சிறுதேக்கு
கீழாநெல்லிவேர்
செவ்வியம்
மிளகு

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீர் ஒரு மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து நான்கில் ஒன்றாகும்வரை எரித்து இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகக் கொடுக்க நாட்பட்ட கப ஜ்வரங்கள் தீரும்.

## 190. சன்னிபாத ஜ்வரத்திற்குக் ''குளிகையுங் கஷாயமும்''

சுந்தரஞ்சேர் சிறுகுமிழ்வேர் பற்பாட
கங்கடுக்காய் சுக்குமல்லாற்
கந்தமிகு நற்றேவ தாரம்நில
வேம்புமுத்தக் காசு(சு)க்கும்
அந்தவசம் புஞ்சிறுதேக் குத்தமமாங்
கொத்தமல்லி யனைத்துங் கூட்டிப்
பந்தமுட னேயிடித்தோர் குறுணிநன்னீர்
விட்டுநன்றாய் பகரக்கேளே. 231

சுந்தரஞ்சேர் வல்லெருக்கம் பாலிலிரு
பத்தொருநாள் சுவறப்போட்டு
அந்தநய முகந்தபச்சை நாபியறு
பணவெடைக ளல்லால்நல்ல
கெந்தகந்தான் மூன்றுபண வெடைசாதி
லிங்கமது கேளிரண்டே
பந்தமுள்ள பணவெடையாம் பணவெடையொன்
றேயிரதம் பண்பாய்ப்பின்னே. 232

பின்னந்தக் கல்வமதி லிட்டுநன்றாய்ப்
பொடியதுசெய் பிசகாமற்றான்
சொன்னபடி சிமிழில்வைத்துக் கொண்டெருக்கம்
பாற்பலமுஞ் சுக்கவ்வாறே
யின்னமொரு நாழிநந்நீர் விட்டுழக்காய்க்
காய்ச்சியதி லெழில்சேர்குன்றி
யன்னிறையிட் டவிழ்தமுண்டால் சன்னிவா
தச்சுரமே யகன்றுபோமே. 233

(இ-ள்.) சிறுதமிழ்வேர்
பற்பாடகம்
கடுக்காய்த்தோல்
சுக்கு (2 பலம்)
தேவதாரம்
நிலவேம்பு
கோரைக்கிழங்கு
வசம்பு
சிறுதேக்கு
கொத்தமல்லிவிதை

இவைகளை வகைக்கு (1 பலம்) எடுத்துக் கல்லுரலில் இட்டு, ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு சுத்த ஜலம் 1 மரக்கால்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாகுமட்டும் எரித்து இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவரப் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நாபி | 6 | பணவெடை |
| ,, கெந்தகம் | 3 | ,, |
| ,, லிங்கம் | 2 | ,, |
| ,, பாதரசம் | 1 | ,, |

இவைகளுள் ரசத்தையும் கெந்தகத்தையும் முதலில் கல்வத்திலிட்டு நன்றாகக் கருப்பாகும்வரை அரைத்துக் கஜ்ஜலியாகச் செய்துகொண்டு பின்பு மற்ற சரக்குகளையும் இட்டு நன்றாக அரைத்துக்கொண்டு அதனுடன் அக்கல்வத்தில் எருக்கம்பாலை விட்டு 21 நாட்கள் வைத்திருக்கவும். பால் சுவறச் சுவற, எருக்கம்பாலை விட்டுக்கொண்டு வரலாம். கடைசித் தினத்தன்று அம்மருந்துகளை மறுபடியும் அரைத்துச், சிமிழில் பத்திரப்படுத்தவும். பின்பு, சுக்கு 1 பலத்துடன், எருக்கம்பால் ஒரு பலத்தைச் சேர்த்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின்மேல் ஏற்றி எரித்து ஒரு உழக்காகக் காய்ச்சி வடிகட்டிய கஷாயத்துடன் முன்சொன்ன மருந்தில் ஒரு குன்றியளவிட்டுச் சாப்பிடவும்.

சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

## 191. ஸந்நிபாத ஜ்வரங்களுக்கு 'இரதாதிக் குளிகை'

சுந்தரஞ்சே ரிரதமொரு பலம்பூசி
    னிப்பருப்புச் சொல்லக்கேளாய்
ஐந்ததுவாம் பலங்களது நேர்வாள
    மைந்துபல மல்லால்நல்ல
கந்தமிகுந் திடுமிளகு மைந்துபல
    மிரண்டுபலங் காண்வெங்காரம்
பந்தமுட ஞேர்பச்சை நாபியுந்தான்
    தப்பாதோர் பலந்தான்சேரே. 234

பலந்தான்பத் தொன்பதையும் பூசினியின்
    சாறுதனைப் பண்பாய்விட்டுக்

கலந்தாங்கே யொருசாம மரைத்துளுந்தி
ஙிகர்குளிகைக் களமாய்ச் செய்தே
உலர்ந்தபின்பு யெடுத்துமுலைப் பாலிலனு
பானமுட னுண்டேவந்தால்
அலந்தரும் சன்னிவாத சுரமுங்கு
லைந்தோடு மப்பாற்றானே. 235

பருகினாற் சந்நிபா தச்சுரம்போம்
பத்தியந்தான் பகர்வேனின்னம்
முருகுறிறை நல்லெண்ணெதேய்த் தேகுளிர்ந்த
நீரதனில் முழுகிப்பின்னே
ஒருமையுள்ள சந்தனமோர் தாம்பூலஞ்
சேர்த்திடலா முயருங்கீர்த்தி
தருமதுரை தஞ்சையில்வாழ் சரபேந்திர
பூபதிசொற் றண்மையாமே. 236

| | | |
|---|---|---|
| (இ-ள்) | சுத்திசெய்த பாதரசம் | 1 பலம் |
| | பூசனிப பருப்பு | 5 ,, |
| | சுத்திசெய்தநேர்வாளம் | 5 ,, |
| | மிளகு | 5 ,, |
| | பொரித்த வெங்காரம் | 2 ,, |
| | சுத்திசெய்த நாபி | 1 ,, |

இவைகளளயொரு சுத்தமான கல்வத்திலிட்டுப், பூசினிச் சாறுவிட்டு 3 மணி நேரம் நன்றாக அரைத்து உளுந்துப் பிரமாணமுள்ள குளிகைகளாகச் செய்யவும். இதை நன்றாக நிழலில் உலர்த்தி முலைப்பாலுடன் ஒரு குளிகை விழுங்கவும்.

சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

**பத்தியம்**:-- ஜ்வரம் நின்றபின்பு நல்லெண்ணெய் தேய்த்துக்கொண்டு குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவும். அன்று சந்தனம், தாம்பூலம் முதலானவைகளையும் தரிக்கலாம்.

குறிப்பு: அதிசாரத்துடன் கூடிய ஜ்வரங்களில் இக் குளிகையை உபயோகிக்கக்கூடாது.

## 192. ஸந்நிபாத ஜ்வரங்களுக்குக் "கெந்தகத் தாமிராதி குளிகை"

கெந்தகந்தா மிரபற்பம் நாபியிர
    தங்கள்சமங் கேளேநன்றாய்
இந்தவகை நான்குநொச்சிச் சாற்றிலரைத்
    தரைத்துலர்த்தி யேழுவாட்டி
அந்தநல்லிஞ் சிச்சாற்றி லேழுதர
    மரைத்துநிழ லதிலேவைத்துப்
பந்துமுட னுலர்த்தியிஞ்சிச் சாற்றிலொரு
    குளிகைதனைப் பருகுவாயே. 237

| | | |
|---|---|---|
| (இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | | 1 பலம் |
| ,, | நாபி | ,, |
| ,, | பாதரசம் | ,, |
| தாமிர பற்பம் | | ,, |

இவைகளை எடுத்து முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் ஒரு கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து பின்பு மற்ற இரு சரக்குகளையும் போட்டு நொச்சிச்சாறு (கருநொச்சி) விட்டு நன்றாக அரைக்கவும். இவ்வாறே சாறு சுவற சுவற மறுபடியும் விட்டு 7 நாட்களுக்கு அரைக்கவும். மறுமுறை இவ்வாறே இஞ்சியின் சாறுவிட்டு 7 தடவை அரைக்கவும். கடைசித் தினத்தன்று (உளுந்துப் பிரமாணமுள்ள) குளிகைகளாக உருட்டி நிழலில் காய வைக்கவும்.

இக்குளிகையில் ஒன்றையெடுத்து இஞ்சிச்சாற்றுடன் சாப்பிட சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

## 193. ஸந்நிபாத ஜ்வரத்திற்கு 'ஸஹதேவி நெய்'

நன்னயச் சிதேவியார் செங்கழுநீர்
சாறுநா னாழிநெய்தான்
சொன்னபடி நாழியில வங்கம்நற்ற
மாலபத்தரி சுகநன்னாரி
யின்னமதி மதுரமுத்தக் காசுசந்த
னங்கோஷ்ட மேர்மஞ்சிட்டிப்
பொன்னணியே லங்கடுகு ரோகணியும்
மருந்தையெல்லாம் பொருந்தத்தானே. 238

பொருந்தவகை யொன்றினுக்கு மூன்றதுவ
ராகனெடை பொடியாய்ச்செய்து
திருந்தமுன்னெய் யிற்சாற்றிற் கலந்துவடித்
தேயுடம்பிற் றிடமாய்ப்பூசி
அருந்திவந்தாற் சகலசுரஞ் சன்னிவா
தச்சுரம்விட் டப்பால்வாசி
தருந்தமிழ்சித் தாமணியாஞ் சரபேந்திர
பூபதிசொற் றகமைதானே. 239

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | *சிதேவிச்செங்கழுநீர்ச்சாறு | 4 படி (சி, படி 2) |
| | பசுவின் நெய் | 1 படி (சி, படி ½) |

இவற்றுடன்,

கிராம்பு
தமாபலத்திரி (பச்சிலை)
நன்னாரிவேர்ப்பட்டை
அதிமதுரம்
கோரைக்கிழங்கு
சந்தனத்தூள்
கோஷ்டம்
மஞ்சிஷ்டி
கடுகரோகிணி
ஏலக்காய்

*சிதேவி செங்கழுநீர்—நெய்ச் சட்டி, ஸஹதேவி

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்துப் பொடிசெய்து சாறுகூட்டிய நெய்யுடனே கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கவும். இந் நெய்யை உடம்பில் நன்றாகத் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்துவரவும். இதையே உள்ளுக்கும் ஒரு ஸ்பூனளவுட் கொள்ளவும்.

பற்பல ஜ்வரங்களும், ஜன்னியும் தீரும்.

## 194. சன்னிபாத ஜ்வரத்திற்கு "ஸஹதேவி நெய்

நந்தலில்லாச் சிதேவிச் செங்கழுநீர்ச்
சாற்றிலிரு நாழிநெய்தான்
பந்தமுட னொருநாழி யுங்கடுகு
ரோகணிசெண் பகப்பூனீலம்
சந்தனம்மரு சிட்டிவெட்டி வேர்விலா
மிச்சம்வேர் சார்ந்தகோட்டம்
சுந்தரநல் லதிமதுரஞ் செங்கழுநீர்க்
கிழங்கிதல்லாற் சொல்லக்கேளே. 240

சொல்லந்தக் கோரையின் கிழங்கிலவங்
கங்களோடு சூழ்நன்னாரி
நல்லருமை வேர் நீர்வள் ளிக்கிழங்கோர்
வகைக்குநிறை நன்றாயொன்றே
புல்லந்தக் காசெடைவைத் திடித்துவடித்
துண்டுவந்தால் புலம்பற்காட்டி
வல்லடல்செய் சகலசுரஞ் சன்னிவா
தச்சுரமும் வாசியாமே.

(இ-ள்.) சிதேவிச் செங்கழுநீர்ச்சாறு 2 படி (சி படி 1)
பசுவின் நெய் 1 ,, (சி படி ½)

இவைகளுடன்,

கடுகரோகிணி

செண்பகப்பூ
சந்தனத்தூள்
மஞ்சிட்டிவேர்
இலாமிச்சம்வேர்
வெட்டிவேர்
கோஷ்டம்
அதிமதுரம்
செங்கழுநீர்க்கிழங்கு
கோரைக்கிழங்கு
கிராம்பு
நன்னாரிவேர்
தண்ணீர்விட்டான்கிழங்கு

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து அம்மியின்மேல் வைத்தரைத்து. சாறுகூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இதில் வேளைக்கு ½ தோலா உட்கொள்ளப் புலம்பலுடன் கூடிய சன்னிபாத ஜ்வரமானாலும் குணமாகும்.

## 195. பித்த சுரம் சன்னிகளுக்குக் "கோரோசனாதி மாத்திரை

கோலக்கோ ரோசனைசாத் திரவேதி
கஸ்தூரி கூறுமோமஞ்
சிலநற்செஞ் சந்தனஞ்சீ ரகம்பச்சை
கர்ப்பூரஞ் செப்புகின்ற
மேலந்த வகையினுக்கோ ரைந்தது
வராகனெடை மிதமாய்க்கூட்டி
சாலவுந்தா ளிளநீரில் முலைப்பாலி
லிட்டரைத்துச் சட்டங்கேளே. 242

சட்டங்கேள் பயறளவு குளிகைசெய்திஞ்
சிச்சாற்றிற் சாரத்தேனில்

வட்டமுலைப் பாலிலிள நீரிஞ்சிற்சர்க்
கரைதனிலே வைத்தே நன்றாய்
கொட்டமிடுந் துட்டபித்தச் சுரஞ்சன்னித்
தோஷமென்றுங் குறித்துப்பார்த்துத்
திட்டமுட னோர்குளிகை யீந்துவந்தால்
தோய்ந்தபிணி தீர்ந்துபோமே. 243

(இ-ள்) கோரோசனை
சாத்திரவேதி (கொடுக்காப்புளி)
கஸ்தூரி
ஓமம்
செஞ்சந்தனம்
சீரகம்
பச்சைக்கர்ப்பூரம்

இவைகள் வகைக்கு 5 வராகனெடை எடுத்து, ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு இளநீர்விட்டு ஒருநாள் முழுதும் அரைக்கவும். மறுதினம் முலைப்பால் விட்டு நன்றாக அரைக்கவும். பின்பு பயறளவுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இதிலொரு மாத்திரையை எடுத்து இஞ்சிச்சாற்றிலோ இளநீரிலோ, சர்க்கரையிலோ, முலைப்பாலிலோ அல்லது சுத்தமான தேனிலோ சமயோசிதம் போல் கொடுக்கவும்

பித்த ஜ்வரங்கள், சந்நிபாத ஜ்வரங்கள் முதலியவை தீரும்.

குறிப்பு: பச்சைக்கற்பூரம், கோரோசனை, கஸ்தூரி முதலானவைகளைக் கடைசியில் சேர்த்து அரைக்கவும்.

## 196. சந்நிக்குக் ''குருவிச்சம் வேர்க்கடாயம்''

குருவிச்சம் வேர்தூது வளைவேர்முக்
காவளைவேர் சுணமாஞ்சுக்கு

திருநிலவேம் புங்கடுக ரோகணிபொன்
முசுட்டையின்வேர் திறமையாகும்
அருமைமுள்ளி வேர்மிளகு சிறுதேக்குத்
திப்பிலிநே ராகக்கூட்டி
ஒருமையுடன் காய்ச்சியுண்டால் சன்னிவா
தச்சுரம்விட் டோடிப்போமே. 244

(இ-ள்) குருவிச்சம்வேர்
தூதுவளைவேர்
முக்காவேளைவேர்
சுக்கு
நிலவேம்பு
கடுகரோகிணி
பொன்முசுட்டைவேர்
முள்ளிவேர்
மிளகு
சிறுதேக்கு
திப்பிலி

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாக்கி இறக்கவும்.

இக்கஷாயத்தைப் பருகிவரச் சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

## 197. பற்பல ஜ்வரங்களுக்குஞ் 'சாதிலிங்க குளிகை'

சாதிலிங்கம் வெங்காரம் பாற்துத்த
மரிதாரம் சகஸ்ரபேதி
ஓதியகோ ரோசனைவல் நாபியெலிப்
பாஷாணம் வுத்திராட்சம்

ரீதிலங்த கௌரீபா ஷாணமக்கா
ரக்காரம் மேன்மைதங்குந்
தீதில்மனோ சிலைகடுக ரோகிணிக
லன்கொம்புத் திட்டங்கேளே, 245

திட்டமோவ்வோர் வகைக்கிருக முஞ்சுநிறை
தப்பாமல் திடமாய்க்கூட்டி
சட்டமுள்ள கற்றாழையின் மணியிலே
யரைத்துச்ச ரியாயுண்டை
யிட்டந்தப் பயறுநிகர் தன்னிழலி
லேயுலர்த்தி யெடுத்துக்கொண்டு
கொட்டமிடு பதிமூன்று சன்னிக்கு
மிஞ்சிதனிற் கொடுத்துப்பாரே. 246

கொடுத்திடுமுன் சுரமுமந்த சந்நிக்குங்
குளிர்சுரத்திற் குந்தானின்னங்
கடுத்திடு மாடாதோ டைசேத்துமச்
சுரத்தினுக்குக் கடுரநொச்சில்
தொடுத்தபித்தச் சுரத்தினுக்குப் பேய்ப்புடல்
முசுமுசுக்கை துட்டவாத
மடுத்தசுரத் திற்குமிக்க ஷாயமிட்டீந்
தாலிதெல்லா மகன்றுபோமே. 247

(இ-ள்) சுத்திசெய்த சாதிலிங்கம்
,, வெங்காரம்
,, பால்துத்தம்
,, தாளகம்
,, நாபி
,, எலிப்பாஷாணம்
,, கௌரீபாஷாணம்
,, மனோசிலை
,, மான்கொம்பு

கோரோசனை
சாஸ்திரபேதி (கொடுக்காப்புளி)
உத்திராட்சம்

அக்கிராக்காரம்
கடுகரோகிணி

முதலான சரக்குகளை வகைக்கு 2½ வராகனெடை வீத மெடுத்துக் கல்வத்திலிட்டுத் தூளாக்கிக் கற்றாழைச்சாறு விட்டு 2 அல்லது 3 நாட்கள் அரைக்கவும். பின்பு இதனைப் பயறளவுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

13 வகை சந்நிக்கும்:- ஒரு மாத்திரையை இஞ்சிச்சாற்றுடன் சாப்பிடவும்.

குளிர் ஜ்வரமானால்: ஒரு மாத்திரையை ஆடாதோடைக் கஷாயத்திலும்,

கப ஜ்வரமானால்: ஒரு மாத்திரையை நொச்சிக் கஷாயத்திலும்,

பித்த ஜ்வரத்திற்கு: பேய்ப்புடல் கஷாயத்தில் ஒரு மாத்திரையும்,

வாத ஜ்வரமானால்: முசுமுசுக்கை கஷாயத்தில் ஒரு மாத்திரையும் சாப்பிடவும். மேற்சொன்ன வியாதிகள் அனைத்தும் தீரும்.

*—*—*

## 198. ஸந்நிபாத ஜ்வரங்களுக்கு 'முஸ்தாதிக் கஷாயம்'

கந்தமிகுங் கோரையின்கி ழங்குசிறு
காஞ்சோறிவேர் காரச்சுக்கு
சுந்தரபற் பாடகம்கொத் தமல்லிசிற்றா
முட்டியவ்வேர் சூழ்ந்தசீந்தில்
அந்தநில வேம்புசிறு தேக்குசிறு
வழுதலைநல் லாவாரைவேர்
இந்தவகை யொன்றினுக்கி ரண்டது
வராகனெடை யிடித்துத்தானே 248

இடித்தப்பா விரண்டுபடி தண்ணீர்விட்
டுழக்காய்த்தா னெரித்துக்காய்ச்சி
வடித்தெடுத்துப் பக்குவங்கள் பிசகாம
லுறுதிமனம் வைத்தேயன்பாய்க்
குடித்துவந்தால் பொல்லாத சந்நிவா
தச்சுரமுங் குணமதாகும்
நடித்தபரிக் கேநகுலன் சரபேந்திர
பூபதிசொல் நவினந்தானே. 249

(இ-ள்) கோரைக்கிழங்கு
சிறுகாஞ்சோறிவேர்
சுக்கு
பற்பாடகம்
கொத்தமல்லி
சிற்றாமுட்டி
சீந்தில்கொடி
நிலவேம்பு
சிறுதேக்கு
சிறுகத்திரி
ஆவாரைவேர்

முதலான சரக்குகளைக் காயவைத்து வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து உழக்கானபின் இறக்கவும்.

இக்கஷாயத்தைச் சாப்பிட்டுவர, சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

## 199. பக்க நோய், வாத, பித்த ஜ்வரங்களுக்குக் ''கடுகுரோகிணியாதி கஷாயம்''

பந்தமுள்ள நற்கடுக ரோகணிபேய்ப்
புடல்வேப்பம் பட்டைசீந்தில்
அந்தமிகுஞ் சுக்குகண்டங் கத்திரிவேர்
திரிபலைநல் லழகாய்ச்சொல்லும்

யிந்தவகை யொன்றினுக்கு இரண்டதுவ
ராகனெடை யெல்லாங்கூட்டிச்
சுந்தரமாய்த் தானிடித்து இரண்டுபடி
நீரைவிட்டுச் சொன்னவாறே. 250

சொன்னபடி பிசகாமற் காய்ச்சியுழக்
காய்வடித்துச் சுகமாயுண்டால்
பின்னடா மாசுவாச் காசம்பக்க
நோய்வாத பித்தமல்லால்
இன்னடுஞ்சேத் துமமூன்றுங் கூடியதோ
ஷச்சுரங்க ளெளியோர்க்கெல்லாம்
அன்னமிடும் புண்ணியவா னைச்சூழ்முன்
பிணியதுபோ லகன்றேபோமே. 251

(இ ள்) கடுகரோகிணி
பேய்ப்புடல்
வேப்பம்பட்டை
சீந்தில்கொடி
சுக்கு
கண்டங்கத்திரி
தான்றிக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து காய வைத்து, ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்தில் இட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின்மேல் ஏற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்துச் சாப்பிடச் சுவாசகாசம், பக்க சூலை, வாதம், பித்தம், கபம் முதலியவைகளினாலேற்படும் ஜ்வரங்கள் தீரும்.

## 200. பித்த ஜன்னிக்குச் 'சீரகாதி உருண்டை'

சீரகமே லங்கடுக ரோகணிகோ
ரோசனைநற் சீர்தக்கோலங்

காரமுள்ள திரிகடுகு கொத்தமல்லி
இலவங்கங் கனத்தகோஷ்டஞ்
சாரமிகு மதிமதுர மிருவேலி
வேருடனே சாந்தமேவும்
ஈரவிலா மிச்சைமிவை சமபாகங்
கூட்டியப்பா வியம்பக்கேளே. 252

இயம்புவகை தப்பாம லொப்பான
நல்லபச்சை யிளநீர்விட்டு
நயம்பெறவுஞ் சந்தனம்போ லரைத்தெடுத்து
மிளகுநிகர் நன்றாயுண்டை
வியங்களோடு செய்துலர்த்திக் கொண்டதனைத்
திட்டமதாய் வேளைக்கொன்றை
நியமமுட னுண்டிடிற் பித்தசன்னிச்
சுரங்கலங்கி நீங்கிப்போமே. 253

(இ-ள்) சீரகம்
ஏலக்காய்
கடுகரோகிணி
கோரோசனை
தக்கோலம்
சுக்கு
திப்பிலி
மிளகு
கொத்தமல்லி
கிராம்பு
கோஷ்டம்
அதிமதுரம்
வெட்டிவேர்
விலாமிச்சைவேர்

இவைகளைச் சமனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ்செய்து, கல்வத்தில்வைத்து இளநீர் விட்டு நன்றாக அரைத்து மிளகுப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். வேளைக்கு ஒரு குளிகை வெந்நீருடன் விழுங்கிவரப் பித்தசந்நி தீரும்.

## 201. சந்நிபாத விஷம ஜ்வரங்களுக்குச் 'சீரகாதி உருண்டை'

அந்தநற்சீ ரகமேல மதிமதுரங்
கொத்தமல்லி யல்லாற் சுக்கு
கந்தமிகு முந்திரிகைப் பழம்பேரீச்
சம்பழஞ் சுக்கது கிராம்பு
சந்தனம்நெல் லிப்பருப்புச் சிறுகீரை
வேருடனே சாற்றக்கேளாய்
சுந்தரஞ்சேர் கூகையினநீ ரிவ்வகையெல்
லாஞ்சமதை சுகமாய்ச்சேறே 254

சுகமான நந்தயிரின் மீதிலங்கு
மெந்நீரைச் சொல்லும்வாறே
இகழாமல் விட்டரைத்தோர் கழஞ்சுநிறை
சர்க்கரையு மினிதாங்கல்கம்
அகமகிழ்ந்தே யோர்கழஞ்சுங் கூட்டியுண்டால்
வலுமூர்ச்சை யதிகதாகம்
புகர்செய்சன் னிவாதவிஷச் சுரமிரண்டு
மேவிட்டுப் போகுந்தானே. 255

(இ-ள்) சீரகம்
ஏலக்காய்
அதிமதுரம்
கொத்தமல்லி
சுக்கு
திராக்ஷைப்பழம்
பேரீச்சம்பழம்
கிராம்பு
சந்தனத்தூள்
நெல்லிப்பருப்பு
சிறுகீரைவேர்
கூகைநீர்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் காய வைத்து இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு கழஞ்சளவு சூரணம் (1¼ வராகனெடை) எடுத்து அம்மியின் மேல் வைத்துத் தயிரின் தெளிவு நீர்விட்டு நேகவரைத்து, ஒரு கழஞ்சு சர்க்கரை கூட்டிச் சாப்பிடவும்.

மூர்ச்சை, அதிகமான வரட்சி, சந்நிபாத ஜ்வரங்கள், விஷ ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

✳✳✳✳

## 202. விஷ ஜ்வரத்திற்குக் 'கெந்தகாதி மாத்திரை'

கெந்தகமிந் துப்பிரதம் வெங்காரந்
திரிகடுகு கேள்வகைக்கோர்
அந்தநிறை தான்கழஞ்சு நேர்வாள
மிருகழஞ்சு மல்லாமற்றான்
பந்தமுள்ள நற்கடுக ரோகணியும்
நாற்கழஞ்சு பண்பாய்க்கூட்டி
யிந்தமருந் தேழுமுலைப் பாலினில்
யொருசாம மிட்டுத்தானே. 256

இட்டவுட னேயரைத்துச் சிதறாமல்
சந்தனம்போ லெடுத்துக்கொண்டு
திட்டமொவ்வோ ருளுந்துநிகர் குளிகைசெய்து
மேலுலர்த்தித் திறமாமிந்தச்
சட்டமுய ரிஞ்சியின்சாற் றனுபான
மொடுகொடுத்தாற் சார்ந்தபொல்லாத்
துஷ்டவிஷச் சுரங்களெல்லா மொட்டாமல்
விட்டதுதான் துலைந்துபோமே. 257

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரசம்
பொரித்த இந்துப்பு
,, வெங்காரம்

திரிகடுகு (சுக்கு, திப்பிலி, மிளகு)

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை

சுத்திசெய்த நேர்வாளம் 2½ வராகனெடை

கடுகரோகிணி 5 வராகனெடை

இவைகளுள் முதலில் ரசத்தையும். கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்றச் சரக்குகளைச் சூரணித்துச் சேர்த்து முலைப்பால்விட்டு 3 மணிநேரம் நேகவரைத்துச் சந்தனத்தைப்போல் எடுத்துக்கொள்ளவும். பின்பு இதனை உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும். நிழலில் உலரவைத்து, இஞ்சிச்சாற்றுடன் ஒரு குளிகை நல்கவும். விஷ ஜ்வரங்கள் தீரும்.

## 203. பற்பல ஜ்வரங்களுக்கும் 'சாதிலிங்க மாத்திரை'

சாதிலிங்க மரிதாரங் கௌரிபா
ஷாணமொடு சட்டமாய்த்தான்
ஓதியகெந் தகம்வகைக்கோ ரெட்டதுவ
ராகனெடை யேர்நேர்வாளம்
கோதிலாப் பருப்புக்கடுக் காய்த்தூளொவ்
வோர்வகைக்குக் கூட்டேநன்றாய்
நீதியுட நான்கது வராகனிடை
யெல்லாஞ்செய் நியமங்கேளே. 258

நியமங்கேள் பொல்லாக்கஞ் சாச்சாற்றில்
நாலுநாள் நித்தம் நித்தம்
நயம்பெறவு மேயரைத்து மிளகுநிக
ராய்க்குளிகை நன்றாய்ச்செய்து
சுயமான நன்னிழலி லுலர்த்திவைத்துக்
கொண்டீயுஞ் சூட்சஞ்சொல்வேன்
அயர்வுசெய் திடுஞ்சனிக்கு மவ்வாதச்
சுரத்தினுக்கு மைந்துதானே. 259

ஐந்ததுவைத் தேகுளிகை வசம்பினுடச்
சாற்றிட்னிவி டடுத்தநாளுந்
தந்தருள்மூன் றதுகுளிகை மூன்றுநா
ளிருகுளிகை தப்பாதீவாய்
தொந்ததாய் வந்தபித்தச் சுரத்தினுக்குஞ்
சன்னிக்குந் தொன்மையொப்பாய்
பந்தமுட னேமூன்று நாட்கொடுப்பா
யின்னமுந்தான் பகருவேனே. 260

பகரக்கேள் சேட்டுமச்சு ரத்தினுக்கும்
சன்னிக்கும் பண்பாய்த்தானே
புகரில்சிறு வழுதலைவேர் நல்லகண்டங்
கத்திரிவேர் பொருந்திதல்லால்
சுகந்தருஞ் சிற்றாமுட் டிவேர்பெரு
முட்டியின்வேர் சுண்டக்காய்ச்சி
யிகழாமல் முன்சொன்ன படிமூன்று
நாட்கொடுப்பா யின்னந்தானே. 261

இன்னமந்த சந்நியுமெல் லாச்சுரமும்
விட்டோடி யின்பமுண்டாஞ்
சொன்னசிற்றா முட்டிகண்டங் கத்திரிவேர்
பேர்முட்டிச் சுகமாய்மென்மேல்
நன்னயங்கள் மேவுசிறு வழுதலைவே
ரோதுவகை நான்குங்கூட்டி
வன்னமுட னேகாய்ச்சி முன்கணக்காய்க்
குளிகைதனை வைத்துத்தானே. 262

வைத்துத்தா னேகுளிகை வேப்பெண்ணெயில்
முலைப்பாலில் வன்பூநாகத்
துத்தஞ்சேர் துளசிச்சாற் றுதவுநடுக்
குச்சன்னிக்கே யொருமையாகச்
சுத்தநந்நீர் நாழியில்வ சம்புதட்டிப்
போட்டுழக்காய்ச் சுண்டக்காய்ச்சி
நித்தமுன்சொற் குளிகையிடு கொட்டாவிவி
டுஞ்சன்னிக்கும் நிசமாய்த்தானே. 263

செப்புமிந்த வெண்ணெயிலைந் தேகுளிகை
சேர்த்தெரித்துச் சிதறாமற்றான்
ஒப்புடன்றப் பாமலுள்ளுக் குங்கொடுத்துச்
சட்டமதா யுடம்பிற்பூசில்
கைப்பிடிவில் வின்வலிப்புச் சந்நிவிடு
முள்ளியின்வேர் கனதையாக
வெப்புநிறை முருங்கைமரப் பட்டையும்நன்
றுய்வருத்து விளம்பக்கேளே. 264

விளம்புமிந்தப் பட்டையின்சாற் றினிற்குளிகை
வைத்தீந்தால் விடுமேசந்நி
வளம்பெரும்நற் பனைமட்டைச் சாற்றினிலீ
கொன்றைமரம் வாய்ந்தமட்டை
உளம்பிசகா தச்சாற்றின் வண்கஷா
யத்தினிலீ வுடலும்நெஞ்சுந்
தளம்புகின்ற வயிற்றுவலி சன்னியெல்லாம்
நில்லாமற் தகர்ந்துபோமே. 265

தமர்ந்துபோ மல்லாற்திப் பிலிவசம்பு
சுக்குமுள்ளி தண்மைமேவுஞ்
சுகந்தமஞ்சள் சமன் கூட்டிச் சிறுநீரி
லரைத்துநெற்றி சூழப்போட்டால்
உகந்துபுரு வங்கள்நெரிக் கிறசந்நிபோங்
கொள்சாற்றி லுரைத்தோருண்டை
அகாமகிழ்ந்துண் டால்வெள்ளோக் காளமெடுக்
கிரசந்நிக ளடங்கிப்போமே. 266

அடங்கிப்போ மரத்தையுங்கோ ரோசனையுஞ்
சரிகூட்டி யதிலேதண்ணீர்
இடங்களுட னொருநாழி விட்டுழக்காய்க்
காய்ச்சியதைத் தேர்ந்தேயுண்டால்
நடங்கொள்சந்தி தீரும்நடுக் குஞ்சந்நிக்கும்
வசம்பினுட நந்நீர்தன்னில்
மடங்காதைந் தேகுளிகை யிட்யீந்தால்
சந்நியெல்லாம் மாறிப்போமே. 267

(இ-ன்) சுத்திசெய்த சாதிலிங்கம்

,, அரிதாரம்

,, கௌரீபாஷாணம்

,, நெல்லிக்காய்க் கெந்தகம்

முதலான சரக்குகள் வகைக்கு 8 வராகனெடை

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 4 வராகனெடை

கடுக்காய்த்தூள் 4 ,,

இச்சரக்குகளுள் முதலில் சொல்லப்பட்ட பாஷாணாதி சரக்குகளைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துப் பின்பு கடைச் சரக்குகளைக் கூட்டிக் கஞ்சா இலைச்சாறுவிட்டு 4 நாட்கள் நன்றாக அரைக்கவும். பின்பு மிளகுப் பிரமாணம் உள்ள குளிகை களாக உருட்டிக்கொண்டு நிழலில் காய வைக்கவும்.

சந்நிபாத ஜ்வரங்களுக்கும், வாத ஜ்வரங்களுக்கும் முதல் நாளன்று 5 குளிகைகளெடுத்து வசம்புக் கஷாயத்துடன் உட் கொள்ளவும். மறுநாள் 3 குளிகைகளும், மூன்றாவது நாளன்று 2 குளிகைகளும் முன்போலுட்கொள்ளவும்.

இம்மாதிரியே தொந்த (இரு தோஷங்களின் பிரகோபத்தி னாலேற்படும்) ஜ்வரங்களுக்கும் பித்த ஜ்வரங்களுக்கும் இக் குளிகையை 3 நாட்களுக்கு வழங்கலாம்.

கப ஜ்வரத்திற்கும் சந்நிபாதத்திற்கும்

சிறுகத்திரிவேர்

கண்டங்கத்திரிவேர்

சிற்றாமுட்டிவேர்

பேராமுட்டிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ½ விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிய கஷாயத்துடனே முன்சொன்னபடி 5, 3, 2. குளிகைகள் என்ற அளவில் 3 நாட்களுக்கு உட்கொள்ளவும்.

இவ்வாறே, வேப்பெண்ணெயிலோ, முலைப்பாலிலோ நாங்கூழ்ப் பூச்சி துத்தம் முதலானவைகளுடன். துளசிச் சாறும்விட்டு எரித்து இறக்கிக்கொண்டு குளிகைகளைச் சாப்பிடவும். நடுக்கு ஜன்னி தீரும். அதனுடன் வசம்புக் கஷாயம் சேர்த்து (சுத்தஜலம் ½ படி விட்டு) ஒரு உழக்காக வற்றவைத்த கஷாயத்துடன் 5 குளிகைகள் வீதம் 2 நாள் கொடுக்க கொட்டாவிவிடும் சந்நிகள் தீரும்.

மேற்சொன்ன எண்ணெயுடன் 5 குளிகைகளையிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து உடம்பின் மேலுக்கும் பூசி உள்ளுக்கும் ஒரு ஸ்பூன் கொடுக்கவும்.

கை, கால்களில் ஏற்படும் வலிப்புகள் தீரும்.

முள்ளிவேர், முருங்கை மரப்பட்டை இவ்விரண்டையும் சமனெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கிச், சட்டியிலிட்டுப் பொன் வருகலாக வறுத்துத் தண்ணீர் சேர்த்துக் கஷாயம் செய்யவும்.

இத்துடன் குளிகையைக் கொடுக்கச் சந்நிகள் தீரும்.

பனைமட்டைச் சாற்றிலோ, கொன்றை மரப்பட்டைச் சாற்றிலோ, அல்லது கஷாயத்திலோ. ஒரு குளிகை உட்கொள்ளவும், நெஞ்சுவலி, வயிற்றுவலி முதலியவைகளுடன் கூடிய சந்நிகள் தீரும்.

திப்பிலி, வசம்பு, சுக்கு, முள்ளி, மஞ்சள் இவைகளை வகைக்கு (1 வராகனெடை) வீதமெடுத்து உலகமறியாப் பிள்ளைகளின் சிறுநீர் விட்டு நன்றாக அரைத்து நெற்றியில் பத்துப்போடவும். புருவங்களை நெரிக்கும் சந்நி போகும்.

கொள்ளுக் கஷாயத்தில் ஒரு உருண்டை உரைத்துச் சாப்பிட வெள்ளோக்காளத்துடன் கூடிய சந்நிகள் தீரும்.

சித்தரத்தை, கோரோசனை இவ்விரண்டையும் சரி எடை (வகைக்கு 2 வராகனெடை) எடுத்து அதனுடன்

தண்ணீர் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் காய்ச்சவும். இதனுடன் குளிகைகளை உரைத்துச் சாப்பிட நடுக்கு ஜன்னிகள் தீரும்.

5 குளிகைகளை வசம்புக் கஷாயத்துடன் உட்கொள்ளப் பற்பல சந்நிகளும் தீரும்.

## 204. சந்நிபாத ஜ்வரத்திற்குப் 'படோலாதி கஷாயம்'

கைத்திடுபேய்ப் புடல்சங்கம் வேருகண்டங்
கத்திரிவேர் காரச்சுக்கு
உத்தமமாம் வசம்புசிறு செருப்படிவே
ரெருக்கம்வே ரோதுகின்ற
சித்திரமாங் குமிழம்வே ரிவைசமதை
கூட்டியொரு சிராய்க்காய்ச்சி
வைத்தினிப் பாய்க்கொடுத்தால் பொல்லாத்தோ
ஷச்சுரங்கள் வாசியாமே. 268

(இ-ள்). பேய்ப்புடல்
சங்கம்வேர்
கண்டங்கத்திரிவேர்
சுக்கு
வசம்பு
சிறுசெருப்படிவேர்
எருக்கம்வேர்
குமிழம்வேர்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை விதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துத் தண்ணீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை சுண்டக் காய்ச்சவும். இதனை இறுத்துச் சர்க்கரை சேர்த்துப்பருகிவரத் திரிதோஷ ஜ்வரங்கள் தீரும்.

## 205. சந்நிபாத ஜ்வரங்களுக்குக் "கண்டகாரிக் கஷாயம்"

செப்புகண்டங் கத்திரிவேர் பெருங்குமிழ்வேர்
சங்கம்வேர் சீராஞ்சுக்குக்
கைப்புள்ள வசம்புசிறு செருப்படிவேர்
எருக்கினுட காரவேருந்
தப்புவரா மற்சமதை வைத்திடுக—
ஷாயமதைத் தானேயீய்ந்தால்
ஒப்புடன்வந் தடர்ந்தெழுபொல் லாத்தோஷச்
சுரங்களெல்லா மோடிப்போமே. 269

(இ-ள்) கண்டங்கத்திரிவேர்
பெருங்குமிழ்வேர்
சங்கம்வேர்
சுக்கு
வசம்பு
சிறுசெருப்படிவேர்
எருக்கம்வேர்

இவைகளை வகைக்கு (1 வராக்னெடை) எடுத்து இடித்து ஒரு பாக்கிரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகு மட்டும் வற்ற வைத்துச் சாப்பிடவும். சந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

## 206. தோஷ ஜ்வரங்களுக்குப் "பலா கஷாயம்"

நன்னயசித் றாமுட்டி பேர்மல்லி
சிற்றாமல்லி தாகமுட்டி
பின்னந்த வில்வவேரலதுகண்டங்
கத்தரிவேர் பேராமுட்டி
யின்னமுள்ளுக் கத்திரிவேர் இவையெட்டுஞ்
சமபாக மிட்டுக் காய்ச்சிச்
சொன்னப்படி யேவடித்துக் குடித்துவந்தால்
தோஷமுற்ற சுரந்தான்போமே. 270

(இ-ன்) சிற்றாமுட்டிவேர்
பேராமல்லி
சிற்றாமல்லி
நாகமுட்டி
வில்வவேர்
கண்டங்கத்திரிவேர்
பேராமுட்டி
முள்ளுக்கத்திரிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து. ஒன்றிரண்டாக இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகுமட்டும் எரித்துவடி கட்டிச் சாப்பிடவும். திரிதோஷ கோபத்தினால் ஏற்படும் பற்பல ஜ்வரங்களும் தீரும்

XXXX

## 207. விஷ ஜ்வரத்திற்குக் ''கெந்தகாதி மாத்திரை''

கெந்தகமிந் துப்புபச்சை நாபியிர
 தம்மிளகு கேள்நேர்வாளம்
யிந்தவகை சுத்திசெய்து பூசனிவி
 ரைப்பருப்பு மெல்லாம்நேராய்
பந்தமுடன் கூட்டியிஞ்சிச் சாற்றிலரைத்
 துளுந்துநிகர் பார்த்தோருண்டை
அந்தநல்விஞ் சிச்சாற்றி லேகொடுத்தால்
 விஷச்சுரங்க ளகன்றுபோமே. 271

(இ-ன்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
 ,, நாபி
 ,, பாதரசம்
 ,, நேர்வாளப்பருப்பு
பொரித்த இந்துப்பு
பூசனிவிரைப் பருப்பு
மிளகு

முதலான சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலிசெய்து பின்பு மற்ற சரக்குகளைப் போட்டுச் சூரணித்து இஞ்சிச்சாறு விட்டு 4 மணி நேரம் நேக வரைத்து உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

ஒரு குளிகையை இஞ்சிச்சாற்றில் கொடுக்க விஷ ஜ்வரங்கள் தீரும்.

## 208 பற்பல ஜ்வரங்களுக்கும் "நேர்வாள மாத்திரை"

இருகழஞ்சு நேர்வாளங் கடுகரோ
  கணிகளஞ்சோ ரீரண்டாம்
மருவுதிரி கடுகிரதங் கெந்தகமென்
  வெண்கார மற்றிந்துப்போ
ஒருவகைக்கோர் களஞ்சுநிறை கூட்டிமுலைப்
  பாலிலரை யோர்சமந்தான்
பருமுளுந்தி னிகர்குளிகை செய்துலர்த்திஞ்
  சிச்சாற்றிற் பண்பாயுண்ணே. 272

பண்பாயுண் டால்விஷச்சு ரங்களெல்லாஞ்
  சூரியன்முன் பனிபோனீங்கும்
நண்பாய்ம னோசிலையைச் சீரெலும்மிச்
  சம்பழத்தில் நண்ணுஞ்சாற்றிற்
கம்பார்த்த ரைத்திடுண்டை பயறுநிகர்
  செய்துலர்த்திக் கணக்காயொன்றை
உண்பாயிஞ் சிச்சாற்றில் விஷச்சுரமெல்
  லாம்நடுங்கி யோடிப்போமே. 273

நிசமாக நடுக்குஞ்சன் னியுந்தீருந்
  தேனதிலே நன்றாய்க்கூட்டிப்
பிசகாமல் நாவிலிட்டா லவட்டுகின்ற
  சன்னியும்போம் பிறங்குநல்ல

வசமானப் பழஞ்சாற்றி லுரைத்ததைப்பல்
லடியிலிட்டால் வலுவாய்க்கிட்டி
அசையாத வாய்திறக்குஞ் சந்நியுந்தா
னேவாசி யாகும்பாரே. 274

ஆகுமுலைப் பால்தேத்தாங் கொட்டையினி
லேயுரைத்தே யன்பாயிந்தால்
போகுமயக் குஞ்சன்னியு மிகக்குளிகை
வாய்நீரிற் போதரர்க்கண்ணில்
வாகுடனு ரைத்திட்டால் கண்விழித்துச்
சந்நியும்போம் வற்நல்லெண்ணெய்
சேகுயர்வேப் பெண்ணெயிலுப் பெண்ணெய்பின்னா
மணக்கிணெண்ணெய் செப்பும்நேரே, 275

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்) | சுத்தி செய்த நேர்வாளம் | —2½ | வராகனெடை |
| | ,, பாதரஸம் | 1¼ | ,, |
| | ,, நெல்லிக்காய் கெந்தகம் | 1¼ | ,, |
| | பொரித்த வெங்காரம் | 1¼ | ,, |
| | ,, இந்துப்பு | 1¼ | ,, |
| | கடுகரோகணி | —5 | வராகனெடை |
| | திரிகடு (சுக்கு, திப்பிலி, மிளகு) | 1¼ | ,, |

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து பின்பு மற்ற சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டு முலைப்பால் விட்டு 4 மணி நேரங்கள் அரைக்கவும். பின்பு உளுந்துப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இஞ்சிச் சாற்றில் ஒரு குளிகையைக் கொடுக்க விஷ ஜ்வரங் கள் தீரும் நன்றாகப் பேதியும் ஆகும்.

2) சுத்தி செய்த மனோசிலை 1 வராகனெடையைக் கல் வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக வரைத்துப் பயறளவுள்ள உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். இதனை நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரையை யெடுத்து இஞ்சிச் சாற்று டன் கொடுக்கவும்.

விஷ ஜ்வரங்களெல்லாந் தீரும் நடுக்கு ஜந்நிகளுந் தீரும்

ஒரு மாத்திரையைத் தேனில் குழைத்துக் கொடுக்க வாய் பிதற்றலுடன் கூடிய சந்நிகள் தீரும்.

எலுமிச்சம்பழச் சாற்றுடன் ஒரு மாத்திரையை யினழைத்துக் கிட்டிய பற்களினடியில் வைக்கவும். வாய் திறக்கும் சந்நியுந் தீரும்.

ஒரு சுத்தமான சந்தனக்கல்லில் 2 சொட்டு முலைப்பால் விட்டு அதனுடன் ஒரு தேத்தாங் கொட்டையை யுரைத்த விழுதுடன் ஒரு மாத்திரையைக் கொடுக்க மயக்கத்துடன் கூடிய சந்நிகள் தீரும்.

வாய் நீருடன் இழைத்துக் கண்களில் கலிக்கம் போடச் சந்நிகள் தீரும்.

குறிப்பு:— செய்யுளின் கடைசி அடியின் பொருள் விளங்கவில்லை

※—※—※

## 209. அதிசார ஜ்வரத்திற்குப் பற்பாடகக் கஷாயம்

குலவுபற்பா டகங்கோரைக் கிழங்குகுருந்
தோட்டியின்வேர் குருவிச்சம்வேர்
நீலமாவீர்க் காலீர்க்கு நாகவீர்க்கி
லங்குசுக்கு நற்செந்தொட்டி
பலவகையுஞ் சேர்த்திடித்துக் குடிநீர்வைத்
தேகாயும் பதத்திலோமம்
அலதுகிராம் பதிவிடையஞ் சாதிக்காய்
சாதிபத்திரி யைந்துந்தானே. 276

ஐந்தையுந்தா னோர்துணியிற் பொட்டணமாய்க்
கட்டிநன்னீ ரதிலேபோட்டு
வெந்தபிற குக்குடிநீ ரோருழக்காய்ச்
சுண்டினபின் வேண்டும்வாறே

சுந்தரமாம் பொட்டணத்தின் மருந்தையரைத்
துக்கரைத்துச் சுகமாயுண்டால்
பந்தமுய ரதிசாரச் சுரங்களெல்லாங்
கிட்டாமற் பறந்துபோமே. 277

(இ-ள்) பற்பாடகம்
கோரைக்கிழங்கு
குறுந்தோட்டிவேர்
குருவீச்சம்வேர்
ஆலிலையீர்க்கு
மாவிலையீர்க்கு
நாகலிலையீர்க்கு
சுக்கு
செந்தொட்டிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு நசுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி, ½ விட்டு, அதனுடன்

ஓமம்
கிராம்பு
அதிவிடையம்
சாதிக்காய்
சாதிபத்திரி

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துத் தூள் செய்து ஒரு துணியில் முடிந்து போட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டுமெரிக்கவும். பின்பு கஷாயத்தை இறுத்து, முடிச்சிலுள்ள சரக்குகளை அரைத்து அதனுடன் குழப்பிப் பருகவும்.

அதிசாரத்துடன் கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## 210. விஷ ஜ்வரத்திற்குக் 'கெந்தகாதிக் குளிகை'

நன்னயக்கெந் தகமிரத மிளகுபூ
சினிப்பருப்பு நளினமேவும்
பின்னந்த நேர்வாள மிவ்வகையெல்
லாஞ்சமதை பிசகாமற்றான்
சொன்னபடி யரைத்துளந்தி னேர்குளிகை
செய்துலர்த்தி சுகமாமிஞ்சி
யன்னருஞ்சாற் றினிற்கொடுத்தால் விஷச்சுரங்க
ளெல்லாம கன்றுபோமே. 278

(இ-ள்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரஸம்
,, நேர்வாளம்
மிளகு
பூசினிப்பருப்பு

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு முதலில் ரஸ கெந்தகங்களையரைத்துப் பின்னர் மற்றச் சரக்குகளைச் (சுத்த ஜலம் விட்டு) நன்றாகவரைத்து உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதிலொரு குளிகையை இஞ்சிச் சாற்றுடன் கொடுக்க விஷ ஜ்வரங்கள் தீரும்.

## 211. பற்பல ஜ்வரங்களுக்கு "முந்திரிகை வடகம்"

முந்திரிகை யதிமதுர நன்னாரி
பேரீச்சு மொழிநல்லேலம்
அந்தவிலா மிச்சைகோ ரைக்கிழங்கோ
டிருவேலி யதின்மென்றண்டு
சந்தனந்திப் பிலியினிச்சர்க் கரைசமன்கூட்
டிக்கருப்பஞ் சாறுதன்னில்
கந்தரமாயரைத்தெடுத்தேத் தாம்விரைநேர்
குளிகையைச்செய் சொன்னவாறே. 279

சொன்னஇஞ்சிச் சாற்றிலிடு சந்நியதற்
     தோபச் சுரத்திற்கப்பால்
கன்னியர்பா லிற்கொடுபித் தச்சுரத்திற்
     கேபயற்றங் கட்டிலிவாய்
மன்னியதோ ஷசுரத்திற் குப்பூசி
     னிக்காயின் மருவுநீரில்
இன்னயஞ்செய் சந்நியெடுத் துடன்பறியா
     மற்றிரித்தா லியம்பக்கேளே. 280

இயம்புமொரு குளிகையைநொச் சிச்சாற்றி
     லகத்தியிலை யெழிலாஞ்சாற்றில்
நயம்பெறுபூ ஷணிப்பூவி னிவ்வகைச்சாற்
     றினில்நசியம் நன்றாய்ச்செய்வாய்
அயர்வுசெய்கா மாலைக்கே கையாந்த
     கரைச்சாற்றி லன்பாயீவாய்
வியங்கொள்பித் தச்சந்நிசுர மெச்சுரமு
     மேகலங்கி விலகிப்போமே. 281

(இ-ன்) திராக்ஷைப்பழம்
அதிமதுரம்
நன்னாரிவேர்
பேரீச்சம்பழம்
ஏலக்காய்
இலாமிச்சைவேர்
கோரைக்கிழங்கு
வெட்டிவேர்
சந்தனத்தூள்
திப்பிலி
சர்க்கரை

இவைகளை வகைக்கு 1 பலம் விதமெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்து கல்வத்திலிட்டு கருப்பஞ்சாறுவிட்டு நேகவரைக்கவும். பின்பு தேத்தாங்கொட்டைப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி, சந்நிபாத ஜ்வரமானால் இஞ்சிச் சாற்றுடன் கொடுக்கவும்.

தாப ஜ்வரமானால் இம்மாத்திரையைத் தாய்ப் பாலு டன் உட்கொள்ளவும்.

பித்த ஜ்வரமாகில் பயத்தங் கஞ்சியுடன் சாப்பிடவும் திரிதோஷ ஜ்வரத்திற்கு பூசினிக்காய்ச் சாற்றில் கொடுக்கவும்.

உடர்பு அலட்டலுடன் கூடிய ஜ்வரமாகில் ஒரு குளி கையை நொச்சிச் சாற்றுடனோ நொச்சியிலைச் சாற்றிலோ, அகத்தியிலைச் சாற்றிலோ அல்லது பூசினிப்பூச் சாற்றிலோ, நசியஞ்செய்யவும்.

காமாலைக்குக் கையாந்தகரைச் சாற்றில் ஒரு குளிகை கொடுக்கவும்.

பித்தசந்நி, பித்த ஜ்வரம் முதலான பற்பல நோய்களுந் தீரும்.

## 212. அதிசார ஜ்வரத்திற்கு 'இலந்தைக் கஷாயம்'

இலந்தைவில்வம் நீர்ப்பூலா மேலாத்திச்
சூரைமுத லெழிலார்பட்டை
நலந்தரும்வெங் காயமும்வெந் தயமிரண்டும்
வறுத்தெடுத்து நன்றாய்பட்டை
உலராம லிடித்ததைக் கஷாயமிட்டுக்
கொண்டுவடித் துண்டேவந்தால்
குலவுசுர மல்லாமற் பொல்லாணி
ரேசனமுங் குணங்களாமே. 282

(இ-ள்) இலந்தைப்பட்டை
வில்வப்பட்டை
நீர்பூலாவேர்பட்டை
ஆத்திப்பட்டை
சூரைப்பட்டை

வெங்காயம் (பொன் வறுவலாக வதக்கியது)
வெந்தயம் ( ,, வறுத்தது)

முதலான சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு நசுக்கி, சுத்த ஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதனையுட்கொள்ள அதிசாரத்துடன் கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## 213. அதிசார ஜ்வரத்திற்குப் "பெருந்துத்தி வேர்க் கஷாயம்"

பெருந்துத்தி வேரதனைத் தண்ணீரி
லேகாய்ச்சிப் பிசைந்தேதநன்றாய்
திருந்தவுந்தா னோருழக்கு வடித்திடுக
ஷாயமதிற் திட்டமாகப்
பொருந்தியசாத் திரவேதி பொடிசெய்தரைப்
பணவெடைகள் போட்டேயுண்டால்
வருந்துமதி சாரமுற்ற பொல்லாத
சுரங்களெல்லாம் வாசியாமே. 283

(இ-ள்) பெருந்துத்திவேரை 2 வராகனெடை எடுத்து நசுக்கித் தண்ணீர் சின்னப்படி $\frac{1}{4}$ லுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்கு ஆகுபட்டும் எரிக்கவும். இதனுடன் சாத்திரவேதி (கஸ்தூரி) (ஒன்றரையேரைக்கால் குன்றிமணி) அதாவது $1\frac{5}{8}$ போட்டுப் பருகவும். அதிசாரத்துடன் கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## 214. அதிசார ஜ்வரத்திற்குச் 'சந்தனாதி கஷாயம்'

சந்தனங்கோ ரைக்கிழங்கு நன்னாரி
யமதிதுரஞ் சார்ந்தநெய்தல்

அந்தநற்கி ழங்குமுந்தி ரிகைப்பழம்பச்
சைப்பயறோ டனைத்துங்கூட்டிப்
பந்தமுட னிடித்ததைக் கஷாயமிட்டுக்
கொடுத்துவந்தால் பண்பாய்க்கேளு
முந்தடல்செய் யதிசாரச் சுரங்களெல்லாம்
நில்லாமல் முறிந்துபோமே. 284

(இ ன்) சந்தனத்தூள்
கோரைக்கிழங்கு
நன்னாரிவேர்
அதிமதுரம்
நெய்தல்கிழங்கு
திராக்ஷைப்பழம்
பச்சைப்பயறு

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ½ விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து உழக்காக்கி இறக்கவும். அதிசாரத்துடன் ஏற்பட்ட ஜ்வரங்கள் தீரும்.

## 215. அதிஸார ஜ்வரத்திற்குப் 'பெருமரப்பட்டைக் கஷாயம்'

பெருமரத்தின் பட்டையதி விடையங்கோ
ரைக்கிழங்கு பின்வில்வக்காய்
பருகியமா துளையோடு வகைக்கிரண்டு
காசெடைசேர் பண்பாய்த்தண்ணீர்
இருபடிவிட் டேயுழக்காய்க் காய்ச்சிவடித்
துண்டுவந்தா லிடராய்ப்பண்டு
மருவியவல் லதிசாரச் சுரங்களெல்லாந்
தப்பாமல் மாறிப்போமே, 285

(இ-ள்) பெருமரப்பட்டை
அதிவிடையம்
கோரைக்கிழங்கு
வில்வக்காய்
மாதுளையோடு

முதலிய சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்கானபின் இறக்கி வடிக்கட்டி உட்கொள்ள அதிசாரத்துடன் கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## 216. அதிசார ஜ்வரத்திற்கு 'உசீராதி கஷாயம்'

வெட்டிவேர் சுக்குவிலா மிச்சையின்வேர்
பொன்முசுட்டை வேரிதெல்லாஞ்
சட்டமுடன் வகைக்கிரண்டு காசெடைசேர்த்
திடித்தெடுத்துச் சரியாய்த்தண்ணீர்
திட்டமிரு படியளந்து விட்டுழக்காய்க்
காய்ச்சிவடித் தேதானுண்டா.ல்
துட்டவிரே சனங்காய்ச்ச லிவ்வகைக
ளெல்லாந்தான் துலைந்துபோமே. 276

(இ-ள்) வெட்டிவேர்
சுக்கு
இலாமிச்சைவேர்
பொன்முசுட்டைவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேல் ஏற்றி எரித்து ஒரு உழக்காக்கி இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவர பேதியுடன் கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## 217. பேதியுடன் கூடிய ஜ்வரத்திற்குத் "தாடிமாதி கஷாயம்"

பூதகரப் பான்பட்டை யதிவிடயம்
வில்வவேர் பொருந்துஞ் சுக்கு
மாதளைவேர்ப் பட்டையிளங் கொழுந்துமலர்
பிசகாமற் மத்திதல்லால்
சிதமுத்தக் காசுவகைக் கரைப்பலம்நா
ணாழி தண்ணீர் சேர்த்துக்காய்ச்சி
நீதமொரு நாழிவடித் துண்டுவந்தால்
பேதிசுரம் நீங்கிப்போமே. 287

(இ-ள்) பூதகரப்பான்பட்டை
அதிவிடையம்
வில்வவேர்
சுக்கு
மாதளைவேர்ப்பட்டை
மாதளைக்கொழுந்து
மாதளம்பூ
கோரைக்கிழங்கு

முதலான சரக்குகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்து நசுக்கியொரு பாத்திரத்திலிட்டு, சுத்தஜலம் பெரியபடி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி நான்கிலொன்றாகும் வரை எரித்து வடிகட்டியுட்கொள்ளப் பேதியுடன் கூடிய ஜ்வரங்கள் தீரும்.

## 218. விஷ ஜ்வரங்களுக்குக் 'கெந்தகாதி மாத்திரை'

கெந்தகந்தா னிருகழஞ்சு தாம்பிரபற்
பங்கழஞ்சு கிளரும்நாபி
பந்தமுட னிருகழஞ்சு பின்மிளகு
நாற்கழஞ்சு பண்பாய்க்கூட்டி

அந்தவல்லிஞ் சிச்சாற்றில் நாள்முழுதும்
தப்பாம லரைத்தேயப்பால்
சுந்தரஞ்சேர் குன்றிநிகர் குளிகைசெய்து
நிழலுலர்த்திச் சொன்னவாறே. 288

சொன்னபடி யோர்குளிகை யிஞ்சியின்சாற்
றீந்திடன்றி சூழ்ந்தே காணில்
வன்னமலர் பூற்றிடெருக் கம்பழுப்பின்
சாற்றினிலீ வரிசையாய்த்தான்
யின்னவித முப்பொழுது மீய்ந்துவரில்
பத்தியங்கே ளினிதாமந்த
நன்னயஞ்சேர் பாலன்னமு முண்டிடலாம்
விஷச்சுரம் பின் னலிந்துபோமே. 289

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 2½ | வராகனெடை |
| ,, நாபி | 2½ | ,, |
| மிளகு | 5 | ,, |
| தாமிரபற்பம் | 1¼ | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து. இஞ்சிச் சாறுவிட்டு ஒருநாள் முழுவதும் நன்றாக அரைக்கவும். மறு நாள் இதனைக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரை களாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதிலொரு மாத்திரை எடுத்து இஞ்சிச் சாற்றுடன் உட்கொள்ளவும். வெள் ளெருக்கம் பழுப்புச்சாற்றுடனும் உட்கொள்ளலாம். விஷ ஜ்வரங்கள் தீரும். தினந்தோறும் 3 வேளை உட்கொள்ளவும்.

**பத்தியம்:—** பால்சாதம் மாத்திரமே சாப்பிடவும்.

## 219. ஜ்வரத்திற்கும், வீக்கத்திற்கும் "பேய்ப் பீர்க்கம் எண்ணெய்"

சட்டமுள்ளா மணக்கெண்ணெயு மொருநாழி
பேய்ப்பீர்க்கின் சாறுநாழி
வட்டறுப்பாய் பெருங்காய மொன்றதுவ
ராகனெடை வசம்போடுள்ளி
திட்டமுட னிட்டெரித்துப் பக்குவம்பார்த்
தாழாக்குத் தேர்ந்தே யீந்தால்
விட்டகலாச் சுரத்தில்வந்த வீக்கமெல்லாம்
பேதியுண்டாய் விட்டுப்போமே. 290

(இ-ள்) ஆமணக்கெண்ணெய் சின்னப்படி ½
பேய்ப்பீர்க்கஞ்சாறு ,,
இவைகளை ஒன்று கலந்து,
வறுத்த பெருங்காயம்
வசம்பு
பூண்டு

இம்மூன்றையும் வகைக்கு ஒரு வராகனெடை வீதம் எடுத்து நன்றாக அரைத்துச்சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கி இறக்கவும். இதனை (சுமார் 1 அவுன்ஸ்) சாப்பிட வீக்கத்துடனேற்பட்ட ஜ்வரங்கள் தீரும். நன்றாகப் பேதியுமாகும்.

## 220. விஷ ஜ்வரங்களுக்கு 'நிலவேம்புக் கடாயம்"

நிலவேம்பு திரிகடுகு வெட்பாலை
யரிசியொடு நீள்பொற்கொன்றை
யிலகியவேர் தெர்ப்பையின்வேர் சிற்றாமுட்டி
வேர்கோட்ட மிலுப்பையொன்பூ
நல்சிறுகாஞ் சோறிவேர்பற் பாடகம்பேய்ப்
புடல்கசப்பு நண்ணும்வேரும்

உலவியகோ ரைக்கிழங்கு மதிமதுரஞ்
சொல்லுநிறை யோதக்கேளே. 291

ஓதக்கே ளொவ்வொரு வகைக்கிரண்டு
காசெடைவைத் தொன்றாய்க்கூட்டி
நீதமுட னிடித்தெடுத்தே யிருபடிநீர்
விட்டுழக்கு நேராய்க்காய்ச்சிக்
காதலுட னேவடித்துத் தப்பாம
லேகொடுத்தால் கலக்கஞ்செய்யும்
போதவிஷச் சுரங்களெல்லா மாதவனைக்
காண்பனிபோல் போகுந்தானே. 282

(இ-ள்) நிலவேம்பு
சுக்கு
திப்பிலி
மிளகு
வெட்பாலையரிசி
பொற்கொன்றைவேர்
தெர்ப்பைவேர்
சிற்றாமுட்டிவேர்
இலுப்பைப்பூ
கோஷ்டம்
கிறுகாஞ்சோறிவேர்
பற்பாடகம்
பேய்ப்புடல்வேர்
கோரைக்கிழங்கு
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டுநன்றாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகு மட்டும் எரித்து இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவர ஜ்வரங்கள் தீரும்.

## 221. விஷ ஜ்வரத்திற்கு 'முஸ்தாதிக் கஷாயம்'

நன்னயக்கோ ரைக்கிழங்கு சீந்தில்நெல்லிப்
　　பருப்புமிவை நயந்தேநன்றாய்ச்
சொன்னவகை யொன்றினுக்கு மூன்றதுகா
　　செடையிடித்துச் சுகமாய்க்கூட்டி
யின்னமிரு படிநந்நீர் விட்டுழக்காய்க்
　　காய்ச்சிவடித் தெடுத்தே தேனும்
வன்னவெல்ல முங்கலந்துண் டால்விழச்சு
　　ரங்களெல்லாம் வாங்கிப்போமே. 293

(இ-ள்) கோரைக்கிழங்கு
சீந்தில்கொடி
நெல்லிப்பருப்பு

இவைகளை வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின்மேல் ஏற்றி ஒரு உழக்காகும்வரை வற்றவைத்துத் தேனும் வெல்லமும் போட்டுப் பருகிவர விஷ ஜ்வரங்கள் தீரும்.

## 222. விஷ ஜ்வரங்களுக்குப் ''பிப்பல்யாதி கிறுதமும், கஷாயமும்''

திப்பிலிகோ ரைக்கிழங்கு கொடிவேலி
　　வேர்வசம்பு தேவதாரம்
வேப்பலகு திரிகடுவாய் விளங்கஞ்
　　செவ்வியமதி விடையமஞ்சள்
ஒப்பிலிந்த வகையரைத்துக் கோசலங்கோ
　　மியம் நெய் தயிர் ஒதும்பாலில்
தப்பின்றிக்க ரைத்தெரித்துக் காய்ச்சியுழக்
　　காய்வடித்துத் தந்திடாயே. 294

தந்தவுடன் விஷச்சுரஞ்சி தச்சுரம்வீக்
　　கம்பாண்டுந் தாண்டுமப்பா

லந்தமிகுங் கொத்தமல்லி சுக்குசித்தா
முட்டியின்வே ரந்தமூன்றுஞ்
சுந்தரமா யிடித்ததிலே யொருபடிநந்
நீரைவிட்டுச் சுண்டக்காய்ச்சிப்
பந்தமதாய் வடித்துழக்குக் கொடுத்துவந்தால்
விழசுரந்தான் பறந்துபோமே. 295

(இ-ள்) திப்பிலி
கோரைக்கிழங்கு
கொடிவேலிவேர்
வசம்பு
தேவதாரு
வேப்பலகு
சுக்கு
திப்பிலி
மிளகு
வாயுவிடங்கம்
செவ்வியம்
அதிவிடையம்
மஞ்சள்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துச் சூரணித்துக்கொண்டு,

| | | |
|---|---|---|
| பசுவின் | மூத்திரம் | சின்னப்படி ½ |
| ,, | சாணிச்சாறு | ,, |
| ,, | பால் | ,, |
| ,, | நெய் | ,, |
| ,, | தயிர் | ,, |

இவைகளுடன் போட்டு நன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி நெய்யாகும்வரை எரித்து இறக்கவும், இந்நெய்யில் ஒரு வராகனெடை எடுத்து உட்கொள்ள விஷ ஜ்வரங்கள் தீரும். வீக்கம், பாண்டு ரோகங்கள் முதலானவைகளும் தீரும்.

கொத்தமல்லி

சுக்கு

சித்தாமுட்டிவேர்

இம்மூன்றையும் இடித்து (வகைக்கு 1 வராகனெடை) ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை எரித்துச் சாப்பிட விஷ ஜ்வரங்கள் தீரும்

## 223 ஜ்வர வீக்கத்திற்கு 'வெண்ணொச்சி வேது'

நன்னயவெண் ணொச்சியின்வேர்ப் பட்டைமரப்
பட்டையிலை நறுக்காய்க் கூட்டி
மன்னவுமு டாவிலிட்டு விடும்நீர்காற்
பங்குவற்று மட்டுங்காய்ச்சிப்
பின்னதிலி ரண்டுகைநீ ருண்டுடம்பி
லேவேது பிடித்துவார்த்தால்
இன்னஞ்செய் திடுஞ்சுரத்தின் மேலெழுந்த
வீக்கமெல்லாம் நீங்கிப்போமே. 296

(இ-ள்) வெண்ணொச்சி வேர்ப்பட்டை
,, மரப்பட்டை
,, இலை

இவைகளை வகைக்கு (10 பலம்) எடுத்து 8 மரக்கால் தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாகு மட்டும் எரித்து ஒரு பாத்திரத்திலூற்றிக் கொண்டு, அதில் 2 கையளவு கஷாயமெடுத்துச் சாப்பிட்டு உடம்பிற்கும் வேது பிடிக்கவும்.

ஜ்வரத்தினாலேற்படும் வீக்கம் தீரும்.

## 224. விஷம ஜ்வரங்களுக்கு 'அரிதாரக் குளிகை'

பொன்னரிதா ரங்கழஞ்சு மெலிப்பாஷா
ணங்கழஞ்சும் பொற்சுண்ணாம்பும்
அன்னதிரு பணவெடையுஞ் சேர்த்தூமத்
தஞ்சாற்றி லரைத்தோருண்டை
சொன்னபய றளவுசெய்து பின்னிழலி
லேயுலர்த்திச் சுகமாய்நல்ல
வன்னமிள கினில்நான்குங் குளிகையொன்று
வெத்திலையில் வைத்துத்தானே. 297

வைத்துநன் றாய்க் கொடுத்திடொரு நாள்பயற்றங்
கட்டுடய்ந்து வரிசையாகச்
சித்தமுத்திப் படியேதப் பாமல்மூன்
றுநாட்செய் தாலக்காய்ச்சல்
உத்தமமாம் பத்தியமி ராத்திரிக்குப்
பாலன்னமே யுதவுமென்மேல்
முத்தமிழோர் சங்கம்நிறைச் சரபேந்திர
பூபதிசொல் முறையிதாமே. 298

| | | |
|---|---|---|
| (இ-ள்) சுத்திசெய்த தாளகம் | — | 1¼ வராகனெடை |
| ,, எலிப்பாஷாணம் | — | ,, |
| சுண்ணாம்பு | — | 2 பணவெடை |

இவைகளைக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச்சாறுவிட்டு நன்றாக அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். ஒரு வெத்திலையில் 4 மிளகும், 1 மாத்திரையும் சேர்த்துச் சாப்பிடவும் அன்று பகலில் பயற்றங் கஞ்சி மாத்திரம் உட்கொண்டு, இரவில் பால் சாதம் சாப்பிடவும். இவ்வாறு 3 நாட்கள் உபயோகிக்க விஷம ஜ்வரங்கள் தீரும்.

## 225. மாறல் ஜ்வரங்களுக்குத் "துத்தாதி மாத்திரை"

துத்தமரி தாரம்நிர் விஷமிரதஞ்
சாதிலிங்கந் துருசியல்லால்
உத்தமமாங் கெந்தகமிவ் வகைக்கொரு
விராகனெடை யொவ்வொன்றாகச்
சுத்திசெய்து பாகலிலைச் சாறுதன்னில்
பன்னிருநாட் சொன்னவாறே
வைத்தரைத்து ளுந்துநிகர் குளிகைசெய்து
லர்த்தியப்பால் வயணங்கேளே. 299

வயணங்கேள் முறைக்காய்ச்ச லுக்குமுலைப்
பாலினிலீ வளஞ்சேரந்த
நயமுருங்கைச் சாற்றிலிடு மூன்றுசுரத்
துக்குமிஞ்சி நண்ணூஞ்சாற்றில்
இயல்புடநீ நாலுநாள் மாறலுக்குக்
காடிதனி லிடுவாய்கீர்த்தி
யுயர்தருமம் நிறைந்திலங்குஞ் சரபேந்திர
பூபதிசொல் லுண்மைதானே. 300

(இ-ள்) சுத்திசெய்த துத்தம்
,, தாளகம்
,, பாதரசம்
,, லிங்கம்
,, துருசு
,, நெல்லிக்காய் கெந்தகம்
நிர்விஷம்

முதலான சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்ற சரக்குகளைப் போட்டு பாகலிலைச்சாறு விட்டு 12 நாட்களுக்கரைக்கவும். பின்பு உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து,

முறை ஜ்வரங்களுக்கு முலைப்பாலிலோ, அல்லது முருங்கைப் பட்டைச் சாற்றிலோ சாப்பிடவும்.

மூன்று நாட்களுக்கொரு தடவையேற்படும் ஜ்வரங்களுக்கு இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளவும்

நான்கு நாட்களுக்கொரு முறை வருஞ் ஜ்வரத்திற்குக் காடியுடன் விழுங்கவும்.

## 226. சாயங்கால வேளைகளில் வரும் ஜ்வரங் களுக்கு "நிலவேம்புக் கஷாயம்"

சுகமிலகு நிலவேம்பு நெல்லிமுள்ளி
மரவேருஞ் சுகந்தசுக்கு
பகர்கடுக ரோகணிதிப் பிலிக்கசக்கும்
பேய்ப்புடனற் பாவட்டம்வேர்
யிகழாமற் சேர்த்திடித்துக் காய்ச்சிவடித்
துக்குடித்தா லியம்பக்கேளாய்
திகழ்மாலைப் பொழுதனில் வந்திடர்செய்
சுரமுழுதுந் தீர்ந்துபோமே. 301

(இ ன்) நிலவேம்பு
நெல்லிமுள்ளி
நெல்லிமரவேர்
சுக்கு
கடுகரோகிணி
திப்பிலி
பேய்ப்புடல்
பாவட்டம்வேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி 1 படி விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்ற வைத்துப் பருகவும்.

சாயங்கால நேரங்களில் ஏற்படும் ஜ்வரங்கள் தீரும்.

## 227. முறைக் காய்ச்சலுக்குத் 'தூதுவளைக் கஷாயம்'

தூதுவளை பேராமுட்டி சிற்றாமுட்டி
துளசிவிஷ்ணுக் ராந்திகட்டுச் கொடிவல்லாரை
ஓதுபச்சை யுமிகுழிமிட் டானிதல்லா
லோரிதட்டா மரைசிந்திற் றண்டுசுக்கு
மீதுமுட்டுச் செடியொருத லைப்பூண்டாங்கே
மேவியதிப் பிலிகூட்டி யிடித்துக்காய்ச்சி
வாதுசெய்யு முறைக்காய்ச்சற் கீந்தேவந்தால்
வண்மையுட னேயெவர்க்கும் வாசியாமே. 302

(இ-ள்) தூதுவளைவேர்
பேராமுட்டிவேர்
சிற்றாமுட்டிவேர்
துளசி
விஷ்ணுக்ராந்தி
கட்டுக்கொடி
வல்லாரை
நத்தைச்சூரிச்சமூலம்
ஓரிதழ்த்தாமரை
சிந்தில்கொடி
சுக்கு
ஒருதலைப்பூண்டு
திப்பிலி

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்றாக இடித்து (வகைக்கு 2 வராகனெடை) ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்ற வைக்கவும். இதனைப் பருகக்கொடுக்க முறை ஜ்வரங்கள் தீரும்.

## 228. சன்னிபாத ஜ்வரங்களுக்கு 'நாபிக் குளிகை'

உத்தமக்கோ மூத்திரத்தி லறுபதுநா
ழிகைசரியா யூறப்போட்டு
வைத்தபச்சை நாபிசெந்த கங்கடுக்காய்
தான்றிக்காய் வண்வெங்காரஞ்
சுத்தநெல்லி முள்ளிசுக்கு திப்பிலியிவ்
வோர்வகைக்குச் சொன்னவாறு
சித்தமகிழ்ந் தொவ்வொன்று கழஞ்சுமரி
தாரமினிச் செப்புவேனே. 303

செப்பக்கே ளொருமூன்று கழஞ்சதறு
கழஞ்சுசுத்தி செய்நேர்வாளம்
இப்பலநல் வகையுமிர தமுங்கூட்டி
முள்ளிமுறுக் கிலையின் சாற்றில்
அப்படியே யரைத்தெடுத்து துவரைநிக
ராய்க்குளிகை யழகாய்ச்செய்தே
வாய்ப்புடனே நிழலுலர்த்தி யிஞ்சிச்சா
றுதனிலு முண்டபேர்க்கே. 304

உண்டபின்வி ரேசனமாம் விஷசுரதா
பசுரமும் மூலமாமந்த
துண்டரிக்கச் சன்னிவாதச் சுரஞ்சூலை
யின்வலிபோந் து ...... ...
துண்டிநாற்க ளஞ்சுசிற்றா முட்டியவ்வேர்
பேர்முட்டி குலவுவேர்தான்
பண்டுரைக்கும் நாற்க... ...... மிகு
கழஞ்சதுவும் பண்பாய்பின்னே. 305

பின்னந்த வகைமுழுதுங் கூட்டிநன்றாய்
... — ... ...... ... பிசகிடாமற்
சொன்னபடி நந்நீரை விட்டெரித்தே
யெட்டிலொன்றாய்ச் சுண்டக்காய்ச்சி
நன்னயஞ்சேர் திப்பிலிமென் பொடிபேரட்டுக்
கொடுத்திடுவாய் நானாளுஞ்சஞ்ச

— … — … . …மணிமார்பன் சரபேந்திர
னிம்முறைகள் புகன்றதாமே. 306

(இ-ள்) நாபியைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிப் பசுவின் மூத்திரத்திலிட்டு ஒருநாள் முழுவதும் ஊறவைத்து அலம்பி எடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| மேற்சொன்னவாறு சுத்திசெய்த நாபி | | —$1\frac{1}{4}$ வராகனெடை |
| சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் | | $1\frac{1}{4}$ வராகனெடை |
| ,, | பாதரஸம் | ,, |
| கடுக்காய்த்தோல் | | ,, |
| தான்றிக்காய்த் தோல் | | ,, |
| நெல்லிவற்றல் | | ,, |
| பொரித்த வெங்காரம் | | ,, |
| சுக்கு | | ,, |
| திப்பிலி | | ,, |
| சுத்திசெய்த தாளகம் | | $3\frac{3}{4}$ வராகனெடை |
| ,, | நேர்வாளப் பருப்பு | $7\frac{1}{2}$ ,, |

முதலானவைகளுள், முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலியாகச் செய்து பின்பு மற்றச் சரக்குகளைச் சூரணித்துப் போட்டு, முள்ளுமுருக்கிலைச்சாறு விட்டு ஒரு நாள் முழுவதுமரைத்துத் துவரைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இதிலொரு மாத்திரையை எடுத்து இஞ்சிச் சாற்றுடன் உட்கொள்ள, 4 அல்லது 5 தடவை மலம் கழிந்து விஷம ஜ்வரங்கள், தாப ஜ்வரங்கள், சன்னிபாத ஜ்வரங்கள், சூலை, முதலான ரோகங்கள் தீரும்.

| | |
|---|---|
| 2) ……………………… | 5 வராகனெடை |
| சிற்றாமுட்டிவேர் | ,, |
| பேராமுட்டிவேர் | ,, |
| ……………………… | $2\frac{1}{2}$ வராகனெடை |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துச் சின்னப்படி 1 சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதனுடன் திப்பிலிச் சூரணம் போட்டுப் பருகவும். ஜ்வரங்கள் தீரும்.

## 229. முறைக் காய்ச்சலுக்கு "எலிப்பாஷாண மாத்திரை"

செப்புமெலிப் பாஷாண ... ...
......மனோ சிலைநற்றுத்தம்
வெப்புளபொன் னரிதார மிவ்வகை
சமமாக வேதாங்கூட்டி
..............பாகலிலைச் சாறுதனி
லரைத்தெடுத்தெக் கணஞ்சேர்குன்றி
யொப்புடன குளிகை யொன்றுமிள
குபற்று மோதுவாரே. 307

ஓதியப டிக்கிரண்டு பொடி
... — பன்னீ ருடேயீந்து.........
கோதிலாநற் பயத்தங்கட் டுதவிப்பின்பு
கஞ்சிகொடுப் பா .. — — — ...
— — — — ராத்திரிக்கி நற்பசுவின்
பாலனமும் மிதமாயீந்தால்
ஆதிமுதல் வந்தடங்கீய் நாலாமு
றைக்காய்ச்சல் கண்டுபோமே. 308

(இ-ள்) சுத்திசெய்த எலிப்பாஷாணம்
,, மனோசிலை
,, துத்தம்
,, தாளகம்

இவைகளைக் கல்வத்திலிட்டுப் (பாகலிலைச்சாறு) விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள குளிகைளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

ஒரு குளிகையைப் பத்து மிளகின் சூரணத்துடன் கலந்து சுத்தமான பன்னீருடன் உட்கொள்ளவும்.

**பத்தியம்:—** பகலில் பயத்தங்கஞ்சி சாப்பிட்டு, இரவு வேளைகளில் பசுவின் பால் சாதம் சாப்பிடவும். நாலு நாட்களுக்கொரு முறை ஏற்படும் ஜ்வரங்கள் தீரும்.

## 230. ஜ்வரங்களுக்குச் "சாதிலிங்க மாத்திரை"

சாதிலிங்கம் கௌரீபா ஷாணமொடு
துருசியிவை சமதைகூட்டி
ஓதியநற் பாகலிலைச் சாற்றிலரைத்
தேமிளகுக் கொப்பாயுண்டை
மீதிலங்கச் செய்துநிழ லினிலுலர்த்தி
யொவ்வொருண்டை மெல்லிநல்லார்
நீதிமுலைப் பாலிலிட்டுப் பத்தியம்பா
லனங்கொடுத்து நித்தந்தானே. 309

| | | |
|---|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த | சாதிலிங்கம் | 1 வராகனெடை |
| ,, | கௌரீபாஷாணம் | ,, |
| ,, | துருசு | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பாகலிலைச்சாறு விட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்து மிளகளவுள்ள உருண்டைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

இதிலொரு மாத்திரை எடுத்து முலைப்பாலில் உட்கொள்ளவும்.

**பத்தியம்:—** தினந்தோறும் பசுவின் பால்சாதம் மாத்திரமே சாப்பிடவும்

## 231. ஜ்வர வீக்கங்களுக்கு ''பேய்க்கருப்பங் கொழுந்து கஷாயம்''

பொல்லாத பேய்க்கருப்பங் கொழுந்துகடுக்
காய்நெரிஞ்சிற் பொருநீர்முள்ளி
வல்லாருஞ் செம்புளிச்சஞ் சந்தனஞ்சா
ரணைவிழுதி வாய்ந்திலங்கும்
நல்லாண்மை யிலைகளிவை சமபாக
மாய்க்கூட்டி நயந்தேபின்னால்
யெல்லாந்தான் பிசகாமல் சட்டமுடன்
னெஞ்சுகந்தே யிடித்துத்தானே. 310

இடித்தெடுத்துச் சொன்னபடி தண்ணீரை
விட்டெரித்தே யெட்டிலொன்றாய்
வடித்ததிலே திட்டமொடு திப்பிலியை
மென்பொடியாய் வளமாய்ப்போட்டுக்
குடித்துவரி லுடலிலுற்ற சுரவீக்கம்
வாடியப்பால் குணமேயாகும்
படித்தபொருள் விரித்துரைசெய் தருமதுரை
சரபேந்திரன் பகர்ந்தவாறே. 311

(இ-ள்) பேய்க்கருப்பங்கொழுந்து
கடுக்காய்த்தோல்
நெருஞ்சிக்கொழுந்து
நீர்முள்ளிச்சமூலம்
செம்புளிச்சை
சத்தனஇலை
சாறணைவேர்
விழுதியிலை

இவைகளை வகைக்கு ஒருபிடி எடுத்துக் கல்லுரலிலிட்டு நசுக்கி, 16 பங்கு சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாக்கி இறக்கவும்.

இக்கஷாயத்துடன் திப்பிலிச் சூரணம் போட்டுச் சாப்பிடவும். ஜ்வரத்துடன் கூடிய வீக்கங்கள் கரையும்.

## 232. பற்பல ஜ்வரங்களுக்கும் "தூதுவளை வேராதிக் கஷாயம்"

தூதுவளை வேருபற்பா டகஞ்சிறுகாஞ்
சோறிகோஷ்டந் துதிக்கும்சுக்கு
மீதுநற்திப் பிலிகோரைக் கிழங்குசிறு
தேக்குநில வேம்பிதெல்லா
மோதுவகைக் கோரிரண்டு காசிடைசேர்த்
திடித்ததிலே யொண்ணீர்தன்னில்
கோதிலா திருபடிவிட்டேயுழக்சா
சுக்காய்ச்சிக் கொடுத்திடாயே. 312

கொடுத்திட்டா லொன்றிரண்டு மூன்று நான்கு
துளிகுநாள் குலைவுங்காய்ச்சல்
அடுத்திடும சீரணத்தின் சுரமும்விடாச்
சுரத்தினிடர் அப்பால்நீங்கும்
விடுத்திடா மல்மூன்று நாளீந்தால்
குளிரும்விடும் வேண்டிநெஞ்சிற்
தொடுத்தபடி யேதிடமாய் நாட்குநா
ளுடல் பெருத்துத் துலங்குந்தானே. 313

(இ-ள்) தூதுவளைவேர்
பற்பாடகம்
சிறுகாஞ்சோறிவேர்
கோஷ்டம்
சுக்கு
திப்பிலி
கோரைக்கிழங்கு
சிறுதேக்கு
நிலவேம்பு

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, ஒரு உழக்காகச் சுண்டவைத்துச் சாப்பிடவும்.

தினந்தோருமோ, அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை யோ, மூன்று நாட்கொரு முறையோ அல்லது 4 நாட்களுக்கு ஒருமுறை வரும் ஜ்வரம் முதலானவைகளுக்கும் அஜீரண ஜ்வரங் களுக்கும் இக்கஷாயத்தை 3 நாட்களுக்குச் சாப்பிடவும். குளிர் ஜ்வரங்களும் நீங்கும். உடலும் பெருக்கும்.

****

## 233. பற்பல ஜ்வரங்களுக்கும் 'பற்பாடக விழுது'

அந்தநற்பற் பாடகத்தை யிளம்வெந்நீர்
    தனிலரைத்தே யதுசொற்திட்டம்
பந்தமுட னரையெலுமிச் சங்காய்நேர்
    எருமைவெண்ணெய் பண்பாய்ச்சொல்வேன்
சுந்தரஞ்செய் யோரெலுமிச் சங்காய்ச்சீ
    ரிவ்விரண்டுஞ் சுகமாய்க்கூட்டி
யிந்தவண்ணம் பதினைந்து நாள்விடா
    மற்கொடுத்தா லியம்பக்கேளே. 313

இயம்பக்கே ளொன்றிரண்டு மூன்றுநான்
    கேநாள்விட் டிடர்செய்மாறல்
வியம்பெருமச் சுரங்களோடு குளிர்சுரமெல்
    லாந்தீர்ந்து விடுமேயப்பால்
தயங்காம லுடல்பெருக்கும் பத்தியம
    தாய்வரவும் தரணியெங்கும்
செயமருவு தருமநிறை யரசர்புகழ்
    சரபேந்திரன் செப்பும்வாறே. 315

(இ-ள்.) பற்பாடகத்தை வெதுவெதுப்பான வெந்நீர் விட்டரைத்து எடுத்த

| | | |
|---|---|---|
| விழுது | ½ | எலுமிச்சைப்பிரமாணம் |
| எருமைவெண்ணெய் | ஒரு | ,, |

இவ்விரண்டையும் குழைத்து 15 நாட்களுக்கு உட் கொள்ளவும். 2, 3, 4, நாட்களுக்கொருமுறை வந்து

வாதனை செய்யும் குளிர் ஜ்வரங்கள் தீரும். உடலும் பெருக்கும்.

பத்தியமாக இருக்கவும்.

## 234. சகல ஜ்வரங்களுக்கும் 'விடத்தகரையாதி கஷாயம்'

நன்னயஞ்சேர் விடத்தகரைவேர் சாரணைவேர்
சிற்றாமுட்டி நண்ணும்வேரும்
யின்னமுஞ்சீந் திற்கொடிசங் கம்வேர்கஞ்
சாங்கோரை யெழிலாணாவேர்
பன்னருங்கோ ரைக்கிழங்கு கற்றாழஞ்
சருகுமயிர் மாணிக்கம்பின்
பொன்னணியுங் கொன்றைமரப் பட்டைவில்வப்
பட்டையவ்வேர் பொருந்தத்தானே. 316

பொருந்திவண் டுதுவளை வேர்ப்பட்டை
துளசியின்வேர் புனல்முளளிவேர்
திருந்துமிவை சமன்கூட்டி யாறுபடி
நீர்விட்டுச் சீரகத்தோ
டொருமைமிள கும்முடிந்திட் டேகாய்ச்சு
மூன்றுபடி யுற்றாற்போட்ட
மருந்தரைத்துக் கலந்துகஷா யங்கொடுத்தால்
சகலசுர மாறிப்போமே. 317

(இ-ள்) விடத்தகரைவேர்
சாரணைவேர்
சிற்றாமுட்டிவேர்
சீந்திற்கொடி
சங்கம்வேர்
கஞ்சாங்கோரை
காட்டாமணக்கம்வேர்

கோரைக்கிழங்கு
கற்றாழஞ்சருகு
மயிர்மாணிக்கம்
பொற்கொன்றை மரப்பட்டை
வில்வவேர்
தாதுவளைவேர்ப்பட்டை
துளசிவேர்
புனலிவேர்
முள்ளிவேர்

இவைகளை வகைக்கு ( $\frac{1}{2}$ பலம் ) வீதமெடுத்துக் கல் உரலிலிட்டு நசுக்கிச் சின்னப்படி 3 படி சுத்த ஜலம் விட்டு, அதனுடன், சீரகமும் மிளகும் வகைக்கு $\frac{1}{2}$ பலம் எடுத்துத் துணியில் முடிந்துபோட்டு, அடுப்பின் மேலேற்றி $1\frac{1}{2}$ படியாகும்வரை வற்றவைத்து இறக்கிக் கொள்ளவும். தினம் இதில் ஒரு உழக்குக் கஷாயம் எடுறது, மிளகையும் சீரகத்தையும் சுமார் ஒரு கொட்டைபாக்களவெடுத்து அரைத்துச் சாப்பிடவும்.

சகலவித ஜ்வரங்களும் தீரும்.

## 235. சகல ஜ்வரங்களுக்கும் "கெந்தகாதி பற்பம்"

நன்னயமாய்ச் சுத்திசெய்கெந் தகமிரதம்
நேர்வாளம் நாபியல்லால்
யின்னமனோ சிலைநறுவெங் கல்பற்பந்
தாமிரத்தின் னெழிலாம்பற்பஞ்
சொன்னபடி யரிதாரம் பலவங்கியுஞ்
சமபாகஞ் சுகமாய்க்கூட்டி
வன்னநற்கை யாந்தகரைச் சாறுதனி
லரைத்தெடுத்து வயணங்கேளே. 318

வயணமொடு குகையிலிட்டு மேலுமொரு
குகையதனால் வாயைமூடி

நயம்பெறவுஞ் சேலைமண் டான் செய்துகுக்
குடப்புடங்கள் நன்றாய்ப்போட்டு
வியங்களொடு திட்டமதா யக்கினியிட்
டேயெரித்து விளம்பும்வாறே
யியல்புடனே யாறியபின் பத்தனையும்
பொடியாக்கி யெடுத்திடாயே. 319

எடுத்ததனைச் சிதறாமல் லோர்சிமிழில்
வைத்திடுவா யிடராய்த்தானே
அடுத்தநவச் சுரங்களுக்குத் திட்டமொரு
நான்குகுன்றி யளவேகொண்டு
தொடுத்துவந்தால் சுரந்தீரும் பத்தியங்கள்
தயிரனமுங் கொள்ளலாமே
கொடுத்தபடி நடத்துதஞ்சைச் சரபேந்திர
பூபதிதான் துதிசெய்வாறே.

(இ ன்) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, பாதரசம்
,, நேர்வாளம்
,, நாபி
,, மனோசிலை
,, தாளகம்
வெங்கலபற்பம்
தாமிரபற்பம்

இவைகளையெல்லாம் சமபாகமெடுத்து முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜலி செய்து பின்பு மற்றச் சரக்குகளையும் போட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு நன்றாக அரைக்கவும். இதை வில்லைகளாகத் தட்டிக் காய்ந்தபின் ஒரு குகைதனிலிட்டு அதற்குத்தக்கபடி சில்லிட்டுச் சீலைமண் செய்யவும். பின்பு குக்குட புடமிடவும். (ஒருசாண் நீள, அகல, உயரமுள்ள புடம்) தானாக ஆறிய பின்பு உள்ளிருக்கும் மருந்துச்சரக்கை எடுத்துப் பொடி செய்து வைத்துக்கொள்ளவும்.

புதிதான ஜ்வரங்களெனில் இதில் நான்கு குன்றியளவு எடுத்துப் (பசுவின் பாலுடன்) உட்கொள்ளவும். ஜ்வரங்கள் தீரும்.

பத்தியம்:— தயிர் சாதம் சாப்பிடவும்.

XXXX

## 236. பித்தகாசம், ஜ்வரம் முதலானவைகளுக்குக் 'கொத்தமல்லிக் கடாயம்'

கொத்தமல்லி சுக்குசிறு காஞ்சோறிவேர்
நெல்லிக்காய் குளிர் தான்றிக்காய்
சுத்தவிலா மிச்சையின்வே ரோடுவேலி
முரண்டியல்லால் சூழ்சாதிக்காய்
மொய்த்தகண்டங் கத்திரியுஞ் சமபாகங்
காய்ச்சியதை முறையாயீந்தால்
உத்தமமாம் பித்தகாசச் சுரங்களெல்லாம்
வாடியப்பா லோடிப்போமே. 321

(இ-ள்) கொத்தமல்லிவிதை
சுக்கு
சிறுகாஞ்சோறிவேர்
நெல்லிமுள்ளி
தான்றிக்காய்த்தோல்
விலாமிச்சைவேர்
வேலிமுரண்டி (வேலிப்பருத்தி)
சாதிக்காய்
கண்டங்கத்திரிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு நசுக்கிச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டில் ஒன்றாக்கி இறக்கவும் இதனைப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள், பித்த காசங்கள் முதலானவை தீரும்.

## 237. கப ஜ்வரத்திற்குப் பற்பாடகாதி கஷாயம்

சுந்தரப்பற் பாடகந்திப் பிலிமிளகு
நிலவேம்பு சுக்குகோஷ்டம்
அந்தமுத்தக் காசுசிறு வழுதலைவேர்
தூதுவளை யவ்வேரல்லால்
பந்தமுள சிறுதேக்கு நல்லசிறு
காஞ்சோறிவேர் பண்பாய்நீண்டு
சந்தநிறை யச்சீந்திற் கொடிகளிவை
சமங்கூட்டி சட்டங்கேளே. 322

சட்டமதா யிடித்தெடுத்து முந்நாழி
தண்ணீரைச் சரியாய்ப்பின்பு
விட்டதனிற் மூவிரற்கொண் டத்தூளிட்
டுழக்காக வேதான்காய்ச்சித்
திட்டமுட னேகொடுத்தா லாயிகச்சி
ரந்தீருந் தினமும்நல்லோர்
யிட்டபந்து சூழ்சபைவாழ் சரபேந்திர
பூபதிதா னியம்பும்வாறே 323

(இ-ள்) பற்பாடகம்
திப்பிலி
மிளகு
நிலவேம்பு
சுக்கு
கோஷ்டம்
கோரைக்கிழங்கு
சிறுகத்திரிவேர்
தூதுவளைவேர்
கண்டுபாரங்கி
சிறுகாஞ்சோறிவேர்
சீந்திற்கொடி

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்துக் கல்லுரலி விட்டு இடித்து வைத்துக்கொண்டு அதில் மூவிரற் கொண்ட தூள் ஒரு பாத்திரத்தில் போட்டுச் சுத்தஜலம் சின்னப்படி 1½

விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்கு ஆகும்வரை வற்ற வைக்கவும். இதனைப் பருகிவரக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 238. கப ஜ்வரங்களுக்குத் 'தூதுவளை வேர் கஷாயம்'

தூதுவளை வேர்சீந்திற் றண்டுசிறு
காஞ்சோறிவேர் துய்யகோஷ்டம்
ஓதுமுத்தக் காசுபற்பா டகமிளகு
சிறுதேக்கோ டுயர்ந்தசுக்கு
மீதுசிறு வழுதலைவேர் நிலவேம்பு
திப்பிலியு மேன்மைதாகிங்
கோதுபடா பலவகையு மேசமதை
வைத்திடித்துக் கூட்டுவாயே 324

கூட்டுவா யிருநாழி நீரதிலே
மூன்றுவிரற் கொண்டதூளைப்
போட்டுநன்றா யெரித்ததனைக் காய்ச்சியப்பால்
வடித்தெடுத்துப் புகன்றவாறே
நீட்டுழக்கிற் பிசகாம லிப்படியே
செய்துவந்தால் நித்தந்தான்முன்
வாட்டுமல்லா யிகச்சுரமுந் தப்பாம
லொப்புடனே வாசியாமே. 325

(இ-ள்) தூதுவளைவேர்
சீந்திற்கொடி
சிறுகாஞ்சோறிவேர்
கோஷ்டம்
பற்பாடகம்
மிளகு
சிறுதேக்கு
சுக்கு

சிறுகத்திரிவேர்
நிலவேப்பு
திப்பிலி

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துச் சூரணமாக்கி வைத்துக் கொள்ளவும். மூவிரல்கொண்ட அளவெடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டுச் சுத்தஜலம் சின்னப் படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்கு ஆகும் வரை வற்றக் காய்ச்சவும். இதனைப் பருகிவரக் கப ஜ்வரங்கள் தீரும்.

குறிப்பு :— இக்கஷாயமும், இதற்குமுன் கூறப்பட்ட கஷாயமும் ஒன்றேதான். ஆனால், செய்யுட்கள் பாட பேதம் உள்ளன.

## 239. கப ஜ்வரத்திற்குக் ''கொத்தமல்லியாதி கடாயம்''

சொன்னகொத்த மல்லிநெல்லி முள்ளிசிறு
காஞ்சோறிவேர் சுக்குவாச
வன்னமுத்தக் காசரத்தை சிறுதேக்கு
பேர்முட்டி வல்வேர்மஞ்சள்
நன்னயவட் டத்திருப்பி வேர்தூது
வளைவேர்நன் னாரிவேரும்
பின்னருந்திப் பிலிதான்றிக் காய்நிலவேம்
பிவைகளெலாம் பேசக்கேளே. 326

பேசக்கே ளோர்வகைக்கு யிரண்டது
வராகனெடை பிசகிடாம
லேசரியாய்ச் சேர்த்திடித்துத் தினமிருவ
ராகனெடை யேதூள்போட்டு
நேசமுடன் காய்ச்சியுழக் குண்டிடிலா
யிகச்சுரமும் நீங்கும்நன்றாய்
போசலகு லாதிபதி சரபேந்திர
பூபதிதான் புகன்வாறே. 327

(இ-ள்) கொத்தமல்லிவிதை
நெல்லிமுள்ளி
சிறுகாஞ்சோறிவேர்
சுக்கு
கோரைக்கிழங்கு
சிற்றரத்தை
சிறுதேக்கு
பேராமுட்டிவேர்
மஞ்சள்
வட்டத்திருப்பிவேர்
தூதுவளைவேர்
நன்னாரிவேர்
திப்பிலி
தான்றிக்காய்த்தோல்
நிலவேம்பு

முதலான சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து இடித்து ஒரு டப்பியில் வைத்துக்கொள்ளவும் தினம் வேளை ஒன்றுக்கு 2 வராகனெடைத் தூளெடுத்துச் சுத்தஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றவைத்து இறக்கவும். இதனைப் பருகிவரக் கப ஜ்வரங்கள் தீரும்.

## 240. வாத பித்த ஜ்வரத்திற்குச் 'சந்தனாதி கஷாயம்'

சந்தனங்கோ ரைக்கிழங்கு வெட்டிவே
  ரிலுப்பையின்பூ தாமரைப்பூ
கந்தவிலா மிச்சைநெய்தற் கிழங்குமுந்திரி
  கைப்பழம்செங் கழுநீர் மேவும்
அந்தநற்கி ழங்கீச்சம் குருத்துவெள்ளி
  லோத்திரமு மணநன்னாரி
பந்தமுள நேர்நெல்லிப் பருப்புமிந்த
  வகைமுழுதும் பகரக்கேளே.

பகர்ந்தபடி பேயிடித்துக் கொண்டதில்நன்
　　னீரைவீட்டுப் பண்பாய்க்காய்ச்சி
சுகந்தநற் றேன்சர்க்கரை கஷாயமதி
　　லேகலந்து சுகமாயீந்தால்
அகலாத வாதபித்தந் தொந்திக்குஞ்
　　சுரமயக்க மகலுங்கண்டாய்
திகழுறும் 'தஞ்சையில்வாழ் சரபேந்திர
　　பூபதிசொற் றிட்டந்தானே. 329

(இ-ள்) சந்தனத்தூள்
கோரைக்கிழங்கு
வெட்டிவேர்
இலுப்பைப்பூ
தாமரைப்பூ
விலாமிச்சைவேர்
நெய்தல்கிழங்கு
திராக்ஷைப்பழம்
செங்கழுநீர்க்கிழங்கு
ஈச்சங்குருத்து
வெள்ளிலோத்திரப்பட்டை
நன்னாரிவேர்
நெல்லிப்பருப்பு

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து ஒன்று இரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் சின்னப் படி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைத்து வடிகட்டிக்கொண்டு, இதனுடன் தேனும், சர்க்கரையும் போட்டுப் பருகவும்.

வாத பித்த ஜ்வரங்களும், மயக்கங்களும் தீரும்.

## 241. விஷம ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்கு ''வெருகங் கிழங்கெண்ணெய்''

பகர்விருகங் கிழங்குசமூ லம்பலந்தான்
　　பதினாறு பண்பாங்காடி
சுகமாக நாலுபடி விட்டெரித்த
　　ரைப்படியாய்ச் சுண்டக்காய்ச்சி
யிகழாதநல் லெண்ணெயோர் படியாட்டுப்
　　பாற்படிதா னிதுவல்லாமற்
புகரில்விரு கங்கிழங்கு நாலுபலங்
　　கொண்டுவந்து பொருந்தத்தானே. 330

பொருந்தவுமே முன்னாட்டுப் பாலிலரைத்
　　தெண்ணெய்தனிற் போட்டுப்பின்பு
திருந்தவுமொன் றாய்க்கலந்து பக்குவமாய்க்
　　காய்ச்சிவடித் தேயிவ்வண்ணம்
வருந்தாமற் தலைமூழ்கி னால்விஷமச்
　　சீதஜ்வரம் வாசியாகும்
தருமதுரை தஞ்சையில்வாழ் சரபேந்திர
　　பூபதிசொல் தண்மைதானே. 331

(இ-ள்) வெருகங்கிழங்குசமூலம் (இடித்தது) 16 பலம்
காடி 2 சின்னப்படி

இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து அடுப்பின் மேலேற்றி அரைப்படி கஷாயமாகும்வரை சுண்ட வைக்கவும்.

இதனுடன்,

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் சின்னப்படி | ½ |
| ஆட்டுப்பால் | ,, |

இவ்விரண்டையும் சேர்த்து விருகங்கிழங்கு 4 பலத்தை ஆட்டுப்பால் விட்டரைத்து அதனுடன் குழப்பி அடுப்பின் மேல் ஏற்றி எரித்துப் பக்குவமாக இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையில் தேய்த்து முழுகிவர விஷம ஜ்வரங்கள். சீத ஜ்வரங்கள் முதலானவைகள் தீரும்.

## 242. அஸ்தி ஜ்வரத்திற்குச் 'சவுட்டுமண் தைலம்'

அந்தமுள்ள நல்லெண்ணெயோர் படிசவுட்டு
 மண்ணினன்னீ ரதுகேள்நன்றாய்
பந்தமுட னொருபடியோ ராறுபடி
 முள்முருக்கம் பட்டைகோஷ்டம்
சந்தனமிந் துப்புமஞ்சள் மரல்கிழங்கு
 சரளதேவ தாரஞ்சுக்கு
சுந்தரசே ரதிமதுரந் திப்பிலிசிற்
 றரத்தையல்லாற் சொன்னதாமே. 332

சொன்னவிலா மிச்சைசிற்றா முட்டியவ்வேர்
 கொம்பரக்குச் சூழ்நன்னாரி
வன்னமணிக் கடலினுரை யோர்வகைக்குக்
 காற்பலந்தான் வளமாய்க்கூட்டி
யின்னதிடித் தெண்ணெயிலிட் டெரித்தொருநா
 ளிட்டொருநா ளேதான்பூசி
ந்ன்னமாய்க் குளித்துவந்தால் அத்திசுர
 மத்தனையும் நன்மையாமே. 333

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | சுத்தமான நல்லெண்ணெய் | 1 படி |
| | சவுட்டுமண் | 1 படி |
| | ஜலம் | 6 படி |

இவைகளை ஒன்று கலந்து, அதனுடன்

முள்முருக்கம்பட்டை
கோஷ்டம்
சந்தனத்தூள்
இந்துப்பு
மஞ்சள்

மருள்கிழங்கு

சரள தேவதாரு

சுக்கு

அதிமதுரம்

திப்பிலி

சிற்றரத்தை

இலாமிச்சைவேர்

சிற்றாமுட்டிவேர்

கொம்பரக்கு

நன்னாரிவேர்

கடல்நுரை

முதலான சரக்குகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்து இடித்துச் சூரணித்து எண்ணெயுடன் குழப்பியெரித்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்தத் தைலத்தைத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யவும். இவ்வாறு 2 நாட்களுக்கொருமுறை செய்யவும். அஸ்தி ஜ்வரங்கள் தீரும்.

## 243. வாத கப ஜ்வரங்களுக்குச் 'சுக்காதிக் கஷாயம்'

சுக்குகடுக் காய்தான்றிக் காய்கடுக
ரோகிணியுஞ் சூழ்வேப்பீர்க்குப்
பக்குவமா யிலங்குநெல்லிக் காய்சீந்தில்
கொடியிதலாற் பண்பாய்க்கைப்பே
யொக்குமந்தப் பேய்ப்புடலிவ் வகைசமபா
கங்காய்ச்சி யுயர்தேன்குத்தி
தக்கும்வண்ண மீய்ந்திடி லிவ்வாத
கபச்சுரந்த னக்குத்தானே. 334

(இ-ள்) சுக்கு
கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
கடுகரோகிணி
வேப்பீர்க்கு
நெல்விமுள்ளி
சீந்தில்கொடி
பேய்ப்புடல்

இவைகளை வகைக்கு (2 வராகனெடை) வீதமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்றவைத்து இறக்கவும். இக்கஷாயத்துடன் சுத்தமான தேன் சிறிதுவிட்டுச் சாப்பிட வாத கப ஜ்வரங்கள் நீங்கும்.

## 244. வாதம், பித்தம் முதலான தோஷங்களினால் ஏற்படும் பல வியாதிகளுக்குஞ் 'ஸ்ரீதேவி செங்கழுநீர் எண்ணெய்'

சுந்தரச்சீ தேவியார் செங்கழுநீர்
சாறுதனிற் சொல்லோர்நாழி
பந்தநற்சீந் திச்சாறு நாழியுரி
நெய்யெண்ணெய்தா னதுநெய்க்கொப்பா
யிந்தவகைச் சாற்றினிலே யதிமதுரம்
வெட்டிவே ரெழில்மஞ்சிட்டி
பந்தவிலா மிச்சையின்வேர் சந்தனஞ்செஞ்
சந்தனமேல் பகருவேனே. 335

பகர்தேவ தாரமகில் நாகப்பூப்
பச்சிலைநண் பண்பாங்கோஷ்டம்
சுகந்தருநெய் தற்கிழங்க ரத்தைசடா
மாஞ்சிலொடு சூழ்நன்னாரி

புகரில்குருக் கத்திமலர் யிலவங்க
மிலவங்கம் போன்றபத்திரி
யிகழாமற் பெருங்குறும்பை திப்பிலிதா
மரைவளைய மின்னந்தானே. 336

இன்னமும்பொன் மெழுகுசிற்றா முட்டியவ்வேர்
நன்னயமா மிசைத்தேன்சோர
வன்னத்தா மரையரும்பு கடுகரோ
கணியேலம் வளர்கச்சோலம்
அன்னசத குப்பையிவை வகைக்கொருகா
செடைபால்விட் டரைத்தெடுத்தே
பின்னந்கப் பசுவின்பா லிரண்டுபடி
விட்டுநன் றாய்ப் பேசக்கேளே. 337

பேசக்கேள் மெல்லமந்தாக் கினியாகக்
காய்ச்சிவடி பிசகிடாமல்
பூசுடம்பில் வாதபித்தம் விஷஞ்சன்னி
வாத ஜ்வரம் பொருந்தாதப்பால்
லேசரண வகையெரிவு சுலைநோயும்
வாசியதா மெழில் சேர்தஞ்சை
வாசனொப் பாயிலங்குஞ் சரபேந்திர
பூபதிசொல் வண்மையாமே. 338

| | | |
|---|---|---|
| (இ-ன்) | சீதேவிசெங்கழுநீர்ச்சாறு | — சின்னப்படி $\frac{1}{2}$ |
| | சீந்தில்கொடிச்சாறு | — சின்னப்படி $\frac{1}{2}$ |
| | பசுவின் நெய் | — சின்னப்படி $\frac{1}{4}$ |
| | நல்லெண்ணெய் | — சின்னப்படி $\frac{1}{4}$ |

இவைகளை ஒன்று கலந்து

அதிமதுரம்
வெட்டிவேர்
மஞ்சிஷ்டா
விலாமிச்சைவேர்
சந்தனத்தூள்
செஞ்சந்தனம்

தேவதாரம்
அகில்கட்டை
சிறுநாகப்பூ
பச்சிலை
கோஷ்டம்
நெய்தல்கிழங்கு
சிற்றரத்தை
சடாமாஞ்சில்
நன்னாரிவேர்
குருக்கத்திப் புஷ்பம்
கிராம்பு
இலவங்கப்பத்திரி
பெருங்குறும்பை
திப்பிலி
தாமரையிலையினுட்சுருள்
பொன் மெழுகு
சிற்றாமுட்டிவேர்
தாமரை மொட்டு
கடுகரோகிணி
ஏலக்காய்
கச்சோலம் (பூலாங்கிழங்கு)
சதகுப்பை

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துப் பசுவின் பால்விட்டு நன்றாக அரைத்து, பசுவின் பால் சின்னப் படி ஒன்றுடன் குழப்பி, சாறுகூட்டிய நெய்யையும் சேர்த்து அடுப்பின் மேலேற்றி ( மந்தாக்கினியாக ) எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தைத் தலையிலும் உடம்பிலும் பூசிவர வாத பித்த ஜ்வரம், விஷங்கள், ஜன்னி வாத ஜ்வரம், கைகாலெரிவு தலை நோய் முதலான ரோகங்கள் தீரும்.

## 254. வாத பித்த ஜ்வரங்களுக்கு "இலுப்பைப்பூக் கஷாயம்"

நல்லிலுப்பைப் பூப்பொன்மெழு கதிமதுரம்
பன்னீர்நன் னாரிவேரு
நெல்லிமுள்ளி யிருவேலித் தண்டுந்தா
மரைவளையம் நெய்தல்வாசம
புல்லியதா மரைத்தாது சந்தனம்வி
லாமிச்சை புதுசாதிக்காய்
யெல்லியமுத் தக்காசு வெள்ளிலோத்
திரமிதலா லியம்பக்கேளே. 336

இயம்புகின்ற பேரீச்சம் பழத்தினோடு
சமபாக மெல்லாங்கூட்டி
தயங்காம விருநாழி தண்ணீர்விட்
டுழக்காகத் தானேகாய்ச்சி
நயந்தருஞ்சர்க் கரைதேனுங் கலந்துதையத்
தினிற்கொடுத்தால் நண்ணும்பித்தம்
உயர்வாதஞ் சுழிதாக மிவ்வகைச்சு
ரங்களெல்லாமோடிப்போமே. 340

(இ-ள்) இலுப்பைப்பூ
பொன்மெழுகு
அதிமதுரம
ரோஜாப்பூ
நன்னாரிவேர்
நெல்லிமுள்ளி
வெட்டிவேர்த்தண்டு
தாமரையிலையினுட்சுருள்
நெய்தல்கிழங்கு
தாமரைத்தாது
சந்தனத்தூள்
இலாமிச்சைவேர்
சாதிக்காய்
கோரைக் கிழங்கு

வெள்ளிலோத்திரம்

பேரீச்சம்பழம்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச், சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும் வரை வற்ற வைக்கவும். பின்பு கஷாயத்தை வடிகட்டிச் சர்க்கரை, தேன் இவ்விரண்டையும் கூட்டி விடியற்காலையில் சாப்பிடவும்.

பித்த ஜ்வரங்களும், வாத ஜ்வரங்களும் தாகமுந்தீரும்.

## 246. நாட்பட்ட ஜ்வரத்திற்குச் 'சீதேவிச் செங்கழுநீரெண்ணெய்'

நன்னயமி குந்திலங்குஞ் சீதேவி
யார்சாறு நாழிநெய்தான்
பின்னதுரி யெண்ணெயுரி யிம்மூன்றுங்
கலந்ததிலே பிசகாவண்ணம்
மன்னும்வெட்டி வேர்கடுக ரோகிணிசந்
தனமுமதி மதுரம்நான்கா
யின்னவகை யொன்றினுக்கு நான்கதுவ
ராகனெடை யிடித்துத்தானே. 341

இட்டரைத்தெல் லாங்கூட்டிப் பக்குவமாய்க்
காய்ச்சிவடித் தெடுத்துவைத்துச்
சட்டமதாய் தலையுடம்பிற் பூசியுள்ளுக்
குக்கொடுத்தால் சார்ந்துகொண்டே
விட்டகலாச் சுரம்பழய சுரங்களிவை
வாசியதாம் வேந்தர்நல்லோ
ரட்டதிசை போற்றுதஞ்சைச் சரபேந்திர
பூபதிசொல் லமுதந்தானே. 342

(இ-ள்.) சீதேவிச் செங்கழுநீர்ச்சாறு படி ½
பசுவின் நெய் ,, ¼
நல்லெண்ணெய் ,, ¼

இவைகளை யொன்றுகலந்து,
வெட்டிவேர்
கடுகரோகிணி
சந்தனத்தூள்
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 4 வராகனெடை வீதமெடுத்து இடித்து ஷை சாறுவிட்டு நன்றாக அரைத்துச் சாறு கூட்டிய எண்ணெயுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கி இறக்கவும்.

இத்தைலத்தை தலையிலும், உடம்பிலும் பூசிக்கொண்டு ஸ்நானஞ் செய்யவும். நாட்பட்ட ஜ்வரங்கள் தீரும்.

## 247. வாத பித்த ஜ்வரங்களுக்கு 'முஸ்தாதிக் கஷாயம்'

பொன்னணிகோ ரைக்கிழங்கா மணக்கின்வேர்
 தக்காளி பொருந்தும்வேரும்
சொன்னறுஞ்சீந் திற்கொடியல் லால்வேலி
 முரண்டியொடு சுக்கும்நேராய்
இன்னவகை தானிடித்தெ டுத்துநன் றாய்க்
 காய்ச்சிவடித் தீய்ந்தேவந்தால்
முன்னரந்த வாதபித் தியசுரமெல்
 லாங்கலங்கி முறிந்துபோமே. 343

(இ-ள்) கோரைக்கிழங்கு
ஆமணக்கம்வேர்
தக்காளிவேர்
சீந்திற்கொடி

வேலிப்பருத்திவேர்

சுக்கு

இவைகளை வகைக்கு 2 வராகனெடை எடுத்து இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கவைத்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இக்கஷாயத்தைப் பருகிவர வாத ஜ்வரங்கள் தீரும்.

## 248. வாதபித்த ஜ்வரத்திற்குச் 'சந்தனாதி கஷாயம்'

சந்தனந்தா மரையரும்பு பூவிலுப்பைப்
 பூபேரீச்சம் பழம்பின்
பந்தவெள்ளி லோத்திரம்நன் னாரியின்வே
 ரோர்வகைக்குப் பகரக்கேளாய்
அந்தமுட னிரண்டதுகா செடைகூட்டி
 யிருபடி நீ ரதனிற்காய்ச்சி
முந்தவுழக் காக்கியுண்டால் வாதபித்தஞ்
 சேர்ந்தசுர முறிந்துபோமே. 344

(இ-ள்.) சந்தனத்தூள்
தாமரைமொட்டு
இலுப்பைப்பூ
பேரீச்சம்பழம்
வெள்ளிலோத்திரம்
நன்னாரிவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து, இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு உழக்கான பின்பு இறக்கவும்.

இதனைப் பருகிவர வாத பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 249. பற்பல ஜ்வரங்களுக்கும் ''கெந்தகாதி மாத்திரை''

கெந்தகந்தா ளகமிரதம் நாபிமனோ
சிலையுமன்றி கிளர்வெங்காரம்
சந்தநிரை திரிகடுகு திப்பிலியிவ்
வகைமுழுதுஞ் சமதைகூட்டி
அந்தநற்கை யாந்தகரைச் சாற்றிலிரு
சாமமரைத் தப்பால்பின்னால்
சுந்தரஞ்சேர் வெள்ளைச்சா றணைச்சாற்றி 345
லிருசாமஞ் சொன்னவாறே.

சொன்னபடி யரைத்தெடுத்துக் குன்றிநிக
ராய்குளிகை சுகமாய்ச்செய்து
நன்னயஞ்சேர் நிழலதில் தானுலர்த்திக்
கொண்டெடுத்து நாளுமீய்ந்தால்
முன்னடல்செய் யும்வயிற்றுக் கட்டுமற்றச்
சுரங்களுடமு ரண்டிதெல்லாம்
அன்னமிடும் புண்ணியவான் றன்வினைபோ 346
லேகலங்கி யகன்றுபோமே.

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, தாளகம்
,, பாதரசம்
,, நாபி
,, மனோசிலை
பொரித்த வெங்காரம்
சுக்கு
மிளகு
இவைகள் வகைக்கு 1 வராகனெடையும்
திப்பிலி 2

எடுத்து, முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்யவும்,

பின்பு மற்ற சரக்குகளைப் போட்டுக் கையாந்தகரைச் சாறு விட்டு 2 ஜாமங்கள் அரைக்கவும். மறுபடியும் வெள்ளைச் சாறணைச்சாறுவிட்டு 2 ஜாமங்கள்வரை அரைத்துக் குன்றி மணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர வைக்கவும்.

இதிலொரு மாத்திரை எடுத்து (வெந்நீருடனுட்) கொள்ள வயிற்றுக் கட்டுகள், ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

## 250. பற்பல ஜ்வரங்களுக்கும் "திரிகடுகாதி மாத்திரை"

சட்டமுயர் திரிகடுகு திரிபலைசெந்
தகஞ்சூதஞ் சங்கமொப்பாய்
திட்டமுள்ள வெண்கார மிந்துப்புஞ்
சமங்கூட்டித் தேர்ந்தேசுத்தி
யிட்டந்த நேர்வாள முஞ்சமதை
யாய்ச்சேர்த்தே யெல்லாமந்த
மட்டார்நல் லெலுமிச்சம் பழச்சாற்றி
லேயரைப்பாய் மருவத்தானே. 347

மருவத்தா னரைத்தெடுத்துக் குன்றிநிக
ராய்க்குழிகை மகிழ்ந்தேசெய்து
ஒருமையுட னேநிழலிற் றப்பாம
லிப்படியே யுலர்த்திக்கொண்டு
பருவமதா யனுபான மறவாம
லோர்குளிகை பண்பாயீந்தால்
கருவிலுற்ற கட்டுமத்தச் சுரங்களெல்லாம்
விட்டோடுங் கலங்கித்தானே. 348

(இ-ள்) சுக்கு
திப்பிலி

மிளகு

கடுக்காய்த்தோல்

நெல்லிவற்றல்

தான்றிக்காய்த்தோல்

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்

,, பாதரசம்

பொரித்த இந்துப்பு

,, வெங்காரம்

,, சங்கு

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு

முதலான சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் எடுத்துத் தூள்செய்துகொண்டு, முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலியாக்கிப் பின் மற்ற தூளைப்போட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும். தக்க அனுபானத்தில் (வெந்நீர், கஷாயம் முதலியன) ஒரு மாத்திரையை விழுங்கப் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

## 251. வாத பித்த ஜ்வரத்திற்குச் ''சந்தனாதி கஷாயம்''

சந்தனந்தா மரைத்தாது பெருங்குமிழ்தா
மரைவளையஞ் சார்ந்தகோரை
அந்தநற் கிழங்குவெள்ளி லோத்திரம்நெல்
லிப்பருப்பு மதுவுமல்லால்
நந்தவில்லா முந்திரிகைப் பழம்பேரீச்
சம்பழம்நன் னாரிவேரும்
பந்தமுள்ள செங்கழுநீர்க் கிழங்குவெட்டி
வேர்த்தண்டு பாங்காய்த்தானே.

பாங்கான நல்லிலுப்பைப் பூவிலா
மிச்சையிவை பண்பாய்க்கேளு
நீங்காமல் வகைக்கொருகா செடைகூட்டி
யிடித்தெடுத்து நீரிற்றானே
யாங்காகும் படியிரண்டு விட்டுழக்காய்க்
காய்ச்சியுண்டா லப்பாலந்த
தீங்கான வாதபித்தந் தொந்திக்குஞ்
சுரங்களெல்லாந் தீர்ந்துபோமே. 350

(இ-ள்.) சந்தனத்தூள்
தாமரைத்தாது
பெருங்குமிழ்வேர்
தாமரையிலைனுட்சுருள்
கோரைக்கிழங்கு
வெள்ளிலோத்திரம்
நெல்லிப்பருப்பு
திராக்ஷைப்பழம்
பேரீச்சப்பழம்
நன்னாரிவேர்
செங்கழுநீர்க்கிழங்கு
வெட்டிவேர்
இலுப்பைப்பூ
இலாமிச்சைவேர்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச், சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை எரித்து இறக்கி வடிக்கட்டிச் சாப்பிடவும். வாத பித்த ஜ்வரங்கள் தீரும்.

❋ 卐卐 ❋

## 252. ஜ்வரங்களுக்குச் ''சாதீபலாதி மாத்திரை''

சாதிக்காய் நாபியரி தாரமனோ
சிலைசாந்தஞ் சாரிந்துப்பு

நீதில்லாத் திப்பிலிக டுகரோ
கணிநற்சி றுநாகப்பூ
நீதியுள்ள திரிகடுகு திரிபலை
கிராம்பினொடு நேர்வாளந்தான்
ஓதிடும்வ கைசமன்கூட் டியிஞ்சிச்
சாற்றினிலே யுகந்துநாளே. 351

உகந்தரைத்துக் குன்றிநிகர் குளிகைசெய்து
நன்னிழலி லுலர்த்திக்கொண்டே
அகந்தயங்கா மல்வாதச் சுரத்தினுக்கு
நொச்சியிலை யாங்கஷாயந்
திகந்தபித்தச் சுரத்தினுக்குச் சுக்குசிற்றா
முட்டிதனி லெரித்துக்காய்ச்சிப்
பகர்ந்தபடி கொடுத்துவந்தால் பித்தசு
ரங்களெல்லாம் பறந்துபோமே. 352

(இ-ள்.) சாதிக்காய்
சுத்திசெய்த நாபி
,, தாளகம்
,, மனோசிலை
,, காந்தம்
பொரித்த இந்துப்பு
திப்பிலி
கடுகரோகிணி
சிறுநாகப்பூ
சுக்கு
திப்பிலி
மிளகு
கடுக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி
தான்றிக்காய்த்தோல்
கிராம்பு
சுத்திசெய்த நேர்வாளம்

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் கல்வத்திலிட்டுத் தூளாக்கி, இஞ்சிச்சாறு விட்டு ஒருநாள் முழுவதும் அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டிக்கொள்ளவும். இவைகளை நிழலில் உலர்த்திக்கொண்டு வாத ஜ்வரமானால் நொச்சி இலைக் கஷாயத்திலும். பித்த ஜ்வரமானால் சுக்கு, சிற்றாமுட்டி இவ்விரண்டையும் சேர்த்துத் தயாரித்த கஷாயத்திலும் ஒரு மாத்திரை சாப்பிடவும். அவைகள் தீரும்,

## 253. அஸ்தி ஜ்வரத்திற்குக் "கூஷ்மாண்டம் கண்டம்"

இங்கிதஞ்சேர் பூசணிக்காய் மேற்றோலு
　　முள்விரையு மெடுத்துப்போட்டு
பங்கம்வரா மற்சிறுகச் சிறுகவரித்
　　துலர்த்துவற்றப் பலந்தானூறு
சங்கையில்லா மல்பசுவின் நெய்நாழி
　　கொஞ்சங்கொஞ்சந் தானேவாரல்
அங்கந்தச் சட்டிதனி லிட்டுநெய்விட்
　　டேவறுத்தே யப்பாற்றானே. 353

அப்பால்திரி கடுகுவகை யினுக்கொங்வோர்
　　பலஞ்சிர கமீதல்லால்
கொப்பாருமி லவங்கப்பட் டையிலவங்
　　கப்பத்திரி கொத்தமல்லி
தப்பாமலோர் வகைக்கரைப் பலஞ்சேர்த்
　　திடித்துநன்றாய்த் தானேயெல்லாம்
ஒப்பாய்வத் திரகாய மிட்டெடுத்துக்
　　கொண்டுபின்னா லோதக்கேளே. 354

ஓதக்கேள் வெண்சீனி சர்க்கரையில்
　　நாலுபல முயர்தேனாழி

மீதந்தச் சூரணமும் பிசரியொன்றாய்
    கூட்டியதை மிதமாய்க்காலை
நீதமொரு முக்கழஞ்சு உண்டுவந்தா
    லத்திசுரம் நீருவெட்கை
வாதனைசெய் யுளமாந்தை யுட்டணமுஞ்
    சட்டமதாய் வாசியாமே. 355

(இ-ள்) நன்றாக முற்றிய பூசணிக்காயைக் கொண்டு வந்து, மேல்தோலையும், உள் விரையையும் நீக்கிவிட்டு, சிறு சிறு துண்டுகளாக அரிந்து நன்றாகப் பிழிந்துவிட்டு உலர்த்தவும். இம்மாதிரியாக எடுத்த கதுப்பு 100 பலத்தை எடுத்து பசுவின் நெய் சின்னப்படி ½ விட்டுப் பொன் வறுகலாக வறுத்துக் கொள்ளவும். பின்பு,

| | |
|---|---|
| சுக்கு | 1 பலம் |
| திப்பிலி | ,, |
| மிளகு | ,, |
| சீரகம் | ½ பலம் |
| இலவங்கப்பட்டை | ,, |
| இலவங்கப்பத்திரி | ,, |
| கொத்தமல்லிவிதை | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, சீனி சர்க்கரை 4 பலமும், தேன் சின்னப்படி ½ யும் விட்டு மேற்சொன்ன கதுப்பையுமொன்றாகப் பிசரிக் கல்லுரலி விட்டுப் பூணில்லா உலக்கையினால் இடித்துப் பத்திரப்படுத்தவும்.

இதில் ½ பலம் எடுத்துத் தினம் காலை நேரத்தில் உட் கொள்ளவும். உளமாந்தை, உஷ்ணம், அஸ்தி ஜ்வரம், மூத்திர எரிச்சல் முதலான ரோகங்கள் தீரும்.

## 254. வாத பித்த ஜ்வரத்திற்குப் ''பலாகுடுசீ கஷாயம்''

கோலநகை யார்சிந்திற் றண்டுசிற்றா
முட்டியின்வேர் கூறிதெல்லாஞ்
சாலவுமொவ் வோர்வகைக்கு நாலுகழஞ்
சிடித்தெடுத்துச் சலமீர்நாழி
மேலதில்விட் டுழக்காகக் காய்ச்சிநன்றாய்
திப்பிலிதான் மென்றூளிட்டுச்
சீலமுட னுண்டுவந்தால் வாதபித்தஞ்
சேர்ந்தசுரஞ் சிதறிப்போமே. 356

(இ-ள்) சீந்தில்கொடி
சிற்றாமுட்டிவேர்

இவ்விரண்டையும் தனித்தனியே 5 வராகனெடை வீதம் எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து ஒரு பாத்திரத்தில் இட்டுச் சுத்தஜலம் சின்னைப்படி ஒன்றுவிட்டு அடுப்பின்மேல் ஏற்றி உழக்காக வற்றக்காய்ச்சவும் இதனுடன் திப்பிலிச் சூரணமிட்டுப் பருகிவர வாதபித்த ஜ்வரங்கள் தீரும்.

## 255 ஜ்வரத்திற்குப் 'பேதி குளிகை'

சாதிலிங்கம் பொரிக்காரங் கெந்தகமிந்
துப்பிரதந் தான்றிக்காய்ப்பின்
ஓதியதிப் பிலிமிளகு சுக்குகடுக்
காய்கடுகு மோர்வகைக்கே
நீதிவரா கனெடையொன்றே யிவ்வகைநேர்
சுத்திசெய்த நேர்வாளந்தான்
கோதில்லா மற்கூட்டி மூக்கரட்டை
யிலைச்சாறு கொண்டுதானே. 357

கொண்டந்தச் சாற்றினிலே சந்தனம்போ
லரைத்தெடுத்துக் குன்றிக்கொப்பாய்
உண்டைசெய்து சுரத்தினுக்கு மிளகுநற்
கஷாயமதி லுதவியப்பால்

துண்டரிக்கஞ் செய்யும்விரே சனத்தினுக்குக்
கொடுத்திடுவாய் துதிக்கும்நெய்யில்
பண்டுத்த சுரம்பேதி யெல்லாந்தான்
சொல்லாமற் பறந்துபோமே. 358

(இ-ள்) சுத்திசெய்த லிங்கம்
,, கெந்தகம்
,, நேர்வாளம்
,, பாதரசம்
பொரிக்காரம்
பொரித்த இந்துப்பு
தான்றிக்காய்த்தோல்
திப்பிலி
மிளகு
சுக்கு
கடுக்காய்த்தோல்
கடுகு

முதலான சரக்குகளை வகைக்கு 1 வராகனெடை வீத மெடுத்துக் கல்வத்திலிட்டு, முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்ற சரக்குகளைப் போட்டு, மூக்கரட்டையிலைச்சாறுவிட்டு மறுபடியும் நன்றாக அரைக்கவும். சந்தனம்போல் மையானபின் இதை மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும். மிளகு கஷாயத்தில் ஒரு குளிகை விழுங்கவும். ஜ்வரங்கள் தீரும்.

பேதியாகவேண்டுமெனில் ஒரு மாத்திரையை நெய்யுடன் சாப்பிடவும்.

## 256. வாத பித்த ஜ்வரத்திற்கு " ஆடுதீண்டாப் பாளைக் கஷாயம் "

பங்கம்பா ளையின்வேரு திரிபலைநற்
திரிகடுகு பகரிதல்லால்
கொங்கமில வங்கம்வகைக் கிருகழஞ்சி
லிருநாழி குளிர்நீர்விட்டே
அங்குழக்காய்க் காய்ச்சியப்பால் திப்பிலியில்
மென்பொடிதா னதிலேபோட்டுச்
செங்கன்னாப் பாலதுவு வாதபித்தஞ்
சேர்ந்தசுரஞ் சிதறிப்போமே. 359

(இ ள்) ஆடுதீண்டாப்பாளைவேர்
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
தான்றிக்காய்த்தோல்
சுக்கு
திப்பிலி
மிளகு
கிராம்பு

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை எரித்து வடிகட்டித் திப்பிலிச் சூரணம் போட்டுப் பசுவின் பால்விட்டுப் பருகவும். வாதபித்த ஜ்வரங்கள் தீரும்.

## 257. வாத பித்த ஜ்வரங்களுக்குச் செங்கழுநீர்க் கிழங்காதிக் கஷாயம்

நன்னயமாஞ் செங்கழுநீர்க் கிழங்குமுந்தி
ரிகைபழம்நன் னாரிவேரோ
டின்னவெள்ளி லோத்திரந்தா மரைவளையும்
பெருங்குமிழ்வே ரிலுப்பையின்பூ

வன்னறுஞ்சந் தனம்வகைக்கீர் கழஞ்சிலிரு
நாழிநன்னீர் வார்த்துக்காய்ச்சி
அன்னதுழக் காக்கியுண்டால் வாதபித்தஞ்
சேர்ந்தசுர மகலப்போமே. 360

(இ-ள்) செங்கழுநீர்க்கிழங்கு
திராக்ஷைப்பழம்
நன்னாரிவேர்
வெள்ளிலோத்திரம்
தாமரையிலுயினுட்சுருள்
பெருங்குமிழ்வேர்
இலுப்பைப்பூ
சந்தனம்

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு வீதமெடுத்து (2½ வராகனெடை)க் கல்லுரலிலிட்டிடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்ற வைக்கவும். வாத பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 258. தோஷ ஜ்வரங்களுக்கு 'நேர்வாள குளிகை'

நன்னயமாய் சுத்திசெய்த நேர்வாள
இன்னமந்தப் பொற்கடுக ரோகணியோர்
நாற்கழஞ்சோ டிலுப்பைப்பூவும்
சொன்னதிரு கழஞ்சிதெல்லாங் குளிர்ந்ததண்ணீர்
விட்டரைத்துச் சுகமாய்த்தானே
வன்னமுள்ள பருத்திவிரை நிகர்குளிகை
செய்துலர்த்தி வைத்துக்கொண்டே. 361

வைத்தருளிஞ் சிச்சாற்றில் வாதசுரத்
தினுக்குநல்ல வளஞ்சேர்தேனில்
உத்தமமாந் திப்பிலியிற் சேட்டுமச்சு
ரத்தினுக்கோ வுதவிசெய்வாய்

தித்திக்கும் வெல்லமதிற் கொடுக்கில்மற்றச்
சுரங்களெல்லாந் தீரும்நன்றாய்
முத்தமிழோர் சித்தமகிழ் சரபேந்திர
பூபதிசொல் முறையிதாமே. 362

(இ-ள்.)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு | 7½ | வராகனெடை |
| கடுகரோகிணி | 5 | ,, |
| இலுப்பைப்பூ | 2½ | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுக் குளிர்ந்த ஜலம் விட்டு நன்றாக அரைத்துப் பருத்திவிதைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்துக்கொள்ளவும்,

வாத ஜ்வரத்திற்கு இஞ்சிச்சாற்றில் ஒரு மாத்திரை கொடுக்கவும்,

கப ஜ்வரமாகில் ஒரு மாத்திரையை எடுத்துத் தேனும் திப்பிலிச் சூரணமும் போட்டுக் குழைத்துச் சாப்பிடவும்.

பித்தம் முதலான இதர ஜ்வரங்களுக்கெல்லாம் வெல்லத்தில் வைத்து விழுங்கவும்.

## 259. பற்பல ஜ்வரங்களுக்கும் "சுக்கிரதாதிக் குளிகை"

கந்தமிகுஞ் சுக்கிரதம் பொரிக்காரம்
நாபிகடுக் காய்தான்றிக்காய்
சந்தநிரை கடுகுமிள இந்துப்புக்
கெந்தகம்நற் சாதிலிங்கம்
இந்தவகைக் கோவ்வொருவ ராகனெடை
சுத்திசெய்யு மெழில்நேர்வாளம்
பந்தவகை கரிச்சரிசேர்த் தேமுருங்கி
யிலைச்சாற்றிற் பகரக்கேளே. 363

பகர்ந்தபடி யரைத்தெடுத்துக் குன்றிநிக
    ருண்டைசெய்து பண்பாய்த்தானே
அகமுகத்து நிழலுலர்த்திச் சுரத்தினுக்கு
    மிளகுகஷா யத்திலீவாய்
சுகமாகப் பேதிக்கு நெய்வருளா
    மணக்கெண்ணெயிற் சூழ்குன்மாத்துக்
கிகழாம லேகொடுப்பாய் பலநோயுந்
    தீர்ந்திடுமே யென்றுந்தானே. 364

(இ-ள்.) சுத்திசெய்த பாதரஸம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
,, சாதிலிங்கம்
,, நாபி
பொரித்த இந்துப்பு
சுக்கு
தான்றிக்காய்த்தோல்
கடுக்காய்த்தோல்
கடுகு
மிளகு
பொரிக்காரம்

இவைகளை வகைக்கு (வராகனெடை 1) வீதமெடுத்துக் கல்வத்திலிட்டுச் சூரணித்து இதனுடன் சுத்தி செய்த நேர் வாளப் பருப்பு 11 வராகனெடை சேர்த்து முருங்கிலைச்சாறு விட்டு நன்றாக ஒருநாள் முழுவதுமரைக்கவும். இதனைக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும்.

ஜ்வரங்களுக்கு மிளகுக் கஷாயத்துடன் ஒரு மாத்திரை கொடுக்கவும். நன்றாக மலங்கழியும்,

குன்மம் முதலான வியாதிகளுக்கு நெய்யிலோ அல்லது ஆமணக்கெண்ணெயிலோ கொடுக்கவும்.

## 260. 18வித ஜ்வரங்களுக்கும் "வெள்ளைப் பாஷாணக் குளிகை"

மிதிபாக லிலைச்சாற்றில் வெள்ளைப்பா
ஷாணம்விட மீளச் செய்வாய்
துதிநாவி யிஞ்சியின்சாற் றினில்விடத்தைத்
திறந்துவிடு துலங்கு மேதிப்
புதியசா ணாகமதில் நேர்வாளத்
தின்விடத்தைப் போக்கி யப்பால்
விதித்தகுப்பை மேனியிலைச் சாற்றினெல்லிக்
கெந்தகத்தின் விடத்தை நீக்கே. 365

விடம்நீக்கும் பாஷாண மொருகழஞ்சு
நாபிபண வெடைதா னொன்று
திடந்தரும்நெல் லிக்காய்க்கெந் தகமிரண்டு
பணவெடைநற் றிகழ்நேர் வாளம்
உடனிரண்டு பணவெடைவெங் காரமறு
பணவெடைசேர்த் தொன்றாய்க் கூட்டிப்
படர்ந்திலங்கு மிதிபாக லிலைச்சாற்றி
லரைத்தெடுத்துப் பாங்காய்த் தானே. 366

பாங்கான மிளகுநிகர் குளிகைகள்செய்
துலர்த்தியதைப் பண்பாய்க் கைக்கொண்
டேங்காம லீந்துவந்தால் பதினெட்டுச்
சுரங்களிவை யிடர்செய் யாது
பூங்காவுங் காவேரிசூழ் சோழதே
சாதிபதி புலவோர் சங்கம்
நீங்காமற் பூசுரர்வாழ் சரபேந்திர
பூபதிசொல் நேமந் தானே. 367

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | வெள்ளைப் பாஷாணம் | $1\frac{1}{4}$ | வராகனெடை |
| ,, | நாபி | $3\frac{1}{3}$ | குன்றிநிறை |
| ,, | நெல்லிக்காய்க்கெந்தகம் | $6\frac{2}{3}$ | ,, |
| ,, | நேர்வாளம் | $6\frac{2}{3}$ | ,, |
| பொரித்த வெங்காரம் | | 20 | குன்றிநிறை |

இவைகளை ஒன்றுசேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து மிதிபாகலிலைச் சாறுவிட்டு ஒருநாள் முழுதும் அரைக்கவும். பின்பு இதை மிளகுப் பிரமாணமுள்ள குளிகைகளாக உருட்டி நிழலில் காயவைத்து. வேண்டும்போது ஒரு குளிகையை வெந்நீருடன் விழுங்கப் பதினெட்டுவகை ஜ்வரங்களுந் தீரும்.

**சுத்திக்கிரமங்கள்:-**

வெள்ளைப் பாஷாணத்தை மிதிபாகலிலைச் சாற்றில் ஊறவைக்கவும்.

நாபியைச் சிறுசிறு துண்டுகளாக்கி இஞ்சிச்சாற்றில் ஊறும்படி செய்யவும்.

நேர்வாளப் பருப்பைப் புதிய எருமைச் சாணாகத்தில் ஊறப்போட்டு (வேக) வைக்கவும்.

நெல்லிக்காய்க் கெந்தகத்தைக் குப்பைமேனியிலைச் சாற்றில் ஊறப்போடவும்.

## 261. தொந்த ஜ்வரங்களுக்கு "முஸ்தாதி கஷாயம்"

கந்தநற்கோ ரைக்கிழங்கு மூக்குத்திப்
பூண்டுகடுக் காயிதலால்
அந்தநில வேம்புசிற்றா முட்டிவிலா
மிச்சையின்வே ரணிசேர் சிந்தில்
சுந்தவேலி முரண்டிசமன் கூட்டியெட்டி
லொன்றாய்ச்சுண் டக்காய்ச்சி
பந்தமுட னீந்துவந்தாற் றொந்தசுரம்
வந்தவழி பார்த்துப்போமே. 368

(இ-ள்) கோரைக்கிழங்கு
மூக்குத்திப்பூண்டு
கடுக்காய்த்தோல்
நிலவேம்பு

சிற்றாமுட்டிவேர்
இலாமிச்சைவேர்
சீந்தில்கொடி
வேலிப்பருத்திவேர்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை விதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாகஇடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி எட்டில் ஒன்றாகும் வரை சுண்டக்காய்ச்சவும். இக்கஷாயத்தைப் பருகிவரத் தொந்த ஜ்வரங்கள் தீரும்.

## 262. விடா ஜ்வரங்களுக்கு ''முலைப்பா லெண்ணெய்''

சுந்தரஞ்சேர் முலைப்பாலி விருநாழி
பசுவினெய்யுஞ் சொல்நா னாழி
அந்தமிகும் நற்பசுவின் பாலிலிரு
நாழியிவை பண்பாய்க் கூட்டிப்
பந்தமுள்ள மதுகம்பொன் னாங்காணிவே
ரும்நெல்லிப் பருப்பி தல்லால்
தந்தலில்லாப் பூசினியின் விரையோடுவெள்
ளரிவிரையும் நயமாய்த் தானே. 369

நயமாய்த்தான் வகைக்கிரு கழஞ்சுநிறை
சேர்த்தரைத்து நன்றா யந்தச்
சுயமான நெய்பாலி லைகள்பக்கு
பக்குவமாய்ச் சுண்டக் காய்ச்சி
உயராதோர் கழஞ்சளவு பூசுவிடாச்
சுரமுள்வெட்கை வுடம்பும் வாட்டி
வியனாக வுலர்த்துகின்ற வறட்சியெல்லாங்
கிட்டாமல் விட்டுப் போமே. 370

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | முலைப்பால் | சின்னப்படி | ஒன்று |
| | பசுவின் நெய் | ,, | இரண்டு |
| | பசுவின்பால் | ,, | ஒன்று |

இவைகளை ஒன்று கலந்து,

அதிமதுரம்
பொன்னாங்காணி வேர்
நெல்லிப்பருப்பு
பூசினிவிதை
வெள்ளெரிவிதை

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்துப் பால்விட்டு நன்றாக அரைத்து மேல்சொன்ன நெய்கலவை யுடன் கலந்து அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாகக் காய்ச்சி இறக்கவும். இந்நெய்யை உடம்பிலும் பூசி, உள்ளுக்கும் சாப்பிட்டுவர விடாத ஜ்வரங்களுக்கும், வறட்சியும் தீரும்.

## 263. ஜ்வரம் வெட்கைகளுக்கு "இலவங்காதி கிறுதம்"

குலவுபசு வின்பாலி விருநாழி
நெய்நாழி கூட்டிக் கொண்டே
யிலவங்கம் நீர்வள்ளிக் கிழங்கினொடு
வாசம்நிறை யேலங் கோட்டம்
நிலப்பனைக் கிழங்குவண்டு கிட்டாத
செண்பகத்தி னீண்ட மொட்டு
வலதிலங்கு நாய்ப்பாகற் கிழங்குகிராம்
பதிமதுரம் வைத்துத் தானே. 371

வைத்திடுவாய்ச் சட்டமதாய் வகைக்கிருக
ழஞ்சுநிறை வளமாய்ச் சேர்த்தே
அத்தனையும் சந்தனம்போ லரைத்தெடுத்துக்
கரைத்துநெய்யி லப்பாற் காய்ச்சி
நித்தமுண்டு பூசிவந்தால் உள்ளின்வெட்கை
யெல்லாந்தா னீங்கும் நன்றாய்
உத்தமலிங் கேசரருள் பெற்றசர
பேந்திரமா லுரைத்த வாறே. 372

| | | | |
|---|---|---|---|
| (இ-ள்.) | பசுவின் பால் | சின்னபடி | 1 |
| | ,, நெய் | ,, | ½ |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து.

இலவங்கப்பட்டை
தண்ணீர்விட்டான் கிழங்கு
ஏலக்காய்
கோஷ்டம்
நிலப்பனைக் கிழங்கு
செண்பக மொட்டு
நாய்ப்பாகல் கிழங்கு
கிராம்பு
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை எடுத்துப் பால் விட்டு நேகவரைத்துப் பால் சேர்ந்த நெய்யுடனே கூட்டி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கி இறக்கவும்.

இந்நெய்யை உடம்பில் தேய்த்துக்கொண்டு, உள்ளுக்கும் சாப்பிட தேக காங்கை, ஜ்வரம் முதலானவை நீங்கும்.

## 264. சீத ஜ்வரத்திற்குப் ''பாஷாணாதி குளிகை''

நன்னயஞ்சேர் கௌரீபா ஷாணமெலிப்
பாஷாணம் நன்னுந் துத்தம்
வன்னமுள்ள தொட்டிப்பா ஷாணந்தா
ளகந்துருசு வலுநேர் வாளம்
சொன்னவகை சமன்சேர்த்தூ மத்தையிலைச்
சாற்றிலரை சுகமா யப்பால்
யின்னமதைக் குக்குடப்பு டத்தினிலே
தப்பாம லிட்டுத் தானே. 373

இட்டவுட னேயெடுத்து நற்காட்டுப்
பன்றியல்லால் விலங்கு மீனின்
சட்டமதாய்க் கைத்திடுமி ரண்டுவகை
பித்தினிலே சார்ந்த ரைத்தே
திட்டமொவ்வோ ருளுந்துநிகர் குளிகைசெய்தே
யிஞ்சுக்கின் றிறமாஞ் சாற்றில்
வட்டறுப்பா யத்தின்மூன்று நாட்கொடுத்தால்
சீதசுரம் வாங்கிப் போமே. 374

(இ-ள்.) சுத்திசெய்த கௌரீபாஷாணம்
,, எலிப்பாஷாணம்
,, துத்தம்
,, தொட்டிப்பாஷாணம்
,, தாளகம்
,, துருசு
,, நேர்வாளப்பருப்பு

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச்சாறு விட்டுநன்றாக அரைத்துச் சிறு சிறு வில்லைகளாகத் தட்டிக் காயவைக்கவும். நன்றாகக் காய்ந்தபின் இவைகளை ஒரு அகலில் வைத்துச் சேலைமண் செய்து ஒருமுழ நீள, அகல, உயரமுள்ள புடத்திடலிவும். பின்பு இப்பற்பத்தை எடுத்துக் கல்வத்தினில் வைத்துக் காட்டுப்பன்றிப் பித்தமும், விலாங்கு மீனின் பித்தமும் தனித்தனியே விட்டு நன்றாக ஒவ்வொரு நாள் அரைத்து உளுந்து பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு மாத்திரையெடுத்து இஞ்சிச் சாற்றிலோ, அல்லது சுக்குக் கஷாயத்திலோ கொடுக்கச் சீத ஜ்வரங்கள் தீரும் 3 நாட்களுள் குணமுண்டாகும்.

## 265. அசீரண ஜ்வரங்களுக்கு "கொக்கினெச்ச குளிகை"

சுதிர்செய்வெள்ளைக் கொக்கினெச்சம் பலமூன்று
கடுகுரோ கணிதான் கேளாய்
யதிலுமொரு பலங்கூட்டி வேம்பிலுற்ற
பட்டையின்சாற் றரைத்தே குன்றி
உதித்தபடி குளிகைசெய்து சீரகம்வேப்
பீர்க்கினிணீ ரூற்றிக் காய்ச்சி
விதித்தொருண்டை யீந்திடில சீரணச்சு
ரங்களெல்லாம் விட்டுப்போமே. 375

| | | |
|---|---|---|
| (இ-ள்) | வெள்ளைக் கொக்கின் எச்சம் | 3 பலம் |
| | கடுகரோகணி | 1 பலம் |

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு வேப்பம்பட்டைச் சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் உள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

சீரகம், வேப்பீர்க்கு இவ்விரண்டையும் இடித்துவைத்த கஷாயத்துடன் ஓர் உருண்டை விழுங்க அசீரண ஜ்வரங்கள் தீரும்.

## 266. அசீரண ஜ்வரங்களுக்கு ''நெல்லிமுள்ளிக் கஷாயம்''

செப்புநெல் லிமுள்ளி சுக்குத்திப்
பிலிமூலஞ் சிறந்தி டோமம்
கைப்புளவ சம்புகொடி வேலிசங்கம்
வேருகடுக் காய்தான் றிக்காய்
யொப்புறுநன் மிளகுமிவை சமபாகங்
கூட்டியிடித் தொன்றாய்க்காய்ச்சி
அப்படியே கொடுத்திடல் சீரணச்சு
ரங்களப்பா லகன்று போமே. 376

(இ-ள்.) நெல்லிமுள்ளி
சுக்கு
திப்பிலிமூலம்
ஓமம்
வசம்பு
கொடிவேலிவேர்
சங்கம்வேர்
கடுக்காய்த்தோல்
தான்றிக்காய்த்தோல்
மிளகு

முதலான சரக்குகளை வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கிப் பருகிவர அசீரண ஜ்வரங்கள் தீரும்.

## 267. அஜீரண ஜ்வரங்களுக்குக் "கெந்தகாதி மாத்திரை"

கெந்தகம்நேர் வாளமிர தங்கடுக்காய்
யெட்டிவிரை கிளருஞ் சுக்கு
சுந்தரத்திப் பிலிமிளகு கொடிவேலி
சிவதையவ்வேர் சுத்தி செய்தே
இந்தவகை சமங்கூட்டி வெஞ்சதிரக்
கள்ளியின்பா லினிலே நன்றாய்ப்
பந்தமுட னேயரைத்துக் குன்றிநிகர்
குளிகைசெய்து பகரக் கேளே. 377

பகரக்கேள் வெயிலினிலே யுலர்த்தியொன்றைத்
தேனிலிட்டுப் பண்பாஞ் சீந்தில்
புகல்தான்றிக் காய்கடுக்காய் நெல்லிமுத்தக்
காசொடுபேய்ப் புடல்வேப் பீர்க்கு
வகைக்கொருப லங்கூட்டி யிருநாழி
நீருழக்காய் வற்றக் காய்ச்சி
யகலாமல் கொடுத்திடல சீரணச்சு
ரங்களெல்லா மகன்று போமே. 378

(இ-ள்.) சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,, நேர்வாளம்
,, இரஸம்
,, எட்டிவிதை
,, சிவதைவிதை
கடுக்காய்த்தோல்
சுக்கு

திப்பிலி
மிளகு
கொடிவேலி வேர்ப்பட்டை

இவைகளுள் முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்பு மற்றச் சரக்குகளையிட்டுச் சதுரக்கள்ளிப்பால் விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வெயிலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும்.

சீந்தில்கொடி
தான்றிக்காய்த்தோல்
நெல்லிமுள்ளி
கடுக்காய்த்தோல்
கோரைக்கிழங்கு
பேய்ப்புடல்
வேப்பீர்க்கு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து, சுத்த ஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஓர் உழக்காகுபட்டும் எரித்து முன்சொன்ன குளிகையுடன் பருகிவர

அசிரண ஜ்வரங்கள் தீரும். நன்றாக மலமும் கழியும்.

## 268. பற்பல ஜ்வரங்களுக்கும் ''அமுத சர்க்கரை''

நன்னயச்சீந் திற்கொடிமற் றோலைநீக்கித்
துண்டுதுண்டாய் நறுக்கிக் கொண்டு
சொன்னபடி துவைத்தெடுத்தே இருசாடி
தனிற்போட்டுச் சுகமாய்ப்பின்னால்
அன்னதெல்லாம் பிசைந்துவடி கட்டியதைத்
தெளியவைத்தே யன்னீர் போக்கி
யின்னமடி வண்டலைத்தா னேகாய்ச்சிற்
சர்க்கரையா மியம்பக் கேளே. 379

இயம்புமந்தச் சர்க்கரைநற் சர்க்கரையி
    லரைப்படிசேர்த் திதுவல் லாமல்
நயம்பெருசீ ரகத்திலரைப் படிகள்சற்றே
    வறுத்திடித்து நன்றாய் மூன்றும்
வயணமுட னேகலந்து கொண்டதனை
    யுண்டுவரில் வந்த காய்ச்சல்
அயர்வுசெய்யு முடலெரிவு மிவ்விரண்டும்
    கிட்டாம லகன்று போமே.

(இ-ள்.) சீந்தில் கொடியின் மேல்தோலையும் அதன் மேலுள்ள பசுமை நிறத்தையும் சுரண்டிவிட்டுத் துண்டு துண்டுகளாக நறுக்கிக் கல்லுரலிலிட்டு இடித்து ஒரு பெரும் பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் விட்டுப் பிசையவும். பின்பு இதை இறுத்துக் கொள்ளவும். இவ்வாறு அந்தச் சக்கையை இரண்டு மூன்று தடவை திருப்பத் திருப்பப் பிசைந்து நீரை பாத்திரம் வேறொரு பாத்திரத்தில் இறுத்துக்கொள்ளவும். பாத்திரத்தை அப்படியே அசங்காமல் வைத்துவிடச் சீந்தில் சர்க்கரை பாத்திரத்தினடியில் தங்கும். பின்பு மேலுள்ள தெளிநீரை இறுத்து அதன் மண்டியை உலரவைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| இவ்வாறு சேகரிக்கப்பட்ட சீந்தில் சர்க்கரை | ½ படி |
| வெள்ளைச் சர்க்கரை | ,, |
| வறுத்த பெருஞ்சீரகம் | ,, |

இம்மூன்றையும் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து உட்கொள்ள ஜ்வரங்கள், உடல் எரிச்சல் முதலானவைகள் தீரும்.

## 269. அஜீர்ண ஜ்வரத்திற்கு "இலாமிச்சையாதி கஷாயம்"

கந்தவிலா மிச்சைவெட்பா லையினரிசி
நெய்தல்முத்தக் காசு கோட்டஞ்
சந்தனம்பற் பாடகமா டாதோடை
மருள்பேரீச் சம்ப முத்தேன்
சந்தரச்சி தேவியார்செங் கழுநீர்தான்றி
நெல்லிசுக் குக்கு டுக்காய்
நந்தலில்லா முந்திரிகைப் பழம்வேப்பம்
பட்டையொடு நயமாய்க் கேளே. 381

நயமாம்வட் டத்திருப்பிக் கொன்றையின்வேர்ப்
பட்டைமேன்னன் னாரி வேரு
செயமருவு திப்பிலிமூ லஞ்சிறுமூ
லம்மிளகு சீந்திற் றண்டு
வியம்பெருகி ராம்புமர மஞ்சளதி
மதுரமதி விடையஞ் சுக்கோ
டுயர்ந்திடுமப் பிரகோட்டப் திப்பிலிகூ
விளைவேர்பின் னோது வேனே. 382

ஓதலாந்தண் ணீர்விட்டான் கிழங்குசிற்றா
முட்டியவ்வேர் விழல்வ சம்பு
நீதகல்தா மரைவளைய மேற்கடுகு
ரோகணியத் தேவ தாரம்
பேதமில்லா திருவேலித் தண்டுசிறு
காஞ்சொறிசொற் பேய்ப்புடலும்
மீதந்தப் பெருங்குமிழிவ் வகையெல்லாஞ்
சொல்லுகிறேன் மிதமாய்த் தானே. 383

மிதமாய்த்தான் கடைச்சரக்கோர் பங்கும்வெட்டு
மருந்தும்நன் றாய் மேலீர் பங்கும்
பதறாம லேபதமா யிடித்ததில்மூ
விரலளவு பகருந் தூளில்

யிதவாய்ப்போட் டிருநாழி நீரதுவிட்
டோருழக்கா யெரித்துக் காய்ச்சி
நிதமிருபோ துண்டிடில சிரணச்சு
ரங்களப்பால் நீங்கிப் போமே. 384

(இ-ள்) இலாமிச்சைவேர்
வெட்பாலையரிசி
நெய்தல்கிழங்கு
கோரைக்கிழங்கு
கோஷ்டம்
சந்தனத்தூள்
பற்பாடகம்
ஆடாதொடைவேர்
மருளங்கிழங்கு
பேரீச்சம்பழம்
சகதேவிச்சமூலம்
தான்றிக்காய்த்தோல்
நெல்விமுள்ளி
சுக்கு
கடுக்காய்த்தோல்
திராக்ஷைப்பழம்
வேப்பம்பட்டை
வட்டத்திருப்பி
கொன்றைவேர்ப்பட்டை
நன்னாரிவேர்த்தோல்
திப்பிலிமூலம்
திப்பிலி
மிளகு
சீந்திற்கொடி
கிராம்பு
மரமஞ்சள்
அதிமதுரம்
அதிவிடையம்
சுக்கு

உயர்ந்தகோஷ்டம்
(யானைத்)திப்பிலி
வில்வவேர்
தண்ணீர்விட்டான்கிழங்கு
சிற்றாமுட்டிவேர்
விழல்வேர்
வசம்பு
தாமரையிலையினுட்சுருள்
கடுகரோகிணி
தேவதாரு
வெட்டிவேர்
சிறுகாஞ்சோறிவேர்
பேய்ப்புடல்
பெருங்குமிழ்வேர்

இதிலுள்ள கடைச்சரக்கு வகைகளை வகைக்கு 1 பலம் வீதமும் வேர்வகைகளை வகைக்கு 2 பலம் வீதமும் எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி நிழலில் உலர்த்திக் கல்லுரலி லிட்டிடித்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது இக் கஷாய சூரணத்தில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டுச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்ற வைத்துத் தேன்விட்டுத் தினம் 2 வேளை பருகிவர, அஜீர்ண ஜ்வரங்கள் தீரும்,

**குறிப்பு:** இம்முறையில் சிற்சில சரக்குகள் 2 தடவை கூறப்பட்டிருப்பதானால் அவைகளை இருமடங்காக எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

✱ ✱✱ ✱

## 270. வாதபித்த ஜ்வரகளுக்குச் 'சந்தனாதி கஷாயம்'

சந்தனமா டாதோடை வேருவட
  தெர்ப்பையின்வேர் சார்ந்த கொட்டி

யந்தவற்கி ழங்குபற்பா டகமொடுதா
மரைவளைய மடர்நன் னாரிச்
சுந்தரவே ரதிமதுர மிவ்வகையெல்
லாஞ்சமதைச் சுகமாய்க் கூட்டிப்
பத்தமுட னிருநாழி நன்னீர்விட்
டுழக்காகப் பண்பாய்க் காய்ச்சே. 385

பண்பாய்க்காய்ச் சித்தேனுஞ் சர்க்கரையு
மேற்கலந்து பகருங் காலை
ஒண்பாக மாய்க்கொடுத்தால் வாதபித்தச்
சுரங்களப்பா லொதுங்கு மப்பால்
பெண்பாலில் வைத்தபெரு விடையீசர்
கிருபையினாற் பெருகுங் கீர்த்தி
வண்பாரெல் லாந்துதிசெய் சரபேந்திர
பூபதிசொல் வளமை தானே. 386

(இ-ள்,) சந்தனத்தூள்
ஆடாதொடைவேர்
ஆலம்வேர்
தர்ப்பைவேர்
கொட்டிக்கிழங்கு
பற்பாடகம்
தாமரையிலையினுட்சுருள்
நன்னாரிவேர்
அதிமதுரம்

இவற்றை வகைக்கு (2 வராகனெடை) வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்தச் சுத்த ஜலம் சின்னப்படி 1 விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்வரை வற்ற வைக்கவும். பின்பு இதனை வடிகட்டித் தேனும், சர்க்கரையும் போட்டுத் தினம் 2 வேளை பருகவும். வாத பித்த ஜ்வரங்கள் தீரும்.

## 271 அஜீர்ண ஜ்வரங்களுக்குப் ''பிரமிக் கஷாயம்''

சுந்தரதேட் டிப்பிரமி கந்தமுள்ள
கொத்தமல்லி சுகக்கற் றாழை
அந்தநல்லா டாதோடை யிலையுடனே
தப்பாம லணிதி ராய்ச்சொல்
இந்தவகை யைந்தினையுஞ் சேர்த்தூதிலே
நாநாழி யின்னீர்வார்த்து
நந்தல்வரா மல்பதத்தில் நான்கிலொரு
பங்காக நயமாய்க் காய்ச்சே. 387

நயமாய்க்காய்ச் சிப்பிழிந்து கொண்டபின்பு
தேங்காய்ப்பால் நாழி விட்டே
அயராம லேகடுக ரோகணியி
ரண்டுபல மரைத்துப் போட்டே
யியல்பாக வேகரைத்துக் கொடுத்துவந்தா
லாமசுர மெல்லாம் நன்றாஞ்
செயலாந்க ருமநிறை சரபேந்திர
பூபதியார் செப்பும் வாறே 388

(இ-ள்) பிரமி
கொத்துமல்லி
கற்றாழை
ஆடாதோடையிலை
திராய்

இவைகளை வகைக்கு 1 பிடியெடுத்து நசுக்கிச் சுத்த ஜலம் சின்னப்படி 2 விட்டு அடுப்பின் மேலேற்றி நான்கில் ஒன்றாக்கி இறக்கி வடிகட்டிக்கொண்டும்,

| | |
|---|---|
| கஷாயம் | சின்னப்படி ½ |
| தேங்காய்ப்பால் | ,, |

இவ்விரண்டையும் கலந்து கடுகரோகணி 2 பலமெடுத்துக் கஷாயம் விட்டு, அரைத்துக்குழப்பி அருந்தவும்: ஜ்வரங்கள் தீரும். (நன்றாகப் பேதியும் ஆகும்).

## 272. ஆம ஜ்வரங்களுக்குத் 'தேங்காய்ப் பாலெண்ணெய்'

தேங்காய்ப்பா லோருழக்கா மணக்கெண்ணெயோ
ருழக்கிரண்டுஞ் சேர்த்தே யுப்பு
நீங்காம லோர்கழஞ்சு கொடிவேலி
வேர்கழஞ்சு நேரா யின்னம்
பாங்காகு மதிவிடையம் முள்ளிவசம்
பிட்டெரிந்துப் பண்பா யீந்தால்
ஆங்காமாவல் லாமசுர மத்தனையும்
விட்டகலு மப்பாற் றானே. 389

(இ-ள்.) தேங்காய்ப்பால் ஒரு உழக்கு
ஆமணக்கெண்ணெய் ,,
இவ்விரண்டையுமொன்று கலந்து,

| | |
|---|---|
| உப்பு | $1\frac{1}{4}$ வராகனெடை |
| கொடிவேலி வேர்ப்பட்டை | ,, |
| அதிவிடையம் | ,, |
| பூண்டு | ,, |
| வசம்பு | ,, |

இவைகளைத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து, அதனுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இதிலொரு ஸ்பூனளவெடுத்துப் பருகிவர ஆம ஜ்வரங்கள் நீங்கும்.

## 273. ஆம ஜ்வரத்திற்குக் 'கடுகரோகிணி மாத்திரை'

வன்னமுள்ள பொற்கடுக ரோகணியி
லோர்பலம்நேர் வாளந் தானே
சொன்னதிரு பலமிதல்லா லாமணக்கின்
பூச்செவந்தி சுகமாய்க் கேளே

அன்னதொரு பலங்கூட்டி முலைப்பாலி
லரைத்துமிள கன்னே ருண்டை
நன்னயமாய்ச் செய்துமுலைப் பாலிலிட்டா
லாமஜ்வரம் நலிந்து போமே. 390

| | | |
|---|---|---|
| (இ-ள்) | கடுகரோகணி | — 1 பலம் |
| | சுத்திசெய்த நேர்வாளம் | — 2 ,, |
| | ஆமணக்கம்பூ | — 1 ,, |
| | செவந்திப்பூ | — 1 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு, முலைப்பால்விட்டு நன்றாக அரைத்து, மிளகளவுள்ள உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இம்மாத்திரையில் ஒன்றையெடுத்து முலைப்பாலுடன் விழுங்கவும். ஆம ஜ்வரங்கள் நீங்கும்.

## 274 ஆம ஜ்வரத்திற்கு ''உப்பிலி நெய்''

உப்பிலிச்ச மூலஞ்சா ரணைசமூ
லஞ்சங்க மொன்வே ரல்லால்
தப்பிலாச் செருப்படிச மூலமெண்வே
லிப்பருத்தித் தான்ச மூலங்
கைப்பிலகு பொடுதலையி லைமணித்தக்
காளியும்வ கைக்கச் சாறு
செப்பியதோ ரரைக்காற்சே ரிளங்கொட்டைப்
பாக்கதன்வேர் சீராய்த் தானே. 391

சீராய்த்தா னரைத்தெடுத்தோர் நாழிநெய்யிற்
கரைத்ததிலே சேர்ப்பாய் சுக்குங்
காரான பொற்கடுக ரோகணிதிப்
பிலிக்கடுக்காய் கைப்பா முள்ளி
பேரான வசம்பிதெல்லா மரைத்தெரித்து
வடிபதத்திற் பிசகா வண்ணந்
தாராள மாய்மூன்று காசெடையீ
யாமசுரந் தானே போமே. 392

(இ-ள்) இண்டுச்சமூலம்
சாரணைச்சமூலம்
சங்கம்வேர்
செருப்படிச்சமூலம்
வேலிப்பருத்திச்சமூலம்
பொடுதலையிலை
மணத்தக்காளியிலை

இவைகளின் சாறு வகைகள் தனித்தனியே $\frac{1}{8}$ சேர் எடுத்து ஒன்று கலந்து கொள்ளவும். அதனுடன், கொட்டைப்பாக்கின் இளவேரை அரைத்துக் கலந்து, பசுவின் நெய் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டுக் குழப்பி,

சுக்கு
கடுகரோகணி
திப்பிலி
கடுக்காய்த்தோல்
உள்ளிப்பூண்டு
வசம்பு

இவைகளை 1 வராகனெடை வீதமெடுத்து நன்றாக அரைத்து அதனுடன் குழப்பி எரித்துப் பதத்திலிறக்கவும்.

இந்நெய்யில் மூன்று காசெடையெடுத்துப் பாலுடன் உட்கொள்ளவும். ஆம ஜ்வரங்கள் தீரும்.

## 275. பற்பல ஜ்வரங்களுக்கும் ''சீதேவிச் செங்கழுநீர்க் கஷாயம்''

பொன்னணிச் சீதேவியார் செங்கழுநீர்
கைத்திடுபேய்ப் புடல்நீள் சீந்தில்
வன்னவிலா மிச்சைசிறு காஞ்சொறிவேர்
கொத்தமல்லி வாசங் கோரை
நன்னயக்கி ழங்குகண்டங் கத்தரிதன்
சந்தனமும் நவில்வே னப்பால்

யின்னந்நில வேம்புசுக்கோர் வகைக்கொருகா
செடைசரியா யிடித்துத் தானே. 393

இடித்தெடுத்துக் கொண்டிரண்டு படிநீரை
விட்டுழக்கா யெரித்துக் காய்ச்சி
வடித்ததனை யீந்துவந்தால் பொல்லாத
சுரங்களெல்லாம் வாசி யாகும்
நடித்தபரிக் கேநகுலன் பூசுரர்க்குப்
போசநிகர் நயமாய்த் தன்பேர்
படித்தவர்சிந் தாமணியாம் சரபேந்திர
பூபதிசொற் பண்பி தாமே. 394

(இ-ள்) சகதேவிச்சமூலம்
பேய்ப்புடல்
சீந்தில்கொடி
இலாமிச்சைவேர்
சிறுகாஞ்சோறிவேர்
கொத்தமல்லிவிதை
கோரைக்கிழங்கு
கண்டங்கத்திரிவேர்
சந்தனத்தூள்
நிலவேம்பு
சுக்கு

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்கு ஆகும்வரை வற்றக் காய்ச்சவும். இக்கஷாயத்தைப் பருகிவரப் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

## 276. வரள் ஜ்வரத்திற்குக் ''கொத்தமல்லிக் கஷாயம்''

கொத்தமல்லி சிற்றாமுட்டி வேர்கோரைக்
    கிழங்குசுக்குக் குளிர்ந்த சீந்தில்
புத்தநில வேம்புபற்பா டகமோமம்
    பொன்முசுட்டை பொருந்தும் வேரும்
மெத்தவகைக் கொவ்வொருகா செடையிடித்தி
    ரண்டுபடி யிளநீர் விட்டே
அத்தனையு முழக்காகக் காய்ச்சியுண்டால்
    மெய்ச்சுரவர ளகலப் போமே. 395

(இ-ள்) கொத்தமல்லிவிதை
சிற்றாமுட்டிவேர்
கோரைக்கிழங்கு
சுக்கு
சீந்தில்கொடி
நிலவேம்பு
பற்பாடகம்
ஓமம்
பொன்முசுட்டைவேர்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்து, இளநீர் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகும்மட்டும் எரித்து இறக்கவும். இதனைப் பருகிவர வரள் ஜ்வரங்கள் தீரும்.

## 277. அந்தர்கத ஜ்வரங்களுக்குப் 'படலோதிக் கஷாயம்'

பொல்லாப்பேய்ப் புடல்கடுக ரோகணிகோ
    ரைக்கிழங்கு புதிதாஞ் சுக்கு
வல்லாரு கொன்றைப்பட்டை செவிமு ரண்டிபற்பா
    டகமொடுபா வட்டை வேரு

எல்லாந்தான் சமபாக மாய்க்காய்ச்சி
மூன்றோநா ளீந்திட் டாக்கால்
நில்லாம லந்தர்க தச்சுரங்க
ளப்பாலே நீங்கிப் போமே. 396

(இ ள்) பேய்ப்புடல்
கடுகரோகணி
கோரைக்கிழங்கு
சுக்கு
பற்பாடகம்
பாவட்டைவேர்
வேலிப்பருத்திவேர்

இவைகளைச் சமனெடுத்து ( வகைக்கு 2 வராகனெடை ) இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக்காய்ச்சி இறக்கி 3 நாட்களுக்குப் பருகிவரவும். உள்ளூர அடிக்கும் ஜ்வரங்கள் தீரும்.

## 278. பற்பல ஜ்வரங்களுக்கும் "பலாலாக்ஷாதி தைலம்"

அந்தநற்சா றணையரக்கு நல்லசிற்றா
முட்டியவ்வே ரமுக்கு ராவேர்
இந்தவகை யொன்றினுக்கோ ரைந்துபலந்
தப்பாம லிடித்துக் கொண்டு
பந்தமொடு பதினாறு படிநீர்விட்
டேநான்கு படியாய்க் காய்ச்சி
சுந்தரமாய் வடித்ததிலே நாழியெண்ணெய்
வார்த்திடப்பால் சுகமாய்த் தானே. 397

சுகமான தயிர்மேல்நீர் பன்னிரண்டு
படிகூட்டிச் சுகந்த மஞ்சள்
இகழாத பெருங்குறும்பை மதுகமிலா
மிச்சையின்வே ரெழிலாம் கோஷ்டம்

அககிழ்செய் சந்தனம் ரேணுகமுத்
தக்காசு மரத்தை யல்லால்
திகழ்தேவ தாரநில வேம்பொடுமஞ்
சிட்டியின்னஞ் செப்பக் கேளே. 398

செப்பியநன் னாரியிவை வகைக்கோரு
கழஞ்சுநன்றாய்ச் சேர்த்த ரைத்தே
கைப்பிலகு வேம்பினுட பட்டைதண்ணீர்
விட்டானக் கடவுள் சென்னி
ஒப்புடன்பூ ணறுமோரு வகைக்கழக்சச்
சாறுவிட்டே யொன்றாய்க் காய்ச்சி
அப்படியே வடித்துடம்பிற் பூசிடிலெல்
லாச்சுரமு மகன்று போமே. 399

(இ·ள்) சாறணைவேர்
அரக்கு
சிற்றாமுட்டிவேர்
அமுக்குராக்கிழங்கு

இவைகளை வகைக்கு 5 பலம் விதமெடுத்து இடித்துக் கொண்டு சுத்தஜலம் சின்னப்படி 8 விட்டு அடுப்பின் மேல் ஏற்றி 2 படியாகும்வரை வற்றக் காய்ச்சவும், கஷாயத்தை வடிக்கட்டி அதனுடன்,

| | |
|---|---|
| சுத்தமான நல்லெண்ணெய் | பெரியபடி $\frac{1}{2}$ |
| தயிரின் தெளிவு நீர் | சின்னப்படி 6 |

இவைகளைச் சேர்த்துக் கலந்து,

சந்தனத்தூள்
காட்டுமிளகு
மஞ்சள்
மருளங்கிழங்கு
அதிமதுரம்
கோஷ்டம்
இலாமிச்சைவேர்
கோரைக்கிழங்கு

சிற்றரத்தை
தேவதாரம்
நிலவேம்பு
மஞ்சிஷ்டா
நன்னாரிவேர்

இவைகளை வகைக்கு 1 ¼ வராகனெடை வீதமெடுத்து மேற்கூறிய திரவங்களில் ஏதேனுமொன்றைவிட்டு நன்றாக அரைத்து,

| | |
|---|---|
| வேப்பம்பட்டைச்சாறு | 1 ஆழாக்கும் |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | ,, |

விட்டு யாவற்றையுமொன்று கலந்து அடுப்பின் மேல் ஏற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும்.

இத்தைலத்தை உடலில் பூசிவரப் பற்பல ஜ்வரங்களும் தீரும்.

குறிப்பு: அரக்கை ஒரு துணியில் முடிந்து டோலா யந்திர மாகக் கட்டிக் கஷாயம் எடுப்பது வழக்கமாகும்.

## 279. விஷம், சீத ஜ்வரகளுக்குப் 'பொன் முசுட்டைக் கஷாயம்'

சிலமுள்ள பொன்முசுட்டை கொடிவேலி
பேர்முட்டி சிற்றா முட்டி
சூலமணி யீசுரவேர் நன்னாரி
வேர்துளசி சுக்கி தல்லால்
வேலணியார் நல்வேலி முரண்டயிவை
சமபாக மேதான் கூட்டி
கோலமுடன் காய்ச்சியுண்டால் விஷமச்சீ
தச்சுரங்கள் குணம தாமே. 400

(இ-ள்) பொன்முசுட்டைவேர்
கொடிவேலிவேர்
பேராமுட்டி
சிற்றாமுட்டி
பெருமருந்துவேர்
நன்னாரிவேர்
துளசி
சுக்கு
வேலிப்பருத்திவேர்

இவைகளை வகைக்கு ( 2 வராகனெடை ) வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துக் சுத்தஜலம் சின்னப்படி ஒன்று விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு ஆழாக்காகும்வரை எரித்து வடிக் கட்டிச் சாப்பிட,

விஷம ஜ்வரங்களும், சீத ஜ்வரங்களும் தீரும்.

## 280. விஷம ஜ்வரங்களுக்குச் 'சித்திரமூலாதிக் கஷாயம்'

சட்டமுள்ள கொடிவேலி வெள்ளுள்ளி
பொன்முசுட்டை சார்ந்த சுக்கு
திட்டமுயர் பேய்ப்புடல்வேர்ப் பற்பாட
கஞ்செவ்வியஞ் சேர்த்து நேராய்
விட்டதிலே நன்னீரை யெட்டிலொன்றாய்க்
காய்ச்சியப்பால் வேண்டி யுண்டால்
கொட்டமிடு துட்டவிஷ மச்சுரங்க
ளத்தனையுங் குணம தாமே. 401

(இ-ள்) சித்திரமூலவேர்
பூண்டு
பொன்முசுட்டைவேர்
சுக்கு
பேய்ப்புடல்வேர்

பற்பாடகம்
செவ்வியம்

இவைகளை வகைக்கு 2 வராகனெடை விதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் சின்னப்படி 1 விட்டு, அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதனைப் பருகிவர விஷம ஜ்வரங்கள் தீரும்.

## 281. விஷம ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்குச் "சீரகாதி கஷாயம்"

சீரகநா ரத்தையிலை பற்பாட
சந்துளசி சீந்திற் றண்டு
பேரணியி லந்தையிலை சுக்குகண்டங்
கத்திரிசொற் பேய்ப்புடலும்
பாரளந்த நல்லவிஷ்ணுக் ராந்தியிலை
சமபாகம் பண்பாய்க் கூட்டி
நீரதிலே விட்டெரித்துப் பக்குவமாய்க்
காய்ச்சியப்பா லியம்பக் கேளே. 402

நியமமதாய் வடித்திடுக ஷாயத்தி
லேமிளகு நேர்தூ ளாக்கி
நயமிகுஞ்சர்க் கரையிரண்டு மென்பொடிகள்
போட்டதனை நயந்தே யுண்டால்
அயர்வுசெய்யும் பொல்லாத விஷமசுரஞ்
சீதசுர மதுநன் றாகும்
செயந்தருநற் றஞ்சையில்வாழ் சரபேந்திர
பூபதிசொல் சிறப்புத் தானே. 403

(இ-ள்) சீரகம்
நாரத்தையிலை
பற்பாடகம்
துளசி
சீந்தில்தண்டு

இலந்தையிலை

சுக்கு

கண்டங்கத்திரிவேர்

பேய்ப்புடல்

விஷ்ணுக்ராந்தி

இவைகளை வகைக்கு (2 வராகனெடையெடுத்து) நசுக்கிச் சுத்தஜலம் சின்னப்படி ஒன்றுவிட்டு அடுப்பின்மேல் ஏற்றி எட்டிலொன்றாகும் வரை எரித்து வடிகட்டி, அதனுடன் மிளகுத்தூள் சேர்த்துச் சர்க்கரையும் போட்டுப் பருகிவர விஷம ஜ்வரங்களும், சீத ஜ்வரங்களும் குணமாகும்.

## 282. முசுமுசுக்கை லேகியம்

பகரு முசுமுசுக்கைபலம் நூற்றி ரட்டி
பதினாறு மரக்கானீர் தனிலே போட்டுச்
சுகமாய்த்தா னெட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
சொல்லியதண் ணீர்விட்டான் கிழங்கின் சாற்றி
லகலாம லாழாக்குப் பசுவின் பாலோ
ராழாக்கி னோடிலவம் பட்டைச் சாறே
பிகழாதே யாழாக்கு விட்டப் பாலே
யெல்லாந்தான் கலந்தவுட னியம்பக் கேளே. 404

இயம்பக்கே ளறுபதுப லந்தப் பாம
லினித்திடுசர்க் கரையனலிட் டெரித்துக் காய்ச்சி
நயமேவு முந்திரிகைப் பழம்கச் சோல
நண்ணுபழ மதிமதுர முத்தக் காசு
சுயமான சந்தனமி லவங்க மேலஞ்
சுகந்தருகஸ் தூரிமஞ்சள் நன்னாரிவேர்
வியன்சேர்ந்தா மரைக்கிழங்கி லவங்கப்பத்ரி
விலாமிச்சை வேரிதன்றி விளம்பு வேனே. 405

விளம்புநெல்லிப் பருப்பொடுதிப் பிலிநல் வாசம்
வீசுமந்தச் செங்கழுநீர் கிழங்கி னோடே
வளம்பெருவட் டத்திருப்பி யிவைக ளொவ்வோர்
வகையினுக்குப் பன்னிருப லந்தான் கூட்டி
களங்கமில்லாக் காட்டெருமைப் பாலுஞ் சொன்ன
கணக்குடனே யேழுபலஞ் சேர்த்தி டித்தே
தளம்பாதே யிரண்டுபடி செந்தேன் வார்த்துத்
தான்பிசைந்து தான்றிக்கா யளவுண் டாற்கே. 406

உண்டாலப் பாச்சூழ்ந்த பித்தப்பிரமை
மூர்ச்சை போங்குசுரம் பயித்தியவிகாரம்
பண்டார்த்த நீர்க்கடுப்புத் தாது நஷ்டம்
பண்ணுமகி சாரமங்க தாசமின்னங்
கண்டார்க்குங் காமாலை பலநோய் தீருங்
கௌரிபங்சர் பூசைசெய்யும் சனக மேரு
வெண்டாம ரையின்மடந்தை நாவில் வாழும்
வேதியர்சூழ் சரபேந்திரன் விளம்பும் வாதே. 407

(இ-ள்) முசுமுசுக்கையைச் சமூலமாக 200 பலம் எடுத்துக் கொண்டு நசுக்கிச் சுத்தஜலம் 16 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி 2 மரக்காலாகும் வரையெரித்து வற்ற வைக்கவும். இதனுடன்,

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | — 1 ஆழாக்கு |
| பசுவின்பால் | — 1 ,, |
| இலவம்பட்டைச்சாறு | — 1 ,, |

முதலியவைகளையொன்று கலந்து, சர்க்கரை 60 பலம் போட்டு அடுப்பின்மேல் வைத்துப் பாகு செய்து கொள்ளவும்.

திராக்ஷைப்பழம்
கச்சோலம் (பூலாங்கிழங்கு)
அதிமதுரம்
கோரைக்கிழங்கு
சந்தனத்தூள்

கிராம்பு
ஏலக்காய்
கஸ்தூரிமஞ்சள்
நன்னாரிவேர்
தாமரைக்கிழங்கு
இலவங்கப்பத்திரி
இலாமிச்சைவேர்
நெல்லிக்காய்ப் பருப்பு
திப்பிலி
செங்கழுநீர்க்கிழங்கு
வட்டத்திருப்பி
முதலான சரக்குகள் வகைக்கு — 12 பலம்
கூகைநீர் — 7 பலம்

முதலான சரக்குகளைக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திர காயஞ் செய்து, பாகுடன் சேர்த்துக் கிண்டி இறக்கிக் கொள்ளவும். நன்றாக ஆறியபின் சுத்தமான தேன் சின்னப்படி 1 விட்டு நன்றாகப் பிசைந்து கொள்ளவும்.

இதில் தான்றிக்காயளவெடுத்து உட்கொள்ளப்பித்தம், பிரமம் மூர்ச்சை, சுரம், பித்த விகாரங்கள், நீர்க்கடுப்பு, இந்திரிய நஷ்டம் அதிசாரம், தாகம் காமாலை முதலான பற்பல ரோகங்களுந் தீரும்.

முற்றிற்று



# ஜ்வர ரோக சிகித்ஸை முறைகளிலுள்ள மருந்துகளின் அகராதி


| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1 | அகத்திவேர்க் கஷாயம் (வாதஜ்வரங்களுக்கு) | 145 |
| 2 | அதிவிடய மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 111 |
| 3 | அதிவிடய நெய் (பழங்காய்ச்சலுக்கு) | 119 |
| 4 | அமுத சர்க்கரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 289 |
| 5 | அரக்குச் சந்தனாதிதைலம் (ஜ்வரங்களுக்கு) | 109 |
| 6 | அரிதாரக்குளிகை (தாப ஜ்வரத்திற்கு) | 27 |
| 7 | அரிதாரக்குளிகை (சீத ஜ்வரம், விஷம ஜ்வரத்திற்கு) | 74 |
| 8 | அரிதாரக்குளிகை (விடாத ஜ்வரங்களுக்கு) | 88 |
| 9 | அரிதாரக்குளிகை (சீத ஜ்வரத்திற்கு) | 121 |
| 10 | அரிதாரக்குளிகை (விஷம ஜ்வரங்களுக்கு) | 238 |
| 11 | அதிதாரச் சுண்ணாம்புக் குளிகை (பலவித ஜ்வரங்களுக்கும்) | 100 |
| 12 | ஆடாதோடைக் கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 139 |
| 13 | ஆடுதீண்டாப்பாளைக் கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 277 |
| 14 | ஆமணக்கம்வேர் கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 146 |
| 15 | ஆலம்பழுப்புக் கடாயம் (சீத ஜ்வரத்திற்கு) | 5 |
| 16 | இராஸாதி குளிகை (ஜ்வரத்திற்கு) | 8 |
| 17 | இராஸாதி மாத்திரை (ஜ்வரத்திற்கு) | 9 |
| 18 | இரஸாதி குளிகை (குளிர் ஜ்வரம், ஆம ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 20 |
| 19 | இரதாதிச் சூரணம் (நீடித்த ஜ்வரம், திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 57 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 20 | இரஸாதி குளிகை (ஜ்வரங்களுக்கு) | 72 |
| 21 | இரதாதிக் குளிகை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 198 |
| 22 | இருவேலிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 149 |
| 23 | இலவங்காதி மாத்திரை (தாப ஜ்வரங்களுக்கு) | 95 |
| 24 | இலவங்காதி கிறுதம் (ஜ்வரம், வெட்டைகளுக்கு) | 284 |
| 25 | இலந்தைக் கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 227 |
| 26 | இலாமிச்சையடை கஷாயம் (ஜ்வரத்திற்கு) | 2 |
| 27 | இலாமிச்சைவேர் அடைகஷாயம் (குளிர் ஜ்வரத்திற்கு) | 116 |
| 28 | இலாமிச்சைவேர் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 146 |
| 29 | இலாமிச்சைவேர் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 148 |
| 30 | இலாமிச்சைக் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 158 |
| 31 | இலாமிச்சையாதி கஷாயம் (அஜீர்ண ஜ்வரங்களுக்கு) | 291 |
| 32 | இலுப்பைப்பூக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 264 |
| 33 | இலுப்பைப்பூ மாத்திரை (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 52 |
| 34 | இலுப்பைப்பூ மாத்திரை (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 104 |
| 35 | உசீராதி கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 68 |
| 36 | உசீராதி கஷாயம் (தாப ஜ்வரங்களுக்கு) | 80 |
| 37 | உசீராதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 158 |
| 38 | உசீராதி கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 230 |
| 39 | உப்பிலிநெய் (ஆம ஜ்வரத்திற்கு) | 297 |
| 40 | எலிப்பாஷாண மாத்திரை (சீத ஜ்வரங்களுக்கு) | 80 |
| 41 | எலிப்பாஷாண மாத்திரை (முறைக் காய்ச்சலுக்கு) | 244 |
| 42 | எலுமிச்சம்பழ எண்ணெய் (பழஞ் ஜ்வரத்திற்கும் வீக்கத்திற்கும்) | 138 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 43 | ஏலாதி குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 22 |
| 44 | ஏலாதி குளிகை (பித்த ஸந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 151 |
| 45 | (கடல்நுரைத்) தைலம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 49 |
| 46 | கடுகரோகிணி கஷாயம் (பக்கசூலை முதலானவைகளுக்கு) | 7 |
| 47 | கடுகரோகிணி மாத்திரை (விடுபடாத ஜ்வரங்களுக்கு) | 22 |
| 48 | கடுகரோகிணி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 83 |
| 49 | கடுகரோகிணி மாத்திரை (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 91 |
| 50 | கடுகரோகிணிக் கஷாயம் (பித்த ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 137 |
| 51 | கடுகரோகிணியாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 168 |
| 52 | கடுகரோகிணி மாத்திரையும் சுக்காதிக் கடாயமும் (கப ஜ்வரங்களுக்கு) | 177 |
| 53 | கடுகரோகிணி சுக்குக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 191 |
| 54 | கடுகரோகிண்யாதி கடாயம் (பக்க நோய், வாத பித்த ஜ்வரங்களுக்கு) | 208 |
| 55 | கடுகரோகிணி மாத்திரை (ஆம ஜ்வரத்திற்கு) | 296 |
| 56 | கண்டகாரிக் கஷாயம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 219 |
| 57 | கஸ்தூரியாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 13 |
| 58 | கஸ்தூரி மஞ்சள் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 161 |
| 59 | குண்டலாதிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 173 |
| 60 | குண்டலாதிவேர்க் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 163 |
| 61 | குருவிச்சவேர்க் கஷாயம் (ஜ்வரத்திற்கு) | 59 |
| 62 | குருவிச்சவேர்க் கஷாயம் (சந்நிக்கு) | 204 |
| 63 | கூஷ்மாண்ட கண்டம் (அஸ்தி ஜ்வரத்திற்கு) | 273 |
| 64 | கெந்தகாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 25 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 65 | கெந்தகாதி குளிகை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 42 |
| 66 | கெந்தகாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 44 |
| 67 | கெந்தகாதி மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 48 |
| 68 | கெந்தகாதி பற்ப மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 63 |
| 69 | கெந்தகாதி குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 82 |
| 70 | கெந்தகாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 90 |
| 71 | கெந்தகாதி மாத்திரை (முறைக்காய்ச்சலுக்கு) | 92 |
| 72 | கெந்தகாதி மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 112 |
| 73 | கெந்தகாதி குளிகை (வாத ஜ்வரங்களுக்கு) | 133 |
| 74 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 212 |
| 75 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 220 |
| 76 | கெந்தகாதி குளிகை (விஷ ஜ்வரங்களுக்கு) | 225 |
| 77 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 231 |
| 78 | கெந்தகாதி மாத்திரை (விஷ ஜ்வரங்களுக்கு) | 268 |
| 79 | கெந்தகாதி மாத்திரை (அஜீர்ண ஜ்வரங்களுக்கு) | 288 |
| 80 | கெந்தகாதி பற்பம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 250 |
| 81 | கெந்தக பாஷாண குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 87 |
| 82 | கெந்தகமடல்துத்த குளிகை (ஜ்வரங்களுக்கு) | 99 |
| 83 | கெந்தக தாம்ராதி மாத்திரை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 200 |
| 84 | கொக்கினெச்ச குளிகை (அசீர்ண ஜ்வரங்களுக்கு) | 285 |
| 85 | கொத்தமல்லிக் கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 73 |
| 86 | கொத்தமல்லிக் கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 159 |
| 87 | கொத்தமல்லிக் கடாயம் (சேத்தும ஜ்வரத்திற்கு) | 186 |
| 88 | கொத்தமல்லிக் கஷாயம் (கபத்திற்கு) | 192 |
| 89 | கொத்தமல்லியாதிக் கடாயம் (கப ஜ்வரத்திற்கு) | 255 |
| 90 | கொத்தமல்லிக் கஷாயம் (பித்த காசம் ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 252 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 92 | கொத்தமல்லிக் கஷாயம் (வரள் ஜ்வரத்திற்கு | 300 |
| 93 | கொன்றைவேர்க் கஷாயம் (சகல ஜ்வரங் களுக்கும்) | 33 |
| 94 | கோரைக்கிழங்கு கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு | 143 |
| 95 | கோரோசனாதி மாத்திரை (பித்த ஜ்வரம், ஸந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 203 |
| 96 | கோரோசனை குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 4 |
| 97 | கெளரீ பாஷாணக் குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 12 |
| 98 | கெளரீ பாஷாணக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 103 |
| 99 | கெளரீ பாஷாண பற்ப மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 15 |
| 100 | சத்திச்சாரணை நெய் (பழைய ஜ்வரங்களுக்கு) | 126 |
| 101 | சந்தனாதி உருண்டை (சகல ஜ்வரங்களுக்கும்) | 98 |
| 102 | சந்தனாதி கஷாயம் (தொந்த ஜ்வரங்களுக்கு) | 76 |
| 103 | சந்தனாதி கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 131 |
| 104 | சந்தனாதி கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 140 |
| 105 | சந்தனாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 154 |
| 106 | சந்தனாதி கஷாயம் (கப ஜ்வாத்திற்கு) | 185 |
| 107 | சந்தனாதி கஷாயம் (அதிசார ஜ்வரத்திற்கு) | 228 |
| 108 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 256 |
| 109 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 267 |
| 110 | சந்தனாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 270 |
| 111 | சந்தனாதி கஷாயம் (வாத பித்த ஜ்வரங்களுக்கு) | 293 |
| 112 | சந்தன உசீராதி கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 135 |
| 113 | சந்தனாதி மாத்திரை (சீத ஜ்வரத்திற்கு) | 56 |
| 114 | சவுட்டு மண்தைலம் (அஸ்தி ஜ்வரத்திற்கு) | 259 |
| 115 | சாதிலிங்க குளிகை (தாப, வாத, சீத ஜ்வரங் களுக்கு) | 40 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 116 | சாதிலிங்க குளிகை (ஜ்வரங்களுக்கு) | 47 |
| 117 | சாதிலிங்க குளிகை (ஜ்வரங்களுக்கு) | 51 |
| 118 | சாதிலிங்க குளிகை (சகல ஜ்வரங்களுக்கும்) | 55 |
| 119 | சாதிலிங்க குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 96 |
| 120 | சாதிலிங்க குளிகை (தீராத ஜ்வரங்களுக்கு) | 60 |
| 121 | சாதிலிங்க குளிகை (வாத ஜ்வரங்களுக்கு) | 131 |
| 122 | சாதிலிங்க குளிகை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 205 |
| 123 | சாதிலிங்காதிக் கலிக்கம் (ஜ்வரங்கள், சந்நிபாதத்திற்கு) | 65 |
| 124 | சாதிலிங்க இஞ்சி குளிகை (வாத, மாந்த ஜ்வரங்களுக்கு) | 97 |
| 125 | சாதிலிங்க கோரோசனைக் குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 115 |
| 126 | சாதிலிங்க பாஷாணக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 16 |
| 127 | சாதிலிங்கநாபி மாத்திரை (கொடூரமான ஜ்வரங்களுக்கு) | 101 |
| 128 | சாதிலிங்க மாத்திரை (தாப, சீத ஜ்வரங்களுக்கு) | 131 |
| 129 | சாதிலிங்க மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 213 |
| 130 | சாதிலிங்க மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 245 |
| 131 | சாதீபலாதி மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 271 |
| 132 | சித்ர மூலாதிக் கடாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 176 |
| 133 | சித்ர மூலாதிக் கடாயம் விஷம ஜ்வரங்களுக்கு) | 304 |
| 134 | சிறுகாஞ்சோறிக் கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 78 |
| 135 | சிறுகாஞ்சோறிக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 162 |
| 136 | சிறுகாஞ்சோறி வேர்க்கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 191 |
| 137 | சீதேவிச் செங்கழுநீரெண்ணெய் (வாதம், பித்தம் முதலான தோஷங்களினாலேற்படும் பல வியாதிகளுக்கும்) | 261 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 138 | சிதேவிச் செங்கழு நீரெண்ணெய் (நாட்பட்ட ஜ்வரங்களுக்கு) | 265 |
| 139 | சிதேவிச் செங்கழுநீர்க் கஷாயம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 298 |
| 140 | சிந்தில் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 174 |
| 141 | சிந்தில்கொடிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 189 |
| 142 | சிரகாதி கஷாயம் (ஜ்வரங்கள். உழலை முதலியவைகளுக்கு) | 107 |
| 143 | சிரகாதி கஷாயம் (விஷம ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்கு) | 305 |
| 144 | சிரகாதி உருண்டை (பித்த சந்நிக்கு) | 209 |
| 145 | சிரகாதிப்பால் (பித்த ஜ்வரங்களுக்கு) | 167 |
| 146 | சிரகாதி உருண்டை (சந்நிபாத, விஷம ஜ்வரங்களுக்கு) | 211 |
| 147 | சுக்காதிக் கஷாயம் (வாத ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 134 |
| 148 | சுக்காதிக் கஷாயம் (வாத, கப ஜ்வரங்களுக்கு) | 260 |
| 149 | சுக்கிராதிக் குளிகை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 279 |
| 150 | சுண்ட்யாதி கஷாயம் (கப, காசம், ஜ்வரம் முதலானவைகளுக்கு) | 187 |
| 151 | செங்கழுநீர்க் கிழங்குக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 193 |
| 152 | செங்கழுநீர்க் கிழங்காதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 277 |
| 153 | தசமூலாகடுத்ரயாதி கஷாயம் (சீத ஜ்வரங்களுக்கு) | 37 |
| 154 | தாடிமாதி கஷாயம் (பேதியுடன் கூடிய ஜ்வரங்களுக்கு) | 231 |
| 155 | தாளக கோரோசனைக் குளிகை (ஜ்வரங்களுக்கு) | 79 |
| 156 | தாளகாதி பற்பம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 45 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 157 | தாளக மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 26 |
| 158 | தாளக பற்பம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 17 |
| 159 | தான்றிக்காய் கடாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 149 |
| 160 | திப்பிலி உருண்டையும், கஷாயமும் (பழஞ் ஜ்வரங்களுக்கு) | 129 |
| 161 | திப்பிலி மூலாதி கடாயம் (பித்த, சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 155 |
| 162 | திராயெண்ணெய் (பழஞ் ஜ்வரங்களுக்கு) | 127 |
| 163 | திராக்ஷாதி கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 81 |
| 164 | திராக்ஷாதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 142 |
| 165 | திராக்ஷாதி கஷாயம் (பித்த காய்ச்சலுக்கு) | 144 |
| 166 | திராக்ஷாதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 157 |
| 167 | திராக்ஷாதி கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 160 |
| 168 | திராக்ஷாதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 165 |
| 169 | திராக்ஷாதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 170 |
| 170 | திராக்ஷாதி கஷாயம் (பித்த காய்ச்சலுக்கு) | 170 |
| 171 | திராக்ஷாதி மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 102 |
| 172 | திரிகடுகாதி மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 267 |
| 173 | திரிகடுகுக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 190 |
| 174 | துத்தாதி குளிகை (தாப, சீத ஜ்வரத்திற்கு) | 30 |
| 175 | துத்தாதி குளிகை (பற்பல முறை ஜ்வரங்களுக்கும்) | 61 |
| 176 | துத்தாதி குளிகை (குளிர் காய்ச்சலுக்கு | 66 |
| 177 | துத்தாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 35 |
| 178 | துத்தாதி மாத்திரை (சகல சீத ஜ்வரங்களுக்கும்) | 39 |
| 179 | துத்தாதி மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 86 |
| 180 | துத்தாதி மாத்திரை (மாறல் ஜ்வரங்களுக்கு) | 239 |
| 181 | துத்த அரிதாரக் குளிகை ஜ்வரங்களுக்கு) | 89 |
| 182 | துருசு அரிதாரக் குளிகை (கப ஜ்வரங்களுக்கு) | 77 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 183 | துருசு மாத்திரை (குளிர் ஜ்வரம், வரள் ஜ்வரம் முதலியவைகளுக்கு) | 58 |
| 184 | தூதுவளைக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 164 |
| 185 | தூதுவளைக் கஷாயம் (முறைக் காய்ச்சலுக்கு) | 241 |
| 186 | தூதுவளையாதிக் கஷாயம் (கப ஜ்வரம், வெள்ளோக்காளம் முதலியவைகளுக்கு) | 182 |
| 187 | தூதுவளை வேராதிக் கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 195 |
| 188 | தூதுவளை வேராதிக் கஷாயம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 247 |
| 189 | தூதுவளை வேர்க்கஷாயம் கப ஜ்வரங்களுக்கு) | 254 |
| 190 | தேங்காய்ப் பாலெண்ணெய் (ஆம ஜ்வரங்களுக்கு) | 296 |
| 191 | தேவதார்வாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 187 |
| 192 | நாபிக் குளிகை (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 242 |
| 193 | (நாபிக்) குளிகையும் (சிறுகுமிழ்) கஷாயமும் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 196 |
| 194 | நிர்குண்டிக் கஷாயம் (வாத ஜ்வரத்திற்கு) | 132 |
| 195 | நிலவேம்புக் கஷாயம் (ஜ்வரங்களுக்கு) | 21 |
| 196 | நிலவேம்புக் கஷாயம் (நாட்பட்ட ஜ்வரங்களுக்கு) | 120 |
| 197 | நிலவேம்புக் கஷாயம் (தலைபாரம், இடுப்புவலி வீக்கம், கபஜ்வரம் முதலியவைகளுக்கு) | 184 |
| 198 | நிலவேம்புக் கஷாயம் (விஷ ஜ்வரங்களுக்கு) | 233 |
| 199 | நிலவேம்புக் கஷாயம் (சாயங்கால வேளைகளில் வரும் ஜ்வரங்களுக்கு) | 240 |
| 200 | நெல்லிமுள்ளிக் கஷாயம் (அசீரண ஜ்வரங்களுக்கு) | 287 |
| 201 | நேர்வாள குளிகை (தோஷ ஜ்வரங்களுக்கு) | 278 |
| 202 | நேர்வாள மாத்திரை (சீத ஜ்வரங்களுக்கு பேதியாக) | 38 |
| 203 | நேர்வாள மாத்திரை (சகல சுரங்களுக்கும்) | 52 |
| 204 | நேர்வாள மாத்திரை (பற்பல ஜ்வரங்களுக்கு) | 221 |
| 205 | பஞ்சாமிர்தம் (உள்காய்ச்சலுக்கு) | 54 |
| 206 | படோலாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 165 |
| 207 | படோலாதி கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 189 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 208 | படோலாதி கஷாயம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 218 |
| 209 | படோலாதி கஷாயம் (அந்தர்கத ஜ்வரங்களுக்கு) | 300 |
| 210 | பலா கஷாயம் (தோஷ ஜ்வரங்களுக்கு) | 219 |
| 211 | பலாகுடூச்யாதி கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 181 |
| 212 | பலாகுடூசி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 275 |
| 213 | பலாச்வகந்தாதி தைலம் (பழய ஜ்வரங்களுக்கு) | 124 |
| 214 | பலாலாக்ஷாதி தைலம் (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 301 |
| 215 | பற்பாடக விழுது (பற்பல ஜ்வரங்களுக்கும்) | 248 |
| 216 | பற்பாடகக் கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | 223 |
| 217 | பற்பாடகாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 253 |
| 218 | பற்பாடகாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 3 |
| 219 | பார்ங்கியாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 168 |
| 220 | பாஷாண மாத்திரை (முறைக் காய்ச்சலுக்கு) | 6 |
| 221 | பாஷாணலிங்க மாத்திரை (குளிர் ஜ்வரங்களுக்கு) | 24 |
| 222 | பாஷாணாதி குளிகை (சீத ஜ்வரத்திற்கு) | 285 |
| 223 | பிப்பல்யாதி கிருதமும், கஷாயமும் விஷ ஜ்வரங்களுக்கு) | 235 |
| 224 | பிரமிக் கஷாயம் (அஜீரண ஜ்வரங்களுக்கு) | 295 |
| 225 | பூசினிக்கொடிக் கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 153 |
| 226 | பெருந்துத்தி வேர்க்கஷாயம் (அதிசார ஜ்வரத்திற்கு) | 228 |
| 227 | பெருமரப்பட்டைக் கஷாயம் (அதிசார ஜ்வரங்களுக்கு) | |
| 228 | பேதிகுளிகை (ஜ்வரத்திற்கு | 275 |
| 229 | பேய்க்கரும்புக் கொழுந்துக் கஷாயம் (ஜ்வர வீக்கங்களுக்கு) | 246 |
| 230 | பேய்பீர்க்கம் எண்ணெய் (ஜ்வரத்திற்கும் வீக்கத்திற்கும்) | 233 |
| 231 | பொன்முசுட்டைக் கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 138 |
| 232 | பொன்முசுட்டைக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 194 |

| எண். | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 233 | பொன்முசுட்டைக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 303 |
| 234 | மடல் துத்த குளிகை (தாப ஜ்வரங்களுக்கு) | 34 |
| 235 | மடல் துத்த பாஷாண மாத்திரை (ஜ்வரத்திற்கு) | 75 |
| 236 | முக்கூட்டெண்ணெய் (பழஞ்ஜ்வரத்திற்கு) | 127 |
| 237 | முசுமுசுக்கை லேகியம் | 306 |
| 238 | முந்திரிகை வடகம் (பற்பல ஜ்வரங்களுக்கு) | 225 |
| 239 | முலைப்பாலெண்ணெய் (விடா ஜ்வரங்களுக்கு) | 283 |
| 240 | முன்னைக் கடாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 188 |
| 241 | முஸ்தாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கு) | 85 |
| 242 | முஸ்தாதி கஷாயம் (தாப ஜ்வரங்களுக்கு) | 94 |
| 243 | முஸ்தாதி கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) | 141 |
| 244 | முஸ்தாதி கஷாயம் (பித்த ஜ்வரங்களுக்கு) | 147 |
| 245 | முஸ்தாதி கஷாயம் (பித்தக் காய்ச்சலுக்கு) | 166 |
| 246 | முஸ்தாதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 172 |
| 247 | முஸ்தாதி கஷாயம் (சேத்தும ஜ்வரங்களுக்கு) | 180 |
| 248 | முஸ்தாதி கஷாயம் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 207 |
| 249 | முஸ்தாதி கஷாயம் (விஷ ஜ்வரங்களுக்கு) | 235 |
| 250 | முஸ்தாதி கஷாயம் (வாத, பித்த ஜ்வரங்களுக்கு) | 266 |
| 251 | முஸ்தாதி கஷாயம் (தொந்த ஜ்வரங்களுக்கு) | 282 |
| 252 | வசாதி கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 175 |
| 253 | வாள மாத்திரை (பித்த ஜ்வரங்களுக்கு) | 150 |
| 254 | விடத்தகரையாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 249 |
| 255 | விளாமிச்சைக் கஷாயம் (தாப ஜ்வரங்களுக்கு) | 41 |
| 256 | விஷ்ணுக்ராந்தி கஷாயம் (வாத ஜ்வரங்களுக்கு) | 141 |
| 257 | வெங்கார மாத்திரை (வாத ஜ்வரத்திற்கு) | 128 |
| 258 | வெங்கார குளிகை (ஜ்வரங்களுக்கு) | 105 |
| 259 | வெட்டிவேர் மாத்திரை (சகல ஜ்வரங்களுக்கும்) | 29 |
| 260 | வெட்பாலையாதி கஷாயம் (திரிதோஷ ஜ்வரங்களுக்கு) | 69 |
| 261 | வெட்பாலைக் கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 179 |
| 262 | (வெண்ணொச்சி) யெண்ணெய் (பழஞ் ஜ்வரங்களுக்கு) | 118 |

| எண் | மருந்துகளின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 263 | வெண்ணொச்சிவேது (ஜ்வர வீக்கத்திற்கு) | 237 |
| 264 | வெருகங்கிழங்கெண்ணெய் (குளிர் ஜ்வரத்திற்கு) | 122 |
| 265 | வெருகங்கிழங்கெண்ணெய் (விஷம ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்கு) | 258 |
| 266 | வெள்ளிலோத்திர நெய் (சகல ஜ்வரங்களுக்கும்) | 43 |
| 267 | வெள்ளிலோத்திர கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 64 |
| 268 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (ஜ்வரங்களுக்கு) | 10 |
| 269 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (குளிர் ஜ்வரத்திற்கு) | 18 |
| 270 | வெள்ளைப்பாஷாண மாத்திரை (குளிர் ஜ்வரங்களுக்கு) | 23 |
| 271 | வெள்ளைப் பாஷாண மாத்திரை (குளிர் ஜ்வரத்திற்கு) | 36 |
| 272 | வெள்ளைப் பாஷாண குளிகை (18 வித ஜ்வரங்களுக்கும்) | 281 |
| 273 | வேப்பலகு கஷாயம் (கப ஜ்வரங்களுக்கு) | 181 |
| 274 | வேலிப்பருத்திக் குளிசம் (பலவகை ஜ்வரங்களுக்கும்) | 114 |
| 275 | ஸஹதேவி நெய் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 201 |
| 276 | ஸஹதேவி நெய் (சந்நிபாத ஜ்வரங்களுக்கு) | 202 |
| 277 | ஸுரஸாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 19 |
| 278 | ஸுரஸாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 67 |
| 279 | ஹரித்ராதி கஷாயம் (கப ஜ்வரத்திற்கு) | 183 |
| 280 | ஹரித்ராதி தைலம் (ஜ்வரங்களுக்கு) | 11 |
| 281 | ஹரித்யாதி கஷாயம் (சகல ஜ்வரங்களுக்கும்) | 71 |
| 282 | ஜ்வரம் நீங்குவதற்கான உபாயங்கள் | 110 |

# சரபேந்திர வைத்திய முறைகளில் கீழ்கண்ட மருந்து முறைகளை உபயோகித்த வைத்தியர்களின் நற்சாக்ஷிப் பத்திரங்கள்

( 1 )

ப. பூ. சின்னய்யாசெட்டி,
வைத்தியர்,

கமுதி போஸ்டு,
ராமனாதபுரம் ஜில்லா.
விரோதி௵, கார்த்திகை 12,

இதற்குமுன் ஸ்ரீ S. கோபாலன், B.A.,B.L., அவர்களால் வெளியிடப்பட்ட குன்மரோக சிகிச்சையைத் தருவித்து அதன் முறைகளைப் படித்து, சில செய்தும் ஆனந்தம் அடைந்தேன். குன்மரோக சிகிச்சை 114-வது பக்கம் சக்திகுன்மத்திற்கு "வில்வாதி லேகியம்" என்ற முறை வெகு ஆச்சரியமாகக் குணம் செய்கிறது. எல்லோரும் சந்தோஷமடைகிறார்கள்.

ஒப்பம்: ப. பூ. சின்னய்யாசெட்டி.

( 2 )

M.R. Krishnamoorthy Iyer,
Native Doctor.

Camp: Puttukkottai,
15—12—52.

குன்ம சிகிச்சை நூலில் அநேக மருந்துகள் செய்து அனுபவித்துப் பார்த்ததுடன் 'குன்மாதி செந்தூரம்' முறைப்படி அனுபவித்தேன். நன்றாயிருக்கிறது. இன்னமும் வைத்ய வெளியீடுகள் எனக்கு அனுமதியில்லாமலே V.P.P. யில் அனுப்பித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள்,

(Sd.) M.R. Krishnamoorthy.

( 3 )

K. கதிர்வேல்,
தமிழ் சித்த வைத்யசாலை,

மண்டப வீதி,
ஈரோடு
17—1—49.

அன்புடையீர்,

தங்கள் குன்ம ரோக சிகிச்சை வெளியீடு நெ. 2-ல் சொல்லப் பட்ட "93. நெ. குன்ம வாயுவுக்கு எண்ணெய் (சந்தம் வேறு)" என்ற இம்மருந்தினால் வலிகுன்மம், செங்கிரந்தி, ஆகிய 2 நோய்களும் பூரண குணமளிக்கிறது என்பதை என் அனுபவத்தால் அறிந்து தங்களுக்குத் தெரிவித்து மகிழ்ச்சியுற்றேன். ஷி நோய் 3 வருடமாகக் கஷ்டப்பட்டுப் பலரக சிகிச்சை பெற்றும் குணமுற்றபாடின்றி அவஸ்தைப்பட்டவன் ஒருவன் அத்தாக்ஷியின் மீதே தங்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் எழுதுகிறேன். இந்நூல்களில் இன்னும் சிலமருந்துகள் தயாராகின்றது. அதை அனுபவித்து விவரம் தெரிந்து எழுதுகிறேன்.

இப்படிக்கு,
(Sd.) K. கதிர்வேல்.

( 4 )

I am much surprised to see the efficient curative powers of Sarabendra recipes. My wife had a serious trouble during menses. And many patent medicines have been tried in vain for the past 4 years. At last I had an opportunity to meet Dr. Venkatarajan who prescribed a course of treatment in No. 4 of Garbini Balaroga Chiktsai and to our astonishment it has given complete relief from the illness. In turn I have tried in many other cases with success.

(Sd) P. S. Raman,
Station Master,
S. I. R. Tanjore.

( 5 )

தங்கள் வெளியீடுகள் யாவும் நாங்கள் வாங்கி அதன் முறைப்படி மருந்துகள் தயாரித்து அதன் குணங்களைக் கண்டோம். குன்ம ரோக முறையும், நயன ரோக முறையும் நாங்கள் கையாண்டோம். பெருமைப்படத்தக்க நல்ல முறைகள்.

N.V. ராஜு,
Native Doctor,
கருணாநிதி வைத்தியசாலை,
நாமக்கல்.

( 6 )

குன்மரோக சிகித்ஸையில் 96-ம் பக்கத்திலுள்ள 68-வது மருந்து "குன்மத்திற்குக் கும்மட்டிக்காயெண்ணெய்" முறைப்படி தயார்செய்து கொடுத்ததில் சுமார் 15 முதல் 20 நாட்கள் உபயோகிப்பவருக்குக் குன்மக்கட்டி கரைவதுடன் வயிற்றுவலியும் நின்றுவிடுகின்றன. இன்னும் அதன் தலைப்பில் கண்ட வியாதிகளைத் தவிர குன்மம், குமட்டல், ஒக்காளம் ஆகியவைகளும் குணமடைகின்றன. ஆனால் ஆகாரம் ஜவ்வரிசிப் பாயஸம் கொடுத்து வருதல் முக்யம்' ஷெ கஞ்சி கொடுக்கலாம். ஷெ கஞ்சி பாயஸம் கொடுத்தால் குணமடைகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(Sd.) H.T. Govindan,
F.T.H.C. (Homeo)
Amaragandi P.O..
SALEM.

( 7 )

குன்மரோக சிகிச்சை முறைகளில் 'வஜ்ஜிரவல்லரிதகி' லேகியம் நல்ல குணமளிக்கிறது. 6 மாதமாக இருந்த தலைச் சுற்றலும், கண் புகைச்சலும், மூலக்கொதிப்பும் சில வாரத்தில் குணமாகியது. பவுத்திரத்திற்கும் நல்ல மருந்து, பாண்டுவில் வீக்கம் வடிகிறது.

கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முறைகள் 198-ம் பக்கம் 214-வது 'மாத்திரை' சகல பாலபேதிக்கும், சுரத்திலும், இசுவிலும், அடிதள்ளியதிலுள்ள பேதிக்கும் மேலான மருந்து. வாய் வேக்காளமுள்ள மூலக்கிராணியும் 10 தினங்களில் குணமேற்பட்டது.

266-வது பக்கத்திலுள்ள 'மாவடு' அவ்வளவாகக் குணம் கொடுக்கவில்லை.

202-ம் பக்கத்திலுள்ள மருந்து வாந்தியோடு கூடிய கழிச்சலையும் பொருமலையும் தீர்க்கிறது.

203-ம் பக்கத்திலுள்ள 'மாம்பட்டைச்சாறு' நல்ல குணம் உள்ளது. மேலும் எழுதுகிறேன்.

(Sd.) K.G. நாகராஜ மண்ணையார்,
சித்தவைத்தியம்,
சாலியத்தெரு. அம்மாபேட்டை.
1—11—50.

( 8 )

4-வது வெளியீடான நயனரோக சிகித்சை 23-வது முறைத் தைலத்தைச் செய்து குளித்தேன். அதில் மிகவும் நல்ல பயன் அடைந்தேன் .. . — —

சு. சுந்தரசாமி,
ஆவில்சின்னாம்பாளையம்,
பொள்ளாச்சி P.O. கோவை.
20—9—50

( 9 )

Nayana Roga Chikitsai book is containing really valuable preparations with good get up worth going thro' and even added on by (Allopaths) to their armamentarium and aid.

(P. S.) Enumeration of Signs & Symptoms and Diseases of Eyes, Preparation of various medicines are quiet neatly given.

Captain V.N. RAMAKRISHNAN, L.M.P.,
Sitharam Clinic,
Krishnagiri,
2-9-50.

[ 10 ]

I have great pleasure in informing that I have tried one or two remedies in Sarabendrar Vaidya Murai and found them wonderfully efficacious. No. II Kumari Thailam in Nayana Roga Chikitsai was made by me and it has been very effective for obstinate Headache. Eye trouble like circulating pupil, even without the addition of ingredient called Kandivennai which was said to be available at Malabar.

I made enquiries in the Drug Shops at Malabar and I was told by a reliable shop-man that genuine Kandivennai being the first evacuvation of the newly born young one of an elephant, was very rare and bazaar people are selling powdered Kungiliyam in the name of Kandivennai. With great trouble I got a good quantity of genuine Stuff from Nammara, Cochin and mixed it in prepared oil.

Those who used it said, it was extremely hot. Those who had very obstinate complaints like headache etc., had wonderful cures with the help of this mixture.

I therefore reserved it for very difficult cases only In ordinary cases the oil without the special drug is giving excellent results. I have got some stock of oil and I shall be glad to send it for cases of unsteady pupil etc., I wish to have all the publications of this Medical Series as and

when they are published I am very glad that the Saraswathi Mahal has come forward to publish these valuable manuscripts.

R. THULASIDOSS,
Yarn Merchant,
Sevapet, Salem,
14—9—51.

( 11 )

சரபேந்திர வைத்ய முறைகளாகிய நூல்கள் வெளி வந்ததில் குன்மரோக சிகித்ஸை 10-வது பக்கம், 5-வது மருந்து, "சங்கக்ஷாரம்" என்ற முறையைத் தயாரித்து 5 மாத காலங்களாகின்றன. இதற்குள் 3 கேஸ்கள் பலனடைந்தது. Gastric Trouble 10 வருட காலமாயிருந்ததையும். பித்த குன்மம் ஒன்றும், அஜீர்ண பேதி ஒரு கேஸும் பூர்ண சுகமடைந்தது. அதனால் நமக்கு நல்ல பெயரும், வருவாயும் கிடைத்தது.

கோடேடி ராமச்சந்திரன் என்ற L.M.P, டாக்டரின் தங்கைக்கும் பரிணாமசூலைக்கு 15 நாட்களுக்கு மருந்து கொடுத்திருக்கிறேன். முக்கால்வாசி குணம் கிடைத்திருக்கிறது. பூர்ண குணமானதும் தெரிவிக்கிறேன் அந்த அம்மாவிற்குப் பெரிய டாக்டர்கள் யாவரும் பார்த்தனர். அம்மருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு அனுப்புகிறேன். உபயோகித்துப் பாருங்கள், புகழ்ந்து எழுதுவதல்ல அம்மருந்தின் பெருமையை.

இப்படிக்கு,
K.R. GUHUN,
Peddavaru P.O.
(*Via*) *KOVUR*

( 12 )

ஷை மேற்படியாரின் மற்றொரு கடிதம்

எமது அனுபவத்தில் 116-ம் பக்கம் 115-ம் மருந்தான "குன்மாதி எட்டுக்கும் பெருங்காயச் சூரணம்" என்ற

முறையை யான் அநேகருக்குக் கொடுத்துக் குணமடையக் கண்டு மகிழ்ச்சியடைந்து வருவதன்னியில் ஒரு முக்யமான கேஸை இங்கெழுதி எம்மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கிருந்து தென்திசையில் 1 மைலில் உள்ள மலக பல்லி என்ற கிராமத்தில் செறுகூறி நாராயணன் என்ற குடியானவன் (கம்மா) 45 வயதுள்ளவன். அவனுக்குப் பரிணாமசூலை என்று நம் அபிப்ராயம். சென்னை போய் X-RAY முதற்கொண்டு எடுத்துப் பார்த்தும், அலோபதிச் சிகித்ஸை ஒரு வருடம் செய்தும் அவனுக்குக் குணமாகவில்லை. மிக்க வருத்தத்துடன் இருந்தான். அவனுக்கு நான் மேற்கூறிய பெருங்காயச் சூரணத்தை உபயோகிக்க, வலி குறை வடைந்து சாப்பாடு ஜீரணமாகிக் கொண்டும் நல்ல முறை யிலிருக்கிறதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல முறைகள் தயார்செய்து வருகிறேன்.

K. R. GUHUN,
Peddavaru,
21—8—51.

## ( 13 )

ஐயா,

ஸரஸ்வதி மகாலில் 10—11—51-ல் சில புஸ்தகங்கள் வாங்கிச்சென்றேன். அதில் கண் வியாதிகளின் மருந்தைச் செய்து பலருக்கும் போட்டதில் குணமிருந்தது. பலரும் என்னிடம் கண்நோய் தீர வந்து போகிறார்கள். அவர்கள் வருவதற்குச் சரஸ்வதி மகால்தான் காரணம். ஹோமியோ பதி டாக்டராயிருந்தாலும் இதுவரை ஆயுர்வேத மருந்தே உபயோகித்து வருகிறேன் .........

S. R நாராயணன்,
32. ரங்கநாதபிள்ளை தெரு,
சேலம், 13—2—52.

(14)

10-வது முறையான குன்மத்திற்கு மாத்திரை என்னும் மருந்தினால் கொடிய வயிற்றுவலி குணமாகி இருக்கிறது. நான் பரம்பரைக் கிராம வைத்யன். கிராமங்களில் வைத்யம் செய்து கொண்டிருக்கிறேன். இதைப்போன்ற நூல்களை வெளியிட்டிருந்தால் அவைகளை எமக்கு அதிவிரைவில் அறி விக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோபாலகிருஷ்ணன்
திருவாடையார்கோவில்,
கண்டமங்கலம் போஸ்டு
விழுப்புரம்.

( 15 )

நான் தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு நயனரோக சிகித்஡ை மூலம் ரோக நிதானம் தெரிந்து அதில் சொல்லி யிருக்கும் முறைகளின்படி அநேகம் பேருக்கு மருந்தைப் பிர யோகித்து சுமார் 1000 பேர் வரை குணமடைந்திருக்கிறார் கள். ரோக நிதானங்கள் விபரதாய் சொல்லியிருக்கிற படியேதான் இருக்கிறது. நான் தற்போது இதையே முக்ய மான தொழிலாகக் கொண்டு, வந்தவர்களுக்கு மருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறேன். இது ஏழைகளுக்கு மிக உபயோகமாயிருக்கிறது. இம்மருந்துகளுக்குச் சென்னை முதலான இடங்களிலிருந்தும் ஜனங்கள் வருகின்றனர்.

T. N. Venkatarama Iyer,
Optician,
குத்தாலம் 24—6—52,